வெகுசன

நான்காம் ஆண்டு நிறைவிதழ்
புரட்டாதி 1995



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

காலத்துக்குக்[illegible]லம் புதுமை புகுத்துவோர்

வீடியோத்துறையின் முன்னோடிகள்

புலவர் வீடியோ

நவீன தொழில் நுட்பம் மிக்க வீடியோ கமரா

(MX50MX1) S27 மாதிரி வடிவங்கள்

வீடியோ கலப்பு (மிக்ஸிங்) பிடிப்பு



உங்கள் வாழ்வின் உந்நதமான நிகழ்வுகளை

சிங்கப்பூர், மற்றும் வெளிநாடுகளின்

இயற்கைக் காட்சிகளுடன் இணைத்து

அற்புத படைப் பாக்கித் தருபவர்கள்

புலவர் வீடியோ

கிளை நிறுவனம்:
மிக்ஸிங் ஸ்ரூடியோ
பலாலி வீதி (டிப்போ எதிர்)
கோண்டாவில்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

மாநகர சபை
யாழ்ப்பாணம்

வெளிச்சம்

நான்காம் ஆண்டு நிறைவிதழ்



இது
தீக்குளிக்கும் தேசத்தின்
காலப்பதிவு.
விடுதலைக்குப் போராடும்
இலக்கியக் கருவி.
தமிழீழ கலை, இலக்கிய கர்த்தாக்கள்
தங்கள் படைப்புக்களை
வைப்பீட்டில் வைத்துள்ள
இலக்கியப் பெட்டகம்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி சபை
14-9-1995
யாழ்ப்பாணம்



தலையாசல்

புரட்டாதி - 1995
இதழ் - 40
விலை: ரூபா 45/-

எங்கள் அன்பிற்கினியவர்களே!

பெருத்த மகிழ்ச்சியுடன் இவ்விதழை தங்கள் கைகளில் வழங்குகின்றோம். இது வெளிச்சத்தின் நாற்பதாவது இதழும், நான்காம் ஆண்டு நிறை விதழுமாகும். ஈழத்துக் கலை, இலக்கிய சஞ்சிகை வரலாற்றை எடுத்துப் பார்க்கும் எவரும் வெளிச் சத்தை வாழ்த்துவார்கள். ஏனெனில் ஓரிரண்டு இதழ்களுடன் பேரிழந்து போனவையும், பத்து இதழ்களுக்குள் செத்துப் போனவையுமே இங்கு வந்த இலக்கிய இதழ்களின் வரலாறு. இந்த நியதியைமீறி ஓரிரண்டு நின்று நிலைக்கின்றன. அவையும் மாத இதழென்று சொல்லி, காலக்கிரம மற்று வெளிவருகின்றன. வெளிச்சம் மட்டுமே மாதாந்தம் தவறாது வந்து உங்களைச் சந்திக் கின்றது.

ஸ்ரீலங்கா அரசு கைதுடைக்கும் தாளுக்கும் கட் டுப்பாடு விதித்துள்ளது. அச்சகத்துக்குத் தேவை யான அனைத்தையும் தமிழீழத்துக்கு உள்ளே வருவதைத் தடுத்துள்ளது. பத்திரிகைத் தாளின் விலை பத்துமடங்கு அதிகரித்துவிட்டது. தட்டுப்பாடே நிலவுகிறது. என்றாலும் 'வெளிச்சம் பரவுவதை' நிறுத்த முடியவில்லை.

எமது தேசியத் தலைவரின் ஆசியும், ஒத் துழைப்புமே தொடர்ந்தும் வெளிச்சத்தை வெளி யிடும் வல்லமையை எமக்கு வழங்குகின்றது. எம் மண்ணின் படைப்பாளிகள் எங்களுடன் வைத்துள்ள உறவே வெளிச்சத்துக்கு ஆதாரசுருதி எமது விடு தலை அமைப்பின் சகதுறையினர், மற்றும் பிரி வினர் வழங்கும் நல்லாதரவும் உருவாக்கும் கரங் களின் தளராத தன்னலமற்ற பணியுமே எமது வெற்றிக்கு வீரியம் சேர்க்கிறது. இவர்கள் எல் லோருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைக் கூறிக்கொள்ளும் வேளையில் தொடர்ந்தும் இவர் களின் நல்லாதரவை வெளிச்சம் வேண்டிநிற்கிறது.

போராட்ட வெற்றிகளில் புளகாங்கிதமடைந்து, மக்களது துன்பதுயரங்களில் வருத்தப்பட்டு, அழகும் எழிலும் நிறைந்த சுடுபுழுதி பறக்கும் எம்மண்ணின் இயற்கைச் சூழலில் ஊறித்திளைத்து, மனித அக வுலகத்தை அளந்து பார்த்து ஒரு சாதாரண மனி தனுக்கும் வாழ்க்கையைத் தரிசிக்க வெளிச்சம் வழி செய்திருக்கிறது. உலகனைத்திலுமுள்ள பல சஞ் சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளிச்சத்தின் படைப்புகள் மறுபிரசுரம் செய்யப்பட்டு, பெருமைப் படுத்தப்பட்டுள்ளன.

எம்மண்ணின் விடுதலையும், எமது மக்களின் சுதந்திரமான வாழ்வும் நாம் முன்னெடுத்து நடாத் தும் விடுதலைப் போராட்டத்திலேயே மையங்கொண் டுள்ளன. 'போராட்டமே வாழ்வு, வாழ்வே போராட் டம்' என இரண்டும் பல்லும் சில்லுமென ஒன்றோ டொன்று பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. சகல தையும் தீர்மானிக்கும் சக்தியாக போராட்டமே நிமிர்ந்து நிற்கிறது. எமது தாயகத்தின் சகல நகர்வு களும் விடுதலையை நோக்கியதாகவே விளங்க வேண்டும். கலை, இலக்கியங்கள் இதிலே மற்ற எல் லாவற்றுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண் டும். படைப்பிலக்கியங்கள், கலை வார்ப்புகள் அனைத்தும் சுதந்திரத்தை நோக்கியதாகவே சுழல வேண்டும். நாளைய நல்வாழ்வுக்கான இன்றைய அரங்காகவே கலை, இலக்கியங்கள் இருக்கவேண் டும். வெளிச்சம் இதையே தனது இலட்சியமாக வரித்துக் கொண்டுள்ளது. தொடர்ந்தும் வெளிச் சம் உங்களைச் சந்தித்துக் கொண்டேயிருக்கும்.

வாசகரினதும், படைப்பாளரதும் மற்றும் துணை நிற்போரினதும் ஒத்துழைப்புடன் விடுதலைப் போராட்டம் நடமிடும் உச்ச எல்லை வரையிலும் வெளிச்சம் ஒளிபாய்ச்சும்; அதற்கப்பாலும் தொடர்ந் தும் நடக்கும்.

□□

உலகத்தமிழினத்தின் தலைவன் ஈழத்து எல்லாளன் பிரபாகரனே

"இத் திராவிட அரசியலின் கீழ் தமிழரின் அறிவுத் தலைவனாம் பாவாணரும் தமிழரிடமிருந்து செவ்வனே மறைக்கப்பட்டார். உலகத் தமிழினத்தின் தானைத் தலைவனாம் ஈழத்து எல்லாளன் பிரபாகரன் கழகங்களால் வஞ்சிக்கப்பட்ட துடன், மிக இழிவாகக் கொச்சைப்படுத்தப்பட்டும் வருகின்றார். அகவாழ்க் கையிலும் புறவாழ்க்கையிலும் நல்லொழுக்கத்திற்கு நல்ல சான்றோர் கள் அவர்களாவர். எந்தத் திராவிடத் தலைவராவது அவர்களுக்கு ஈடாகுவாரோ?

அறிவுக்கு இனிப் பாவாணரே தலைமை! தமிழரின் மறத்திற்கு ஈழத்து எல்லாளனே தனிப்பெரும் தலைவன்! தமிழரின் வீரத்தை உலகத்தில் மீண்டும் அரங்கேற்றிவரும் புதிய புற நானூற்றுத் தலைவனே தமிழரால் போற்றுதற்குரியவன்! இக்காலக் கரந்தடிப் போரிற்குப் புதிய இலக்கணமானது அவனது தமிழ் மறம்! தமிழ்நாட்டின் விடுதலைக்கு அத்தகைய தலைவனொருவன் இயல்பாகவே தோன்றும் வரை, அந்த எல்லாளனுடைய வீரமும் துணிவும் கொள்கை கோணாமையுமே தமிழகத்திற்கு நன்கு வழிகாட்டட்டும்! இந்த ஓர்மை இனமானமிக்க தமிழிளைஞரிடம் வேர் கொண்டுவிட்டால், தமிழர்களுக்கு இனி எந்த இரவல் தலைவ னும் போலித் தலைவனும் தேவை யில்லை."

• குணா

(மே- ஜூன் 1995ல் வெளி வந்த இந்தியா-பெங்களூர்- ஆய் வரண் வெளியீடான 'திராவிடத் தால் வீழ்ந்தோம்' எனும் நூலி லிருந்து)



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

நல்லூர் திருவிழா நடந்து முடிந்தது.
காற்றுக்கூட நேற்றுடன் காணாமற் போக
தேடுவாரற்றுக் கிடக்கிறது தேர்வீதி
இருபத்தைந்து நாட்களின் இனிமையை
நெஞ்சுக்குள் பொத்தியபடி
ஏக்கம்வழியும் விழிகளுடன் இளசுகள் சிலர்,
''தேரடி பார்க்கத்'' தினமும் வந்து போகின்றனர்.
பதிலெறிந்த விழிகளைப் பறிகொடுத்த துயரம்
அனுபவித்தவர்களுக்கே புரியும்.
மஞ்சம், மகரம், கைலாயவாகனம்
எல்லாம் உள்ளே போயின.
தேர்முட்டியைச் சுற்றித் தகரத்தட்டிகள்.
இனி அடுத்தவருடமே கலசம் தெரியும்.
நாவலர் மண்டபக் கதவில் பூட்டு.
மேற்கு வீதியில்
சட்ட விளக்கில் ஒருதிரிஎரிய
முத்து விநாயகர் மௌனவிரதம்.
மனோன்மணியம்மன் வாசலில்
வழமையான ஒருவரைத் தவிர
இனி; நானும், நாய்களும்தான்.
ஈசற்கூட்டமாய் எங்கிருந்து வந்தது சனம்?
கடல்வற்றியது போல இன்றேன் கலைந்து போனது?
ஆலய வீதியில் ஊர்கூடுவது அழகு.
நான் தனியனல்லன்
பக்கத்தில் பல்லாயிரவர் என்பதை உணர்த்த
வெள்ளம்போல் விரிந்த சனத்திரள்
உள்ளத்துக்கு ஊட்டம்.
தேரும் திருக்கல்யாணமும் பார்க்காது

ஊர்வாசலில் யார் காவலிருந்தனர்?
பட்டுடுத்து காற்சலங்கைகள் இங்கே வர
பகைவரவை எதிர்பார்த்து யாரிருந்தார்?
ஆசையறுத்த ஞானிகள் போல
காவலுக்கிருந்தவர் எவர்?
பூட்டியெடுத்த திறப்புக்களுடன்
திருவிழாவுக்கு வந்தவர்
ஊரை யாரிடம் ஒப்படைத்தனர்?
தலைவாரி முகம் கூடக் கழுவாமல்
துப்பாக்கிகளுடன் காவலிருந்தனர்
''எல்லையம்மன்கள்''
வெட்டரிவாளுடன் சில வீரர்கள்.
திருவிழாவுக்கு வந்த பட்டுச்சட்டைகள்
இவர்களுக்காகவும் நேர்த்தி வைத்திருப்பார்களா?
வைத்திருப்பார்கள்.
நன்றிகெட்டதுகளல்ல...நமதுசனம்.

— மாலிகா



முல்லைமாவட்டம்
ரகசிய பிரிவு

படைப்பும் பார்வையாளனும்



மன்னார்மாவட்டச் செயலகம்
மாவட்ட செயலர்
பார்வைக்காக

குழந்தை ம. சண்முகலிங்கம்

கலை இலக்கியம் பற்றிய சிந்தனைகள் எப் பொழுதும், எக்காலத்திலும் சில பிரச்சினை களை எதிர் நோக்கிய வண்ணமே இருக்கும். கலைஇலக்கியங்கள் எப்போதுமே இருவேறு தளங் களிலேயே இருந்து வந்துள்ளன. ஒன்று, ஜனரஞ் சக அல்லது மக்கள் நயப்புத்தளம்; மற்றையது செந்நெறித்தளம். இன்று, இவை இரண்டிற் கும் இடைப்பட்ட நிலையில் நிற்கும் மூன்றாவது தளமொன்றும் கலை, இலக்கியங்களில் இருப்ப தைக் காணலாம்.

'செந்நெறி' என்ற பதத்தினை, பழையன வற்றை அல்லது குறித்த ஒரு காலத்து கலை, இலக்கியங்களை மட்டும் குறிப்பதாகவோ அல் லது ''உயர்ந்தவை'', ''சீர்மை'' பெற்றவை எனக் கருதப்படுபவற்றை மட்டும் குறிப்பதா கவோ கொள்ளாது அனைத்துக் காலத்திலும் காணக்கூடியதாகவுள்ள கலை இலக்கியவகை களுள் ஒன்றினைக் குறிப்பதாகவும் கொள்வது நல்லது.

''ஜனரஞ்சகம்'' என்ற பதம் கொச்சைப் படுத்தப்பட்டதொரு பதமாக இன்று இழிந்து விட்டிருப்பதால்''மக்கள் நயக்கும்'' என்ற சொற் றொடர் பயன்படுத்தப்படக் கூடும். பெரும்பா லான மக்களால் நயக்கப்படுவனவற்றை இவை குறித்து நிற்கும்.

இன்று எம்மத்தியில் நடை பெற்றுக் கொண் டிருக்கும் நாடக, அரங்க நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், ''புரிதல்'', ''புரியாமை'' என்றதொரு பிரச்சினை மேற்கிளம்பியுள்ளது. இப்பிரச்சினை பற்றி உரத்துச் சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

எந்தவொரு கலை, இலக்கியப் படைப்பும் ''இலக்குப்''பார்வையாளர்/வாசகரைக் கருத்திற் கொண்டே படைக்கப்படும். அவர்களைக் குறி யாக வைத்தே அவை படைக்கப்படும். இந்த நிலை சரியாகச் செயற்படும் பட்சத்தில் ''புரி யாமை'' என்ற பிரச்சினை தோன்றுவதற்கு வாய்ப்பிருக்காது.

நாடகத்தைப் பொறுத்தவரையில், இலக்குப் பார்வையாளர் என்ற வட்டத்தை அமைத்துக் கொள்வது மிகவும்கடினமானதொன்றாக இருக்கும். குறிப்பாக, குறுகியதொரு நிலப்பரப்பையும்

செறிவான மக்கள் பரம்பலையும் கொண்ட யாழ்ப்பாணக் குடா நாட்டில் இந்த இலக்கை வரையறை செய்து கொள்வதில் சிரமம் உள்ளது. மேலும் ஒரே இடத்தில் வாழும் மக்கள் மத்தியிலும் ரசனை, தரம், எதிர்பார்ப்பு, அனுபவம், அறிவெல்லை, பரிச்சயம் என்பவற்றில் பல்வகைப்பட்ட நிலையில் மனிதர் வாழ்வதை அவதானிக்க முடியும். பல்கலைக்கழகத்தை தானும் தனியொரு இலக்கு வட்டமாக எடுப்பதில் சிரமம் உண்டு. மாணவர் நிலையில் மட்டுமல்லாது ஆசிரியர் நிலையிலும் பல்வகைத்தன்மை நிலவுவதை அவதானிக்க முடியும். இந்த நிலையில், பல்கலைக்கழகத்துக்கு வெளியேயான சமூக மட்டத்தில் நிலவும் பல்வகைத்தன்மை பற்றிப் பேச வேண்டியதில்லை நாடகர் மட்டுமன்றி, ஆற்றுகைக்கலைகள் அனைத்தும் இப்பிரச்சினையை எதிர் நோக்கியே உள்ளன.

பார்வையாளர் மட்டத்தில் மட்டுந்தான் இத்தகைய பல்வகைத்தன்மை நிலவுகிறது என்று கூறிவிடமுடியாது; ஆற்றுகைகளில் ஈடுபடும் கலைஞர்கள் மட்டத்திலும் இத்தகைய வேறுபாடு நிலவுவதைக் காணலாம் இதனைக் குறையென்று பார்ப்பது நோக்கமல்ல; இதுவே யதார்த்த நிலை. இந்த யதார்த்த நிலையை எவ்வாறு கையாளுவது என்பதே சிந்திக்கப்பட வேண்டிய பிரச்சினையாக உள்ளது.

இலக்கியங்களைப் பொறுத்தவரையில் இப் பிரச்சினை பாரியதானதாக இல்லை. வாசகன் தான் விரும்பியதைத் தெரிவு செய்து படிப்பான். மற்றதைப்பற்றி அவன் அதிகம் அக்கறை கொள்ளமாட்டான்.

ஆற்றுகைக் கலைகளுக்குச் செல்லும் பார்வையாளருக்கு இலக்கிய வாசகர்களுக்குரிய தெரிவு வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. ஆற்றுகைகளின் தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரையிலும், இலக்குப் பார்வையாளரைத் தெரிதல் என்பது கடினமான ஒன்றே. மக்கள் கலை எனக் கருதிக் கொள்ளப்படும் நாடகம், இந்த விசயத்தைப் பொறுத்தவரையில் மிகவும் இக்கட்டானதொரு நிலையிலேயே உள்ளது.

பரதம் பயின்ற ஒரு பிள்ளையின் அரங்கேற்றம் என்றால், அல்லது நடனக்கல்லூரியொன்றில் பயிலும் மாணவர்களது நிகழ்ச்சியொன்று என்றால் எந்தப் பெரிய மண்டபமும் நிரம்பி விடுகிறது. அங்குகூடியிருக்கும் பார்வையாளரில் தொண்ணூறு சதவீதத்தினருக்கு பரதத்தின் அரிச்சுவடி கூடத் தொரிந்திருக்க நியாயம் இல்லை. ஆயினும் அவர்கள் அமைதியாக இருந்து அந்த ஆற்றலைப் பார்க்கின்றனர். பார்த்துப் பார்த்துப் பழகிய காரணத்தால் பார்க்கின்றனர். நடன அரங்கேற்றத்திலோ நடன நிகழ்ச்சிகளிலோ புதியதொன்று அதிகம் இடம் பெறுவதில்லை. பார்வையாளரும் தமக்கு எல்லாம் புரிய வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை.

ஆலயங்களில் நடக்கும் நாதஸ்வரக் கச்சேரிகளின் போதும் மக்கள் கூடி நின்று கேட்பதை நாம் பார்க்கின்றோம். அவர்களில் எத்தனை பேருக்கு கர்நாடக இசையின் இராகங்கள் தெரியும்? தாளபேதங்கள் தெரியும்? ஆயினும் மணிக்கணக்கில் இருந்து கேட்கிறார்கள். இங்கும் எவருக்கும் புரிய வேண்டுமென்று பிரச்சினை எழுவதில்லை. இசைக்கு மொழி அவசியமில்லை என நாம் கூறிக்கொள்ளலாம். நல்லதொரு நாடகத்துக்கும்மொழி என்பது ஒரு தடையாக அமையாது என்றதொரு உண்மையும் உள்ளது. இவ்வுண்மை உண்மையாக இருப்பினும், 'புரியவில்லை' என்ற பிரச்சினை நாடகத்துறையிலேயே இன்று எழுந்துள்ளது. எனவே, அதனை அமைதியாக இருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் சிந்தித்து ஆவன செய்யமுற்படுவது அவசியமாகிறது.

அனைவருக்கும் எல்லாம் புரியக்கூடிய முறையில் எழுதவேண்டும்; படைப்புக்களைத் தயாரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது முற்றிலும் சரியான ஒன்றா என்றதொரு வினாவும் எழத்தான் செய்கிறது. அது முற்றிலும் சரியான ஒன்றுதான் என நாம் கூறமுற்பட்டால் படைப்பாளியின் படைப்பாக்கச் சுதந்திரத்தில் நாம் தலையிடுவதாக அமையாதா? வாசகனொருவனுக்குத் தான் படிப்பதை தெரிவு செய்யும் சுதந்திரம் இருப்பதைப் போன்று, படைப்பாளிக்குத் தான் விரும்பியதை தான் விரும்பும் முறையில், தான் நிற்கவிரும்பும் தளத்தில் நின்று படைக்கச் சுதந்திரம் இருக்கக்கூடாதா? இங்கு ''சுதந்திரம்'' என்பது வாசகன்/பார்வையாளன், படைப்பாளி ஆகிய இருசாராரும் எதுவித கட்டுப்பாடும் இன்றி, சமூகப் பொறுப்போ, ஒழுக்கப் பண்புப் பொறுப்போ அற்ற நிலையில் நின்று, தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதை எந்த வகையிலும் கருத்திற் கொள்வதாக அமையாது. சுயகட்டுப்பாட்டோடு கூடிய பொறுப்புணர்ச்சியின் அடியாக எழும் சுதந்திரத்தையே நாம் இங்கு ''சுதந்திரம்'' எனக் கொள்வது அவசியம். எனவே பொறுப்புணர்ச்

சியோடு கூடிய சுதந்திரம் படைப்பை வழங்குப வனுக்கும் நுகர்பவனுக்கும் இருக்க வேண்டும் எனக் கொள்வதில் தவறு இருக்க முடியுமா?

''ரசனை,'' ''நயப்பு'' என்பவற்றை அடிப் படையாக வைத்து படைப்புக்களையும்அவற்றை நயப்பவர்களையும் நாம் தரம் பிரிக்க முற்படும் போது ஒரு சிக்கல் வந்து விடுகிறது. நிலைக் குத்துக் கோட்டு முறையில் ரசனை, நயப்பு என் பவற்றை நிறுத்தி; உயர்ரசனை, மத்திமரசனை. அடிமட்டரசனை எனப் பாகுபடுத்த முற்படும் போது பிரச்சனை வந்து விடுகிறது. பொருளா தார நிலையில் வைத்து சமூகத்தை உயர்வர்க் கம், மத்தியதரவர்க்கம், அடிநிலைவர்க்கம் என நோக்கியதன் அடியாக வந்த வர்க்க மனோ பாவமே, எம்மைக் கலைஇலக்கியங்களையும் இவ்வாறு தரம் பிரித்துப் பார்க்கவைத்தது எனக் கொள்ள இடமுண்டு.

'நல்லது', 'கெட்டது' என்பது ஒழுக்கப் பண்பின் அடியாக எழும் சிந்தனையாகும். இதனை நாம் நிராகரிக்க முடியாது. எதிலும் நல்லதும் கெட்டதும் இருக்கத்தான் செய்யும் நல்லதை ஏற்றுக் கெட்டதை நிராகரிப்பது அவ சியம். இசை, நடனம் என்பவற்றிலும் நல்ல இசை, கெட்ட இசை, நல்ல நடனம், கெட்ட நடனம் என்பன புராதன காலம் முதல் இன்று வரை இருந்து வருகிறது. இங்கு நல்லது என்னும் போது நல்ல உணர்வுகளை, நல்ல சிந்தனை களைத் தூண்டுவனவற்றையும்,கெட்டது என்னு மிடத்து, மனிதனில் குடிகொண்டுள்ள தீய குணங்களையும், தீய உணர்ச்சிகளையும், சிந்த னைகளையும் தூண்டவல்லனவற்றையுமே கருத்தில் கொள்கிறோம். எனவே, நல்ல பண்பு களைத் தூண்டுவனவற்றை உயர்ந்தன என்றும்' தீய எண்ணங்களைத் தூண்டுவனவற்றைத் தாழ்ந் தவை என்றும் தரம் பிரிக்கிறோம். இவ்வாறு பிரிப்பது பிழையான தொன்றல்ல. மிகச் சரியா னதே.

இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டி உள்ளது வேறு ஒருவகையான தரம் பிரித்தலை யாகும். ரசனையை உயர்ந்தது, மத்திமமானது, அடிமட்டமானது எனப் பிரித்துப் பார்ப்பது நியாயமானதொன்றா என நோக்குவது அவ சியம்.

ரசனை, நயப்பு என்பன பரிச்சயத்தால், பழக்கத்தால், சூழலால் ஏற்படுபவை. நாம் வாழும் சூழல் எம்மைச் சிலவற்றுக்குத் திறந்து விடுகிறது. அவற்றின் மத்தியில் வாழும் நாம் அவற்றுக்குப் பழக்கப்பட்டு விடுகிறோம். பழக்கப் பட்டவை என்பதால் அவை எம்மைத்தொடர்ந்து கவர்கின்றன. அவற்றையே நாம் நயக்கின்றோம். தாயின் உணவுதான் பிள்ளைக்கு என்றென்றைக் கும் சுவைமிக்கது. பின்னர் படிப்படியாகவே தாரத்தின் பாகத்தைச் சுவைக்கப் பழகி கொள் கிறோம். இதில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதல்லப் பிரச்சினை; இரண்டும் இருவேறு வகையினவே அன்றித்தரத்தினவல்ல.

கலை இலக்கிய ரசனையும் இவ்வாறே. எனவே தான் ரசனையை நிலைக்குத்துக் கோட்டுமுறை யில் வைத்து உயர்ந்தது,மத்திமம்,தாழ்ந்தது என நோக்காது, அதனைக் கிடைக் கோட்டு நிலை யில் வைத்து - அதாவது ஒன்றின் பக்கத்தில் மற் றையதை சமநிலையில் வைத்து, நோக்குவது பிரச்சனையைத் தவிர்க்க உதவக்கூடும். ஒவ் வொரு ரசனையும் ஒவ்வொரு வகையினது எனக் கொள்வதே மேலானது. ஒவ்வொரு வகையும், அவை அவற்றை நயப்பவர்தம் தேவைகளை நிறைவு செய்து கொண்டே உள்ளன. இது கலை இலக்கியங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக அமை யும் ஒன்றல்ல மனிதனது அனைத்து நடவடிக் கைகளுக்கும் இது பொருந்தி நிற்கும். உணவு, உடை, தொழில், பொழுது போக்கு, நட்பு,உறவு என மனித வாழ்வின் சகல துறைகளையும் இது உள்ளடக்கி நிற்கும்.

மேற்கண்டவற்றை அடித்தளமாகவைத்தே நாம் எமது நாடகங்களையும் நோக்க வேண்டியுள் ளது.''புரியாமை''என்பது இன்று நேற்றுத்தோன் றிய ஒரு புதுமை அல்ல; எமக்கு மட்டும் தோன் றியுள்ளதொரு பிரச்சினையும் அல்ல; இது ஆதி யும் அந்தமும் இல்லாதொரு பெரும் பிரச்சனை. இதனைப் போக்கிப் புரிதலை எற்படுத்துவதற் காக எல்லாக் காலங்களிலும் எல்லா மக்கள் கூட்டத்தினரும் பலவாறு முயன்றுதான் வந்துள் ளனர். அவ்வாறு முயன்றவிடத்தும் 'நூற்றுக்கு நூறு' என அனைவரும் புரிந்து கொண்டார்களா என்பது ஐயத்துக்குரிய ஒன்றே.

இரேக்கத்தின் புராதன நாடகங்கள் முதல், சீன, ஜப்பானிய, இந்திய நாடகங்கள் என்ப னவும் எமது பாரம்பரியக் கூத்துக்கள் என்பனவும், புரியாமையைப் போக்கப் பலவாறு முனைந்து வந்துள்ளன. இரண்டொரு உதாரணங்களை நோக்குவோமாயின்; 1. ஐதிகங்கள்,புராணங்கள் என்பனவே நாடகங்களின் கதையாகத் தெரிவு செய்யப்பட்டன. இவை மக்களுக்கு நன்கு பரிச்

சயமான கதைகளாக இருந்தன. 2.பாத்திரங்கள் தம்மைத் தாம் தன்மையில் அல்லது படர்க்கையில் அறிமுகம் செய்தல். சீன, ஜப்பானிய நாடகங்களில் இந்த அறிமுகம் விரிவான ஒன்றாகவும், பாத்திரம் மேடைக்கு வரும் ஒவ்வொரு வேளையும் திரும்பத் திரும்பக் கூறப்படுவதாகவும் இருந்தது. 3. விதூஷகன், கோமாளி, கட்டியக்காரன் போன்ற பாத்திரங்கள் மூலம் மக்கள் புரியும் மொழியில் பேசுவதன் மூலமும் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலமும் விளக்கம் ஏற்படுத்தப்பட்டது. 4. கூட்டுப்பாடல், பின்பாட்டுக்காரர் என்பன மூலம் நடந்ததையும், நடப்பதையும் பாடல் மூலம் விளக்குதல். 5. பாடல் மூலம் சொன்னவற்றை சுருக்கமாக உரைநடைப் பாங்கிலமைந்த எளிமையான மொழியில் ஓதல் பாங்கில் மொழிதல்.

இன்று எமது சமகால நாடகங்கள் பல மேற்கண்ட உத்திகளில் சிலவற்றைக் கையாளுவதைக் காணலாம். இருப்பினும் புரியாமை என்பது பூதாகாரமானதாகப் பேசப்படுகிறது. புரியாமைக்குக் காரணம் இன்று உள்ள நாடகங்கள் கூறும் கதைகள் புதியனவாக இருப்பது எனக் கொள்ள வாய்ப்புண்டு. அத்தோடு பல நாடகங்கள் நேர்கோட்டு முறைமையில் அமைந்ததொரு கதையைக் கொண்டிருப்பதில்லை.

மேலும், சில நாடகங்கள் உடல் ''மொழியை'' யும், சாண்பியங்களூடு வெளிப்படுத்தப்படும் ''மொழியை''யும், காட்சிப் படிமங்களையும், கருத்து நிலைப்பட்ட கோலங்களையும் அதிக அளவில் பயன்படுத்தி, செவிப்புலன் சார்ந்த மொழியைச் சிறிதளவு குறைத்துள்ளன. வேறு சில நாடகங்கள் பேச்சு மொழியைப் போதிய அளவு பயன்படுத்துகின்றன. எனினும் அவை கூற முற்படும் ''கதைகள்'' எமக்குப் பரிச்சயமற்றவையாக இருப்பதால் அவையும் புரியாமைப் பிரச்சினையுள் அகப்பட்டுவிடுகின்றன.

நாம் பார்க்கும் படிக்கும் அனைத்தும் எமக்குப் புரிய வேண்டும் என்பது மிகமிக இன்றியமையாத ஒன்றே. விளக்கமாகப் புரிந்து கொள்வதே தொடர்பாடலின் பயன். இருப்பினும் எல்லாம் புரிந்த நிலையில்தான் நாம் கலை, இலக்கியங்களை நயக்கிறோமா? வெள்ளத்தனைய மலர் நீட்டம் போன்று எமது அறிவு, அனுபவம், ஆர்வம், பரிச்சயம் என்பவற்றுக்கு ஏற்றவகையிலேயே நாம் ஒன்றை நயக்க முடியும். எமக்குப் புரிந்து விட்டது என்று நாம் நினைத்துக் கொள்ளும் அனைத்தும் எமக்கு உண்மையில் புரிந்துதான் உள்ளதா? புரிதலுக்கும் விளக்கத்துக்கும் எல்லை இருக்கிறதா? நல்லதொரு படைப்பு, ஆழகலம் அறியமுடியாத பிரபஞ்சத்தைப்போன்றதாக இருந்து கொண்டு அதனை நாடுந்தோறும் நவநவமான பொருளையும் அழகையும் தந்து நிற்கும் என்பார்களே; நயில்தொறும் நூல் நயம் என்பார்களே; பயில்தொறும் பண்புடையாளர் நட்பு என்பார்களே.

மேலும், அனைவரும் ஒருபடைப்பினூடே ஒன்றைத்தான் புரிந்து கொள்கிறார்களா? ''நன்றாக இருக்கிறது'' என்று நாலுபேர் சொன்னால், அவர்கள் ஒவ்வொருத்தரும் ஒரே அளவில்தான் புரிந்து கொண்டிருக்கிறார்கள் எனக் கொள்ள முடியுமா?

அத்தோடு, படைப்பாளி சொல்ல நினைத்த தனைத்தையும் நுகர்வோர் புரிந்து கொண்டுவிடுகிறார்களா? படைப்பாளி நினைத்தவை கூட நுகர்வோர் தம் முன் வந்து நிற்பினும் நிற்கும் என்பது. சிறந்த படைப்புக்கள் விளைவிக்கும் மாயவித்தைகளில் ஒன்றல்லவா? நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்றை நினைப்பது போன்று, படைப்பாளிகள் ஒன்றை நினைக்க நுகர்வோர் வேறொன்றை நினைப்பதில்லையா? கலை இலக்கியத் தொடர்பாடலில் இத்தனையும் இருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இவை அத்தனையும் இருப்பினும், தனது படைப்பு, படைக்கப்படும் மக்கள் கூட்டத்தால் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதையே எந்தவொரு படைப்பாளியும் விரும்புவான். தமது படைப்பு புரிந்து கொள்ளலுக்கு அப்பாற்பட்ட தளத்தில் நிற்கவேண்டும் என்று எந்தவொரு கலைஞனும் கருதமாட்டான்.

எனவே, 'புரியாமல் படைக்கிறார்கள்' என்று கூறும் போது' 'புரியாது இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தோடு படைக்கிறார்கள் என்ற பொருள்பட நாம் கூறிவிடக்கூடாது. அவ்வாறு கூறுவது, கூறுவோருக்கும் கூறப்படுவோருக்கும் கூடாது. கலை உலகில் நிலவ வேண்டிய நல்ல சுவாத்தியத்தை, சூழலை அது கெடுத்துவிடும். பகைமைப் புழுதியை அள்ளி இறைத்துவிடும். நல்ல பார்வையைக் கெடுத்துவிடும். உயர்மூச்சை அடைத்து விடும். படைப்பாளருக்கு இருக்க வேண்டியது போன்று பொறுப்பு, நுகர்வோருக்கும், 'விமர்சகர்களுக்கும்' கூட உண்டு.

மேலைத்தேய நாடகம் ஆடலையும் பாடலையும் 'கதை' கூறும் பாங்கையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் கட்புலனுக்கான கவர்ச்சிகள் அதிகம் யதார்த்தமுறைமையோடு, மேலைத்தேய நாடகம் உரைநடையில் அமைந்த வார்த்தைகள் மேலாதிக்கம் செலுத்தும் பண்பினைக் கொண்டு வளர்ந்தது. பின்னர் அங்கு யதார்த்த விரோதப் பாங்குகள் தோற்றம் பெற்று வளர்ந்த போதிலும் வார்த்தையின் ஆதிக்கம் அவற்றில் பெருமளவில் குறையவில்லை. மேலைத்தேயக் கல்வி, பண்பாடு என்பவற்றுடன் எமக்கு ஏற்பட்டுவிட்ட நீண்ட, நெருக்கமான பயில்வும் பரிச்சயமும் காரணமாக நாம், எம்மை அறியாமலேயே அவற்றின் அதிகமான செல்வாக்குக்கு ஆளாகிவிட்டோம். மேலைத்தேயக் கலை இலக்கியங்களின் பயில்வு எமக்கு வேண்டாம் என இங்கு கூறமுற்படவில்லை. அவை எமது கழுத்தை நெரித்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது என்பதே எனது நோக்கம். மேலைத்தேய நாடகங்களைப் போன்று அமையாதவற்றை ஏற்கத் தயங்கும் நுகர்வோரும். விமர்சகரும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். மேலைத்தேய கோட்பாடுகள், வடிவங்கள், வகைகள் என்பவற்றை அடிப்படையாக வைத்தே அவர்கள் தமது கருத்துக்களை வெளியிடுகின்றனர். சிலர் தாம் செய்வதை அறிந்து செய்கிறார்கள், சிலர் தம்மை அறியாது மேலைப்புலச் செல்வாக்குக்குட்பட்டு நின்று கருத்துக்கூறுகிறார்கள் இவ்வாறு நாம் நடந்து கொள்வதால், நமது கலை அதன் சுயத்தோடு, தனித்துவத்தோடு வளரமுடியாது சங்கடப்படும்.

சில புதிய முயற்சிகளைப் பார்த்து 'இவை நாடகங்களல்ல' என்று கூறும் வன்போக்கு இன்று தோன்றியதொன்றல்ல, ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே இப்போக்கு தோற்றம் பெற்றுவிட்டது. இருப்பினும் அன்றைய நாடகங்கள் கண்டங்களின் மத்தியில் நின்று நிலைத்து, இன்று அவ்வடிவங்களே பரவலாகியுள்ளன. அவை ஏறத்தாழ நியம அரங்கின் வடிவங்களாகி விட்டன அந்தநிலையில், பின்னர் வேறு சில புதிய வடிவங்கள் தோற்றம் பெறமுயலும் வேளையில், 'இவை நாடகங்களல்ல' என்ற வன்மமும், புரியவில்லை என்ற வாதமும் மேலெழுந்துள்ளன. ஆழ்மனநிலையில் நாம் அனைவரும் பழமை பேணும் பண்புடைய வைதிகவாதிகள் போலும். நேற்றைய நவவேட்கை வாதிகள் இன்றைய வைதிகவாதிகளாகவும், இன்றைய நவவேட்கைவாதிகள் நாளைய வைதிகவாதிகளாகவும் மாறிவிடுவது, எமது சமூகத்தின் இயல்பு போலும்.

பழையனவற்றைத் தூற்றிப் புதியனவற்றைப் போற்றவேண்டுமென்ற கட்டாயம் எவருக்கும் இருக்க வேண்டியதில்லை. ஆயினும் மாற்றங்களைக் கண்டு திகிலடையத் தேவையில்லை. மாற்றங்களை வளர்ச்சிகளாக வளர வழிவகுப்பது நுகர்வோரதும் விமர்சகர்களதும் பணியாகும். தாராளமனப்பான்மை கொண்ட தொரு தந்தை போல இருந்து புதிய கலை இலக்கிய முயற்சிகளை வழிநடத்துவது மேற் கூறிய இருசாராரதும் கடமையாகும். அது இயலாதவிடத்து கடும் கண்டிப்பு நிறைந்த தொருதந்தை போலேனும் அவர்கள் இருக்க முயற்சிப்பது அவசியம். இங்கு 'தந்தையை' உதாரணமாகக் கொள்ளக் காரணம், எவ்வளவு கெட்ட ஒருவராக இருப்பினும் தந்தை ஒரு போதும் தன் பிள்ளை அழிந்து போகவேண்டுமென நினைக்க முடியாது. தனயனின் நலனில் அக்கறை இருப்பதாலேயே அவர் அளவுக்கு அதிகம் கண்டிப்பவராக இருப்பார். தந்தையே ஆயினும், அளவுக்கு அதிகம் கண்டனமும், கிண்டலும், கேலியும், கண்டிப்பும், வெறுப்பும், இருப்பின், பிள்ளையின் வளர்ச்சி 'தறுக்கணித்துப்' போய்விடும். எனவே 'தந்தை, உதாரணத்தின் குறிப்புணர்ந்து நுகர்வோரும் விமர்சகர்களும் நடந்து கொள்வது அனைவருக்கும் நலம் பயக்கும்.

புதிய சிந்தனையும் புதிய நோக்குகளும் கொண்டு புதியன படைக்க முற்படுகிறவர்கள், எமது பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றிலிருந்து பல உத்திகளையும் சம்பவங்களையும், கதைகளையும், காட்சிப்படிமங்களையும் பெற்றுக்கொள்வது போன்று எமது பண்பாட்டிலும் பாரம்பரியச் சிந்தனையிலும் வேரூன்றிப் பதிந்துவிட்ட சில 'விழுமியங்களை'க் கையாள முற்படுகையில் மிகுந்த கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டியுள்ளது. சிறிதளவு கவனக் குறைவு ஏற்படும் பட்சத்திலும். நுகர்வோரும் விமர்சகர்களும் புண்பட்டுவிடக்கூடும். வெகுண்டெழக்கூடும்.

உளப்பிணிதீர்க்கும் மருத்துவரைப் போலவே சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த விளையும் கலைஞர்களும் நடந்து கொள்ள வேண்டும். வயிற்றில் நோவுடன் வரும் நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, வைத்தியர் அவனைப் பார்த்து 'உனக்கு வயிற்றில் கட்டி வளர்கிறது;

சத்திரசிகிச்சை செய்தால் நல்லது' என்று நேரடியாகவே கூறலாம். ஆனால் மனப்பிறழ்வுக்கான அறிகுறிகளோடு வரும் ஒரு நோயாளியைப் பரிசோதிக்கும் உளமருத்துவர், அவனை நோக்கி 'உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது' என்று மிகக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திக் கூறுவது சரியா? கூறினால் மருத்துவர் அடுத்தகணம் உயிருடன் இருப்பாரா என்பதே சந்தேகமாகிவிடும்.

பழைமைப்பண்புபால் எம்மை அறியாது நாட்டங்கொண்டுள்ள 'முற்போக்குவாதி'களாகிய நாம் ''கட்புலனுகர்ச்சி'' அறிவு குறைந்தவர்களாகவே உள்ளோம். எழுத்தறிவும், 'செவிப்புலனுகர்ச்சி அறிவும்' எமக்கு உண்டு. 'தாலி அவள் கழுத்தில் தூக்குக் கயிறாய்த் தொங்கியது' என்றதொரு வாக்கியத்தைக் கேட்டு நாம் திகிலடைவதில்லை. ஆனால் மேடையில் அவ்வரிகள் காட்சிப் படிமமாகக் காட்டப்படும்போது நாம் திகைத்து விடுகிறோம். ஆத்திரப்படுகிறோம். எம்மைச் சொல்லிக் குற்றமில்லை.

எனவே, இத்தகையதொரு கருத்துப்படிமத்தைக் காட்சிப்படிமமாக்க முனையும் போது, எமது திகைப்பையும், எதிர்ப்பையும் குறைக்கக் கூடிய முறையில் அவசியமான உத்திகளைக் கையாள்வது அவசியம். இல்லையேல் நாம் நோயாளியை எமது எதிரியாக்கிவிடுவோம். எம்மீது உள்ள நம்பிக்கையை அவன் இழந்துவிடுவான். இழந்த பின்னர், நாம் கூறும் எதுவும் அவனுக்குப் பிடிக்காது.

பிணிதீருவதையே நோயாளியும் விரும்புவான், வைத்தியனும் விரும்புவான், சமூகமும் விரும்பும் நோயைக் கூறுவது மட்டுமல்ல,அதனை நோயாளிக்குக் கூறும் முறைமையும், நோயைத் தீர்க்கும் பொறுப்பும் வைத்தியருக்கு உண்டு. எனவே, இந்த விஷயத்தில் நோயாளியையும், உற்றார் உறவினரையும் விட வைத்தியருக்கே பொறுப்பு அதிகம். மற்றும் இருசாராருக்கும் பொறுப்பு எதுவுமே இல்லை என்பது இதன் அர்த்தமாகாது, நோயாளி ஒத்துழைத்தால் வைத்தியனது பணி சுலபமாரும். ☐

வெளிச்சம் சிறப்பிதழுக்கு எமது வாழ்த்துக்கள்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரை

- சகல பாடநூல்களையும்
- ஸ்ரேசனறி வகைகள்
- பத்திரிகைகள்
- சஞ்சிகைகள்

ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

255 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

44, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

சர்ப்பமரணம்

கோகிலா மகேந்திரன்

இரவு பெய்த மழையில் மரம் எல்லாம் சொட்டச் சொட்ட நனைந்து பூ வெல்லாம் குளித்திருந்தது. இன்னும் சரியாக விடியவில்லை என்பதுடன் மழை இருட்டும் இருந்தது. மழை இருட்டில் அந்தப் பாம்பின் கருமை நிறம். மேகத்தின் வடிவத்தில் அதன் தோல் வரி அலை. இருளா ஒளியா மரணத்தைத் தழுவுகிறது?

அழுதே கழியும் ஊமை இரவுகளின் பின் பல்லு விளக்காத முகத்துடன் பவனி வருகின்ற சூரியன் இன்று புதிய உலகொன்றைக் கண்டு வழி தவறிப் போவோமா என்று மலங்க மலங்க விழித்து வெளியே வராது ஒளித்து நின்றான். நான் கதவைத் திறந்து முன் புறத் தோட்டத்தில் கால் வைத்தேன்.

அப்போதுதான் அந்தப் பாம்பு பற்றை மறைவில் ஒளித்திருந்து விட்டு என்னைக் கண்டு மிரண்டு. கண்ணை மூடிக் கொண்டு ஓடி... கண்ணை மூடிக் கொண்டு என்பது பிழை; பாம்புக்குக் கண் மடல்கள் இல்லை. பிறகு எப்படிக் கண்ணை மூடுமாம்? கூடாசிப் பூ மரத்தில் ஏறி அதன் கிளைகளில் மறைந்தது.

''ஐயோ!'' காலுக்கு மிக அருகில்... ஒரு சென்றிமீற்றர் தூரத்தில் பாம்பு ஓடியதால் அதிர்ச்சியும் பயமும் அடைந்து, நான் போட்ட கத்தல் குறைந்தது நூறு மீற்றருக்குக் கேட்டிருக்கும்.



□

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் கோபுரத்துக்கு அருகில் நின்றிருந்த நான்-எனது தலைக்கு நூறு மீற்றர் தூரத்தில் அந்தக் குண்டு வருவதைக் கண்டு அதிர்ச்சியும் பயமும் அடைந்து, போட்ட குழறல் குறைந்தது ஐநூறு மீற்றருக்குத் தெளிவாகக் கேட்டிருக்கும்:

''ஐயோ.... போட்டிட்டான் அம்மாளாச்சீ! ....'' மனிதர்கள் எல்லாம் வேகமாய் ஓடுகிறார்கள் எங்கே என்று தெரியாமல்! நான் இன்னும் பலருடன் கோபுரத்தின் கீழ் பதுங்கிக் கொண்டேன். எங்கும் புகை, இருள் . செவிச் சவ்வு பிளந்து விடும் ஒலிகள்!

இருளைப் பிளந்து கொண்டு ஒற்றையாய் ஒரு அழுகை ஓலம்! என்னுடையதுதான்!

''ஐயோ..... என்ரை பிள்ளை!'' 'சீனச் சகடை' மீண்டும் சுற்றுகிறது..... எனது தலையும் கூடவே! உடல் மிக நன்றாக... குளித்தது போல் வியர்த்து விட்டது. இதயத் துடிப்பு..... கதவு காற்றுக்கு அடிப்பது போல் ''படார்... படார்'' என்று கேட்கிறது.

வெளியே வந்து பிள்ளையைத் தேடவும் முடியாமல்... உள்ளே நின்று தேடாமல் நிற்கவும் முடியாமல்... என்ன வேதனை இது?

''ஐயோ, எனக்குப் பிள்ளை இல்லாமலே இருந்திருக்கலாமே!''

''இந்த நேரம் பாத்துக் கடலை ஆச்சிட்டைக் கடலை வாங்க வெண்டு ஓடினானே!''

''எனக்கு மேலை விழுந்தா விழட்டும். பிள்ளையைத் தேடிப் பிடிக்காம என்னாலை நிக்க ஏலாது .....''

எனது சொந்தப் பாதுகாப்பு உணர்வு இடிந்து தகர்ந்து போயிற்று. சனத்தைப் பிளந்து கொண்டு வெளியே ஓடுகிறேன். அப்போது .....

இரண்டாவது குண்டு எனது தலைக்கு இருநூறு மீற்றர் தொலைவில் .....

ஓடுகிறேன்... ஓடுகிறேன்... மனதுக்குள் பல கறுப்புக் குரல்கள்!

□ □

ஆசியாவின் பைத்தோன் போன்ற பாம்புகள் – தனது தலையை விட மிகப் பெரிய இரையை - சில சமயம் மான்களைக்கூட - விழுங்கி விடுமாம்.

இந்தப் பாப்பு எனது ஒரு வயதுக் குழந்தையை விழுங்கி விடுமோ?

எச்சிலை விழுங்கினேன். புண் மீது மருந்து தடவியது போல் எரிந்தது.

உள்ளே பாய்ந்து சென்று குழந்தையைப் பார்த்தேன். குழந்தை புற்பாயில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

இது உறக்கந்தானா.....? அல்லது ..?மேலே ஏறிய பாம்பு கூரைவளை மூலம் உள்ளே இறங்கி ?

இது ஒரு வேளை ''ஆபிரிக்கன் மம்பா'' வாக இருந்தால் ..? கடித்த ஒரு நிமிடத்துக்கிடையில் மரணம் நிகழ்ந்து விடுமாமே ?

''கடவுளே . !''கடவுளிடம் நம்பிக்கை குறைகிற போதும் .. (இவ்வளவு அக்கிரமமும் நடக்கும் போது, தனது வாழிடமாகிய கோயிலிலேயே குண்டு விழுகிற போதும் ஒன்றும் பேசாமல் கல்லாய் இருக்கிற கடவுள்....?) ஏன் என்று தெரியாமலே கடவுளைக் கூப்பிட்டுக் கொண்டு குழந்தையின் மூக்கின் கீழே புறங்கையை வைத்துப் பார்க்கிறேன்.

''அப்பாடா!'' குழந்தை முச்சுவிட்டு உறங்கியது!

□ □

''அப்பாடா!''

கடலை ஆச்சியைக் கட்டிக் கொண்டு தலையைக் கடலைச் சுளகுக்குக் கீழே போட்டுக் கொண்டு – இந்தா– படுத்திருக்கிறான்!

தலைக்கு வரும் குண்டைச் சுளகு காப்பாற்றிவிடும் என்பது போல'...

என்னைக்கண்டதும்எழுந்து ஓடி என் முந்தானைச் சேலையைப் பிடித்துச் சிரிக்கிறான்.

''அம்மா காசு விழுந்தோச்சு கடலை இல்ல.....'' மூன்று வயதுக்குள் அடங்காத துடியாட்டம்.

கோயில் வாசலில் இரத்தக் குவியல்! காயப்பட்டவர்களையும் மரண வாசலுக்குச் சென்றவர்களையும் காவிக் கொண்டு அம்புலன்ஸ் வண்டி ஒன்று பறந்து போகிறது.

கோயில் சூழலை அசுத்தமாக்கிவிட்ட திருப்தியில் சகடை மறைந்து போகிறது.

''ஐயோ! சகடையே! உனக்கு மரணம் இல்லையா?'' மூன்று வயதை இடுப்பில் சுமந்து கொண்டு – நிறையவே அழ்மனதில் பயத்தையும் நிரப்பிக் கொண்டு -வீட்டுக்கு வருகிறேன்.

எனது நிலா முற்றம் கூட ஏதோ ஒரு அச்சத்தில் உறைந்து போய்க்கிடக்கிறது மரம், செடி, கொடி, எதுவும் அசையவில்லையே!

□ □

நான் பாம்புக்குப் பயம். பாம்பு எனக்குப் பயம். நல்ல வேடிக்கை இது! பாம்புக்கான பயம் மறைந்து விட்டதென்று யார் சொன்னது? நேற்றிரவுக் கனவிலும் இதே பாம்பு வந்ததே! கனவில் வரும் பாம்பு வேறு ஏதோ ஒன்றின் ''சிம்பல்'' என்று உளவியலாளர்கள் சொன்னால் சொல்லட்டும்! எனக்கு வந்தது அசல் பாம்புதான்!

வானத்தில் வேட்டு முழக்கங்களுடன் தோன்றுகிற சீ–பிளேன்!

கொறித்த விழிகளுடன் திசைகளை அளந்து விட்டு ..... சீ – பிளேன் தலைக்கு மேல் வட்டமிடுவதை உணர்ந்து..... குழந்தையின் நித்திரையைக் குழப்பித் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு... பங்கரை நோக்கி ஓடுகிறேன்.

''குழந்தை கவனம் – பக்கத்திலை குண்டு விழுந்தால் காதுச் சவ்வு வெடிச்சிடும்.....''

கணவரின் குரல் செவிகளிலும் புலன்களிலும் அடிக்கடி மோதிச் சிலிர்த்து ரீங்கரித்த வண்ணம் இருக்கிறது.

குழந்தை ஒருசாட்டுத்தான்! மூட்டை மாதிரி முடங்கிக் கொண்டு, வீடே அதிருகிற மாதிரி இருமுகிற பாட்டிக்குச் சீ–பிளேன் என்றால் பயமில்லையா? அல்லது இளரத்தம் ஓடுகிற என் கணவருக்குத்தான் இல்லையா?

மூட்டைக்குள்ளிருந்து எழும்பும் நாருமான குச்சுக்கையை வெளியே நிட்டி, ''தம்பி, சகடை எதாலை போகுது மேனை?'' என்று கேட்கும் போது, நடுங்கும் பாட்டியின் குரல் வயதினால் மட்டும் வந்ததென்று சொல்ல முடியாது.

பங்கர் வாசலில் .. பனை மரங்களின் நடுவில் ஒரு பாம்புச் செட்டை. இதற்குள்ளே நுழைந்த பாம்பு வளர்ந்திருக்கிறது. வளர்ச்சிக்கு இடம் கொடாத தோலைக் கழற்றிவிட்டது.

''முந்த நாளும் உதுக்குள்ளை ஒரு செட்டை கிடந்தது மேனை .....''



நினைவுத் தூபிகளாய்....

பிள்ளை,
முற்றத்தைக் கூட்டாதே .....

எங்கள்
மண்ணை ஆக்கிரமித்திருக்கும்
இராணுவத்தை,
அடித்துக் கலைப்பதற்காய்
வந்த போராளிகள்
இங்கே — இரவு தங்கினார்கள்!
உன் அண்ணனும் வந்தான்;
நித்திரையில் உன்னை
முத்தமிட்டுச் சென்றான்.
பிரிகையில், நினைவு கனத்தது;
இமைகளை நீர் நனைத்தது;
அவர்களில் சிலர்
திரும்பி வரமாட்டார்கள்.....
அதனால்தான் நீ
முற்றத்தைக் கூட்டாதே ....
ஏனென்றால்,
அவர்களின் பாதச் சுவடுகள்
நினைவுத் தூபிகளாய்
முற்றத்தில்
அழியாதிருக்கட்டும்!

கருணை ரவி

பாட்டியின் குரல் நடுக்கத்துடன் கேட்டது. ஆறு வாரங்களுக்கு ஒரு முறைதானே பாம்பு தோல் கழற்றுமாம்? அப்படியானால் ..... இந்த பங்கருக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பாம்புகள் வாழுகின்றனவா?

பங்கருக்குள் போனால் தலைக்கு மேலே பாம்பு!

வெளியே நின்றால்... தலைக்கு மேலே சீ – பிளேன்!

கண்ணை மூடினால் பாம்பு... திறந்தால் சீ – பிளேன்! இல்லை திறந்தால் பாம்பு . ... மூடினால் சகடை! ஒ..... கனவுதானா?

□ □

அந்தச் சத்தம்... அவ்ரோதான்! மனம் சரியாகவே பாகுபடுத்தி அறிந்து கொள்கிறது. ஆனால் எதுவாக இருந்தால்தான் என்ன? அவ்ரோ... சீ - பிளேன், சகடை, பொம்பர், ஹெலி. எதுவாக இருந்தாலும் அந்தச் சத்தம் கேட்டவுடன் எனக்குள் பல பாம்புகள் ஒடுவதுபோலத் திடீரென்று ஒரு பயம் மனத்தை இறுக்குகிறது.

எந்தப் பெரிய வியாதி வந்தாலும் இப்படி ஒரு வேதனை இருக்கும் போலத் தெரியவில்லை. அந்த வேதனையை எப்படி விபரிப்பது என்றும் புரியவில்லை. எங்கோ வேகமாக ஓட வேண்டும் போல ஒரு அந்தரம்..... ஆனால் அசைய முடியாத ஒரு விறைப்பு.

''ஒரு நாள் அநுபவம் எப்போதும் நடக்கப் போவதில்லை, இது அநேகமாகக் குண்டு போடப் போவதில்லை'' என்று எவ்வளவு தான் அறிவு மனம்- நனவு மனம்- சொல்லிக் கொண்டாலும்... தன்னாட்சிநரம்புத் தொகுதிஎல்லாம்தனக்கே தெரியும்எனபதுபோல்நடந்து கொள்கிறது. பாத்றூமுக்குப் போக வேண்டும் போல இருக்கிறது. உள்ளேநுழைந்தேன்.

□ □

பாம்பு இனங்களில் பத்தில் ஒன்பது பகுதி தீமை அற்றவை. சீ – பிளேன், அவ்ரோ வகைகளில் பத்தில் பத்தும் தீமையானவையே!

ஆகவே பங்கருக்குள் நுழைந்தேன். புகையும் புழுக்கமும் இறுக்க எங்கோ ஒரு இருட்குகையில் பாறையின் இடிபாடுகளில் அமுக்குவது போல், யாரோ கழுத்தை நெரிப்பது போல், மூச்சு அடைத்தது.

மனம் என்பது பெரிய பள்ளத்தாக்குத்தான்!

ஆழம், இருட்டு, அடர்த்தி!

அன்று கனவில் தோன்றிய அந்தப் பாம்புக்கு மஞ்சள்நிற மான கண்வில்லை. இந்த மஞ்சள் கண்கள் ஊதாக் கடந்த கதிர்களைப் பிரித்துப் பார்வையைக் கூர்மை அடையச் செய்யும் என்று எனக்குக் கனவிலும் நினைவு வருகிறது பாருங்கள்!

''நீ என் மனைவியைக் கொலை செய்தாய். நான் உனக்குச் சாபம் போட்டிருக்கிறன்...'' பாம்பு பேசுகிறது.

''பாம்பு சாபம் போடுவதை நம்ப நான் ஆயத்தமில்லை. நான் புத்தி ஜீவி''

– என்பது நான் சொல்லாதபதில்.

பயங்கரமாக நாக்கை நீட்டிக் கொண்டு அது என்னைத் துரத்துகிறது. இது ''தீமையற்றதாக இருக்கலாம்'' என்று எனக்குத் தோன்றவில்லை. நான் ஓட்டமாய் ஓடுகிறேன்.

''என்னை ஒன்றும் செய்யாதே'' என்று கெஞ்சுகிறேன். பாம்பு 'செவிடு' என்பது என் மனதில் உறைக்கவில்லை.

□ □

அவ்ரோவின் சத்தம் என்னை நோக்கி வருகிறது.

□ □

இரவு நேரம்! அமாவாசை! இப்போது பாம்பு எனக்கு மிக அண்மையில் வந்து விட்டது. அதன் கண்கள் பூனையின் கண்கள் போலப் பிரகாசமாய்! என்னை நுணுக்குக் காட்டியில் பார்ப்பது போல் தெளிவாகப் பார்த்திருக்கும்.

நாக்கை நீட்டி என்னைத் தொட்டுப் பார்க்கிறது. எனது உடல் மணத்தை அச்சொட்டாக அறிந்திருக்கும். இனிமேல் தப்புவது சாத்தியமில்லையோ?

''உட்பக்கம் வளைந்து, ஊசி போலக் கூர்மையான உன் பற்களால் என்னுடலில் நீ நஞ்சு செலுத்த நான் விடப் போவதில்லை.....

நான் திடீர்த் துணிவுகொண்டேன். வேகமாய் ஓடி, வேலியில் கிழுவங் கதியாலை முறித்தேன். விசையுடன் ஓங்கி தலையில் ஒரு போடு போட்டேன்.

''டும் .....''

□ □

என்னை நோக்கி வந்து கொண்டிருந்த அவ்ரோவின் சத்தத்தின் மத்தியில் அந்த ''டும்..'' சத்தம் மிகத் தெளிவாகவே கேட்டது.

□ □

''நீ என்னிடம் தப்பி விட்டாய். ஓ ..... என்னை ..... என்னைஓ ..... ஆ... ஆ ..... முடிந்து விட்டாயா?''

முனகிக் கொண்டே உயிரை விட்டது பாம்பு.

கண் விழித்தேன்.

பூமியில் பாதம் பரவாத பரவசம் மனதில் இருந்தது.

□ □

தெருவெல்லாம் ஒரே களபுளா! இவர்கள் எல்லாம் எங்கே ஓடுகிறார்கள் வலு உற்சாகமாய்?

''டேய்..... பிளேன்.....''

''ணிங் ணிங் ணிங்.....''

''மச்சான் அவ்ரோ.....''

''பீப்... பீப்... சரியடா...''

''இண்டைக்கு இரண்டாவது ஆளும் முடிஞ்சார். இனிமேல் இந்தப் பக்கம் தலையும் வைக்க மாட்டார்!''

எல்லாரும் சிரித்துக் கொண்டே ஓடுகிறார்கள் - பார்க்க!

மே தினக் கூட்டத்தை விட .... அதிகளவு சனம்! நான் இப்போது பாம்புக்குப் பயமில்லை!

ஓ ..... பிளேனுக்குந்தான்!

□□

அழகழகான நகைகள்
நவநவமான டிசைன்களில்
செய்து தருபவர்கள்
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

22 கரட் தங்க நகைகள்
ஓடருக்குச் செய்து
தரப்படும்.

நவீன டிசைன்களில்
பல வகை நகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போருள் நானும் என்னுள் போரும்



சிவஞானம் ஜெயசங்கர்

மகா நாமரே!
புத்தபகவானின் பெயரினால் யுத்த சன்னத்தராக உலா வருவோரே!
போர்வெறியர்கள் போதிசத்துவர்களாக
உலா வரும் நாட்டின்
ஆதிக்கத்துள் கிளரும் தமிழ்க்கவிஞன் நான்.

மகா நாமரே!
நிராயுதபாணியான ஒரு சமூகத்தின் மீது
''போரா? சமாதானமா?'' சூளுரை செய்தோரே!

யதார்த்தம்
என் முகத்தில் அறைந்து சொல்லிற்று,
நீயொரு மனிதனாகு!
மனிதனின் கவிஞனாகு!!
மனிதத்தை உன் பாடுபொருளாக்கு!!! என்று.

வல்லமை கொண்டன
என் கவிதையின் வரிகள்.
புல்லிதழ்களாலும் பூவிதழ்களாலுமான எனது சொற்கள்
உலோகத்தகடுகளாலும் வெடிமருந்துகளாலும் மாற்றீடு செய்யப்பட்டு விட்டன.

வல்லமை கொண்டன
என் கவிதையின் வரிகள்.
இருட்டினில் அலையவிடப்பட்டுள்ள எனது மக்களின்
வாயிலும் வயிற்றிலும் அடிக்கப்பட்டுள்ள
எனது மக்களின் குரல்வளையில்
உம்கொடுங்கரங்கள் இறுகப் பதியினும்
வீறுகொண்டெழும் எனது மக்களின்
விடுதலைக் குரல்போல்
வீரியம் கொண்டன என் கவிதையின் வரிகள்.

சமாதானத்தின் குரலுக்கு
செவிடாகிப்போன உமது செவிகளுக்கு
வெடிகுண்டுச் சத்தங்களையே கேட்க முடிவதை
எம்மால் நன்றாகவே உணர முடிகிறது.
ஆதலினால் வார்த்தைகளும் சன்னங்களாகின.
மரணம்
உங்களது முற்றங்களிலும் உதிர்க்கும் பொழுதிலேயே
அதன் வாசனையை உங்களால் நுகர முடிவதை
எங்களால் நன்றாகவே உணர முடிகிறது.

எங்கள் முற்றங்களில்
மரணத்தை வளர்ப்போரே!
துயரம்
எங்களை வீரர்களாக்கிற்று!

போருக்கும் சமாதானத்திற்கும்
தயாரான சமூகத்தின் கவிஞனாய்
உம்முன் வந்தேன்.

□□

தாயகப் பயணம்

சு. மகேந்திரன்

அந்த முடிவை ரீட்டா இனி மேல் மாற்றிக் கொள்ளவே மாட்டாள். யார் சொன்னாலும் இது நடைபெறப்போவதில்லை. கடந்த மூன்று மாத காலமாக அது அவளுள்ளே உரு வாகிவந்துள்ளது. எடுத்துக் கொண்ட கடமையை உத்தே சித்து, இதுவரை காலமும் பல் லைக் கடித்துக்கொண்டு பொறுத் திருந்தாள்.

அம்மாவை அக்கா பார்த்துக் கொள்வாள். பேரப்பிள்ளைகள் அம்மாவை மதிக்கிறார்கள்; அன் பாக இருக்கிறார்கள் ரீட்டா இங்கிருந்து போவதில் எந்த விதத்தடங்கலுமில்லை இங்கிருந் தால் தமிழருக்கு நடைபெறும் அவமானங்களை, மௌனமாகப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும். கொழும்பில் எங்கு பார்த்தாலும் தெரியும் வெறும் கட்டிடங்கள் அல்ல அவள்

நகரின் இதயம் போன்ற பகு தியில் அவள் குடியிருக்கிறாள். அந்த வீடு அவளது பாட்டனார் கட்டியது. நாட்டின் வடமேற்கு கிராமம் ஒன்றில் இருந்த வயல் களின் பெரும்பகுதியை விற்றுக் கட்டியதாம். கதிர்கள் முற்றி அறுவடையாகும் தருணத்தில் பார்க்கும் திசையெல்லாம் பொன்நிறமாக இருக்குமாம். அதனாலேயே அவளின் பாட்டி யின் பூர்வீகக்கிராமத்துக்கு பொன்பரப்பி என்று பெயர். அம்மாவுக்கு தான் சிறுவயதில் வாழ்ந்த அந்த ஊரின் நினைவு இருக்கிறது. அவளுக்கும் அக்கா வுக்கும் ஐந்தாம் ஜோர்ஜ் மன் னரின் முத்திரையிட்ட, மங்கிப் போன உறுதியில், அந்த வயல் களின் பெயர்கள் இருப்பது மட் டுமே தெரியும். ஐந்து ஏக்கர் வயலும், ஏழு ஏக்கர் மேட்டுப் பூமியும் இப்போதும் அந்த ஊரில் அவர்களுக்கு உறுதியின்படி இருக் கிறது. அவளது அப்பா அந்த நிலங்களையும் விற்க முயற்சி செய்தார் ஆனால் முடிய வில்லை. அக்காவின் பிள்ளைகள் சர்வதேசப்பாடசாலை ஒன்றில் படிப்பதால், தமிழைக் கொச் சையாகப் பேசுகின்றன. யாழ்ப் பாணத்தில் உள்ள ஊர்களில் மயிலங்கூடல், இளவாலை என்ற இரண்டு ஊர்களின் பெயர்கள் மட்டுமே அவற்றிற்குத் தெரியும்.

கறுவாக்காட்டிலுள்ள இந்த வீடு கூட முன்பு நல்ல விசால மான தோட்டத்தைக் கொண்டி ருந்தது. இப்போது 'காடின்' என அவர்கள் அழைக்கும் இடத்தில், அவர்களது பெரிய பியா னோவை மட்டுமே வைக்கலாம். பாட்டா வெடிமருந்து சேகரித்து வைக்கும் அரசாங்க டிப்போவில் பிரதம அதிகாரியாக இருந்தார். ஆள், அணி, அம்பு எல்லாமிருந் தன. ஓய்வு பெற்ற பின்பும் கூட, பழைய தரத்திலேயே வாழ்க்கை யைக் கொண்டு சென்றார் பாட்டா. அதனால் வீட்டின் பின்புறமிருந்த தோட்டத்தை விற்க வேண்டி வந்தது. முகாந் திரம் பட்டத்திற்காகத் தைக்கப் பட்ட உடுப்புக்களுடனேயே, பாட்டா அடக்கம் செய்யப்பட் டார். அடக்கம் செய்யப்படுவ தற்கு சற்றுமுன், பட்டத்தின் போது கொடுத்த வாளை சவத் திலிருந்து எடுத்துக் கொண்டார் அவளது அப்பா. தன்னுடன் சண்டை போடமுடியாத வய



தானவர்கட்கே, முகாந்திரப் பட் டமும் கொடுத்து, மொட்டை வாள்களையும் அளித்து வந் தான் வெள்ளைக்காரன். அசல் வெள்ளியிலான சங்கிலியுடன் கூடிய கோட்டுக்குள் வைக்கும் கடிகாரமும், இந்தவாளும் இன் றும் சோக்கேசில் இருக்கின்றன. அவளது தாய்மாமன் எழுதிய பரிசு பெற்ற கதையிலும் அந் தக் கடிகாரம் வருகிறது.

எந்தக் கலவரத்திலும் அவர் களது வீடு பாதிக்கப்படவில்லை. சிங்களவர்களில் பலர் அவர்க ளைத் தமிழர்கள் என்றே கரு துவதில்லை. பறங்கிக்காரர்கள் என்றே அர்த்தம் கொள்வர். மேனி கறுத்த பறங்கிக்காரர்கள்.

வெள்ளவத்தையைப் போலவோ அல்லது கொட்டாஞ் சேனையைப் போலவோ அன்றி,

...ணர்சங்கம் இலை நூலகம்
...நகர சபை

அவளது வீடு அமைந்திருக்கும் பகுதி ஒருவித நடுக்கத்துடன் கூடிய அமைதியுடன் இருக்கும். சில்லிட்ட அமைதி அது. அங்கு பழைய வீடுகளை காலத்துக்கு காலம் நவீன மாறுதல்களுக்கு ஏற்ப புதுப்பித்து வந்தனர். வீடுகளை முற்றாக இடித்துப் புதிய வீடுகள் கட்டப்பட்டதை அவள் கண்டதேயில்லை. பழைய கதிரைகள், மேசைகள், கட்டில்கள் தரும் அந்த அசாதாரண லக்சறியை, கறுவாக்காட்டுவாசிகள் பெரிதும் போற்றுவதை அவள் அவதானித்திருக்கிறாள்.

இனிமேல் தமிழர்களின் வீடுகளை எரிப்பது என்பது மிகவும் கஸ்டமானதாக இருக்கும். இப்போதெல்லாம் தமிழர்கள் தமது வதிவிடங்களை தொடர்மாடிகளிலேயே வாங்குகிறார்கள். சிங்களவர்கள் வதிவிடங்களும் பக்கத்தில் இருப்பதால் எரிக்கமுடியாது. தமிழர்கள் திறமையில் தம்மையூதர்களுடன் ஒப்பிட்டுக் கொள்கிறார்கள். ஆனால் யூதர்கள் எப்போதும் தம்மினத்தவர்களுடனேயே வாழ்கிறார்கள். ஆங்கிலம் நன்றாகத் தெரிந்தும் ஜிடிஸ் (Yiddish) மொழியில் தான் எழுதுவேன் என்கிறான் யூத எழுத்தாளனான சிங்கர். அதைப் பார்த்து தானும் ஜிடிஸ்சிலேயே எழுத முயற்சிக்க வேண்டும் (ஆதங்கப்படுகிறான்) என இன்னொரு யூத எழுத்தாளனான பார்லோ. இன்றும் கூட தமிழர்களில் பலர் ஆங்கிலத்திலேயே கையெழுத்திடுகிறார்கள்.

அவள் சிறுவயது முதல் கொழும்பிலேயே வளர்ந்து, பின் யாழ்ப்பாணத்துக்கு வந்தவள். அவனது தகப்பனார் சிங்களப் பகுதிகளிலேயே வேலை பார்த்தவர். 30களிலேயே துவேசம் இருந்ததாகச் சொல்லுவார். பாட்டாவின் ஒரே மகனான அவருக்கு கறுவாக்காட்டு பங்களா செந்தமாகியது. ரீட்டாவின் அக்காவுக்கு அதனைச் சீதனமாகக் கொடுத்திருந்தார். பாட்டாவிற்கு இளவாலை—மயிலங்கூடலில் ஒரு பெரிய வளவி ருந்தது. ரீட்டாவின் அப்பாவிற்கு தனது கடைசிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் கழிக்க வேண்டும் என்ற விருப்பமிருக்கவே, அந்தக் காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடொன்றைக் கட்டினார்கள். கொழும்பில் ஆசிரியையாக வேலை செய்து வந்த அவளும், பெற்றோருடன் யாழ்ப் பாணம் வந்தாள்.

தமது சென்றிகளை அகற்றினர். அரசாங்கம் எப்போதும் செய்வது போல் உறுதிமொழியிலிருந்து பிசகியது. அவளது வீடும்ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது.

எடுக்கக்கூடிய பொருட்களையும் எடுத்துக்கொண்டு, அவளும் தாயாரும் வெளியேறினார்கள். தொலைந்தவற்றில் அவள் சேகரித்து வைத்திருந்த அரிய பல புத்தகங்களே அவளை அதிகதுன்பத்துக்குள்ளாக்கியவை. மற்றவை தாளடைவில் மறக்கப்பட்டுவிட்டன. புத்தகங்களின் நினைவு அடிக்கடி வந்து ஆக்கிரமிப்பாளர்கள் மேல் இனம் புரி

> *'ஒரு வானம் பாடி இசைக்கும் போது அதன் ஒலி காலத்தைத் தாண்டி படுவேகமாக எதிர் காலத்தை நோக்கி ஓடுவது போலத் தோன்றும். ஆனால் ஒரு நைட்டிங்கேல் பறவை பாடும் போது, செழுமையான சென்ற காலங்களின் நினைவுகளின் ஒத்திசைவை நமக்குக் கொடுப்பதாக இருக்கும். கவிதையும் அப்படியே'*
>
> — டி. எஸ். லோறன்ஸ்

சில காலத்தின் பின் அவளது தந்தையார் இறந்துவிட்டார். தாயும் மகளும் அங்கேயே இருந்தனர். சிவப்பு மண் கொண்ட அந்தப் பகுதியில் எந்தப் பயிரும் சிறப்புற வளரும். அவளது அப்பா வைத்த பலாமரங்களும் மாமரங்களும் காய்க்கத் தொடங்கியிருந்தன. அமைதியான இடம். பக்கத்தில் தேவாலயமும் பாடசாலையும் இருந்தன. அவள் மகிழ்வுடன் இருந்தாள். அந்தப் பகுதியில் பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்கினால், காங்கேசன்துறையிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்துவரச் சுலபமாக இருக்குமென்று செஞ்சிலுவைச் சங்கம் சொன்ன யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாகக் கூறியது. போராளிகளும் யாத ஆவேசத்தை அவளுக்கு ஏற்படுத்தும்.

அவளும் தாயாரும் அவளது தகப்பனாரது சொந்தக்காரருடன் ஆனைக்கோட்டையில் தங்கியிருந்தனர். அவளது பாடசாலை மானிப்பாயில் இயங்கியது. சென்றமாதம் பாடவிதான சபையிலிருந்து ஒரு கடிதம் அவளுக்கு வந்தது. நாலாம் ஆண்டிற்கான ஆங்கிலப் புத்தகத்தை மீளாய்வு செய்யப்போகும் ஆசிரியர்குழுவில் அவளும் சேர்க்கப்பட்டிருந்தாள். யாழ்நகரில் வேறொரு பாடசாலையில் படிப்பிக்கும் சுசிலாவுக்கும் அழைப்பு வந்திருந்தது.

அவளும், அவளது தாயாரும், சுசிலாவும் கொழும்புக்கு

வந்தனர். கடைசியாக கொழும் புக்கு அவள் வந்து நான்கு வரு டங்களாகியிருந்தன. தமிழர்கள் கொழும்பில் அலைமோதித் திரி வதை அவள் கண்டாள். 83ல் மிகவும் கொடூரமாகப் பாதிக்க ப்பட்ட ஹெந்தல, வத்தளைப் பகுதிகளுக்குக் கூட தமிழர் திரும்பி வந்திருந்தனர். தனக்குத் தெரிந்த தமிழ்ப் போஸ்ட்மாஸ் டர் ஒருவர் அத்துல் கோட்டை யில் இருக்கிறார் என அறிந்த போது அவள் திகிலுற்றாள். நெஞ்சில் நிரம்பிய ஆவேசம் இருந்தும், பணத்துக்காக சிங்கள வர் தமிழர்கட்கு வீடுகளை வாட கைக்குக் கொடுத்திருந்தது தெரி ந்தது. தங்களது வீடுகளை வாட கைக்குக் கொடுத்து விட்டு, கம் பஹா மாவட்டத்திலுள்ள கிரா மங்களுக்கு வீட்டின் சொந்தக்கா ரர்கள் போயிருந்தனர். சிங்கள வர்கட்காயின் ஐந்நூறு ரூபாவுக் குமட்டுமே கொடுக்கக்கூடிய வத் தளை வீடுகள் ஐம்பதாயிரம் ரூபாய் முற்பணத்துடன் நாலா யிரம் ரூபாய் வாடகைக்கு தமி ழர்களுக்கு கொடுக்கப்பட்டிருந் தன.

அன்று அமர்வின் கடைசிநாள். குழுவின் தலைவராக, தனக்குப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடங்கள் யூனியராகப் படித்த, தன்னைவிடத் தகுதி குறைந்த பெர்னான்டோ என்ற சிங்க ளவர் வீற்றிருப்பதைக் காணும் போதெல்லாம், நமட்டுச் சிரிப் பொன்று வருவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. குழுவில் எல்லாமாக பன்னிரண்டு பேர். அவளும் சுசிலாவும் மட்டுமே தமிழர். டியூட்டி லீவிற்கான பத்திரத்திலும் மேலதிக வேத னத்திற்கான வவுச்சரிலும் கையெழுத்திடும் வேலை மட் டுமே அன்று பெர்னான்டோ வுக்கு இருந்தது.

கடந்த மூன்று மாதங்களாக நடந்த அந்த அமர்வில் இடையி டையே பெர்னான்டோவும் மற் றவர்களும் சிங்களத்தில் கதைக் கத் தொடங்கிவிடுவார்கள். சிங் களம் குறுக்கிடும் போது ரீட்டாவிற்கு கோபம் பற்றிக் கொண்டு வரும். சுசிலா எதுவும் புரியாமல் பேந்தப்பேந்த விழிப் பாள். அவளைப் பார்க்கப் பரிதா பமாக இருக்கும்.

நீண்ட நேரம் சிங்களம் கலந்த ஆங்கிலத்தில் அமர்வு தொடரும் போது, பொறுமை இழந்து ''நாங்களும் இருக்கி றோம்'' என்பாள் ரீட்டா. பின் முழுமையான ஆங்கிலத்தில் எல் லோரும் கலந்துரையாடுவார் கள். ஒரு நாளில் பலதடவைகள் இது நடக்கும்.

ஒரு நாள் பெர்னான்டோ சாப்பாட்டு இடைவேளையின் போது தமிழர்கள் தேவையில் லாத போராட்டமொன்றில் ஈடு பட்டிருப்பதாகச் சொன்னார். அவள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தர்க்கரீ தியாக போராட்டம் நியாயமா னது என வாதிட்டாள்.

அவர் பேச்சை வேறுதிசைக்கு மாற்றினார். 'நாம் நண்பர்க ளாகவே இருப்போம். ஏன்தான் முரண்பட்டுக் கொள்ள வேண் டும் என்றார்.

''வாங்க நீ குடிப்போம் இது அரசியல்வாதிகளுடையவேலை'' அவள் அவர் நேர்மையான ஓர் உரையாடலில் தோற்றுவிட்ட தாகத் தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

அப்போது பெர்னான்டோ வின் கையில்ஒரு புத்தகம் இருந்தது.

''என்ன புத்தகம்? ''என ரீட்டா கேட்டாள்.

''சென்ற வாரந்தான் வாங் கினேன். நல்ல எழுத்துக்கு ஓர் உதாரணம் நடின் கோடிமர் எழு திய 'பாய்ச்சல்' என்ற சிறுக தைத் தொகுப்பு. இன்னும் இரண்டு கதைகள் இருக்கின்றன, வாசிப்பதற்கு'' புத்தகத்தை அவளிடம் தந்தார், பெர் னான்டோ.

''இ த ற் கு ச் ச ரி யா ன டிமாண்ட். சொல்லி வைத்துத் தான் கிடைத்தது''.

அன்று இரவு தென் ஆபிரிக் காவை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட அந்தப் புத்தகத் தின் ஒரு சில கதைகளை வாசித்த போது, தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அந்தக் கதைகளில் வரும் சம்பவங்களை விட வீரம் மிகுந்த செயல்களைச் செய்து காட்டியுள்ளதை ரீட்டா நினைவு கூர்ந்தாள்.

தன்னுடன் நடந்த ஒரு விவா தத்தில், தமிழர் தமது சொந்தப் பணத்தில் கொழும்பில் வீடுவாங் குவதற்கும் திருகோணமலை யில் அரசாங்கம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற் கொள்வதுக்குமிடையே வேறு பாட்டை விளங்கிக் கொள்ள முடியாமல் குதர்க்கம் பேசிய பெர்னான்டோ, நடின்கோடிம ரது புத்தகத்தை விரும்பி வாசித்தார் என்ற கூற்று எவ்வ ளவு பொய்யானது, என ரீட்டா நினைத்தாள். அவர்களால் செய் யக்கூடியதெல்லாம் 'ஐயோ பாவம் யாழ்ப்பணத்திலுள்ளவர் கள்' எனப் பரிதாபப்படுவது மட்டுமே.

யுத்தத்தினால் ஏற்படும் கஸ் டங்களை அனுதாபத்துடன் பார்க்கும் இவர்கள், அந்த யுத் தத்திற்கு காரணமான சிங்களக் குடியேற்றத்தையோ அல்லது வேறுஒன்றைப் பற்றியோ பேச முற்பட்டால் மட்டும், மெதுவாக



மாதகர சபை
யாழ்ப்பாணம்

காதலின் புதிய பரிமாணம்

நாமகள்

இப்போதெல்லாம்
அவனை அடிக்கடி காண முடிவதில்லை.
சற்றுத் தொலைவில்
வேறொரு முகாமிற்கு
மாற்றப்பட்டிருந்தான்.
என் பாதைகளை
மாற்றியும் கூட,
அவனை அடிக்கடி காண முடிவதில்லை.

முகாமின் வாசலில்
அவனது வாகனமோ
தோழர்களோ
நிற்கக் கூடும்.
எல்லாவற்றையும் தாண்டிய
தேடலாய்
என் பார்வை விரியும்.

அவனுடைய
ஒவ்வொரு அசைவும்
என்னுள்ளே மனப்பாடமாகியிருக்கிறது.
கடிதங்களோ
அவனருகிலாய் உணர்த்தும்.

கடிதங்களை மீட்டலில்
பதிவுகளை வெளிக்கொணர்தலில்
காலம் நகர்த்தலாய்
கழிவுறும் நாட்கள்.

எப்போதாவது,
தெருவில்
அவசர இயக்கத்தில்
கண்டு விட நேர்கையில்,
சந்திப்பை வரவேற்பதாய்
அவன் கண்கள்
ஒரு முறை விரியும்;
மறுகணம்
ஆழ்ந்து மூடிக் கொள்ளும்.
அவனுக்குத் தெரியும்
எனக்கும் அது போதுமென்று. □□

நழுவிவிடுவார்கள். அல்லது தர்க்கமற்றுப் பேசுவார்கள். கடைசியில் கோபமடைந்து 'இது எங்கள் நாடு உங்களுக்கு எல்லாமே சரிசமமாகக் கிடைக்காது' என்பார்கள். இதனால் பயங்கர ஷெல் அடிக்கு மத்தியில் வயதான தாயாரையும் அழைத்துக் கொண்டு பண்டத்தரிப்பில் வந்து மிதந்த அனுபவத்தை, தெரிந்த சிங்களவர்களிடம் அவள் சொல்வதில்லை. அப்படிக்கூறி 'அனேபவ்' என அவர்கள் கூறும் அனுதாபமொழியை அவள் வெறுத்தாள்.

டியூட்டி லீவிற்கான பத்திரத்தை அவளிடம் பெர்னான்டோ ஒப்படைத்தார். அடுத்து, ஐந்தாம் ஆண்டிற்கான ஆங்கில பாடப் புத்தகத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள பாடவிதான சபை முடிவுசெய்திருப்பதாகவும் அதற்கான வேலைகள் அடுத்த மாதம் தொடங்கும் எனவும் பெர்னான்டோ கூறினார்.

"எனது பெயரும் லிஸ்டிலிருக்கிறதா" என சுசிலா கேட்டாள்.

"உங்கள் இருவரையும் தான் சிபார்சு செய்திருக்கிறேன்"

"திரும்பவும் யாழ்ப்பாணம் போய் வருவது கஸ்டம். அதுதான் யோசிக்கிறேன்" என்றாள் சுசிலா. அவளது கணவன் கொள்ளுப்பிட்டியிலுள்ள கொம்பனி ஒன்றின் மனேஜர்.

"நாலைக்குவாங்க இரண்டு பேரும். டெம்பிரறி ரான்ஸ்வர் ஒன்று எடுத்துத் தாறது"

"சுசிலாவின் முகம் மலர்ந்தது"

"நான் அந்த அமர்வில் கலந்துகொள்வதற்கில்லை" என்றாள் ரீட்டா.

பெர்னான்டோவின் முகத்தில் வியப்பின் சாயல் தெரிந்தது.

"அப்படியானால் யாழ்ப்பாணம் போகப் போகிறீர்களா?"

''ஆம்''

''ஏன்?''

அவள் மௌனம் சாதித்தாள்.

''நாளடைவில் ரான்ஸ்வர் நிரந்தரமாகிவிடும். நீங்கள் இங்கிருந்தால் உத்தியோக உயர்வுகளுக்கும் உதவியாக இருக்கும்'' ரீட்டா வெறுமனே சிரித்தாள்.

''உங்களுக்கும் அழைப்பு வரும்''

அவளுடன் கடந்த மூன்று மாதங்களாக பழகியிருந்ததால் அவளது எண்ணங்களை பெர்னான்டோ ஓளவுக்கு மட்டிட்டிருந்தார். அடுத்த அமர்வுக்கு அவள் வரமாட்டாள் என அவருக்கு நன்றாகத் தெரிந்தது.

ரீட்டா இன்னபிளவர் ரோட்டுக்கும் சுசீலா கொள்ளுப்பிட்டிக்கும்செல்ல வேண்டும். பஸ் ஸ்ராண்டில் நின்றபோது ''பெர்னான்டோ சிங்களவர் என்றாலும் நல்லவர்''என்றாள் சுசீலா. நீங்கள் ஏன் அடுத்த அமர்வுக்கு வரவில்லை? என பேச்சுக்காகக் கூட சுசீலா ரீட்டாவைக் கேட்கவில்லை.

அப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டு, அதற்கு யாழ்ப்பாணத்தில் தோசைக்கடை வைக்கப் போகின்றேன் என ரீட்டா பதிலளித்திருந்தாலும், அதில் அடங்கியிருக்கும் எள்ளலைக் கூட விளங்கமுடியாதவள், சுசீலா. தற்காலிக வேலை மாற்றத்தை எப்படி நிரந்தரமாக்கிக் கொள்வது. தனது ஒரே மகளை எப்படி கொழும்புக்கு வரவழைத்துக் கொள்வது என்பன பற்றியே அவளது நினைவுகள் ஓடுகின்றன என ரீட்டாவுக்கு நன்கு தெரியும்.

அன்று வெள்ளிக்கிழமை. சுசீலாவும், அவளது கணவனும் மாலை 'கிறிண்லன்ஸ் ஹோட்டலில்' மசாலாத்தோசை சாப்பிடும்போது பெர்னான்டோ புராணமாகவே இருக்கும்.

பஸ்சிலிருந்த போது தான் ஏற்கனவே எடுத்த முடிவுபற்றி ரீட்டா நினைத்தாள். எவ்வளவு விளக்கமாக தனது இனத்தின் பிரச்சனைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கூறினாலும் அதைச் சரியாக விளங்க முற்படாமல், ''எல்லோரும் சேர்ந்து சந்தோசமாக வாழலாம் மிஸ் இராசனாயகம்'' என பேச்சை வேறு திசைக்குத் திருப்பும் ஓர் இனத்தை சேர்ந்தவர்களுடன் சேர்ந்து எந்தக் காரியங்களிலும் முழுமையாக ஈடுபடமுடியாது. வேண்டுமானால் நடிக்கலாம். அது அவளால் முடியாது. கடந்த மூன்று மாதமாக பொறுப்பேற்ற பணியை பல்லைக் கடித்துக்கொண்டு ஒருவாறு ஒப்பேற்றிவிட்டாள்.

வீட்டுக்குச் சென்றதும் அம்மாவின் விருப்பத்தை ரீட்டா கேட்டாள்

''அங்கே கொண்டு போய் அம்மாவைக் கொல்லப் போகிறாயா?'' என்றாள் ரீட்டாவின் அக்கா மேரி.

அம்மாவைப் போன்ற பலர் அங்கு இருக்கிறார்கள் தானே என எண்ணிக் கொண்டு, ''அம்மாவே தனது விருப்பத்தைச் சொல்லட்டும்'' என்றாள் ரீட்டா.

உன்னைத் தனியே விட்டு விட்டு நான் இங்கே இருக்கமாட்டேன்''.

''அப்படியானால் வவுனியாவுக்கு சீற் ரிசேர்வ் செய்யட்டுமா''?

''சரி''

ரீட்டாவின் அக்கா அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. அந்த வீட்டில் எந்தத் தர்க்கத்துக்கும் ஒரு வரையறை இருக்கும். அவர்களின் அப்பா அவர்களை அப்படித்தான் வளர்த்திருந்தார்.

அடுத்த நாள் காலை பத்து மணிக்கு வீட்டின் முன்புறமாக ரீட்டாவின் அத்தான் காரை நிறுத்தினார். ரீட்டாவும் தயாரும் காரில் ஏறினர். ரீட்டாவும் அவளது அக்காவும் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்திருந்து, பரக்கப் பரக்கச் செய்த இடியப்பமும் முட்டைப்பொரியலும் அடங்கிய பார்சலையும், சுடுதண்ணிப் போத்தலையும் மேரி, ரீட்டாவிடம் கொடுத்தாள். மேரியை ரீட்டா நிமிர்ந்து பார்த்தாள். அவளது முகத்தில் தெரிவது கோபமா அல்லது சோகமா என ரீட்டாவால் மட்டிட முடியவில்லை, பேரப்பிள்ளைகள் பாட்டியுடன் கதைத்துக் கொண்டிருந்தனர். டொக்டர் கப்ரியல் காரை ஸ்ராட் செய்தார். ☐

'நான் இன்னமும் மிக உறுதியாக, தனி மனித வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் பல வருடங்களாக கலை என்பது படைப்பாளிகளின் வெளிப்பாடு என்றே புரிந்து கொண்டிருக்கிறேன். கலை என்பது சிதைக்கப்பட வேண்டும் என்கிற பதிய theory களை நான் நம்புவதில்லை. நான் நிரந்தர மதிப்பீடுகளை நம்புகிறேன் இது தான் என் முழுமையான மனப் போக்கு''

— சத்யஜித் ரே.

யாழ்ப்பாணம்

அறிவு சமிக்கட்டும்



முருகையன்

"அறிஞரின் இதய ஓடை ஆழ நீர் தன்னை மொண்டு" தருவது பத்திரிகைகளின் பணிகளுள்ளே தலையாயது என்று பாவேந்தர் பாரதிதாசன் தமது பாட்டொன்றில் உணர்த்தியுள்ளார். அறிஞர்களுக்கு மட்டுமல்ல; அனைத்து மக்களுக்குமே 'இதய ஓடை' உண்டு. இதய ஓடை என்பது தான் என்ன?

'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்து எண்ணுவான்' என்பது பழம்பாட்டொன்றின் பகுதி. மனிதர் யாவரின் உள்ளந்தோறும் எண்ணங்களும் எழுச்சிகளும் உணர்வுகளும் இடையறாது ஓடிக்கொண்டிருக்கின்றன. இடைவிடாத திரைப்படமொன்று நமக்குள்ளே நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. விழிப்பு நிலையில் இந்தத் திரைப்படம் தெளிவாய்த் தெரிகிறது; கனவு நிலையிலே படம் மங்கலாகின்றது; ஆழ்ந்த உறக்கத்தில், படத்தின் 'இடைவேளை' விடப்படுகிறது.

இந்த மனத்திரைப் படம் வெறும் ஊமைப் படமல்ல. வசனங்களும் பாட்டுக்களும்கூட இதில் உண்டு. இந்த மனத்திரைப்பட ஓட்டத்தை நாம் 'இதய ஓடை' என்று சொல்லலாம். அதை 'நனவோடை' என்று குறிப்பிடுவது மேலும் பொருத்தமாகும். நனவோடையில் வரும் வசனங்களும் பாட்டுக்களும் பெரும்பாலும் ஒலிக்கப்படாமல் உள்ளடங்கி மவுனமாய் உள்ளன. அவை பேசாத பேச்சுக்கள்; பாடாத பாட்டுக்கள்; அவைதான் நனவோடையின் மொழி சார்ந்த கூறுகள்.

(2)

நனவோடையின் மொழி சார்ந்த கூறுகளிற் பெரும்பகுதி, ஒருவரின் தாய் மொழியில் அமைவதுதான் வழமையாகும். ஒருவரின் பிறப்புத் தொடக்கம் வளர்ச்சிக் காலத்தின் ஊடாக, வாழ்க்கைக் காலமெல்லாம் மிக நெருக்கமாகப் பழகிப் பயிலப்படும் மொழியினையே நாம் தாய் மொழி என்கிறோம்.

நாம் தமிழர்; நமது தாய்மொழி தமிழ். தமிழர்களின் நனவோடையில் மிகப்பெரும் பகுதி தமிழில் அமைகிறது. தமிழறிஞர்களின் நனவோடையும் அவ்வாறமைவது தான் இயல்பாகும்.

ஆனால், இன்று நம்மிடையே வாழும் தமிழறிஞர் எனப்படுவோரில் மிகச் சிலர் தன் மொழிப் புலமையாளராய் உள்ளனர். வேறும்பலர் தமிழுடன் ஆங்கிலத்தையேனும் பயன்படுத்தும் இருமொழியாளராய் உள்ளனர். இவர்களின் பேச்சும் எழுத்தும் சில வேளைகளிலே தமிழாயும் சில வேளைகளீல் ஆங்கிலமாயும் அமையும். சில வேளைகளில் இரண்டுங் கலந்தும் அமையும். அவ்வாறே இவர்களின் நனவோடையும் சில வேளைகளிலே தமிழ் மயமாகவும், சில வேளைகளிலே ஆங்கில மயமாகவும், சில வேளைகளிலே இரண்டும் கலந்தும் அமையும்.

என்றாலும், ஒருவரது தாய்மொழி நனவோடையே அவருக்கு மிக நெருக்கமானதாக, அந்தரங்க உறவு பூண்ட ஒன்றாக, இருக்கிறது.

இது ஒருவரது பண்பாட்டுத் திளைப்பின் 'உயிரியற்கை' என்று கூறலாம்.

எனவே, சிந்தனையாளரோ, அறிஞரோ, கலைஞரோ, எழுத்தாளரோ — எவராயிருந்தாலும், தமது மொழியைப் பேசும் அல்லது பயன்படுத்தும் மக்களுடன் தாய்மொழியிற் பேசுவதும் எழுதுவதும் தான் இயல்பாகும்; அதுவே நயமும் பயனும் தரும்; அதுவே விளைதிறன் மிக்க செயலாயும் இருக்கும்.

இதே வேளை, இன்றைய சூழ்நிலையில், எங்கள் 'தமிழறிஞரிற்' சிலர் தமிழை விட ஆங்கிலத்தில் அதிகம் பேசுவோராயும் எழுதுவோராயும் படிப்போராயும் இருப்பதனை நாம் காணுகிறோம். இதனால், இவர்களின் இதய ஓடை அல்லது நனவோடை ஆங்கில மயமாக மாறிப்போய் விட்டது என்றும் கருத இடமுண்டு. இவர்களிற் சிலர் தம் ஆங்கிலப் புலமைக்கு அதிக முக்கியத்துவம் தருவதனால், தமிழ் மொழி மூலம் சிந்திக்கும் பழக்கத்தைக் கடுமையாகக் குறைத்துக் கொண்டு விட்டனரோ என்று கருதவும் இடம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் ஆங்கிலத்தில் (அல்லது பிறமொழியில்) சிந்தித்து தமிழில் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

இவ்வாறு செய்வது சில சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் காலாகின்றது. அந்தச் சிக்கல்களையும் சிரமங்களையும் விரிவாக எடுத்து நோக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல.

மாறாக, தமிழ் எழுத்துலகிலே, பிற மொழிகளின் வாயிலாகப் புதுமையான புறவுலகக் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு, தமிழில் அவற்றைத் திறம்பட விளக்கிப் பயன் செய்த முன்னோடிகள் சிலரைச் சற்றே நினைவு கூர்வோம்.

(3)

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அய்ம்பதுகளினூடாக, தொண்ணூறுகளுக்கு நாம் வரும் வழியிலே, பிற நாட்டு நல்லறிஞர் சிந்தனைகளைக் கற்றறிந்த தமிழறிஞர் பலரை நாம் சந்திக்கின்றோம். இவர்களிற் பலர், பரந்து பட்ட மக்களின்பால் பரிவும் அக்கறையும் பூண்டு உழைத்தமையையும் நாம் காண்கிறோம். தமது அறிவையும் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் தம்மைச் சூழவுள்ள மக்களிடையிற் பரப்பும் வேட்கை அவர்களிடம் காணப்பட்டது. இவ்வாறு பரப்ப முற்பட்ட பொழுது, இரண்டு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியோராய் அவர்கள் இருந்தனர்.

ஒன்று மொழி மாற்றம். ஆங்கிலம் வாயிலாக இவர்கள் கற்றுக்கொண்ட கருத்துக்கள், எண்ணக்கருக்கள், சிந்தனைகள் தமிழ் மொழிக்குப் புதியவை. எனவே அவற்றுக்கு ஈடான சொற்களையும் சொல் வழக்குகளையும் அவர்கள் படைத்துக் கொள்ள வேண்டியோர் ஆயினர். அந்தச் சொல்வழக்குகள் புதியன ஆகையால், அவற்றை விளங்கப்படுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களையே பெரிதும் சார்ந்தது.

அடுத்த சிக்கல், விடயங்களை எளிமைப் படுத்திக் கொடுத்தல் பற்றியது புதிய விடயங்களை இலகுவாய் விளங்கவைக்கும் துணைக் குறிப்புக்களும், உதாரண விளக்கங்களும், உவமைகளும் கூட அவசியமாயின. கல்வியறிவு குறைந்தவர்களுக்கு ஏற்ற விதத்திலே சிற்சில பகுதிகளை விரித்துரைப்பதும் தேவையாயிற்று. சில தருணங்களிலே, படிப்போரும் கேட்போரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வண்ணம், அடிப்படை கோட்பாடுகளிலிருந்து எண்ணங்களை வளர்த்தெடுத்துக் கொடுக்க வேண்டியதேவையும் இருந்தது. ஒருவகையில் இவ்வாறான மொழி மாற்றம், கணிசமான படைப்பாற்றலையும் வேண்டி நிற்கும் ஒரு பணி ஆயிற்று. இத்தகைய மொழி மாற்றத்தை 'மறுபடைப்பு' என்று நாம் கூறலாம். இப்படிப்பட்ட 'மறுபடைப்பு' நடைபெறவில்லை என்றால், எந்தவொரு பேச்சும் எழுத்தும் எந்த விதமான கருத்தையும் பயவாமல், வீணாய் ஒழியும்.

ஆங்கில மொழி, வெளியுலகுடன் தொடர்பினை உண்டாக்கும் 'மூன்றாவது கண்' என்று விதந்து பேசுவது நம்மவரின் வழக்கமாகும். ஆனால் அந்தக் கண் தரும் பார்வை செப்பமாக இருக்க வேண்டுமானால், மக்கள் வழங்கும் மொழியிலும் நமது கருத்துலகத் தலைவர்களுக்குச் சிறந்த புலமையும் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.

இந்தவிதமான திறமை உடைய எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குவோர், திரு வி. க. வும் இராஜாஜியும் எனலாம். திரு வி. க.

எனப்பட்ட திருவாரூர் வி. கல்யாணசுந்தர முதலியார், பழந்தமிழ்ப் புலமை வாய்ந்த தொல்லறிஞர்; ஈழத்தவரான மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையின் நன் மாணாக்கர்; அடிப்படையில் இவர் இலக்கண நெறிப்பட்டு அருஞ்சொற்கள் விரவிய செந்தமிழிலேயே எழுதியும் பேசியும் வந்த புலமையாளர். ஆயினும் அவர் இந்திய நாட்டு விடுதலை இயக்கத்திலும் தொழிற்சங்க வேலைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளத் தொடங்கிய பின்னர், பரந்துபட்ட மக்களைச் சென்றடையத் தக்க மொழித்திறனை மிக விரைவிலே ஈட்டிக் கொண்டார். அவர் மேற்கொண்ட பணிகள் மக்கள் மன்றத்துடன் இறுகப் பிணைந்திருந்தமையால், இவ்வாறான எளிமையும் தெளிவும் அவருக்கு இலகுவில் கைகூடிற்று. மக்களுடன் நேரில் உரையாடும் இறன்படைத்த செந்தமிழ் வகையொன்றை உருவாக்குவதில் வெற்றி கண்டார்.

சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரியார், சத்தியமூர்த்தி முதலியோரும், இதே வழியிலே தமது கருத்துக்களையும் மொழி நடைகளையும் மக்களுக்கு ஏற்ற விதத்திலே பதப்படுத்திக் காட்டினார். இதனால், தமிழ் மொழி புதுவித மான நலன்களையும் வளங்களையும் ஈட்டிக் கொண்டது. ஒரு காலத்தில் புராண இதிகாசங்களையும் காப்பியங்களையும் சமய சாத்திரங்களையும் தோத்திரங்களையும் மாத்திரம் அநாயாசமாகக் கையாளும் ஆற்றலைப் பெற்றிருந்த தமிழ் மொழி, இப்பொழுது நாட்டு விடுதலை, தொழிற்சங்க முயற்சிகள் உட்பட, 'பண்பாட்டு அரசியலின்' பல்வேறு புலங்களையும், துறைகளையும் தழுவி நிற்கும் துடிப்பும் துணிவும் பெற்று விரிவடைந்து 'கல்கி' முதலான சனரஞ்சக எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றனர். மொழிபெயர்ப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்ட வெ. சாமிநாத சர்மாவின் எழுத்துக்கள், ஐரோப்பிய அறிஞர்களின் நவீன சிந்தனைகளைத் தமிழாக்கம் செய்து வழங்கின. இவ்வாறான முயற்சிகள் தமிழ் மொழிக்கு புதிய வலுவும் வளமும் சேர்த்தன. புதுப்புது மொழி வழக்காறுகளும் தோன்றி நிலைபெறல் ஆயின. ம. ப. பெரியசாமித் தூரன், தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் என்போரின் பெருமுயற்சியினால், முதலாவது கலைக்களஞ்சியம் தமிழில் உருவாயிற்று. இந்தப் பணிகளெல்லாம், தமிழ் மொழியின் நுட்பத்திறனையும் பயன்பட்டையும் விரிவு செய்தன. உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் புறக்கணிக்கப்பட்ட தொரு காலத்திலே, தமிழ் மொழி வீறும் விளைதிறனும் பெறுவதற்கு இந்த முன்னோடிகள் பெரிதும் உதவினர்.

இங்கு நாம் இதுவரை பார்த்தது, சமூக—அரசியல் தேவைகளின் அடியாக எழுந்த மக்கள் மயப்பட்ட சில முயற்சிகளையே. இவை முறைநெறிப்பட்டவை அல்ல எனலாம். கலை இலக்கிய உலகில் ஈடுபாடு கொண்ட கற்றறி வாளர்களோ, தமது மொழித்திறனைக் கூர்மைப் படுத்தும் முயற்சியிலே பின் தங்கி நின்றார்கள் என்பது வேடிக்கையானதோர் உண்மையாகும். இலக்கியத் திறனாய்வாளர்கள் முற்போக்கான சில அலுவல்களைச் செய்திருக்கலாம். ஆனால் அவர்களிடையே அசமந்தமும் தயக்கமும் அலட்சியமுமே காணப்பட்டன. சி. சு. செல்லப்பா நடத்திய 'எழுத்து' இலக்கிய விமரிசனத்துக் கென்றே அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் அதில் எழுதியவர்கள் ஆங்கிலச் சொல்வழக்கின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட முடியாதவர்களாய் ஒரு வகையான கலப்புத் தமிழைக் கையாண்டனர். தமிழ்ப்படுத்திய கூற்றுகளிலும் கடுமையான சொற்பஞ்சம் தாண்டவமாடிற்று. 'எழுத்து' வட்டத்தினரிடம் ஆர்வம் நிறைந்திருந்த அளவுக்கு ஆற்றல் இருக்கவில்லை. தம் கருத்துக்களை சரி சுத்தமாக சொல்ல இயலாமல் அவர்கள் திண்டாடினார்கள். அவர்கள் தாம் எழுதியவற்றைத் தாம்மாத்திரமே படிக்குமளவுக்கு குறுகியதொரு வட்டத்தினுள் அடங்கி அமைந்தனர் என்று சொன்னால் அதில் அதிகம் பிழை இருக்காது.

இந்த நிலைமைக்குப் புறனடையாகவும் சிலர் இருந்தனர் என்பது உண்மையே. இவர்களுள் சி. கணேசபாபதி விதந்து குறிப்பிடத் தக்கவர். இவர் போன்று பண்டைத்தமிழ்ப் பரிச்சயமும் பெற்ற சில திறனாய்வாளர்கள், தமிழின் சொல் வளத்தைப் பெருக்கி, அந்த புதிய வழக்குகளைப் புழக்கத்துக்கு கொண்டுவர உதவினர். இதனால், பல்வேறு நுண்மைத்தரங்களினூடே சரளமாக ஊடாடும் வலு தமிழ் மொழிக்குக் கிட்டிற்று. படிமம், நடப்பியல், புனைவியல் போன்ற பதங்கள் பல இந்தக் காலகட்டத்திலேதான் அறிமுகமாயின என்பது மனங்கொள்ளத் தக்கது.

பல்கலைக்கழக ஆசிரியர்களும் போராசிரியர்களும் கூட மேற்சொன்னவாறான புதுமையாக்கங்கள் சிலவற்றை மேற்கொண்டனர். பல்வேறு கற்கைநெறிகளையும் தமிழ் வாயிலாக

நடத்தவேண்டிய தேவை இந்த முயற்சிக்கு ஊக்கம் தந்தது. ஆரம்ப காலகட்டங்களில், இந்தியத் தமிழர்களை விட ஈழத்தவர்களாகிய நாம் இந்த அலுவலில் முன்னோடிகளாய் இருந்தோம் என்று சொல்ல வேண்டும். இந்தியர்களைவிட முன்கூட்டியே நாம் தமிழ் மூலம் உயர் கல்வியூட்டத் தொடங்கிய படியால், ஈழத்தவராகிய நாம் வழங்கிய மொழி, சில விதங்களிலே. விடயங்களின் அடிவாழும்வரை நுழைந்து செல்லும் ஆற்றல் பெற்றதாக விளங்கிற்று எனலாம். இங்கு தனித்த மரபுவழிப்பட்ட தமிழ் வாயிலாகக் கிடைக்கக் கூடிய ஆற்றலை விட அதிக ஆற்றலை பிறமொழிகளின் சந்திப்பினாலே தமிழ் பெற்றுக் கொண்டது. இந்தச் சாத்தியப்பாடு முன்னர் இருக்கவில்லை என்பதல்ல, இதன் கருத்து. புதிதாக கண்டறியப்பட்ட சாத்தியப்பாட்டை நன்கு பயன்படுத்தக் கருதிய புதுவேட்கையும் ஊக்க எழுச்சியுந்தான் மேற்சொன்ன ஆற்றல் வளர்ச்சிக்கு ஏதுவாயின.

ஆனால், இலங்கைக் கல்விமான்கள்சிலரிடையே மொழிபெயர்ப்பின் பெறுமதிபற்றித் தவறான சில நம்பிக்கைகள் உருவாயின. மொழிபெயர்ப்புக்களைப் படிப்பதனால், மூலமொழி பாடமொன்றின் தேவை முற்றாகவே அற்றுப்போகிறது என்று நம்மிற்பலர் நம்புகின்றோம். மூல பாடங்களை மொழிபெயர்ப்புகளாற் பதிலிட்டு விட முடியாது. மூலத்தின் சிறியதொரு பகுதியே மொழிபெயர்ப்பில் வெளிக்கொணரப்படும். இந்தப் பகுதியின் அளவுகள் மூலபாடத்தின் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபடும். விஞ்ஞானம்/ தொழில்நுட்பம்/ கணிதம் சார்ந்த விடயங்கள் மொழிபெயர்ப்புக்கு நன்கு இடங்கொடுக்கும்; ஆனால், ஆக்க இலக்கியங்களின் பக்கமாக நாம் நகர்ந்து போகப் போக, மொழிபெயர்ப்பின்போது இழக்கப்படாது எஞ்சும் பங்கு குறைந்து குறைந்து செல்கிறது. உண்மையில், கவிதையின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்று, அது மொழிபெயர்க்கப்பட முடியாததாய் இருப்பது தான் என்று 'இலூஷன் அன்ட் றியாலிற்றி'' என்னும் நூல் அடித்துக் கூறுகிறது. இது மிகவும் கடுமுனைப்பான கூற்று என்று சிலர் கருதலாம். ஆனால், சில மொழிபெயர்ப்புக்களை மாத்திரம் படித்த அளவில், உலக இலக்கியம் நமது உள்ளங்கைகளில் அடக்கம் என்று நம்மிற் பலர் எண்ணிக் கொள்கின்றோம். இது எவ்வளவு அறியாமை!

வெளிச்சத்துக்கு
வாழ்த்துகள்.

மாணவர்களுக்கான
அப்பியாசக் கொப்பிகள்
பாடசாலை உபகரணங்கள்

பதிப்பகங்களுக்கான
காகிதாதிகள்
அச்சுமை வகைகள்

இவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

புஸ்பா அன் கோ
பல்பொருள் வாணிபம்

293, மானிப்பாய் வீதி
(வண்ணார்பண்ணை தபாலகம்
முன்பாக)
யாழ்ப்பாணம்.

மருதடி சபை
யாழ்ப்பாணம்

சில இலக்கியப் படைப்புக்கள் மொழி பெயர்ப்புக்கு ஓரளவு திருப்திகரமாக இடந்தரும் என்பது உண்மையே அவை உடனயற் சூழலில் அதிகம் அழுந்தி நில்லாமலும், மொழிமரபு விசித்திரங்களில் அதிகம் தோயாமலும் உள்ள படைப்புகளாகும்.

(4)

படைப்பிலக்கியம் பற்றிய பரிசீலனையைச் சற்றே நிறுத்திவிட்டு, பொருள்விளக்கப் போக்குடைய சொல்லாடல்பற்றி ஒரு கணம் சிந்திப் போம். முன்னணிச் சிந்தனையாளர்களின் கருத்துகள், பெரும்பாலும் புதுமையான சொற்களிலும் சொல் வழக்குகளிலும் பொதிந்தவையாய் இருக்கும். சிலவேளைகளில் அந்தச் சொற்கள் கூட அந்தத் தருணத்துக்கென்றே படைக்கப் பட்டவையாயும் இருக்கும். அந்த நுண்சொற் களுக்கு ஏற்ற தோதான சொற்களை நமது மொழியிலே ஆக்கி அவற்றுக்கு விளக்கம் தந்கா லொழிய, எழுந்தமானமாக அல்லது கண்ட பாட்டிலே செய்யப்படும் மொழிபெயர்ப்புகள் பொருளற்று வெறிதே ஒழியும். இப் படித்தான் நமது அறிஞர் பெருமக்கள் சிலர் அள்ளி வீசும் எதேச்சையான சொற்சேர்க்கைகளும் செயற் கையான திடீர் விநோத மொழிவுகளும் இருக் கின்றன. இந்தத் திடீர் மொழிவுகளில் ஈடுபடு வோர் அவற்றின் பொருத்தப்பாடு பற்றியோ பொருள்பயக்கும் தன்மை பற்றியோ அதிகம் சிந்திப்பதாக தெரியவில்லை.

எண்ணக்கருக்களைக் கற்றுக் கொள்வதற்கு, தூலமான மாதிரியுருக்களும், 'இது இத்தகை யது' என்றும் 'இது இத்தகையது அல்ல' என் றும் தெளிவாக்கும் எடுத்துக் காட்டுகளும் அவ சியம் என்பார். இதனையிட்டு கவனஞ் செலுத் துவோர் மிகவும் குறைவு.

இவ்வகையான உதாசீனப் போக்கு எங்கு போய் முடிகிறது? ஆவிமயமான ஆசாட்டமான வெறுமைகளையும் குழாம்பல்களையும் நுண் ணிய கருத்துக்களென எண்ணி மயங்கும் நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். இந்த ஆசாட்டங்கள் உள்ளீடான பெறுமதி வாய்ந் தவை என்றும் புனிதமானவை என்றுங்கூட பயபக்தியுடன் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இங்கு அறிஞர் எனப்படுவோர் சிலர், தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புகின்றனர்; தாமும் மிரண்டு பிறரையும் மிரட்டுகின்றனர்.

(5)

பாக்கு நீரிணைக்கு அப்புறத்திலும் இப்பு றத்திலும் இந்தப் பரிதாப நிலையை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். நமக்கு இப்பொழுது வேண்டியது, சமிபாடு. அறிவுத்தலைமை பூண் டோரின் சிந்தனையூட்டங்கள் நன்கு சமிபாடு அடைய வேண்டும். நம்மை நோக்கிப் பேச முன்வருகிறவர்கள் தாம் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவாகத் தெளிந்து கொள் ளட்டும். நமக்காக எழுதுவதற்குப் பேனையை எடுப்பவர்கள் என்ன எழுதப்போகிறோம் என் பதைத் திட்டவட்டமாகத் தெளிந்து கொள் ளட்டும். தெரிந்து தெளிந்து கொண்டு பேசத் தொடங்கட்டும்; எழுதத் தொடங்கட்டும்.

''உணவினும் உண்ட(து) அறல் இனிது'' என்றார் வள்ளுவர். வயிற்றுச் சாப்பாட்டுக்கு மட்டும் செல்லுபடியாவதல்ல அந்தக் கூற்று, சிந்தனைக்கு உணவாக ஊட்டப்படும் கருத்து களும் கூட நன்கு சமிபாடு அடைய வேண்டும். அறிவுச் சமிபாடு உளநலத்துக்கு இன்றியமை யாதது. அதுதான் தெளிவுக்கு நம்மை இட் டுச் செல்லும். ''தெளிவே தெய்வம்'' என்றவர், பாரதியார். ஆனபடியால், மறவாமல் நினை வில் வைத்துக் கொள்வோம் — அறிவு சமிக் கட்டும்.

அத்துடன், தமிழர்களை நோக்கிச் சொல் லாடும் அறிஞர்களின் இதய ஓடை, அவர்களின் நனவோடை, தமிழ் மயமாக இருக்கட்டும். □□

ஓவியக்கலை ஒன்றுதான் பிரபஞ்சமொழி, அதன் உச்சவரம்பு என்று ஏதேனும் இருக்குமாகில், அது மனித பௌதீக மற்றும் ஆத் மார்த்த அனுபவங்களின் உச்சவரம்பாகத்தான் இருக்க வேண்டும். அது தன்னுள்ளே இயற்கையின் எல்லா உருவங்களையும் சேர்த் துக் கொள்ளவும் அவற்றின் அடையாளமான பெயர்களை நீக்கிக் கொள்ளவும் இயல்புடையதாயிருக்கிறது.

— விட்டல்ராவ்

பூச்சியங்கள்



இளையவன்

வா''ங்கோ... .''

''வணக்கம் தம்பி''

''இருங்கோ, ஐயா'' என்றான் தனக்கு முன்பாக இருந்த கதிரையைக் கண்களால் காட்டி.

''ஓமோம்'' என்று கூறிய படியே கதிரையை அசைத்து இருக்கையை சரிசெய்து அமர்ந்தார் பெரியவர்.

''வந்த விசயம் என்ன எண்டதை சுருக்கமாச்சொல்லுங்கோ ஐயா. குறை விளங்காதையுங்கோ. உங்க கனபேர் முன்னுக்கு இருக்கினம் தெரியும் தானே'' அவன் பக்குவமாக வார்த்தைகளை எடுத்து விட்டான்.

''ஓம் தம்பி... நான் மினக்கெடுத்தேல்ல. என்ரை இரண்டாவது மகன் முந்த நாள் இயக்கத்துக்கு எண்டு வந்திட்டான். அங்க தாய் சகப்பிடாமல் கிடக்கிறாள். இவனைத் தூக்கி வளர்த்த பேத்தியார் அன்னந் தண்ணி கூட தொடாமல் கோயில் வாசல்ல பழியாக் கிடக்குது. அதோட இங்க பாரும் தம்பி அவன்ரை மெடிக்கல் சேர்ட்டிபிக்கட்டை, இது அவன்ரை கிளினிக் கார்ட். இவன் வருத்தக்காறப் பெடியன் தம்பி. இவனை வைச்சிருந்து உங்களுக்குச் சண்டைக்கும்பயன் பட மாட்டான். சரியான பயந்தவன்''

ஒரே மூச்சில் அவர் கூறிக் கொண்டிருந்ததை பொறுமையாக செவிமடுத்துக் கொண்டிருந்த நந்தன், மெடிக்கல் சர்ட்டிபிக்கட்டையும், கிளினிக் காட்டையும் வாங்கிப் பார்த்தான். கடந்த ஆண்டின் உயர்தரப் பரீட்சைக்கு அவன் சமூகமளிக் காமைக்காக வைத்தியர் வழங்கியிருந்த அத்தாட்சிப் பத்திரம் என்பதை அதில் குறிப்பிட்டிருந்த திகதியின் அடிப்படையில் ஊகித்துக் கொண்டான். 'கிளினிக் கார்ட்'டை திருப்பி திகதியைப் பார்த்தபோது கடைசியாக வைத்தியரிடம் காட்டி ஒரு வருடம் ஆகியிருந்ததை உணர்த்தியது.

அவன் எதையும் பேசவில்லை!

பெரியவர் தனது நீண்ட பிசசங்கத்தை இடைநிறுத்தினார்.

''ஐயா, மன்னிக்க வேணும். உங்கடை மகனுக்கு இயக்கத்தில இருக்கிறது விருப்பம் இல்லையெண்டால், அதுக்குப்பிறகு ஒரு நிமிசமும் இயக்கம் அவரை வைச்சிருக்காது. அவருக்கு இப்ப பதினெட்டு வயது முடிஞ்சுது. அவரும் குழந்தைப் பிள்ளையில்லை. தன்ரை எதிர் காலத்தை தீர்மானிக்கிறதுக்கு அவருக்கும் சட்டப்படி உரிமை இருக்குத்தானே! எதுக்கும்நீங்

நூலகம்

கள் அவருக்கு சொல்ல விரும் புறசெய்தியை கடிதமா எழு தித்தாங்கோ. அவரிட்டைக் குடுத்து மறுமொழி எடுத்துத் தாறம். மறுமொழிவர இரண்டு மூன்று நாள் செல்லும். வேறை என்ன?'' நந்தன் கூறினான்.

''இல்லைத் தம்பி. நான் ஒருக்கா ஆளை நேர பார்க்க வேணும், எனக்கு முன்னால அவன் தன்ரை விருப்பத்தை சொல்லிப் போட்டா, பிறகு நான் உங்களைக் கரைச்சல் படுத்த மாட்டன்.'' பெரியவர் விடாப்பிடியாய் அழுத்தினார்.

''ஐயா... கேட்குறன் எண்டு குறை விளங்காதையுங்கோ. நீங் கள் முந்தி ஆருக்கு வோட்டுப் போட்டனியள்''

''ஏன் தம்பி நாங்கள் நெடுகவும் உதயசூரியனுக்குத் தான் போட்டனாங்கள். அந்தக் காலம் தொடக்கம் எங்கடை பரம்பரையே செல்வ நாயகம் கட்சிதான்'' அவரது குரலில் பெருமிதம்.

''மெத்தச் சரி ஐயா ...நீங் கள், விட்ட இடத்திலயிருந்து இப்பஉங்கட மகன் தொடங்கியி ருக்கிறார் எண்டு நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது''

அவரது முகம் மாறியது.

''தம்பி, நான் போராட்டம் பிழையெண்டு சொல்லேல்ல. ஆனா தெரியாதே ..'' என்று இழுப்பு இழுத்தவர் தொடர்ந்து ''அவன் படிப்பை முடிச்சாப் பிறகு உங்களோடை சேர்ந் திருந்தா நான் கவலையே பட மாட்டன்''எனக்கூறிமுடித்தார்.

''அவர் படிப்பை இடையில் குழப்ப ஆர் காரணம் எண்டு நினைக்கிறியள்''.

பெரியவர் பதில் கூற யோசித்தார்.

''போனமுறை சோதனை நடந்த நேரம்..... பரீட்சை மண்டபத்துக்கு பக்கத்தில குண்டு வீச்சு ..... இந்த முறை பரீட்சை நேரம் இராணுவக் கெடுபிடி. அப்ப அவன் எப் பிடிப் படிப்பை முடிக்கிறது'' நந்தன் கேள்வி எழுப்பினான்.

அவர் மௌனமாயிருந்தார்.

''சரி ஐயா ..... நீங்கள் கடிதத்தை எழுதித் தாங்கோ நான் குடுத்து அனுப்புறன். வேற என்ன .....''

பெரியவர் இருக்கையை விட்டு எழுந்து போனார்.

''வாங்கோ அம்மா'' என நந்தன் கூறிய போதே வந்த பெண்மணியை நோட்டம் விட் டான்.

வீட்டில் இருந்த அதே உடுப் புடன் அவசர கோலத்தில் வந்து விட்டவர் போன்ற கோலம் அவ ரது தோற்றத்தில் தெரிந்தது.

''இருங்கோ'' என்று இருக் கையை சுட்டிக் காட்டினான்.

அவள் உட்கார்ந்து கொள் வதற்கு முன்பாகவே, ''தம்பி என்ரை மகனை இயக்கம் 'பை போர்சாய்' பிடிச்சுக் கொண்டு போட்டுது'' என மூக்கைச் சிந் தினாள் ...

''அம்மா... ... முதலில இருங்கோ அம்மா.'' அவன் வலி யுறுத்தினான்.

தயங்கித் தயங்கி கதிரையின் ஒரு ஓரத்தில் அவள் அமர்ந் தாள்.

''என்ன நடந்தது? எப்ப நடந்தது? எங்க நடந்தது? எல் லாத்தையும் விபரமாய் சொல் லுங்கோ.''

''விடியப்பறம் தம்பி ரியூ சனுக்கு போய்க்கொண்டிருந் தவன். அப்ப நந்தாவில் அம்மன் கோயிலுக்கு பக்கத்தில இயக்கத் தில இருக்கிற அவன்ர சிநேகிதப் பெடியனோட கதைச்சதை பின் னுக்கு சைக்கிளில போய்க் கொண்டிருந்த அண்ணையின்ர மகளவை கண்டவை. அதுக்குப் பிறகு அவன் இயக்கத்துக்கு போட்டான். இண்டைக்கு காலமைதான் இது நடந்தது.''

விம்மி, விம்மி விக்கல்களுக்கு மத்தியில் அவள்குறிப்பிட்டாள்.

''இதைப் பற்றி இப்ப சொல்லுறது கஷ்டம் அம்மா. விபரங்கள் எதுவும் தெரியேல்ல, ஆனால் உங்கடை விபரங்களை எழுதித் தாங்கோ. பாத்துச் சொல்லுறம்.''

''தம்பி, அவர் கொழும்பில 'மினிஸ்ட்றி'யில வேலை செய்யி றவர். அப்பிடிப்பட்டவரின்ரை மகன் இயக்கத்துக்கு போன செய்தி அங்க தெரிஞ்சால் அவ ருக்கும் கரைச்சல் வரும். அது தான் தம்பி .. என்ரை மகனை எப்படியெண்டாலும் விடுங்கோ.'' கெஞ்சும் குரலில் அவள் வேண்டினாள்.

அவன் மௌனமாயிருந்த அந்தக் கணத்தை சாதகமாகப் பயன்படுத்திய அவள் ''அவர் இவனையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்கே வரச் சொல்லி எத்தனையோ கடிதம் போட்ட வர். நான்தான் இங்க இருக்க வேணும் என்று ஒரே பிடியாய் இருந்தனான். அதுக்கிடையில இவனை நீங்கள் பிடிச்சதால எங்கடை குடும்பத்துக்கையே பிரச்சனை வரப்போகுது. அவ ருக்கும் கரைச்சல் வரலாம்.'' அவள் நீட்டி முழங்கிக் கொண் டிருந்தாள்.

''அம்மா உங்கட விபரத்தை எழுதித் தாங்கோ. இரண்டு மூன்று நாளையில பிறகு வந்து சந்தியுங்கோ. வேற என்ன'' எனப் பதிலளித்தான்.

அவள் மௌனமாக அங் கிருந்து வெளியேறிய போது, சுயநல வட்டங்களை மீற முடி யாமல் அதற்குள்ளேயே சுத்திச் சுத்தி வரும் இந்த மக்கள் கூட் டத்தை அதிலிருந்து விடுவிப்பது எப்படி என்ற சிந்தனைக்குள் அவன் மூழ்கியிருந்தான். □□

ஓலமிடும் உனது விழா

நாக. சிவசிதம்பரம்

அஞ்சி அதிர்ந்த மனம்
அலைவுற . .. என்பெண்ணே!
நெஞ்சுள் என்முக-
நினைவுக் கண்ணாடி
உடைந்து நொருங்கிய
அதிர்வாய்...
என் ஊரே ஒருதரம்
எழுந்து விழுந்ததுவாய்...
தூரத்தில் – என் செவியைத்
துளைத்துச் சிதறியதார்...?

என் துணையே !
உன் நினைவுகளில் ..
அறிந்த – அறியாத
ஆயிரமாய் முகம் கலங்கும் ..!
அங்கம் கழன்ற
அவல நெடுந்துயரில்...
எங்கும் ...
செவ்விரத்தம் பூ முகையில் ..
சிதறி அழுங்குரலாய்..
என் நெஞ்சில்.. செவியில்..
நெருப்பள்ளித் தூவியதார்.?

வானத்து நீலம் மறைய
நெடும் புகையாய்..
முன்னர் நாம் விழியழைந்த
கோயில்..
விளையாடிய வீதி...
கொலை எழுந்து
ஊரைக் குதறியதாய்..
என் – பிள்ளை மலர்ச்சிரிப்பை
பிய்த் தெறிந்து போனது யார்?

□□

அட பாவி!
'ஹீரோஷிமா' வாகக்
கிடத்தினியே எனது தெரு!
எங்கள் – 'வெண்டாமரை' மலர்கள் ..
விரிய முதல் – கொன்று தின்று..
கொண்டாட என்ன..
கொடும் மனசு?

பிள்ளை இல்லாத் தாயா?
இரத்தம்
பிழியும் உயிர் உறவுகளின்
சிந்தை இல்லாத் தீவா?
'சில நாள்' ஏமாற்றா?

வென்றெடுத்தீர்.. எங்கள்
விழி, முகம், செவி, என
வீதியில் சிறுதசை
கையும் காலும்..!

முள்ளெலும்புத் தோரணங்கள்..
குருதி நிறை குடங்கள்..
சுடலைக் குருவிகள் தாம்
வரவேற்க – வாழ்த்திசைக்க
விளை நிலம் கருகிய
வெளியில் .. உனது விழா ..!
ஓ .. அரச மரமே...!



அவசரமாய்.. நிர்வகி!
எம் வெற்றுடல்கள் மேல்
உனது மின்சாரம்..
எம் தெருவில்..
நாயும் பேயும் நடமாட
நிர்வகி நீ...!
எங்கள் ..
மல்லிகை முற்றம் மறைய
உன் கொலைக் கரங்கள்
அள்ளித் திருகிய – நம்
ஆவிகளின் கிச்சிடலில்..
அந்தோ....
புத்தம் செயலிழந்து..
போதி நிழல் ஓலமிடும்!

□□

விஸ்வாமித்ரன்



பா. மகாலிங்கசிவம்



பல்கலைக்கழகத்தில் 'வெல்கம் பார்ட்டி' மண்டபம் அமளிப் பட்டுக் கொண்டிருந்தது. வண்ண வண்ணச் சட்டை போட்டசிட்டுக்குருவிகள், காஞ்சி புரம், பனாரஸ்கள்படபடக்க அங் குமிங்கும் அசைந்துகொண்டிருந் தன. மீசை இல்லாதமுகங்கள் அதைவளர்க்கப்போகும்பெருமித் ததுடனும் அச்சம் நீங்கிய சிநேக பாவத்துடனும், மூத்தோருடன் உரையாடிக் கொண்டிருந்தன. கதிரைகளுக்குப் பால்மாற்றி மாற்றி இலக்கம் ஒட்டப்பட்டி ருந்தது. யாரோ ஒரு கவிஞன் வரவேற்புரையைக் கவிதையிலே எழுதித் தன்னுடைய கவித்து வத்தை வீணடித்துக் கொண்டி ருந்தான். இந்த அமளியிலே அவனது கவிதையை ரசிக்க யாருக்கு வேலைமெனக்கேடு இருக்கப்போகிறது? குதிரை வால்ச்சடைப் பெண்கள் மேடை யில் பேராசிரியரின் சால்வை யில் ஒரு நூல் இழுபடுவது பற் றிச் சம்பாஷித்துக்கொண்டிருந் தனர். ஆண்கள், அவர்களுள் ஒருவன் மரக்காலைக் குஞ்ச ரின் மகள் முழங்கா லுக்கு மேலே பாவாடை கட்டு வதுபற்றிச் சொல்ல, அதைச்சுவாரஷ்யமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

மேடையில் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டி ருந்தன. ''பச்சைக்கிளியே - வாவா'' முதல் பல்வேறு இலக் கியத்தரம் வாய்ந்த பாடல்கள்? மாணவர்களால் தூஷணிக்கப் பட்டுக்கொண்டிருந்தன. ஒரு வன் யேசுதாசின் 'ஏழிசைக் கீதமே'வில் உச்சத்தைத் தொட முடியாமற் 'கொராவிக்' கொண் டிருந்தான். பெண்களுக்குச் சமையற்கலையை நினைவூட் டப்போலும் மேடையின் நாலா புறங்களிலும் கத்தரிக்காய்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந் தன. ஊதிய பலூன்களோடு வேறுசிலவும் ஆங்காங்கே காணப் பட்டன. அவை போதியளவு காற்றழுத்தப்படாத பலூன்க ளாக இருக்கலாம் எனக்கணேஷ் அப்பாவித்தனமாக நினைத்துக் கொண்டான். ''தம்பி உங்க ளுக்கு என்ன பேர்?'' வாய்க் குள் கற்கண்டு மொறமொறக்க ஒரு காஞ்சிபுரம் கனகாம்பர மாலையில் மயிர்ச்சிக்கெடுத்த படியே கேட்டது.

''கணேஷ்'' மிகச்சுருக்க மாகப் பதிலளித்தது அதற்குத் திருப்தியளிக்கவில்லைப் போலும் சரமாரியாகக் கேள்விக் கணை கள் தொடுக்கப்பட்டுக் கொண் டிருந்தன.

''ஸிலீர்...'' எனச் சப்தித்த படி ஒரு அறைக்கதவு திறபட, சில நாற்காலிகள் தம்பாட்டில் பல்டி 'அடித்தன. இரண்டுபேர் தள்ளாடியடி வந்து புதுமுக

மாணவர்களைத் தமது புனிதப்' பணியிற் பங்காற்ற அழைத்தனர்.

''பல்கலைக்கழக மாணவர்களுக்கு நாம் சகல வசதிகளும் செய்துகொடுப்போம். அவர்களைச் சமூகத்திற்கு பயன்படும், தலைமை தாங்கும் நற்பிரஜைகளாக உருவாக்குவதே எமது நோக்கமாகும் ... '' சிறப்பு விருந்தினரின் உரை மேடையில் தொடர்ந்துகொண்டிருந்தது.

''மச்சான் ஒருக்கா எழும்பி வாங்கோ '' ஒரு சீனியர் மாணவனின் குரலுக்குப் பதிலாகக் கணேஷ், அவன்பின் தொடர்ந்தான்.

''இதிலை இரும், கொண்டு வாறன்'' அவன் எதையோ எடுக்கச் சென்றான். அங்கு நின்றவர்களின் நிலை அவனுக்குத் தப்பான இடத்துக்கு வந்திருக்கிறோம் என்பதை உணர்த்தியது. அவன் இப்போது தனது முன்னைய கதிரையில் இருந்து கொண்டான்.

□ □

மேடையில் இருவர் ஆடிக் கொண்டிருக்க ஒருவரின் புகை பெண்வேடமிட்டவரின் பொன் முகத்திற் கரியடித்துக்கொண்டிருந்தது. அவரின்கைகள் தப்பான இடங்களை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தன. ஏனோ கணேசுக்குச் சின்னவயதில் வாத்தியார் என்று வீட்டில் நின்ற தென்னை மரங்களுக்கு அடித்தது ஞாபகம் வந்தது.

''நீங்க புறோகிராம் ஒண்டும் குடுக்கேலையே'' மற்றப் பக்கத்தில் இருந்த மாணவி புதிய கோணத்தில் உரையாடலைத் தொடங்க முயற்சித்தாள். அவளது நளினமான அந்தப் பேச்சும் அபிநயிப்பும் அவனுள் ஆச்சரியம் விளைத்தது.

''என்னமச்சான் . கூட்டிக்கொண்டுபோகச் சொல்லாமக்கொள்ளாம ஓடி வந்திட்டீங்கள் கம்பஸ்மரபை 'ஜீவியேசு'க்குச் சொல்லிக்குடுக்காட்டி நாளைக்கு எங்கள்ள எல்லே பிழை சொல்லுவாங்கள் ''

''இல்லை அண்ணை எனக்கு இதுகள் பழக்கமில்லை ''

''அப்ப என்ன நாங்க எல்லாம் பிறக்கேக்கை இதுகளோடயே பிறந்தனாங்கள், எல்லாம் பழகிறதுதான் ''

அவன் எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

''அது வலதுகுறைஞ்சது இருக்கட்டும் நீங்க வாங்கோடா'' யாரோ சிவப்புக்கண் ஒன்று ஆணையிட ஏனையவை பின்வாங்கின. அவன் கூட்டத்தைப் பார்த்தான். 'கமரா'க்கள் வெளிச்சம் விதைத்தும் சோடி சோடியாக உள்ளே சிறைப் பிடித்தும் கொண்டன. பலர் இடங்களை மாற்றி மாற்றியும் நிலைகளை மாற்றி மாற்றியும் 'கிளிக்' செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள், அவர்களாகவே இருப்பது அவனுக்குச் சிரிப்பு விதைத்தது.

''மிஸ் எக்ஸ் கியூஸ்மீ கொஞ்சம் தள்ளியிருக்கிறது உங்களுக்குப் பிரச்சனை இல்லையே ?'' அவனது நண்பன் சந்திரன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். அவனது உதட்டிலும் இப்போதுதான் மீசை மீண்டும் முகங்காட்டத் தொடங்கியிருந்தது.

''என்னடா யோசித்துக் கொண்டிருக்கிறாய்?''

''ஒண்டுமில்லை நிகழ்ச்சியளைப் பாக்கச் சிரிப்பாக்கிடக்குது.''

''அதவிடு! வாவன் கொஞ்சம் பாவிச்சிட்டு வருவம் — ஏன்ரா 'சினியேஸ்' வந்து கேக்க மாட்டனெண்டனியாம்...?''

அவனது பேச்சினூடு கலந்த வாசனை கணேசுக்கு அவனை இனங்காட்டியது.

''எட வீட்டதெரிஞ்சுபோம் எண்டுபயப்பிடுறியே இஞ்சத்தைக் கதையளொண்டும் வெளீல போகாது. கொஞ்சம் இதண்டிட்டு வந்து பேசாம இரன்... 'கம்பசுக்கு' வந்தா 'என்ஜோய்' பண்ணப் பழகவேணும் ''

''.....''

''எட சும்மா இரடா .. என்ன சீதனம் குறைஞ்சுபோம் எண்டு கவலைப்படுகிறியே .. வீட்டிலை உனக்குங்கஷ்ரந்தான் எனக்குங்கஸ்ரந்தான். வெளீல நல்ல பிள்ளையாய்ப்போவம்... என்ன யோசிக்கிறாய்? இரு சாந்தனையுங்கூட்டிக் கொண்டு வாறன்.'' சந்திரன் அடுத்த விக்கட்டை விழுத்த வேகப்பந்து வீச்சாளனாய் நகர்ந்தான்.

□ □

கணேஸ் மேடையைப் பார்த்தான். ஐந்து ஐந்து பலூன்களாய் கட்டியிருந்த குலக்கில் ஒரு பலூனைக் காணவில்லை. கட்டு இறுக்கமில்லாததாற் கழன்றிருக்கும் என்று எண்ணிக் கொண்டான்.

அவனுக்கு ஒரு பெரிய நீர்ப் பிரளயத்தின் நடுவே யாருங் காணாமல் தானும், தன் நண்பர் களும் மூச்சுமுட்ட நீந்துவதாக அடிக்கடி வந்து கிளுகிளுக்கும் கனவு நினைவில் வந்தது. அவ னுக்குப் 'பாவித்த' சந்தோசம் பற்றிய நண்பர்களின் மகிழ்ச்சி யூட்டும் கதைகள் வந்தன.

இப்போது பக்கத்தில் திரும் பிப்பார்த்தான். அந்தப்பெண் அழகாகவும் கவர்பவளாகவுந் தோன்றினாள். மேடை அலங் காரங்கள் அவனுக்கு ரசிப்பைத் தந்தன. அதில் ஆடிக் கொண்டி ருப்பவர்களே உண்மையான பல் கலைக் கழகங்களாகத் தோன்றி னர். ''அவவை ஒருக்கா வரச் சொல்லுங்கோ மச்சான் '' ஒரு சீனியர் சொல்லப் பக்கத்து இருக்கை வெறிச்சொடியது.

□ □

கணேசுக்கு அப்பா இல்லை. அம்மா கூலிவேலை செய்து தன் னைப் படிக்க வைத்தது நினைவு வந்தது.

கணேசுக்கு, நேற்றுத் தங் கைக்குக் கொப்பி வாங்கக் காசில்லை என்று பொய்சொல்லி, தனக்குக் கேட்டு வாங்கித் தந்த அம்மா விசுவரூபித்தாள்.

கணேசுக்குச் சற்றுத் தூரத் தில் சந்திரனுடன் வாதாடிக் கொண்டு இருக்கும் சாந்தன் பார் வைக்கு வந்தான்.

திடீரெனச் சாந்தன் சுருங்கிக் கொண்டு போவதாய்த் தெரிந் தான். மேலும் மேலும் அவன் சிறுத்துக் கொண்டே போனான் கால்களும், கைகளும் சின்னஞ் சின்னதாக நெருப்புக்குச்சி அள வாக அவன் சுருங்கிக் கொண்டி ருந்தான். கணேசுக்கு நம்பமுடிய வில்லை. கிள்ளிக்கொண்டான். உண்மை தான்.

□ □

கணேஷ் பார்த்தான், சந்தி ரனை. அவன் இப்போது பெரிது பெரிதாக வளர்ந்து கொண்டிருப் பது தூரத்திலேயே தெரிந்தது ஏதோ பயங்கர மிருகம் போல் பூதம் போல் கறுப்புக் கறுப்பாக அவன் வளர்ந்து கொண்டிருந் தான். அவனிலிருந்து இரண்டு பற்கள் பளபளப்புடன் பெரிதாக நீட்டித் தெரிந்தன. அதில் ரத் தம் சொட்டச் சொட்ட ரத்தம், உறுஞ்சிய அடையாளம் தெரிந் தது. அதன் கண்கள் கோரச் சிவப்பாகத் தெரிந்தன. அதன் உடல் முழுதும் வெள்ளை வெள் ளையாக நுரை நுரையாக ஏதோ மிதந்துகொண்டிருந்தது. அது ஒரு கையில் சின்னச் சாந்தனைப் பிடித்துக் கொண்டு எழுந்தது


□ □

கணேசுக்கு அந்தக் கனவுகள் மீண்டும்... நண்பர்களின் கதை கள் மீண்டும் .. நினைவுக்கு வந் தன. அருகிலிருந்த உற்சாக மான உலகம் நினைவில்.

அம்மாவும் தங்கையும் மீண் டும் நினைவில்! சந்திரன் கூட் டிச் செல்ல வந்த போது கதிரை வெறிச்சோடி இருந்தது □□

(யாழ் பல்கலைக்கழக கலை வாரப்போட்டி (1994) யில் முதல் பரிசு பெற்ற சிறுகதை)

முப்பது வருடங்களை நிறைவுசெய்து
தொடரும் சேவையில் மொறாயஸ்...



எல்லாவிதமான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்
பற்களைக் கட்டிக் கொள்ளவும்

மொறாயஸ்

50, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

தமிழ்மொழியின் ஒட்டமைப்பும் பண்பும் இலக்கியத்தில் அதன் செல்வாக்கும்



பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

திராவிட மொழியியல் -ஓர் அறிமுகம்
(Linguistics - An Introduction)

என்னும் ஆங்கிலநூலில் தமில் சுவெலெபில் (1990) ''திராவிடமும் யப்பானியமும்'' என்னும் இயலில்அருமையான சுவையான கருத்து ஒன்றினை முன்வைக்கிறார். ஜே. வி. நியோஸ்ருப்னி *(J V. Neustupny)* என்பவர் யப்பானிய மொழியிலே செறிந்துள்ள ஒட்டமைப்புப் பண்பின் செல்வாக்கினாலே அம்மொழியின் கவிதையிலே அடியிறுதி இயைபுத் தொடைப் பண்பு இல்லாமலுள்ளது எனக் கூறியுள்ளார். இவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளும் சுவெலெபில் (பக். 119) ஒட்டமைப்புப் பண்பின் செல்வாக்கினாலேயே உண்மையான தமிழ் (திராவிட) யாப்பமைப்பிலும் அடியிறுதி இயைபுத்தொடை காணப்படாமலுள்ளது என்று கூறுகின்றார். சுவெலெபில் கூறிச் சென்றுள்ள இக்கருத்துத் தமிழ்மொழிக்குப் பொருந்துவதாயமைகின்றதை ஆராய்வதுடன் அதற்குரிய சான்றுகளை முன்வைப்பதுமே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மொழியின் 'ஒட்டமைப்புப் பண்பு' பற்றியும் செய்யுளில் 'அடியிறுதி இயைபுத்தொடை' பற்றியும் முதலிலே விளக்கந் தரவேண்டும்.

(அ) 'ஒட்டமைப்புப் பண்பு'

உலகிலே ஒட்டமைப்புப் பண்புடைய பல மொழிகள் உள்ளன. திராவிட மொழிகளெல்லாம் ஒட்டமைப்புப் பண்புடையன. திராவிட மொழிகளுள் ஒன்றாகிய தமிழ்மொழியும் ஒட்டமைப்புப் பண்புடையது. ஓர் அடிச்சொல்லுடன் பல ஒட்டுக்களை ஆக்கும் பண்பு தமிழ் மொழியிலே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக' படி என்னும் அடிச்சொல்லை எடுத்துக் கொள்வோம்.

படி:	படி-ந்த்-ஆன்	; படிந்தான்
	படி-கின்ற்-ஆன்	; படிகின்றான்
	படி-வ்-ஆன்	; படிவான்
	படி-த்த்-ஆன்	; படித்தான்
	படி-க்கின்ற்-ஆன்	; படிக்கின்றான்
	படி-ப்-ப்-ஆன்	; படிப்பான்
	படி-பு	; படிப்பு
	படி-வு	; படிவு
	படி-ம்-அம்	; படிமம்
	படி-கை	; படிகை
	படி-தல்	: படிதல்
	படி-த்-தல்	; படித்தல்
	படி-க்க்-அ-பட்-அது	; படிக்கப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இவ்வாறு பல அடிச்சொற்களுடன் ஒட்டுக்களை ஒட்டுவதால் ஆக்கப்படுகின்றன. இவ்வாறு ஒட்டுக்களைச் சேர்க்குமிடத்து அவ்வொட்டுக்கள்

மாநகர சபை
யாழ்ப்பாணம்

வேறு மொழிகளிலே தனித்து நிற்பதுபோல் அன்றி, தமிழிலே அடிச் சொல்லுடன் சேர்ந்து விடுகின்றன. இவ்வாறு சேர்ந்த சொற்களைப் பிரிக்குமிடத்து சிற்சில வேளைகளில் மயக்கமேற் படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, அவரைக்காய் என்னும் சொல்லை,

அவரை — காய்

அவர் — ஐ — காய்

என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, 'அவரையினுடைய காய்' என்று பொருள்படும் இரண்டாவது 'அந்த ஆளைக் காய் (சினத்தல்)' என்று பொருள்படும். இத் தகைய இயல்பு தமிழ்மொழியின் ஒட்டமைப்புப் பண்பினாலேயே ஏற்படுகின்றது. தமிழ்க் கவிதை களுக்கு ஒருவகையான கவர்ச்சியாற்றலைக் கொடுக்கும் ஓர் அணிவகை இவ்வொட்டமைப் புப் பண்பினாலேயே அமைகின்றது. இதனால் இவ்வணியை ஒட்டணி என்றே பெயரிட்டுள்ள னர்.

''வெள்ளரிக்காயா விரும்பு மவரைக் காயா
உள்ளமிளகாயா ஒரு பேச்சுரைக்காயா''

என்னும் பாடலை இரண்டு வகையாகப் பிரித்துப் பொருள்கொள்ளலாம்:

வெள்ளரிக்காயா விரும்பும் அவரைக்காய்
உள்ள மிளகாயா ஒரு பே(ய்)ச் சுரைக்காயா

''வெள்ளரிக்காயா? விரும்புகின்ற அவரைக் காயா? பெருந்தொகையாக உள்ள மிளகாயா? ஒரு பேச்சுரைக்காயா?'' என்று நாம் உண்ணு கின்ற மரக்கறி வகைகளை நிரைப்படுத்துவதாக இப்பாடலைக் கொள்ளுதல் ஒருவகை.

வெள் அரிக்கு ஆயா! விரும்பும் அவரைக் காயா!
உள்ளம் இளகாயா! ஒரு பேச்ச உரைக்காயா!

''வெண்மையான காப்பை அணிந்த பெண்ணே! (உன்னை) விரும்புகின்ற அவரைச் சினக்க வேண்டாம்; (உன்) உள்ளம் இளக மாட்டாயா; (என்னுடன் ஒரு பேச்சு உரைக்க மாட்டாயா!'' என்று இன்னொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு இரட்டுற மொழியக் கூடிய பாடல் அமைவதற்குத் தமிழ் ஒட்டு மொழிப் பண்பே வகை செய்கின்றது. ''வெள்ளெருக்கஞ் சடைமுடியான் .... '' என் னும் கம்பராமாயணப் பாடலிலே ''ஒருவன் வாளி'' என்று முடியும் இறுதி அடியினையும் 'ஒருவன் வாளி' என்று பிரிக்கும் போது ''ஒப் பற்றவனுடைய அம்பு'' என்னும் பொருளையும்' 'ஒரு வன் வாளி' என்று பிரிக்கும்போது ''ஒரு வலிமை மிக்க அம்பு'' என்னும் பொருளையும் தருவது இத்தகைய ஒட்டணிப்பாங்கேயாகும்.

(ஆ) அடியிறுதி இயைபுத் தொடை

தமிழிலே எதுகை, மோனை என்று செய் யுளிலே அமைவனவற்றை ஆங்கிலத்திலே பொதுவாக *Rhyme* என்று குறிப்பிடுவர். ஆங் கிலம் போன்ற இந்தோ - ஐரோப்பிய மொழி களிலே *Rhyme* என்பது கவிதை அடிகளின் இறுதியிலே இடம்பெறுவதாகும். இறுதியில் இடம்பெறும் சீர்களிலோ சொற்களிலோ ஒலி யியைபு ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

Twinkle twinkle little star
How I wonder what you are
Up above the world so high
Like a diamond in the sky

என்னும் கவிதைப் பகுதியிலே நான்கு அடி கள் உள. முதலிரு அடிகளிலும் பெறும்ஈற்றுச் சொற்கள் *star, are* என்னும் இரண்டிலும்இறுதி இரண்டடிகளிலும் இடம்பெறும் ஈற்றுச் சொற் கள் *high, sky* என்னும் இரண்டிலும் ஒலி இயைபு இடம்பெறுகின்றது.

திராவிட மொழிகளுள் மிக நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது தமிழ்மொழி. இம்மொழியின் பண்டைய செய்யுட்களை அடிப் படையாகக் கொண்டே சுவெலெபினுடைய கூற் றினை நாம் ஆராயவேண்டும். ஆங்கிலம் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலே ஈற்றடி இயைபுத்தொடை (*Rhyme*) காணப் படுவதாக முன்னர்க் குறிப்பிட்டோம் ஆங்கிலக் கவிதையொன்றின் எடுத்துக்காட்டாகக் குறிப் பிட்டுள்ளோம். இந்தோ-ஐரோப்பிய மொழி களைச் சேர்ந்த சமஸ்கிருதத்தில்,

அக்னிம் ஈலே புரோஹிதம்
யக்ஞஸ்ய தேவாம் ரிக்விஜம்
ஹோதாரம் ரத்ரதாதமம்

என்னும் இருக்குவேதப் பாடலையும் சிங்கள மொழியில்,



1995 ஏப்ரல் 19, முன்னும் பின்னும்

இயலிவாணன்

மூவ சினீ கல்லா அஸ சினி தல்லா
தஹஸக் அஷிகென சினியம கல்லா
கினீ துல் மத்தென் எனியம பல்லோ

என்னும் பாடலையும் எடுத்துக்காட்டுக்களாகத் தருகின்றோம். இவற்றிலெல்லாம் ஈற்றடி இயைபுத் தொடை இடம்பெறுவதைக் காணலாம். தமிழ்ச் செய்யுட்களிலே இத்தகைய ஈற்றடித்தொகை இடம்பெறுகின்றதா என்பதை நோக்கலாம்.

தமிழ்ச் செய்யுட்களிலே ஈற்றடி ஒலியியைபுப் பண்பு பிற்காலத்திலேயே இடம்பெறத் தொடங்கியுள்ளது. தமிழின் மிகப் பழையனவாகிய சங்க இலக்கியங்களிற் பல செய்யுட்களிலே எதுகை, மோனை ஆகியன அருகியே காணப்பட்டன. புறநானூறு என்னும் நூலிலே எதுகை, மோனை எதுவுமின்றிப் பேச்சோசை அமைப்பிலே பல பாடல்கள் காணப்படுகின்றன.

"அதெளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ னாட்டும் புல்வாய் போல
ஒடி உய்தலும் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே"

என்னுஞ் செய்யுளை (193) எடுத்துக்காட்டாகக்கலாம். பிற்காலத்து யாப்பு இலக்கண நூல்கள் கூறும் எதுகை, மோனை போலன்றிப் பேச்சோசையிலே இடம்பெறும் சில ஒலியியை புகளையுடையனவாகப் பல செய்யுட்கள் புறநானூற்றிலும் ஏனைய சங்கநூல்களிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் குறுந்தொகையிலே

"இல்லோ னின்பங் காமுற் றாஅங்கு
அரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்கு
அரிய ளாகுத லறியா தோயே"

என்னுஞ் செய்யுளில் (120) 'இல்லோன்', 'நல்லள்' என்பன முறையே முதலடியிலும் மூன்றாமடியிலும், 'அரிது', 'அரிய' என்பன முறையே இரண்டாமடியிலும் நான்காமடியிலும் இடம்பெறுகின்றன. இத்தகைய ஒலியியைபு சில பாடல்களிலேயே காணப்படுகின்றது.

பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்
அரும்பனி அச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே

உலகம் பிரமையெனத்
துயின்ற இடைப் பொழுதில்
நாங்கள் விழித்திருந்தோம்

அகலத் திறந்திருந்த கண்களைக்
குருடாக்க
கற்களும் தூசுகளும் மோதின.
சடுதியென
பள்ளங்களும் வந்து போயின.

எல்லாந் தாண்டி
நடக்கத் தொடங்குகையில்
பெருங்குரலெடுத்துக்
குற்றஞ் சாட்டினர்
ஒரு பக்கமாய் நின்று.

எல்லாவற்றையும் உதறிக்கொண்டு
நடக்கிறோம்
இழப்பிடை தோய்ந்து
இருப்பினை நினைந்து
மூடுதலியலா விழிப்பு நிலையுடன்.

□●□

என்னும் குறுந்தொகைச் செய்யுளில் (68) 'பூழ்' 'ஊழ்', 'அரும்பு' 'மருந்து' என முறையே நான்கடிகளின் முதலசைகளிலே ஒலியியைபு ஏற்படுவதையும், 'பூழ்கால்' 'செங்கால்' என முத

லடியிலும், 'ஊழ்', 'உழை' என இரண்டாமடியிலும், 'அரும்' 'அச்சிரம்' என மூன்றாமடியிலும் 'மருந்து', 'மணந்த' 'மார்பு' என நான்காமடியிலும் ஒலியியைபு ஏற்படுவதையும் இங்கு எடுத்துக்காட்டலாம்.

பிற்கால யாப்பிலக்கணக் கட்டளைகளுக்கு ஏற்புறும் எதுகை, மோனை, அமைந்த செய்யுட்கள் சங்க இலக்கிய நூல்களுள் கலித்தொகையிலும் பரிபாடலிலும் இடம்பெறத் தொடங்குகின்றன.

''எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உரித்காழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறொரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயமாலைக் கொளைநுடையந்தணீர்''


என்னும் கலித்தொகைச் (8) செய்யுளடிகளையும்,

இவற்றிலே வழக்கமாக தமிழ்ச் செய்யுட்களிலே இடம்பெறும் அடிமுதல் எதுகையுடன் ஆங்கிலப் பாடல்களிலே வழக்கமாக இடம்பெறும் அடியிறுதி ஒலியியையும் சேர்ந்து வருவதைக் காணக் கூடியதாயுள்ளது. நந்திக்கலம்பகம் (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு) கடவுள் வாழ்த்துப் பாடல்களுள் ஒன்றினை எடுத்துக்காட்டாக இங்கு தருகின்றோம்:

''செழுமலர் துகைதரு தெரிகணை மதனனது
எழில்உடன் பொடிபட எரிதரு நுதலினை
அருவரை அடிஎழ முடுகிய அவுணனது
ஒருபது முடிஇற ஒருவிரல் நிறுவினை''

இச்செய்யுளிலே 'மதனனது', 'அவுணனது', 'நுதலினை', நிறுவினை' எனும் அடியிறுதி ஒலியியையுகள் இடம்பெறுகின்றன.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல இசைப்பாடல்களிலே அடியிறுதி எதுகை



கொடுங்கோலாட்சிக்கு எதிராகக் கலகம் செய்யும் உரிமை மிகப்பழங்காலத்திலிருந்து இன்று வரையிலும் பல்வேறு மதக் கோட்பாடுகளையும், கருத்துக்களையும், தத்துவங்களையும் மேற்கொண்ட மனிதர்கள் அனைவராலும் ஏற்றுக்கொளளப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகிறது.

- பிடல் காஸ்ட்ரோ

புலவரை யறியாப் புகழொடு பொலிந்து
நிலவரை தாங்கிய நிலைமையிற் பெயராத்
தொகையா நேமிமுதல் தொல்விசை யமையும்
புலவராய் பரைத்த புனைநெடுங் குன்றம்''

என அமையும் பரிபாடல் பதினைந்தாம் பாடலடிகளையும் இங்கு எடுத்துக்காட்டுகளாகத் தரலாம். இத்தகைய எதுகை, மோனையமைப்புத் தமிழ்ச் செய்யுட்களிலே கடந்த பல நூற்றாண்டுகளாக எழுந்த தமிழ்ச் செய்யுட்களிலே இடம்பெற்று வரலாயிற்று.

இந்தோ — ஐரோப்பிய மொழிச் செய்யுட்களிலே நெடுங்காலமாக இடம்பெற்று வந்த அடியிறுதி ஒலியியைபுப் பண்பும் தமிழ்ச் செய்யுட்களிலே இடைக்காலத்திலே இடம்பெறத் தொடங்குவதைக் காணமுடிகின்றது. ஆனால், பெருமளவு இடம்பெறலாயிற்று. சித்தர் பாடல்களிலே பல எடுத்துக் காட்டுக்களைக் காணலாம்

சுடுவெளிச் சித்தருடைய:

நந்த வனத்திலோ ராண்டி — அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி — மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

என்னும் பாடலிலே 'ஆண்டி', 'வேண்டி', 'தோண்டி', 'போட்டுடைத்தாண்டி' என்னும் ஒலியியைபு எதுகை இடம்பெறுகின்றது. அவருடைய பாடல்கள் எல்லாமே இப்படியான அடியிறுதி எதுகை கொண்டனவாயமைகின்றன.

பள்ளு, குறவஞ்சி போன்ற இசை, நாடகப் பண்புடைய இலக்கிய வடிவங்கள் பதினைந்தாம்

நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றுகின்றன. குமரகுருபரருடைய மீனாட்சியம்மை குறம், முக்கூடற்பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி போன்ற இலக்கியங்களிலே பல செய்யுட்கள் அடியிறுதி எதுகை கொண்டனவாயமைந்துள்ளன.

''கொழுங்கொடியில் விழுந்த வள்ளிக் கிழங்கு
கல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக் கொடியில்
வைத்துத் தொடுப்போம்
பழம்விழுந்த கொழுஞ்சாற்றின் தேறலின்
வாய் மடுப்போம்
சிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை
இடிப்போம்''

என்னும் மீனாட்சியம்மை குறம் பாடலிலே 'எடுப்போம்', 'தொடுப்போம்', மடுப்போம்', 'இடிப்போம்' என்னும் ஒலியியைபு அலகுகள் இடம்பெறுகின்றன. முக்கூடற்பள்ளு நூலிலிருந்து பின்வரும் பாடல் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றது

''தத்தும் பாம்புனல் முத்தம் அடைக்கும்
சாலைவாய்க் கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியிற் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ராண
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே''

அண்ணாமலை செட்டியாருடைய காவடிச் சிந்துப் பாடல்களிலே அடியிறுதி எதுகை பெருமளவு பயின்று வந்துள்ளது. பாரதியினுடைய சிந்துப் பாடல்களும் இப்பண்புடையதாயமைகின்றன. பாரதியின்,

வெடிபடு மண்டத் திடிபடு தாளம்
போட-வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்
பாடப்-பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொழியிற்
கூடக்-களித்
தாடுங் காளீ! சாமுண்டீ! கங்காளீ!

-என்ற 'ஊழிக்கூத்துப்' பாட்டிலும்,

காலமாம் வனத்திலண்டக் கோலமா
மரத்தின்மீது
காளிசக்தி யென்றபெயர் கொண்டு-நீங்
காரமிட் டுலவுமொரு வண்டு-தழல்
காலும் விழி நீலவன்ன மூல அக்து
வாக்களெனும்
கால்களா றுடைய தெனக் கண்டு-மறை
காணுமுனி வோருரைத்தார் பண்டு.

என்று 'மஹாகாளியின் புகழ்' என்னும் பாட்டிலும் அடியிறுதி எதுகை அமைவதைக் காணலாம். பிற்காலத்திலே பல கவிதைகளிலே இத்தகைய செய்யுட்பண்பு இடம்பெற்றுள்ளது. மிக அண்மையில் கவிஞர் புதுவை இரத்தினதுரையினுடைய கவிதை ஒன்றில்.

''ஆலமரக் கிளையிலிங்கு ஏணையொன்று
ஆடுது
அந்தரிக்கும் பறவையொன்று சோக இசை
பாடுது
பால்முத வாயெடுத்துப் பாடும் ஒரு
பாட்டு-என்
பல்லவிக்குச் சரணங்களை நீயெழுதிக் காட்டு
கோணமலை ஆண்ட குளக்கோட்டனது
பேரனே
கோயிலெல்லாம் தவமிருந்து பெற்றெடுத்த
வீரனே.

'ஆடுது', 'பாடுது', 'பாட்டு', 'காட்டு', 'பேரனே', 'வீரனே' என ஈற்றடி எதுகை இடம்பெறுவதை நோக்கலாம்.

செய்யுளிலே அடிமுதல் எதுகை நீண்டகாலமாகக் காணப்படும் பண்பாகும் ஆங்கிலச் செய்யுளைத் தமிழிலே மொழிபெயர்க்கும் போது கூட இப்பண்பே மேலோங்கி நிற்கின்றது. தமிழ்ச் செய்யுளின் அடிமுதல் எதுகையாலே ஒரு நல்ல பயன்பாடு இருந்தது.

நீண்டகாலமாக எம்முடைய எழுதுகருவிகள் ஓலை-எழுத்தாணி. கல்-உளி. சீலை-தூரிகை ஆகியனவாகவே அமைந்தன. இவற்றுள் ஓலை-எழுத்தாணி மிகப் பெரிய அளவிலே பயன்படுத்தப்பட்டன. ஓலையிலே எழுதுகின்றபோது செய்யுட்களை அடிபிரித்தெல்லாம் எழுதுவதில்லை. தற்போது நாம் கையாளும் குறியீடுகளெல்லாம் ஆங்கிலக் கல்வியினாலே பெறப்பட்டவை -இன்றைய கணனித் திரை 21 அலகுகளைக் கொள்ளுமெனில், மொழியின் ஒழுங்கினை அறியாதவர், 21 எழுத்துக்களை அச்சிடுவதுபோல (சில வெளிநாட்டுத் தமிழ்க் கணனிப் பிரசுரங்களில் இப்படி நடக்கின்றது) ஓலையில் இடமிருக்கும் வரையும் எழுதினார்கள் செய்யுளின் அடி, சொற்றொடர்,

சீர் போன்றனவற்றுக் கேற்றபடி எழுதப்படுவ தில்லை. ஆனால், காலங்காலமாக ஓலையிலே எழுதப்பட்ட செய்யுட்களை இலகுவாக அடி, சீர் பிரித்துப் படித்து விடுகிறார்கள். இதற்கு செய்யுளின் அடிமுதல் எதுகை ஓரளவு வாய்ப் பாக இருந்தது. ஓலையிலே பின்வருமாறு எழு தப்பட்டுள்ளது எனக் கொண்டால்,

பொனனின கோதிபோதினினாமாநறம
பொலிவே போலதெனனுணதேனின
நீஞசுவை சொஞசொற கவியினபம
கனனிமமாடதுமபரின
மாடேகளிபே டோடன னமமாடும
முனதுறைகணடங
கயலநிறைாா

அப்பாடலின் அடியை முதலடியின் எதுகை யாக அமையும் 'ன்' மெய்யெழுத்து இரண்டா வது அடியின் தொடக்கத்தை இனங்காணத் துணைசெய்கின்றது. எனவே,

''பொன்னின் சோதி போதினி னாற்றம்
பொலிவேபோல்

தென்னுண் .....
கன்னிம் .....
டன்னம் .....''

என்னும் அடிகளைப் பிரித்தறிய அடிமுதல் எதுகை பயன்படுகின்றது. அச்சுயந்திரம் வந்த பின்னர் அடிபிரித்து அச்சிடக்கூடிய வாய்ப்பு ஏற்பட்ட போதிலும் அடிமுதல் எதுகை அமைத் துச் செய்யுளமைக்கும் பழக்கம் இன்றுவரையும் பின்பற்றப்படுகின்றது. புதுக்கவிதை பாடும் கவிஞர்கள் இந்நீண்டகால மரபிலிருந்து விடு படுவதை நாம் இன்று காணக்கூடியதாகவும் உள்ளது.

ஆங்கிலம் போன்ற மொழிகளிலே இடம் பெற்ற **Rhyme** (அடியிறுதிச் சொல் எதுகை) ஒட்டுமொழிகளாகிய தமிழ் (திராவிட), ஐப்பா னிய மொழிகளிலே பெரிதும் இடம்பெறாமல் இருப்பதற்கு அம்மொழிகளின் ஒட்டமைப்பே காரணமாக அமைகின்றது.

ஆங்கில மொழிச் சொற்கள் தனித்தனியாக அமைவன. இவை அடியிறுதியிலே இயைபு பெற்று வருவதற்குப் பயன்படுத்த முடியும். ஆனால் தமிழ் போன்ற மொழிகளிலே பெரும் பாலான சொற்கள் ஒட்டமைப்பிலேயே அமை கின்றன. இதனால் அடியிறுதிச் சொல் எதுகை அமைப்பதிலே சிக்கல்கள் உண்டு. தமிழ் எதுகை, மோனைகளெல்லாம் எழுத்துக்கள் அல்லது அசைகளிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளன யப்பானிய மொழியிலே இதுகூட அருகியே காணப்படுகின்றது. □□

வேலணையூர் சுரேஷ்



சாபம்

நீ..
பெற்றெடுத்த தவக்கொழுந்து
கூரைக்குத் நீ மூட்ட கொள்ளி கொடுத்து
எதிரிக்கு குறிகாட்டி நிற்கையிலே
யாரைப்போய் திட்டுகிறாய்; தாயே?
ஊரைக் கேள்...!
உயிர்பறிக்க வந்தவனுக்கு
உறுதுணையாய் உன்பிள்ளை நின்றானாம்.
பார்த்தாயா...!
'அறுவான்கள்' என்று திருவாய் மலர்ந்தாயே,
அறுவானுக்கு இன்று
அன்னையான துர்ப்பாக்கியம்
உனக்கு நேர்ந்ததை என்ன வென்பது?
அறிந்து கொண்டாயா...?
எந்தப் புற்றுக்குள் பாம்பு உள்ளதென்று?
இது பாம்பல்லத் தாயே...
''கோடரிக் காம்பு''
விட்டு வைத்தாற் கேடு
வெட்டிப் புதைக்கச் சொல்.
எட்டுக்கோடி புண்ணியம் உன்னைத் தேடிவரும்!

நீர்மை

தி. கலாமணி

'மியாவ்'

கனவு கண்டு நான் விழித்திருக்க வேண்டும்.

கேட்ட குரல் பெட்டையுடையதா கடுவனுடையதா என்ற ஆராய்ச்சியில் மனம் இறங்குகிறது.

'கடுவனின் குரலாகத்தான் இருக்கவேண்டும்; பெட்டைதான் இறந்து போயிற்றே'

அறிவு வெளிப்பட்டுத் தன் இருப்பை வெளிப்படுத்தியது.

'இல்லை இறந்து போன பெட்டைதான் கனவிலும் தோன்றிப் பயம் காட்டுகிறது போலும்.'

அந்தராத்மா விழித்துக் கொள்கிறது.

சரிதான்! இனி அறிவுக்கும் அந்தராத்மாவுக்கும் இடையேயான பட்டிமன்றத்தில் வெற்றி எப்பக்கத்திலாயினும் இழப்பு எனக்குத்தான்.

நித்திரையாவது, இவிக் கொள்வதாவது.

என்ன கனவு கண்டேன்?

பூனைக்கனவா?

எப்போதுமே இப்படித்தான்.

கனவு கண்டுகொண்டிருக்கும் வேளையில் அருமையான கதை ஒன்றுக்குக் கரு கிடைத்தது போலிருக்கும். கண்விழித்துப் பார்த்தால் எதுவுமே நினைவுக்கு வராது.

ஒரு முறை எழும்பி முற்றத்தில் சற்றுநேரம் நடந்துவந்தால் என்ன.

இவள் விழித்துக் கொள்வாளோ?

என்ன பெண் இவள்?

எப்படி இவளால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகிறது?

இவளின் விருப்பம் போல அமைந்து விட்டதனால்தான் இப்படியாக நித்திரை கொள்ள முடிகிறதோ, என்னவோ?

அப்படியானால் இவளின் நிம்மதிக்கு இனிப் பங்கமில்லைத்தான்.

ஆனால் என் நிம்மதி?



பெண் இவள் குத்துக்கல் கணக்காய் எதற்கும் அசைந்து கொடுக்காமல் இருக்கும்போது, ஆண் நான் மட்டும் ஏன் மனம் அலைக்கழிந்து என் நிம்மதியைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்?

இவளை பார்க்கப்பார்க்க எனக்குப் பொறாமையாகக் கூட இருக்கிறது.

ஒருக்களித்துப் படுத்திருக்கும் இவளை எழுப்பி, 'எப்படி உன்னால் இப்படி நித்திரை கொள்ள முடிகிறது' என்று கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

பொன்னுக் குஞ்சியும் நிம்மதியாகத்தான் நித்திரை கொள்வானோ?

அவனுக்கென்ன குறை: படுபாதகப்பயல்!

இவளையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பொன்னுக்குஞ்சி செய்த செய்கையை நினைக்கும் போது இப்போதும் ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வருகிறது.

இப்படி, எப்படி இவள் மாறினாள்?

இவளுக்கு வெளுத்ததெல்லாம் பால்தான்

பொன்னுக்குஞ்சி சரியாகத் தான் இவளை அறிந்து வைத் திருக்கின்றான்.

இல்லாவிட்டால் எப்படி இவளிடம் இவ்வளவு தூரம் வக் கிரத்தை வளர்த்திருப்பான்?

'பூனை வீட்டிலை அழுறது நல்லதுக்கில்லை.'

இப்படிச் சொல்லித்தான் பொன்னுக்குஞ்சி இவளைத் தன் திட்டத்தின் பக்கம் இழுக்க முயற்சி செய்தான்.

பொன்னுக்குஞ்சி ஒன்று சொல்லி விட்டால் போதும்; இவளுக்கு அது வேத மந்திரம்.

இவளைப் பொறுத்தவரை பொன்னுக்குஞ்சி ஒரு மணி கட் டியமாடு.

இது குறித்து எத்தனையோ தடவைகளில் இவளுடன் முரண்டு பிடித்துக் கொண்டமை ஞாபகத்துக்கு வருகிறது.

நான் ஒன்றைச் சொல்லிக் கேட்காதவள், அதையே பொன் னுக்குஞ்சி சொல்லும் போது ஏற்றுக்கொள்வதென்றால்...

'மாட்டுக்கு மாடு சொன் னால் கேட்காதாம், மணிகட் டின மாடு சொன்னாத்தான் கேட்குமாம், அப்படித்தானே?'

பொன்னுக்குஞ்சி மீதான என் கோபத்தை வெளிப்படுத்தி உரக்கக்கத்தினாலும் கூட என் கோபத்தையும் உள்ளக் குமைச் சலையும் இவள் பொருட்படுத் தினால் தானே.

'உங்களுக்கென்னப்பா பொன்னுக்குஞ்சியோடை போட்டி? இந்த ஊருக்கே மணி கட்டின மாடு பொன்னுக்குஞ்சி தானே.'

பொன்னுக்குஞ்சிக்குச் சார் பாக ஒரு வாதம்!

கூடவே ஒரு வெகுளித்தன மான சிரிப்பு?!

என் கோபம் காற்றாய்ப் பறக்கும்.

பொன்னுக் குஞ்சி இந்த ஊருக்கே ஒரு மணிகட்டியமாடு.

உண்மைதான். இந்த ஊரைப் பொறுத்தவரை பொன் னுக்குஞ்சியின் வார்த்தைகள் தான் எடுபடும்.

அவனுக்கு மட்டும் ஏன் இந்தச் செல்வாக்கு?

'ஆலடியிலை நாலு படகு கட்டிக்கிடக்காம். இரவுக்கு இங்காற்பக்கம் நல்ல அடியாத் தான் இருக்கும்?'

'கடலுக்குப் போன பெடி யள் காரியஞ் சரிவராமல் திரும்பி வந்து சாப்பிடாமல் படுத்திருக் கிறாங்களாம். எடுத்த காரி யத்தை முடிச்சுப் போட்டுத் தான் இனிச் சாப்பாடாம்.'

'சந்திரிகா இந்தியாவுக்குப் போய்ச் சாத்திரம் கேட்டிட்டு வந்த ஆள்தான் முந்தி ராஜீவ் காந்திக்கும் சாத்திரம் சொன்ன வராம்.'

'பட்டதாரிக்குப் படிச் சென்ன பிரயோசனம், இப்ப பயிற்றப்பட்ட வாத்திக்குத் தான் சம்பளம் கூடவாம்?'

'என்னதான் சொன்னாலும் நரசிம்மராவுக்குஅரசியற் சாணக் கியம் போதாது?'

பொன்னுக் குஞ்சிக்கு இந்த உலக விவகாரங்கள் எல்லாமே அத்துப்படி. ஊராரின் கணிப்பு இது.

ஆனால் பொன்னுக் குஞ்சி யைப் பற்றி என்னைக் கேட்க வேண்டுமே.

வெறும் 'நடிப்புச்சுதேசி'.

எல்லாமே வெறும் 'வாய்ச் சவடால்' தான்

'அப்புக்காத்து'க்குப் படித் திருந்தால் கொடிகட்டிப் பறந் திருப்பான்.

வெறும் வாயையே மெல் பவனுக்குச் சிறிது அவல் கிடைத் தால் கேட்கவா வேண்டும்?

உள்ளூர்ச் செய்திமுதல் உலக விவகாரம் வரை ஒன்றுக்குப் பத் தாக்கி ஒன்றை விளம்பரம் செய் வதில் பொன்னுக்குஞ்சி வெகு சமர்த்தன்.

இந்த ஊரையே கைக்குள் போடத்தெரிந்த பொன்னுக் குஞ்சிக்கு இவள் எம் மாத்திரம்?

அவனின் வாய் ஜாலத்திற்கு இவள் அடிபணியத்தானே வேண் டும்.

கல்யாணமான புதிதிலேயே தடுத்திருக்க வேண்டும்.

பொன்னுக் குஞ்சியை நன்கு அறிந்திருந்தும் வயதுக்கு மதிப் புக்கொடுக்க வேண்டுமே என்று அங்கீகரித்ததால் வந்த வினை.

உறவையெல்லாம் உதறி எறிந்துவிட்டு என் பின்னே ஓடி வந்தவளுக்கு, புதிய சூழலில் பக் கத்துவீட்டிலாவது ஒரு பேச்சுத் துணை கிடைக்கட்டுமே என்று எண்ணியதால் வந்த கேடு.

பொன்னுக்குஞ்சி இவளை நன்றாகத்தான் வசப்படுத்திக் கொண்டான்.

'நான் தும்மிப்போட்டு பட லையைத் திறக்கேக்கை தான் பார்த்தன், தம்பி வெளிக்கிட்

டுப் போகுது. போற காரியஞ் சரிவராதெண்டு எனக்கு அப்பவே தெரியும்.'

நான் போன காரியம் சரிவரவில்லை என்பதை இவளிடமே கேட்டுத் தெரிந்து கொண்டு, அதற்கான காரண - காரியத் தொடர்பை பொன்னுக்குஞ்சி கண்டுபிடித்துச் சொல்வதில் இவளுக்கு அசாத்திய நம்பிக்கை.

'திருவிழாச் சமயத்தில் வெளியே புறப்பட்டு விளையாடச் செல்வது ஞாயமா?'

என்ன உளறுகிறாள் இவள்?

ஒரே வரியையே திரும்பத் திரும்பச் சொல்லி நெட்டுருப் பண்ணல் கைவிரல்களை மடித்து மடித்துக் கணக்குப் பார்த்தல் ..

அவசரமான காரியம் என்று புறப்பட்டாலும்கூட சிறிது தாமதிக்கச் செய்தல்.

இவளின் செய்கைகள் எல்லாமே எனக்குப் புரியாத புதிராகத் தோன்ற, 'இவளுக்கு என்ன நேர்ந்து விட்டது' என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்கையில்...

'பொன்னுக் குஞ்சி சொல்லித்தந்த இராகு காலம் கணிக்கிற சூத்திரமப்பா இது.'

இவளை, அறையவேண்டும் போல் இருக்கும்.

'ஊரே ஒத்துக்கொள்ளுது. உங்களுக்கு மட்டும் ஏனப்பா பொன்னுக்குஞ்சியைப் பிடிக்குதில்லை?'

இவள் அடிக்கடி என்னைக் கேட்கும் கேள்வி இது.

இவளுக்கு எதையென்று சொல்வது.

இந்த மண்ணின் சூழ் நிலைக்கு ஒவ்வாத வதந்தி பரப்பும்பேய்.

வாழ்வியலுக்குப் பொருந்தாத மூடநம்பிக்கைகளின் உறைவிடம்.

சுயநலத்திற்காக எதையும் செய்யத்தயங்காத ஜீவ காருண்யமற்ற மிருகம்.

ஒன்றுக்குப்பின் முரணாகப் பேசும் 'தகிடுதத்தி.'

எதைச் சொன்னால் இவள் ஒப்புக்கொள்வாள்?



ஒப்புக்கொள்பவளானால் நேற்றைய ஜீவ காருண்யமற்ற செயலுக்கு இவளே கருவியாகி இருப்பாளா!

இப்போது பூனைக்குட்டிகள் எல்லாம் என்ன செய்யும்?

இறந்திருக்குமோ?

இவளுக்கு ஏன் இப்படிப் புத்தி பேதலித்துப் போயிற்று?

பொன்னுக்குஞ்சியின் திட்டமிட்டசதி இவளுக்கு எப்படி விளங்கும்?

எழுபது வயதில் சீரான நித்திரை வரவில்லை என்றால் பூனையின் முனகல் தானா காரணமாக வேண்டும்?

இவள், முனகலுக்கான காரணம்கூட அறியாத பரப்பா.

இவளின் சிறுபிள்ளைத் தனம் பொன்னுக்குஞ்சிக்குச்சாதகமானது.

'பூனை அழுறது வீட்டுக்கு நல்லதுக்கில்லை. அதாலை பூனை, கீனை வீட்டிலை வளர்க்கக்கூடாது, கலைச்சுப்போட வேணும்.'

பொன்னுக்குஞ்சி வில், இவள் அம்பு.

இவளின் மீத உணவும் கிடைக்காமற்போனால் பூனைகள் என்ன செய்யும்?

வளவு முழுவதும் வளைய வளைய வந்தவற்றைக் காணாமல் எனக்கே ஒரு மாதிரி.

பொன்னுக்குஞ்சி நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

பொன்னுக்குஞ்சியின் நிம்மதியைக்கண்டு என் நெஞ்சுக்கே பொறுக்கவில்லை.

'இவனின் நிம்மதியில் இடி விழ!'

நெஞ்சம் சபித்தது.

இடிதான் வீழ்ந்தது!

பேரிடி!!

மூன்று நாட்களின் முன் இரவில் கேட்ட 'மியாவ் மியாவ்' ஒலிக்கு தூரக்கம் கலைந்து முதலில் எழுந்தவன் பொன்னுக்குஞ்சிதான்.

'பிள்ளை, பிள்ளை' என்று மதிலோரம் நின்று இவளை எழுப்பினான்.

'பிள்ளை! பூனை, குட்டியள் போட்டிருக்கு போலையிருக்கு. ஒருக்கால் பாரம்மா?'

பொன்னுக்குஞ்சியின் கலக்கத்தில், என் தூக்கம் முற்றாகக் கலைந்தது.

எமகாதப் பயல்!

பூனை குட்டித்தாச்சியானமையை அறிந்துதான் கலைக்கத்திட்டம் போட்டிருக்கிறான்,

'ஆறு குட்டியள் போட்டிருக்கு, குஞ்சி'

இவளின் குரல் பொன்னுக்குஞ்சிக்கு நாராசமாக ஒலித்திருக்க வேண்டும். ஆறு குட்டிகளும் வளர்ந்து கொட்டமடிக்கப் போவதை எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

'பிள்ளை எப்பாடுபட்டெண்டாலும் பூனையையும் குட்டியளையும் நாளைக்குச் சந்தையடியிலை கொண்டுபோய் விட்டிட்டு வந்திடு.. குட்டியள் வளர்ந்துதெண்டால் பிறகு கலைக்கேலாது.'

'குட்டியளைப் பிடிக்கலாம் தாய்ப்பூனையை எப்பிடிப் பிடிக்கிறது குஞ்சி?'

அதற்கும் பொன்னுக்குஞ்சியே வழி சொன்னான்.

'தடம் ஒண்டு ஈர்க்கிலை நான் போட்டுத்தாறன் பிள்ளை. குட்டியளைத் தேடித் தாய் வாற பாதையிலை உள்ள வளையிலை அதைக் கட்டிவிடு. சுலபமாப் பிடிச்சுப் போடலாம்.'

இவளுக்கு எங்கே அத்தடத்தின் தாற்பரியம் விளங்கப் போகின்றது?

உருவு தடத்திற் கழுத்துச் சிக்கி தாய்ப்பூனை இறந்த போதாவது இவளின் உள்ளுணர்வு விழித்துக்கொண்டதே என்று எனக்கு நிம்மதி.

குட்டிகளைத் தடவி எடுத்து, 'நெஸ்பிறே'யும் கரைத்து 'போச்சி'யில் விட்டு ஊட்டிய அழகைக் கண்டபோது என் நெஞ்சில் சுளீரென்றது.

பொன்னுக்குஞ்சிக்கு நடந்த தொன்றும் தெரியாது. எங்கே போய்த் தொலைந்தான்

மாலையில் வீடு திரும்பிய பொன்னுக்குஞ்சிக்கு இவள் பூனைக்குட்டிகளுடன் கொஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்டு பேரதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்

விடுவானா. பொன்னுக்குஞ்சி?

'நல்லதுக்குக் காலமில்லைப் பிள்ளை உன்னுடைய நன்மைக் காகத்தான் பூனையையும் குட்டியளையும் சந்தையடியிலைவிடச் சொன்னனான்.'

இவள் விளக்கம் சொன்னாள்.

'தடத்திலை மாட்டுப்பட்டுத் தாய்ப்பூனை செத்துப் போச்சுக்குஞ்சி. குட்டியளைப் பார்க்கப் பாவமாயிருக்கு '


படேலுமே. நீ குட்டியளோடை கொஞ்சிறாய், பூனை மயிர் சாப்பாட்டுக்கைவிழுந்தால்ஈழை வியாதி வந்திடும் பிள்ளை ..'

இவளின் மௌனத்தை அவன் தனக்குச் சாதகமாக்கினான்.

'நீ என்ன யோசிக்கிறாய் எண்டு எனக்குத் தெரியுது பிள்ளை.. பெண் சுபாவம் எனக்குத் தெரியாதே. நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை... படைச்சவன் குட்டியளைப் பார்த்துக் கொள்வான்தானே. காலையிலையே குட்டியளைக் கொண்டு போய் விட்டிட்டு வந்துடு பிள்ளை.'

பொன்னுக்குஞ்சி கரைத்தால் கல் என்ன இரும்பே கரையும்.

இன்று காலையில் பொன்னுக்குஞ்சியே குட்டிகள்ஆறையும் பிடித்துப் பையில் போட்டுக் கொடுத்து இவளை அனுப்பி வைத்தான்.



இவளுக்கு கண்ணில் நீர் துளிர்த்தது

அதற்கும் பொன்னுக் குஞ்சியே சமாதானம் சொன்னான்.

'எங்கடை சனங்களின்ரை உயிருக்கே இண்டைக்கு உத்தரவாதமில்லைப் பிள்ளை, பூனை செத்ததுக்கெல்லாம் கவலைப்

பொன்னுக் குஞ்சியின் முன்னால் இவள் பெட்டிப் பாம்பு தானே.

பாவம்! இந்நேரம் குட்டிகள் இறந்திருக்கும்.

ஆண் எனக் கிருக்கின்ற காருண்யத்தில் ஒரு சிறிதேனும் இவளிடம் இருக்க வேண்டுமே.

ஊஹூம்.

இவளால் எப்படி அமைதியாக உறங்கமுடிகிறது?

'மீயாவ், மீயாவ், மீயாவ்.'

குட்டிகளின் மெல்லிய அனுங்கல் ஒலி.

மனப்பிரமையோ?

இல்லை. குட்டிகளின் மெல்லிய அனுங்கல் ஒலி மீண்டும் மீண்டும் துல்லியமாகக் கேட்கிறதே.

அப்படியானால் இது எப்படி, இது எப்படி?

இவளை எழுப்பிக் கேட்க வேண்டும்.

நினைப்பைச் செயற்படுத்த விழைகையில் இவள் அசைந்ததற்கான அசூயை.

மெல்ல எழுந்தவள் என்னையே பார்க்கிறாள்?

கைகளாற் கண்களை மறைத்து இவளையே நோட்டமிட்டுக்கொண்டிருக்கும் என் கண்களை நேருக்கு நேர் சந்திக்க இவளுக்கு வாய்ப்பில்லைதான்.

இவள் பூனை ஆனாள்.

இவள் ஏன் பதுங்கிப் பதுங்கிச் செல்ல வேண்டும்?

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவள் அறியாமலே இவளைப் பின்தொடர்ந்து சென்று இவளின் செய்கையை அவதானிக்க வேண்டுமென்று என் உள்மனம் விழைகிறது.

இவள் ஏற்கெனவே திறந்து வைத்த கதவு வழியூடாகச் செல்லும்போது சத்தம் எழும்ப இடமேயில்லை.

நானும் பூனை ஆகிறேன்.

என்ன இது?

இவள் என்ன செய்கிறாள்?

'ஏய் சசி, என்ன செய்யிறாய் இங்கை?'

மெதுவாகத்தான கேட்கின்றன்.

ஆனாலும், புட்டிப்பால் ஊட்டிக்கொண்டிருந்த இவள் அதிர்ந்தாள்.

'சத்தம் போடாதேங்கோ அப்பா, பொன்னுக்குஞ்சி எழும்பீடும். பொன்னுக்குஞ்சியைப் பேய்க்காட்டிப்போட்டு காலையிலையே குட்டியளைத் திருப்பிக் கொண்டந்திட்டன் ஓடியாடித் திரியிற வரையிலாவது பொன்னுக்குஞ்சிக்குத் தெரியாமல் வளர்த்து விட்டிடோணும்... பசி எண்டாத்தான் வந்த அனுக்கம். பசி தீர்ந்துதெண்டா பேசாமல் படுத்துக் கிடந்திடும், பொன்னுக்குஞ்சிக்கும் தெரியாது...'

இவள் முடிக்கவில்லை...

'டேய், பொன்னுக்குஞ்சி! நீ தோற்றாயடா.' □□

ஆடவர் மகளிர் மனங்கவரும் பிடவைக் கடல்

திருமாட்டி

யப்பான் அமெரிக்கன் இந்தியன் மற்றும் உள்ளூர்
வண்ணச்சேலைகள் சேட்டிங் சூட்டிங் வகைகளுக்கு

திருமாட்டி

என்றும் உங்கள் நினைவில்

திருமாட்டி புடவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



எப்போது நமக்கு விடுதலை

மலேசியக் கவிவாணர்
ஐ. உலகநாதன்

என்ன விடுதலை என்ன விடுதலை
இன்னல் விடுதலை ஆகலையே
எந்த இடத்திலும் இந்தத் தமிழினம்
நொந்தநிலை இன்னும் மாறலையே
ஏழிசை ராவணன் யாழிசைப் பூமியில்
நாளும் படுகொலை ஓயலையே
வாழும் தமிழினம் வாயைத் திறந்தொரு
வார்த்தையைச் சொல்லவும் ஆகலையே.

□

ஈழத் தமிழன் கூப்பிடும் தொலைவில்
காப்பில் லாமல் அழிகின்றான்.
வேழத் தமிழன் கோழையைப் போலே
விழிநீர் பெருக்கி அழுகின்றான்.
எல்லாத் தமிழனும் ஒன்றாய்ச் சேர்ந்து
எச்சில் துப்பினால் போதாதா
பொல்லாக் கொடுமை புரியும் அந்தப்
புலையர் படையே மூழ்காதா?

□

ஒன்றும் வேண்டாம் பகையே விலகென
ஒற்றைக் குரலில் கூறாயா?
கொன்று குவிக்கும் கொடுமையை நிறுத்தென
கூட்டம் கூட்டமாய் கூவாயா?
ஆளுக் காள்நாம் பிரிந்து இடப்பதால்
அவனவனும் நம்மை மிதிக்கின்றான்
தோளுடன் தோள்சேர் பலர் அப்போது
எவனெவனும் நம்மை மதிக்கின்றான்.

நன்றி: ராணி
(20-08-95 சுதந்திரதின மலர்)

வெளிச்சம் நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழுக்கு
'அலங்காரின்' வாழ்த்துக்கள்.



அழகிற்கு மேலும் எழிலூட்டுவது
அலங்கார் நகை மாடத்தின் நகைகளே

புதிய வடிவங்களில்
உங்கள் மனதை நிறைவு செய்யும்
தரமான தங்க நகைகளை
அலங்கார் நகைமாடம் வழங்குகின்றது



அலங்கார் நகை மாடம்
ALANGAAHR JEWELLERS
21 / 7, சந்தோசம்சாலை (கஸ்தூரியார் வீதி,)
யாழ்ப்பாணம்.



மண்ணுர்ப்பண்ணை இணை நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

போராளிகளின் கவிதைகள்

புதுமலர்கள் வாடாது

வெள்ளை

பூத்துவிட்ட புதுமலரே!
ஏனம்மா வாடி விட்டாய்
இளந்தளிரே!
நீ பூத்த மறுநாளே
புல்லர்கள் உனை
அழித்துப் போட்டாரோ?

தாய் மடியில்
நீ உறங்கும் வயதினிலே
சாவு வந்து சேர்ந்ததா
அத்தெய்வத் திருச்சபையில்?

சாவுக்குப் பயந்தோடி
இருக்க இடந்தேடி
திரிந்தோரை இரக்கமின்றி
அழித்தொழித்த பாவி எவன்தானோ?
அவனுக்கும் சாவு வந்து சேராதா?
எங்கள் துயரம் என்றும் ஆறாதா?

போரென்றால் புலியுடனே
போரென்று உலகமெங்கும் கூறிக்கொண்டு
ஒரு நொடியில்
இருநூறு பேர் தன்னைப்
புலியென்றா பலியெடுத்தாய்?
தெய்வத் திருச்சபையும்
புலிவாழும்
குகையென்றா கணக்கெடுத்தாய்?
நேற்றோடு எம் தேசம்
நெருப்பாகிப் போயாச்சு
இனிமேலும் எம்மண்ணில்
இளம் பூக்கள் வாடாது.

□□

தாய்மை

பொன்னிலா

பாருக்கு உழைக்கும் பெண்ணிவள்
பாங்கு சொல்வேன் கேளடி
நாடெல்லாம் போற்றும் அவர்
நன்நெறி சொல்வேன் கேளடி
உதிரத்தைப் பாலாக்கும்
உத்தமியர் உரை கேளடி
உழைக்கும் திருக்கரத்தின்
உவமை சொல்வேன் கேளடி
பழுசுமையைத் தானிழுக்கும்
பக்குவம் சொல்வேன் கேளடி
வலிசுமக்கும் பெண்ணிவர்
வலிமை சொல்வேன் கேளடி
களத்தில் நடமாடிடும்
கவிதை சொல்வேன் கேளடி
காற்றோடு போனவர் தம்
கதையும் சொல்வேன் கேளடி. □□

ஒருகிராமத்தின் எச்சங்கள்

● ●

சுதாமதி

சுழற்சியோடு நகரும்
ஒளிப்பிளம்பு வீச்சுக்கள்
நடு இரவின்
உறக்கத்தைக் கலைத்தபடி...
பயம் உறைந்து
இரவு நகரும்
நேற்றைய பொழுதில்
எம்மோடிருந்த உறவுகளின்
தொகை மெலிந்து
மேய்ச்சல் நிலத்தின்
அடிவேர்கள் போன்று - இன்னும்
வாழ்க்கையின்
எச்சமாகிப் போன தடயங்கள்.
இம்முறையும் சோகம்
சுழன்றடித்தது.
ஆனால்
பட்டம் விடப் பறந்து வரும்
பிஞ்சுகள் வருவதில்லை
முன்பு விட்டம் போடும்
அந்த ஒற்றைப் பனை
வட்டுக் கருகி வீழ்ந்து போனது.
இன்னும் அந்த வைரத்தில்
ஈயக் குண்டின்
சன்னக் கிளிப்பு ஆழமாய்...
என் வீடு ஒற்றையாய்
ஓரச்சுவர்கள் வெடித்தபடி...
சிறை மீட்கவரும்
ராஜகுமாரனை எதிர் நோக்கியதாய
மௌனமான துயரத்துடன்,
நீர்த்தடங்கள் மறையாத
பாசிபடர்ந்த படிக்கற்களுடன்
காத்திருக்கிறது.
ஒட்டைகள் சுற்றி
ஒற்றையாய் கருகிய மாலையில்
என் அப்புவும் ஆச்சியும்
இன்னும் சிரித்தபடி சட்டகத்துள்.
வாழ்ந்து மறைந்து போன
சாட்சியாக...

□□

என்றைக்கு எங்களது நெஞ்சுகள் இளகும்

□
□

ம. அரசன்

கட்டியணைக்க,
முத்தம் தந்து கையசைக்கத் தோழரின்றி
நீண்ட நெடும் பயணம் - நீங்கள்
தனிவழியே நடந்தபோது
உங்கள் உள்ளமெல்லாம் கனன்றிருக்கும்.
உங்கள் நெஞ்சின் கனதியில்
தூடான சுவாசத்தில்
காற்று தினறிப் போயிருக்கும்.
அந்த இறுதிக் கணங்களில்...
தொலைதூர தாயகத்தை,
ஆதர்சத் தலைவனை,
பூவாகப் பொத்தி வளர்த்த தாயவளை,
நேசித்த நெஞ்சுகளை
உங்கள் விழி தேடியிருக்கும்.
வெடியதிர்வில்
பிய்த்தெறியப்பட்டது
இலக்கும் உங்களது உடலும் மட்டுந்தான்.
உங்கள் உணர்வுகள் என்றைக்குமே
உருக்குலைந்து போகாது.
இந்த மண் ஈன்றெடுத்த
இரும்பு மனிதர்களே!
சாவு உங்களுக்குச் சாதாரணமானதுதான்.
ஆனாலும் இந்தமண்ணை ஆழமாக நேசித்தீர்களே,
உயிருக்கு மேலாய் நேசித்தவைகளிடம் - நீங்கள்
விடை பெற்றுக் கொண்டதெல்லாம் - உங்கள்
இழப்பில் இந்தத் தேசம் விடியும் என்ற
அசையா நம்பிக்கையில்தான்.
எங்கள் சத்திய வேள்வியின்
தூய்மைக்கு
ரத்த சாட்சிகளாய்
மகுடம் தரித்தவர்களே!
இந்த மண்ணின் விடிவிற்காய்
முகமிழந்து போனவர்களே!
மரணத்தை மகிமைப்படுத்திய மாணிக்கங்களே!
உங்கள் கனவுகளை, உங்கள் சுமைகளை
எங்கள் தோள்களெல்லாம்
பகிர்ந்து கொள்ளும் நாளினியெப்போ?

□□

பழுத்தவயதிலும் பயணம் தொடருது



அறிவுக்குமரன்

பழுத்த வயதிலும் எதிரியை
விழுத்த வேண்டும் என்று விழித்தெழும் தேசமிது.

மண்டான் சுருட்டும்
மடி நிறைய வெற்றிலையும்
கண்டார் நிண்டாரோடு
கதை வழிப்படும் கள்ளுத் தவறணையும்
பிள்ளைகள் அன்பும் பெண்சாதியவள் அணைப்பும்
ஒரு நாளும் மீஞ்சாது செய்தவர்கள்...

எல்லைக் காணிக்கும்
சுள்ளி விறகுக்கும் அடிபட்ட அவர்கள் இன்று
எல்லையில் நின்று எதிரியுடன்
சண்டை செய்கிறார்கள்.

நரைத்த முடியும்
நழு நழுத்த தோலும்
வாத்தின் வாய் போன்ற பொக்கு வாயும்
இவர்களது பயணத்தில் இடையூறாய் இருந்ததில்லை.

கூருத்தோலை கண் முன்னே ' மண்ணுக்காய்
சருகாகிப் போவதைக் கண்டு — என்ன
பழுத்த ஓலை பார்த்துக் கொண்டா
இருந்திடும்?
'அவன் போன் போரிலே சாக
நான் வாழவோ' என்று
ஆவேசம் கொண்டதனால் - புலிக்கோலம்
பூண்டது மொத்தத்தில்
எங்கள் தேசமே ..

அருணாசலம் ஐயாவினதும்
பூபதி ஆச்சியினதும் அடியினைத் தொடர்ந்து
ஊன்று கோலையும் நெம்பு கோலாக்கிய படி
எங்கள் தேசம் .. □□

புதிதாய்ப்பிறப்போம்

அடம்பனூர்
செ. திருமாறன்

இந்த வானமும் – இரையும்
பெரும் கடலும்
கொழுந்தெறியும் நெடிய மரங்கள்
சுமந்த நிலமும் .. உன்
சொந்தம்.
உன் பாட்டன், பூட்டன் பரம்பரை
வாழ்ந்த தேசம்.

நீ பிறந்து, நிலமுழுது
நெல் அறுத்தது உன் பூமி.
முத்துக்குளித்து வலை வீசி - நீ
நித்தம் திரியும் நீண்ட கடல்வெளி
உன் பரம்பரைச் சொத்து!

நீ... நிலா ரசித்து விண்மீன்களை
எட்டி விட நினைத்து மகிழ்ந்த நீலவானம்
உன் உரிமை.

பிரபாகரனென்னும் பேரதிர்வின் பின்
நிகழ்ந்த பிரபஞ்ச மாற்றத்தில் .. உன்
உரிமைகளை நிராகரித்தவர்கள்
நிர்மூலமாகிப் போகிறார்கள்.

உன் பூர்வீக மண்ணில்
புதிதாய் தடை போட
யாரால் முடியும்?
சொந்த மண்ணில்
சுதந்திர வாழ்வை
சுருக்க நினைத்த
இவர்கள் யார்?

புயல் மையமிட்ட... நம்
பூமியிலே
பேரிரைச்சலோடு பெரும் புயலாயடித்து,
மடிந்து .. நம்
சுதந்திர பூமியில்
புதிதாய்ப் பிறப்போம். □□



புதிய வேண்டுதல்

●

தூயவன்

நிலாக்காலமே! நீ விரைந்து வா! — அப்பொழுதுதான்
வேவுக்குப் போனவர் முகாமிற்கு மீளுவர்.
நேற்றுடன் அவர் உணவுகள் முடிந்ததும்
நற்சோறுண்டு நாள்களானதும் உனக்குத் தெரியாதா?

வீசும் குளிர்காற்றே! சற்றேனும்பொறு - பகையினுள்
வாசம் செய்பவரை குளிரால் வருத்தாதே
தேசத்துச் சொத்தீவர் தேகம் நடுங்கவிடலாமோ? - தமிழை
நேசித்ததால் தமைவருத்திடுமிவர் நிலை பாராயா?

கடலலையே அமைதி கொள் - உனைக்
கடந்தவர் மீள்கையில் மேலும் களைத்திடுவர்
விடலைப் பருவத்தில் வீத்தாகிப் போகுமிவர்
உடலை வருத்துவதிலா இன்பம் காண்கிறாய்?

பட்சிகளே! கண்டதுமவர்களைக் கலைந்தெழுந்திடாதீர்
எட்டத்திலேயே எதிரியிவர்களைக் கண்டிடுவான்
தவறியுனை மிதித்தாலும் தீண்டிடாதே சர்ப்பமே!
இவரில் பலவுயிர் பறித்ததும் மறந்திடாதே

நட்டுவக்காலிகளே! நுளம்புகளே! அவர்களை
கடிக்காமல் விடுங்கள் - ஏனெனில்
வேட்டினால் வரும் வலியில் அனுங்காதவரை - உங்கள்
கொடுக்குகளால் கொட்டியென்ன பயனடைவீர்?

ஊர்ந்திடும் சங்குகளே! கடலாரிகளே! - தயவாய்
மணற்புற்றினுள் மறைந்து கொள்ளுங்கள்
முட்கள், கம்பிகளில் கிழிபட்ட பாதங்களை
வெட்டிப்பதம் பார்த்தென்ன சுகம் காணப் போகிறீர்கள்? □□

இங்குமோர் ஆயுத ஒப்படைப்பு

ராபிகா

தலைவனின் வழிநடத்தலில்
அதிர்ந்தெழுந்த போர் முரசொலியில்
விழித்தெழுந்தது தமிழினம்
தமிழ்த்தாயவள் விலங்கொடிக்க
கொதித்தெழுந்தது
கரிகாலன் படை
ஆர்ப்பரித்தெழுந்த
மக்கள் வெள்ளத்தில்
வெகுண்டெழுந்த
வேங்கைகள் அணியில்
அலைக்கழிந்து போனது
எதிரிப்படை;
திணறியே போனது;
அந்நியப்படை.
ஆட்டமே கண்டது
''தலை தப்பியது
தம்பிரான் புண்ணியமென''
ஓட்டமே எடுத்தது
ஆயுதமனைத்தையும்
போட்டுமே போனது
அதிகாரப் படைகளின்
'அதிகாரப் பரவலாக்கம்'
அடங்கியே போனது
ஒப்பற்ற எம்மைந்தர்
நியாகத்தின் முன்
ஒடுங்கியே போனது
நாசகாரப் படை
நடுங்கியே போனது
களத்திலே எம்வீரர்
கருத்துடனே போராடி
நடத்திய வேள்விக்கு
ஆகுதியாக்கினர் - தம்
செங்குருதி தனை
கொழுந்து விட்டெரிந்த
விடுதலைத் தீயில்
கொடும் பாவிகள்
கொட்டமனைத்தும்
பொசுங்கியே போனது

ஆயுதம் ஏந்தினர்
புதிய தளிர்க்கரங்கள்
புதுவேகம் பெற்றது
புரட்சிப் போராட்டம்
புதுமைகள் பல
புரிந்து வரும் எம்மண்ணில்
இனியும் தொடரும்
அந்நிய இராணுவத்தின்
புதுவித - ஆயுத
ஒப்படைப்பு □□



இப்போதும் அசையாத மனிதனே!

உதயலட்சுமி

சோளகம் வீசத் தொடங்கி விட்டது.
எரி முரம் உலுப்பி
அள்ளி வந்த கருகுகள்
முற்றத்தில் எகிறி விழ
சோளகம் வீசத் தொடங்கி விட்டது.
கறுத்த பணைகளெல்லாம்
இப்போது பேயாட்டம் போடுகின்றன.

எங்கோ குந்தியிருக்கும்
காவலரண் வேலிகள் சூழ்ந்த
நிலத்திலிருந்து
செம்பாட்டு மண்ணள்ளிக்
கண்களில் கொட்டுகின்றது.

''எப்போது ஊருக்குப் போறது''
ஏக்கம் கோய்ந்த விழிகளை அறியாமல்
குழிகோண்டித் தோண்டி
எதிரி கண்ணி புதைத்துக் கொண்டிருப்பான்.
அடிக்கடி கண்விழித்துக்
கண்ட இடமெல்லாம் 'ஷெல்'லெறிவான்.

ஆனாலும்
புகையடங்கு முன்பே
புழுதி தட்டியபடி மனிதர்கள்
எழுந்து நடப்பார்கள்.
நடுக்கடல் வரை பார்வை விரித்து
வலை யேற்றிக் கொண்டு
படகை இழுத்துக் கடலில் விடுவார்கள்.
வெறிச்சோடிப் போன வான்பரப்புகளில்
இப்போது வானம்பாடிகள் பாடித்திரிகின்றன.

காலம் தவறாத மழை பெய்ததாம்,
செங்கோல் தவறாத மன்னன் அரசோச்சுவதாக
எங்கள் ஊரில் பேசிக்கொண்டனர்.
அள்ளி வந்த செம்மண்
முகத்தில் விழுந்ததை
அருவருத்துத் துடைப்பதைவிட,
சந்தனமாக நினைத்து
உரசித் தேய்த்ததாக
துப்பாக்கி பற்றிய தோழி கூறுவாள்.

இப்போது
சோளகம் வீசத் தொடங்கி விட்டது
ஏறி மரம் உலுப்பி
அள்ளி வந்து மண்ணைக்
கண்களில் கொட்டியபடி
பேயாட்டம் போடுகின்றது.
இப்போதும் அசையாத மனிதனே!
இனியும் நீ இங்கிருத்தல் நன்றல்ல.

□□

போராளியின் பாடல்



இளந்திரையன்

என் சிறுவம் கரைந்த
பரம்பரை மண்ணின்
காவலனாய்க் களத்திருந்து
வெடியிசைகளின் லயத்திற் பின்னி
வீரியம் ததும்ப உரக்கப் பாடுவேன்!

வெயில், புயல், இருள், மழை
ஏதேனுமொரு பொழுதின்
சாவிளிம்பிலென் பயணம்!
கற்தரையில் கால்புதையக்
கனத்த சுமை சுமப்பேன்!
நிசுக்களினால் ஆகித் துடித்திருக்கும்
என் இதயப்
பூ நசிக்கும் துயர் பொறுப்பேன்!
ஊனோடு உயிருருகி வழிய
ஒளி கொடுப்பேன்!

எக்கணமும்
திடுமெனப் பிறி என்னுட் புகுந்துயிரின்
துடிப்படக்கவென்றே
ஓர் சிறிய ரவை முனையுள், எறிகணையுள்
அன்றிப்
பொறிவெடிகள் எதிலேனும்
சந்தடியற்றுக் காத்திருக்கும் சாவு!

இருப்பின் முழுமை பற்றி
இறப்பின் மகிமை பற்றி
அதிகம் புரியும் எனக்கு!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதாய்
உணர்கிறேன்!
போலியிலன்றிப் பெருமையில் மூழ்குவேன்!

அற்பங்களில் சிக்குண்டு
அங்கிங்கெனாதபடி
அர்த்தம் கொள்ளுமென் வாழ்வு!

□□



இ. திருமாறன்

நட்பின் இலக்கணம்

நேற்றுவரையும்
நண்பனாய் இருந்தவன்
என்நெஞ்சம் தனிலே
ஆழப் பதிந்தவன்
வேற்று மனிதனாய்
இன்று மாறினான்
காரணம் புதுஉறவு
எனக்கல்ல அவனுக்குத்தான்
அதுவும் பால்மாற்றத்துடன்
பத்து வருடங்கள்
பழகிய நட்பு
பத்து நாள் உறவினால்
மறந்து போனது
நட்பின் இலக்கணம்
நாமென்று இருந்ததும்
நான்கு திசைகளும்
சுற்றித் திரிந்ததும்
கால மாற்றத்தால்
கலைந்து போனது
ஊருக்குத் தெரிந்த ஒன்று
உலகத்திற்கு தெரிந்த பின்பும்
நண்பனிற்கு மட்டும்
மறைக்கப் படுவதா?
பணமுள்ளோர் உறவும்
பால்மாற்றமும்
பெரிதாய் தெரியும் எவனுக்கும்
ஏழையின் நட்பு கிள்ளுக் கீரைதான்
நட்பு என்பது
மற்றவன் விடயத்தில் மூக்கை நுழை
உன்னுடையதை மட்டும் நண்பனிற்கு மறை
இதுதான் உன்னகராதியில்
நட்பின் இலக்கணம் என்றால்
நட்பெங்கே வாழுதாம்
நல்லது என் பழைய நண்பனே
நல்ல நட்பிற்காய் உயிரைக் கொடு
நாணயமற்ற நண்பனாயின்
இதுதான் எனது அகராதியில்
நட்பின் இலக்கணம்
தெரிந்து கொள்.
எதிரும் புதிருமாய்
உள்ள இருவர்
எப்படி ஒன்றாய்ப் பழக முடியும்?
இன்றுடன் அறுந்து போகும் நட்பு
இனி ஒட்டாது இருந்தாலே நன்று
நீ எங்கிருந்தாலும் நலமுடன் வாழவும்
நல்லனவற்றை (மட்டும்) செய்யவும்
எனது நல்லாசிகள் - ஏனெனில்
நல்ல செயல்களிற்கு மட்டும்தான்
வரலாறு வாழும்.



'ஆர்னல்ட் ரொயின்பீ'யின்
சவால் ஏற்புக் கோட்பாடும் தமிழீழக் கொள்கையும்
- ஒரு கண்ணோட்டம்

செ. கிருஷ்ணராசா

வரலாற்று எழுத்தியலில் (Historiography) புதிய ஒரு சகாப்தத்தினை தோற்றுவிக்க அடிப்படையாகவிருந்த ஒரு கோட்பாடுதான் ஆர்னல்ட் ரொயின்பீ (Arnold Toynbee)யின் சவால் - ஏற்புக்கோட்பாடு (Challenge and Response Theory) ஆகும். பிரித்தானியாவைச் சேர்ந்த, சூழலியல் வாதியான ரொயின்பீ உலகின் பல பாகங்களுக்கும், நதிப் பள்ளத்தாக்குப் பிராந்தியங்களுக்கும் வருகை தந்து அங்குள்ள இயற்கை முறைமைக்கும் மனித வாழ்வியலுக்குமிடையிலான தொடர்புகளையும், சாதக - சாதகமற்ற நிலைகளையும் அவதானித்ததன் அடிப்படையில், உலக நாகரிக வாழ்வின் வரலாற்றை பல தொகுதிகளாக எழுதி வெளியிட்டார். அவருடைய Study of History என்ற இந்த நூல் 13 பெருந் தொகுதிகளாக வெளியிடப்பட்டது. மேற்குலக நாடுகளினதும் - கீழைத் தேயங்களினதும் மனித நாகரிக வாழ்வியலின் பரிணாமத்தினையும் அதன் பரிமாணத்தினையும் பற்றி இவற்றில் மிகவும் விரிவாக ஆராய்ந்த ரொயின்பீ தனது புதிய கோட்பாடான சவால்-ஏற்புக்கொள்கையை முன் வைத்து அதன் செயற்பாட்டினை அவ்வுதாரணங்களூடாக எடுத்துக் காட்டி நிறுவியுள்ளார்.

ரொயின்பீயினுடைய கோட்பாட்டின்படி இயற்கைத் தேர்வுக்கும் மனித வாழ்வுக்கு மிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. அதன்படி, மனித வாழ்வின் பரிமாணம் அல்லது அதன் போக்கு இயற்கை விதிக்கும் சவால்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என்பதை அவதானிக்க முடிந்தது. இயற்கையின் சவால்கள் எல்லாவகையான ஜீவராசிகளையும் எதிர்கொண்டபோதிலும், அவை மனிதனை எதிர்கொண்ட விதத்தில் மட்டுமே அவற்றிற்கு எதிர் விளைவுகள் ஏற்படக் காரணமாகவிருந்தது. மனித பரிமாணத்தில் சிந்தனைவளர்ச்சி, கருவிகளின் கண்டுபிடிப்பு, இயற்கைத்தேர்வினை வெற்றிகொள்ளும் திறன் என்பன போன்ற செயற்பாடுகள் ஏற்படுவதற்கு அடிப்படையாக இருந்த காரணி இச்சவால் - ஏற்புக் கொள்கையே என ரொயின்பீ விளக்குகின்றார். அதாவது இயற்கைக்கெதிராக மனிதன் மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகளின் தோற்றப்பாடே அறிவியல் சாதனைகள் என்பதனை ரொயின்பீ மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றார். உலகில் புராதன நதிப் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் எதிர் நடவடிக்கைகளே ஆங்காங்கு நாகரிக வாழ்வு உதயமாவதற்குக் காரணமாகியது என்பது ரொயின்பீயினுடைய கோட்பாட்டின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்வடிப்படையிலேயே உலக நாடுகளின் வரலாற்று வளர்ச்சிப்போக்கு அமைந்து கொண்டது என்பதும் அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தமைவாகவிருந்தது. நாடுகள் பற்றிய வரையறை, தேசியம் பற்றிய வெளிப்பாடு, மொழி வளர்ச்சி பற்றிய அளவீடு, மதம் பற்றிய கோட்பாடு யாவும் ரொயின்பீயின் சவால் - ஏற்புக் கொள்கையின் ஊடாகவே சட்டகப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அண்மைக் காலத்தில், உலகுபற்றிய நோக்கவிதானத்தைப் பொறுத்தவரையில் ரொயின்பீயினுடைய இயற்கைத் தேர்வினை விட - அதற்கும் அப்பால்

மாதகல் சபை
யாழ்ப்பாணம்

உள்ள - இன்னொரு புதிய முறைமை - மக்கள் வாழ்வு தொடர்பாக, நாடுகளின் தோற்றம் தொடர்பாக, அறிவியல் சாதனைகள் தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள முறைமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு புதிய முறைமையின் பின்னணியிலேயே இன்றைய ஜப்பான் அதன் பரிமாணத்தை வளர்த்தெடுத்துக் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது. அதேபோன்றதொரு புதியமுறைமையின் செயற்பாடுஇன்று 'தமிழீழம்' என்ற கொள்கை வடிவத்தினை உருப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் வெளிப்படுத்த முனைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனவே இச்சிறிய கட்டுரையின் கண் உலக நோக்குப் பற்றிய அப்புதிய முறைமைக்கும் 'தமிழீழம்' என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறையாக்கங்களுக்குமிடையே உள்ள இயைபு விதியமைவுகளை ஆராய்வது நோக்கமாகின்றது.

புதிய விதி

ஒரு நாட்டினதோ அல்லது மக்களதோ மேம்பாடு இப்பொழுது இயற்கை விதியில் தங்கியிருக்கவில்லை என்பது அண்மைக்காலக் கருத்தோட்டமாக உள்ளது. அதாவது கட்டிடத்துக்கான சதுரமாதிரிகள் (Building Blocks) எங்கிருந்து தோற்றப்பாடு பெற்றது என்பதைவிட, அவற்றை வைத்து எங்கெங்கு வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளப்படும் கட்டுமாணத்தின் செயற்பாடே அல்லது அதன் தொழிற்பாடே கவனயீர்ப்புக்குரியதாகின்றதே தவிர அக்கட்டிடத்தின் (Building Blocks) வர்ண - மூலக்கூறு வேறுபாடுகள் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இதேபோன்றே புதிய ஒரு நாட்டின் தோற்றம், அதன் உருவாக்கம், வளர்ச்சி, அறிவியற்துறைச் சாதனைகள், அவற்றின் மனித நலப் பயன்பாடு என்பன இப்புதிய விதியைத் தழுவிய வகையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. எவ்வகையிலும் ஆர்னல்ட் ரொயின்பீயின் 'இயற்கை விதி'க் கோட்பாட்டுச் சட்டகத்திற்குள் இன்றைய 'ஜப்பானுடைய முன்னேற்றம்' உள்ளகப்படுத்தப்பட்டதாகஅமையவில்லை என்பதே ஜப்பானிய இளம் ஆய்வாளர்களது கருத்தாகவுள்ளது. அவ்வகையில் ஜப்பானுடைய பண்பாட்டில் அதன் முழுமையான தனித்துவமான தோற்றப்பாடே கவனயீர்ப்புக்குரியதாகின்றதே தவிர, அப்பண்பாட்டு உருவாக்கத்திற்குரிய மூலங்கள் அல்ல என்பது இப்பொழுது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் ரொயின்பீயினுடைய தத்துவத்தின்படி 'பண்பாட்டு மூலங்களே' வரலாற்றுக் கட்டுமானத்தில் கவனயீர்ப்புக்குரிய பொருளாகின்றது என்பது மனங் கொள்ளத்தக்கது.

அவ்வகையில், புதிய விதியின்படி, தொழிற்பாட்டு ரீதியான வடிவமே இன்றைய உலக நாகரிக வாழ்வில் பெருஞ் செல்வாக்குச்செலுத்துகின்றது என்பது வெளிப்படையாகின்றது. பல வர்ணங்கள் அல்லது உள்ளகப்பண்பினையுடைய கட்டிடதளத்துக்கான சதுர மாதிரிகள் (Building Blocks) கொண்டு அமைக்கப்படுகின்ற உருவத் தோற்றம் தொழிற்பாட்டு ரீதியில் ஒரு பாட சாலைக்குரியதாகவோ அல்லது சினிமாப்படக் கூடமாகவோ அல்லது ஆத்ம சாந்தி தரும் திவ்வியமண்டபமாகவோ – அறிவியல் கூடமாகவோ தொழிற்படக்கூடும். ஆனால் அங்கு அவை தோற்றுவிக்கப்பட்டமுறைமை, மூலப் பொருட்கள், வர்ணம் பற்றிய பிரச்சினைகள் எழுப்பப்படுவதேயில்லை. அவ்வகையில் ஒட்டு மொத்தமான பயன்பாட்டு வடிவமைப்பே பண்பாட்டு வெளிப்பாடாக இப்பொழுது கொள்ளப்படுகின்றது. ஜப்பானில் இத்தகைய ஒரு பண்பாட்டு வெளிப்பாட்டை கி. பி. 1912 வரையுமுள்ள 'மேஜிப்புரட்சிக் காலம்' ஆக்கிக் கொடுத்திருந்தது. ஜப்பானிய வரலாற்றிலேயே ஒரு தனித்துவமான காலப்பகுதியும் இதுவாகும். இக்காலத்தில் பக்கம் பக்கமாக ஜப்பானிய பாரம்பரியமும் நவீனத்துவமும் சமவளர்ச்சியடைந்திருந்தன. எல்லாத்துறைகளையும் நோக்கிய அறிவியல் வளர்ச்சிக்கான நிறுவனங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களின் தொழிற்பாட்டு ரீதியான பயன் இதுவரைக்கும் சமபலமற்றிருந்த ஜப்பானிய சமூகத்தினைப் பின்னர் சமத்துவமுடைய சமூகமாக எஞ்சிய உலகுடன் வாழ வழி சமைத்தது. அதன் வெளிப்பாடாக முதலில் அமைந்த நிகழ்வே முதலாம் உலக மகாயுத்தத்தில் ஜப்பானையும் பங்கு கொள்ளச் செய்த சம்பவமாகும்.

'இராணுவ இயல்' ரீதியாக ஜப்பானிய மக்கள் அடைந்திருந்த வளர்ச்சியின் பெறுபேறே முதலாவது மகாயுத்தத்தில் அவர்கள் ஈட்டிக் கொண்டிருந்த வெற்றியாக அமைந்தது. இப்பின்னணியில் அவ்வதாரணத்தினை 'தமிழீழம்' என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறை ஆக்கங்களுடன் இணைத்து நோக்க முடிகிறது. அதாவது கி பி. 1868 ம் ஆண்டுக்கு முன்னர் ஜப்பானிய சமூகம் மேற்குலக வல்லரசுச் சமூகங்களின் மத்தியில் 'ஒரு சிறுபான்மை' நிலை

யிலேயே காணப்பட்டது. ஆனால் மேஜி நிறுவனத்தின் பயன்பாடு அச்சமூகத்தை மிக விரைவாக சமத்துவமான நிலைக்கு உயர்த்தி வைத்துவிட்டது.

கி. பி. 1914 இன் பின்னர் மேற்குலக வல்லரசுகளுடன் சமத்துவ ஸ்தானத்திலிருந்து உலக விவகாரங்களை நிர்வகிக்குமளவிற்கு ஜப்பான் வளர்ந்தமையானது அப்புதிய விதியின் செயற்பாட்டு வடிவத்தினை விளக்குவதாக உள்ளது. இப்புதிய விதியே இன்று தமிழீழம் என்ற கொள்கை வடிவத்திற்கான நடைமுறைகளுடன் இணைத்துப்பார்க்கப் படுகின்றது. இங்கு சிறுபான்மை என்ற சமத்துவமற்ற நிலை இராணுவ இயல் வளர்ச்சி அடிப்படையில் சமத்துவமான நிலைக்கு இட்டுச் செல்லப்படும் ஒரு நடைமுறையைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

இப்புதிய கோட்பாட்டின்படி, புதியதொரு நாட்டினை சமைத்துக்கொள்ள 'தொடர்ச்சியான பாரம்பரிய நிலத்தொடர்புகள்' அவசியமற்றதாகின்றன. கட்டிட தளத்துக்கான சதுரமாகிரிகள் (*Building Blocks*) கொண்டு எவ்விடத்திலும் உருவாக்கம் பெறுகின்ற அமைப்பானது அதன் தொழிற்பாட்டு முறையிலேயே மக்களின் பண்பாட்டினை உருவாக்கிக் கொள்கிறது. கனடா நாட்டுத் தேசிய வாதமும் நாட்டுப் பற்றும் இதன் பாற்பட்டதே. அவ்வகையில ஆர்னல்ட் ரொயின் பீயினுடைய 'இயற்கை விதி' பண்பாட்டு உருவாக்கத்தில் இப்பொழுது செல்வாக்கு இழந்துவிட்டநிலையையே வெளிப்படுத்துகின்றது எனகூறிக் கொள்ளலாம்.

உசாத்துணை நூல்:

JAPAN ECHO, Special issue (Japan's View of the World), 1993.

□□



பிரச்சாரத்தின் பின்

சத்துருக்கன்

'இரத்தத்தின் தூர்நாற்றம்
தொலைந்துவிட,
என்னை அரவணைபுங்கள்.....
நான் புன்னகை மலர்களைத் தருவேன்' என்று
கையசைத்து எழுந்தாயே?
அப்போது
உன் வெள்ளைச் சிரிப்பில்
உலகம் மயங்கி நின்றது.
நீ,
வெண் சேலை கட்டி வந்தபோது
நானும் வெண்மையைப்
பரிமாற முன்வந்தேன்.
எனது தூய்மையின் ஒளியில்
உனது விழிகள் கூச
வெறித்துப் பார்த்து விட்டு
வழி பார்த்துப் பார்த்து
முடியாதென்று சென்றபிறகும்
'வெண்மையைத் தூதுவிடுவேன்' என்று
இருளுள் முனகுகிறாயே!
உனது வெண்மையின்
வஸ்திரத்துள்
மறைத்து இடக்கும்
வர்ண வஸ்திரத்தை
உருமறைப்புச் செய்துள்ளதாகவே
நான் உணர்ந்து கொண்டேன்.
நீ இன்று போருக்கு என்னை அழைக்கின்ற
எக்காளத்தின் அதிர்வில்
உனக்கு வியர்த்துக் கொட்டுகிறது.
உடலின் வியர்வைத்துளிகளை
துடைத்துக்கொள்.
பதட்டம் கொள்ளாதே!
பிறகு.....
எப்படியுள்ளாய்?

□□

முன்னேறிப் பாய்தல்

மிதக்கின் முழுக்க மூட்டைகள் நிரம்பி வழிந்தன. அதனை உருட்ட முடியாது கஷ்டப்பட்ட கனகலிங்கத்தார் அந்த தியேட்டர் வாசலில் நிழல் பரப்பியிருந்த பூவரசில் சைக்கிளைச் சாத்தினார்.

அதிகாலை உருட்டத் தொடங்கிய சைக்கிளை இத்தோடு நாலாவது தடவையாக நிறுத்தி விட்டார். நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக நிறுத்தவாவது இடம் தேவை.

வெளிறிச் சுருங்கிய முகம் தலையில் உரப்பை, புழுதி அப்பிய கால்கள் எனக் காணப்பட்ட கனகலிங்கத்தாரின் மனைவி செல்லம்மா பூவரசின் அடிவேரில் தளர்ந்து அமர்ந்தாள்.

பின்னால் வந்து கொண்டிருந்த பலபேரிடமும் பல்வேறு சுமைகள். ஆடுகள், மாடுகள், நாய்கள் எனப் பலவற்றுடன் சேரத் தொடங்கினார்கள்.

இடம் பெயர்ந்து புறப்பட்டு பல கிலோமீற்றர் நடந்த பின்னர் இப்போதுதான் குண்டுச் சத்தங்கள் ஓய்ந்திருந்தன.

மனமும் உடலும் களைத்திருந்த கனகலிங்கத்தார் நிமிர்ந்து தியேட்டரைப் பார்த்தார். பல வருடங்களுக்கு முன்னர் இரண்டாவது காட்சி சினிமா பார்க்க நண்பர்களுடன் சைக்கிளில் வந்தது நினைவில் எழுந்து வந்தது.



□ □

''விடாக் கண்டன் கொடாக் கண்டன்'' தான் பெயர். சந்தேகமே இல்லாமல் தமிழ் சினிமாப் படம் தான். தெலுங்கில் இருந்து தமிழுக்கு 'டப்' செய்யப்பட்டது.

இந்தத் தியேட்டரில் தான் அதனை முதன் முதலாக திரையிட்டு இருந்தார்கள். யாழ்ப்பாணத்து நகரத் தியேட்டர்களில் அப்படம் திரையிடப்படாமல் கிராமத்திற்கு நேரடியாக வந்தது, அப்போது மிகப்பெரிய அதிசயமாக இருந்தது.

தியேட்டர் வாசலில் வாழை மரம் கட்டி கோயில் திருவிழாவுக்கு சோடிப்பது போல சோடனை.

தியேட்டர் வாசலின் அருகில், குளிக்கும் பெண் 'பெரிய சைஸ் போஸ்டரா'க விஸ்வரூபம் எடுத்திருந்தாள். ஏராளமான ரசிகர்கள் கிடைத்தற்கரிய பேறு பெற்றவர்களாக 'ரிக்கட்' எடுக்கப் பழி கிடந்தனர்.

மந்திரக் கோலும் மந்திரவாதியும் அவன் கட்டளைக்கு அடங்கும் பூதமும் அருகில் நனைந்து நனைந்து ஆடும் பெண்ணும் என அலங்கோலப்பட்ட அந்தப் படம் சில நாட்கள் சனங்களை அலக்கழித்தது.

மற்றப்படி எப்போதாவது தான் தியேட்டரில் சனங்கள் சேருவார்கள். எம். ஜி. ஆர் நடித்த படங்கள் என்றாலும் அல்லது இரண்டு நாட்கள் மட்டும் ஓடும் ஆங்கிலப் படங்கள் என்றாலும் ஒரு நூறாவது சதம் பெறுமதியில் விற்பனையாகும் கலரிப்பக்கந்தான் புகையடித்துக் கொண்டு நாற்பதோ ஐம்பது பேர் இருப்பார்கள்.

வெத்திலைக் குதப்பலும் சாதாரண துப்பலும் மூட்டைப் பூச்சி பொங்கிச்சரியும் வாங்குகளைச் சுற்றிப் பூமாலையாக இருக்கும்.

படம் முடிய மூட்டைப் பூச்சி பயோறிய தொடைகளை வலிக்கச் சொறிந்தபடி சனங்கள் போவார்கள்.

தியேட்டருக்குப் பக்கத்தில் ஒரு தேத்தண்ணிக் கடை. பக லில் அது முழுமையாக இருக் கும். புகைக்கரியா அழுக்கா எனக் கண்டு பிடிக்க முடியாத படி கறுத்துப்போன அந்தத் தட்டுக்களில் ஒரு சில பலகாரங் கள் மாத்திரம் வாசம் செய்யும்.

மாலையாக கடை ஒற் றைக் கதவுடன் தவமிருக்கும். படார் படார் என்று உள்ளே புகுவோர் வாயைத்துடைத்துக் கொண்டு வெளியே வருவார்கள்.

முதலாம் காட்சி சினிமா முடியும் நேரமாகிய இரவு 9-00 மணிக்குப் பின்னர்தான் ஒற் றைக் கதவுக் கடையில் வியா பாரம் கோயில் தேர்த்திருவிழா போல களைகட்டும்.

இரண்டாம் காட்சி பார்க்க 'தியேட்டர்' கலரியினுள் போவோர் ஒற்றைக் கதவுக் கடையின் துணை காரணமாக குபீர் குபீர் என வாந்தி எடுத்து உருண்டு நெளிந்ததும் உண்டு. அப்போதும் திரையில் தோன் றும் நாயகி பளீர் என்று சிரித் துக் கொண்டு நேரம் காலம் தெரியாமல் குளித்துக் கொண்டு இருப்பாள்.

இரண்டாம் காட்சி சினிமா பார்க்க பாதி சிவில் உடையி லும், பாதி யூனிபோமிலும் வரும் சிங்களப் பொலி சாரும் ஒற்றைக் கதவுக் கடைக் குப் போய்விட்டுத் தியேட்ட ருக்கு வருவார்கள். பின் தியேட் டரின் பின் வரிசையில் அமர்ந்து அவர்கள் படம் பார்ப்பார்கள்.

எப்போதாவது ஜீப்பில் வரும் 'பொலிஸ் இன்ஸ் பெக்டர்' கடைக்குப் போக மாட்டார் என்றாலும் அவரைத் தேடி 'அது' வரும்.

அப்போதெல்லாம் தேர்தல் காலத்துப்போட்டியாளர் போல கடை முதலாளி சந்தோஷப் படுவதைப் பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டும்.

தியேட்டரில் பிரேமரட்னா தான் மெசின் ஒப்பிரேட்டர். கன காலம் தமிழ்ப்பகுதிச் சீவி யம் என்பதால் கொஞ்சம் தமிழ் வரும். வெள்ளைச் சாரத்தைக் கொஞ்சம் உயத்திக்கட்டி, இடுப் பில் பெல்ட் சகிதம் அவனைப் பார்க்க சற்று முரட்டு ஆளாக இருப்பான்.

இரண்டாம் காட்சி படம் முடிந்து பின்னிரவில் அவன் படுக்கப் போனால் விறகு கட்டை மாதிரி அசையாமல் கிடப்பான். என்றாலும் காலை ஏழு மணிக்கு எழும்பி சுறுசுறுப் பாகி விடுவான்.

தியேட்டரின் திரைக்குப் பின்னால் இருண்டு போய் இருக் கும் பிரதேசத்தில் தான் அவன் பகல் வேளைகளில் இருப்பான்.

காலை பதினொரு மணி போல் தியேட்டருக்குள் நுழைந் தால் ஆள் நடமாட்டம் இருக் காது. மல்லாக்கச் சரிந்த பெரும் பூதமாக தியேட்டர் ஓய்வெடுக் கும்.

திரையின் பின் பக்கம் உள்ள கதவு மாத்திரம் திறந்திருக்கும். அதற்கூடாக தலை நீட்டினால் வியர்த்துப் போன முகத்துடன் பிரேமரட்னா சமைத்துக் கொண்டிருப்பான். அடுப்பில் ஏதாவது வெந்து கொண்டு அல் லது கருகிக் கொண்டு இருக்கும்.

அந்தச் சமையல் வேலைக ளில் வேறு ஒரு காரியமும் வெகுலாவகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். யாராவது மிக நுட்பமாக உற்றுப் பார்த் தால் அது தெரியும்.

ஒரு சிறு பாத்திரத்தில் ஈயம் உருக்கப்படும். ஒரு ரூபாய் அளவு அச்சுக்களில் அந்த ஈயம் வார்க்கப்படுவதும் தெரியும்.

ஒரு மாரிகாலத்துப் பகற் பொழுது இருண்டு கிடந்தது. கூதற் காற்றுடன் மழை இடை விடாது பெய்து கொண்டிருந் தது.

தியேட்டரில் இரு நீண்ட விறாந்தைகளும் மழைத் தண் ணீரில் மூழ்கிப் போயிருந்தன. திரையின் பின்பக்க கதவு திறந் திருக்கவில்லை.

வழக்கம் போல வியர்த்த முகத்துடன் தியேட்டரின் நடுக் கதவினைத் திறந்து கொண்டு பிரேமரட்னா சற்றுத் தயக்கத் துடன் வெளி வந்து சோம்பிப் போய் ஆட்கள் அற்றுக் கிடந்த தெருவைப் பார்த்தான்.

கூரை சுழன்ற குடையொன் றைப் பிடித்தபடி அந்தப் பெண் தியேட்டரைவிட்டு வெளி வந்து மழையில் நனைந்தபடி அந்த ஆட்களற்ற தெருவில் கரைந்து போனாள்.

முதல் நாள் இரவு படம் பார்க்க வந்தவர்களில் அவளும் ஒருத்தியாக இருக்கவேண்டும்.

□ □

அன்று சனிக்கிழமை பகல் 'மெட்னி ஷோ'வுக்காக மடித் துக் கட்டிய சாரங்களுடன் நாலைந்து பேர் 'தியேட்டர்' முன் விறாந்தையில் காத்தி

ருந்தனர். கீறல் விழுந்த 'றெக் கோட்' ஒன்றில் இருந்து சினி மாப்பாடலின் ஒரேவரிகள் திரும் பத்திரும்ப ஒலித்துக் கொண்டி ருந்தது.

மாடிப் படிகளால் விரைந்து இறங்கிய பிரேமரட்னா அந்தச் செய்தியை அறிவித்தான், தியேட்டரின் மெசின் ஒன்று பழு தாகி விட்டதாக.

'இன்று படக்காட்சி காண் பிக்கப்படமாட்டாது' என்ற விளம்பரப்பலகை தியேட்டரின் முன்புறம் கொழுவப்பட, தியேட்டர் ஆட்களைக் கண்ட படி பேசிக் கொண்டு படம் பார்க்க வந்தசனங்கள் கலைந்து போனார்கள்.

பிற்பகல் 3-00 மணிக்கு மாடியை விட்டு இறங்கி வந்த பிரேமரட்னா திரும்பி வரும் பொழுது மாலை ஆறுமணியாகி விட்டது.

தியேட்டர் வாசலில் விடுப் புப் பார்த்துக் கொண்டு நின்ற ஆட்கள்

''என்ன இண்டைக்குப் படம் ஓடுமா?'' என்று குசலம் விசா ரிக்கத் தொடங்கினர்.

''இல்லை'' என்றான் மொட்டையாக பிரேமரட்னா ''ஏன் மிசின் திருத்தேதல் லையோ.''

''நாளைக்கு வா – சொல் லுறன்'' பிறேமரட்னாபதில் சொல்ல.

''ஏன் இப்ப சொன்னா என்ன''

சூடாகத் தொடங்கிய உரையாடல் அடிதடிக்குக் கொண்டு வந்து விட்டது. அடித் திருந்த முக்காப் போத்தல் தந்த உற்சாகத்தினால் கையில் அகப் பட்ட இரும்புத்துண்டால் பிரே மரட்னா வலிமை கொள்ள இரண்டு பேருக்கு மண்டைகள் உடைந்து விட்டன.

விசாரணைக்கு வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிய சேனா சிரித்துக்கொண்டு பிரே மரட்னாவின் தோளில் தட்டி விட்டு போய் விட்டார்.

□ □

அசோகா மரங்களும் குறோட் டன்களும் இருந்த தியேட்டரின் முன் புறத்தில் கதலியும், இத ரையும் கப்பலும் என வாழை செம்மிப்போய் இருந்தது. 'சைக் கிள் பார்க்' இருந்த இடம் மர வள்ளித் தோட்டமாகி இருந்தது.

பெயின்ட் கழன்று நரை கவிந்த தியேட்டரில் முன் பக் கச் சுவரில் பீர்க்கங் கொடி பற் றிப் பிடித்திருந்தது. அதில் மஞ்சள் பூக்களும் பிஞ்சுகளும்.

தியேட்டரில் இடிந்து போன மதிற் கரையோரம் மாடுகள் அசை போட்டபடி ஒய்யார மாகப் படுத்திருந்தன. கோரைப் புல்லின் நுனிகளைத் தடவிப் பார்த்து விட்டு ஆட்டுக் குட்டி கள் தம் தாயின் முலைகளில் சந்தோஷத்துடன் பால் குடித் தன.

தியேட்டரின் மாடி அறை கள், ஒப்பிறேட்டர் அறை, ரிக் கெட்விற்கும் அறைகள் எல்லாம் ஆட்கள் குடியிருப்புக்களாகி விட் டன.

திரை கொலுவிருந்த அந்த மேடையில்கூட ஒரு குடும்பம். ஆட்களை விழுங்கும் தியேட்ட ரின் பெரிய ஹோல் சின்னச் சின்னத்தடுப்புகளுடன் இருப் பிடங்களாக மாறிவிட்டன.

கனகலிங்கம் வாழைக்குள் புல்லுப் புடுங்கிக்கொண்டிருந்தார் அவரைப் போலவே இடம் பெயர்ந்திருந்த வேறு சிலரும் வெவ்வேறு தோட்ட வேலை கள்.

முட்டை இட்ட கோழி ஒன்று அட்டகாசமாகச் சத்தம் போட்டுக் கொண்டு சிறகடித் தது. □□

> *ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல; அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது; ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி விடுகின்றது.*
>
> தமிழீழத் தேசியத் தலைவர்
> திரு. வே. பிரபாகரன் அவர்கள்

இழந்த வசந்தமும் எரிக்கும் கோடையும் இனிவரும் காலமும்

புதுவை இரத்தினதுரை



கூடுகலைந்து நாளான குருவி
மரம்; மாறிமாறி அலைவது போல
என் நாட்கள் எரிந்து போகின்றன.
இரவுக்கும் பகலுக்கும் பேதமற்று
இரண்டும் ஒன்றான இருப்பு.
ஓடிவரும் போது எடுத்துவந்தவையுடன்
ஒருவகை மட்டுப்படுத்திய வாழ்வு.
எண்ணைப் பொரியலுக்குத் தாச்சிஇல்லை
இடியப்பவரல் இல்லை
புட்டுக்குழலுக்குச் சில்லு இல்லை
உரப்பையிற் கொண்டுவந்த பட்டுச்சேலைகளுக்குச்
சட்டைகள் இல்லை
இல்லையே இல்லையென்ற வாழ்வு
இல்லாமற் போச்சு.
பிள்ளைகளுக்குக் கொஞ்சம் புரிகிறது
மனைவிக்குத்தான் கருகிய வாழ்வு
பொச்சம் தீராத புறுபுறுப்பு.
தம்பி பெஞ்சாதியின் தமையன் வீட்டில்
இரவில் பாய்விரிக்க எங்கு இடமிருந்தாலும்
அங்கு உடல் சரிப்பு
வீட்டுக்காரரின் தூக்கம் கலையுமென
இருமலைக்கூட உள்ளே புதைப்பு.
களவுக்கு வந்தவன்போல மனைவியுடன் கதைப்பு.
இணற்றுவாளி தட்டுப்பட்டாலே படபடப்பு.
ஒண்டுக்கிருத்தல்
குண்டிகழுவல்
ஒவ்வொன்றையும் பயந்தபடி ஒப்பேற்றல்
எம்மால் மற்றவருக்கேன் இடைஞ்சல்
வயதான காலத்து 'வாத்தி' நான்
அந்திமகாலத்தில் ஏனிந்த அவலம்.
ஊரொத்தகொள்ளைக்கு நானென்ன செய்யலாம்
ஊரில் பத்துப்பரப்புக் காணிக்குள்
அப்பு கட்டிய எட்டறை வீடு
சுண்டிப்பார்த்துப் பூசிய சுவர்
முட்டுப்படி நிலை



வில்லுக் இளாம்புக் கதவு
தேக்குமரத்தில் தீராந்தி.
சாமியறைக் கதவில் சந்தனக்குமிழ்
அடிவளவுக்குள் ஐம்பது தென்னை
ஊற்று நீர் தேவாமிர்தம்.
சுற்றுமதில்
முற்றத்தில் மல்லிகைப் பந்தல்
பத்துப் போத்தல் கறக்கும் பால்மாடு.
வெள்ளிக்கிழமை விடிந்தாற் போதும்
சொல்லி மாளாத சுகம்.
எல்லோரும் விரதம். ஏழெட்டுக் கறிசோறு
குறட்டையுடன் ஒரு குட்டித்தூக்கம்
கோயில் மணி கேட்கக் கும்பிட்டெழுதல்
காலாற ஒருதடவை கடைப்பக்கம் உலாத்தல்
''குளத்தடிப் பிள்ளையாரப்பா!''
கொழுக்கட்டை தின்னி!
எல்லாம் முடிஞ்சுதையா.
என்றழியும் இத்துயர்?
ஊர்திரும்பல் எப்போது?
விடிழந்ததுக்கே எனக்கு
இந்த வில்லங்கமெண்டால்...
நாடிழந்து போனது எந்தப்பெரிய இழப்பு.
நாடு எம்கைக்கு வரும் போதே
வீடு என்கையில் வரவேண்டும்.
அப்போதே சுகம்.
மற்றதெல்லாம் அரைச்சுகம்.

□□

சுவை, மணம், தரம், நிறைந்த சைவ உணவுகள்
சகல வகைப் பலகாரங்கள்
சுகந்த மணம் வீசும் வெற்றிலை பாக்கு

உங்கள் வாயூறத் தருபவர்கள்

மறக்க முடியாத பெயர்

பிள்ளையார் ஸ்டோர்ஸ்

சைவ உணவகம்

பலாலிசாலை, —— கோண்டாவில்.

அதிகாரத்தின் அநுபகரங்கள்

மிஷேல் பூக்கோ *(MICHEL FOUCAULT, 1926 - 1984)* ஒரு பிரஞ்சு அறிவுஜீவி. ஒரு புதுமையான சமூகச் சிந்தனையாளர். சமூக உலகத்தையும் மனித உறவுகளையும் ஒரு புதிய பரிமாணத்தில் வித்தியாசமாக நோக்கியவர். அறிவுலகங்களை அகழாய்வு செய்தவர். அவற்றின் ரிஷி மூலங்களைக் காட்டியவர். அதிகார உறவுகளின் சிலந்தி வலைக்குள் மனித வாழ்வு சிக்குண்டு கிடப்பதை மிகவும் நுட்பமாக எடுத்து விளக்கியவர். பிற்கால நவீனத்துவத்தின் *(POST - MODERNISM)* பிதாமகர் எனப் போற்றப்பட்டவர். அவரது எழுத்துக்கள் மேற்குலக சிந்தனைப் பாரம்பரியத்தில் என்றுமில்லாத புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

பிரம்மஞானி

தத்துவப் போதனாசிரியராக அறிவுலகத்தில் பிரவேசித்த பூக்கோ, ஆரம்பத்தில் மார்க்சிய சிந்தனையால் ஈர்க்கப்பட்டார்.

ஐம்பதுகளின் முற்பகுதியில், இரண்டாம் பெரும்போரின் இடிபாடுகளிலிருந்து விரக்தியுடன் வெளிவந்த ஐரோப்பிய இளம்பரம்பரை ஒரு புதிய யுகத்தை கனவுகண்டது. அநீதியும் வன்முறையும் ஒழிந்த ஒரு புதிய சமூக ஒழுங்கைத் தேடியது. அந்தத் தேடுதலில் ஈடுபட்ட இளம் அறிவுஜீவிகளுக்கு மார்க்சிய தரிசனம் புதிய வெளிச்சத்தைக் காட்டியது. மாற்று உலகத்திற்காக ஏங்கிய பூக்கோ மார்க்சியத்தை தழுவினார். பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தில் இணைந்துகொண்டார். இந்த ஈடுபாடு சொற்ப காலத்திற்கே நீடித்தது.

பிரஞ்சு கம்யூனிச இயக்கம் வைதீக மார்க்சீய கோட்பாடுகளை இறுக்கமாகப் பற்றி நின்றது. புதிய விசாரணைகளுக்கு இடைவெளி கொடுக்க மறுத்தது. புதிய பார்வைகளை ஏற்க மறுத்தது. எல்லா உறவுகளையும், எல்லாப் புறநிலைகளையும் விளக்கும் பொதுவுண்மையாக, எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் மெய்யுண்மையாக மார்க்சீயத்தை வழிபட்டது. இயற்கையினதும், வாழ்க்கையினதும், வரலாற்றினதும் மாற்றமுடியாத நியதிகளாக, விஞ்ஞான விதிகளாக, இயங்கியலை வரித்துக்கொண்டது. அந்த விதிகளின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தால், மனித வரலாறு ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எண்ணியது. இத்தகைய மரபுவாதத்தை, குருட்டுத்தனமான தத்துவ வழிபாட்டை பூக்கோவால் ஜீரணிக்க முடியவில்லை. 'மார்க்சியம் புதிதாக சுவாசிக்க விரும்பவில்லை. அது பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பழமையில் புதைந்து கிடக்கிறது.' எனக் கண்டித்தார் பூக்கோ. மூன்றாண்டு கால ஈடுபாட்டுடன் கம்யூனிச இயக்கத்திலிருந்து விலகிக் கொண்டார். மார்க்சிய தத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு அவர் முனையவில்லை. முற்றிலும் வித்தியாசமாக, புதிதாக அவர் சமூக உலகத்தை விசாரிக்கமுயன்றார்.

மேற்குலகத் தத்துவாசிரியர்களில் ஜேர்மானிய சிந்தனையாளரான நீச்சேயின் எழுத்துக்கள் பூக்கோவை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. நீச்சேயின் படைப்புகளில் ஒரு விசித்திரமான புதுமையை அவர் கண்டார். ஏனைய தத்துவாசிரியர்கள் போன்று, கருத்துலகக் கோட்டைகளை நீச்சே கட்டியெழுப்ப விழையவில்லை. பிரபஞ்சத்தின் இரகசியம் பற்றியும் மனித வாழ்வின் அர்த்தம் பற்றியும் தேடுதல்களை நடத்தவில்லை. கடவுளையோ மனிதனையோ மையப் புள்ளியாக வைத்து வாழ்விற்கு விளக்கம் அளிக்கவில்லை. நீச்சே, எல்லாவற்றையும் எள்ளி நகையாடினார். எல்லா

யாழ்ப்பாணம்

வற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சித்தார். எல்லா வற்றையும் நிராகரித்தார். அவரது எழுத்துக் கள் மேற்குலக மனிதனின் நீண்ட காலக் கனவு களைக் கலைத்தது. கிறீஸ்தவ நாகரீகத்தின் தார்மீகமுகமூடிகளைக் கிழித்துக்காட்டியது. நீச் சேயின் கண்டனத் திறனாய்வும் அவரது மரபு மூல *(GENEOLOGICAL)* விசாரணை முறைமை யும் பூக்கோவை வெகுவாகக் கவர்ந்தது. பொய் மைகளைப்போர்த்தியவாறு, மறைபொருளாகப் புதைந்து கிடக்கும் மெய்மைகளைக் கண்டு கொள்வதற்கு மூலங்களைத் தேடும் விசார ணையே சிறந்ததாக அவருக்குத் தோன்றியது. நீச்சேயின் வழிதழுவி, வேர்களைத் தோண்டும் தனது ஆய்வு முறைமையை 'அகழாய்வு' என வர்ணித்தார் பூக்கோ. தனது ஆய்வு முறைமை பற்றி எழுதிய நூலுக்கு 'அறிவின் அகழாய்வு' *(THE ARCHAEOLOGY OF KNOWLEDGE)* எனத் தலைப்பிட்டார். அறிவுலகங்களை 'அக ழாய்வு' செய்யும் நுட்பமான ஆய்வு முறை மையை அறிமுகப்படுத்தியதால் அவரை 'சிந்த னைப் பாரம்பரியங்களின் வரலாற்றாசிரியர்' என அழைப்பதுண்டு.

பூக்கோவின் பார்வையில் அறிவுலகங்கள் பலரகமானது. விஞ்ஞானம், மருத்துவம், பொரு ளியல், சமூகவியல், சட்டவியல், அரசியல் என்ற



மிஷேல் பூக்கோ
(MICHEL FOUCAULT)

ரீதியில் சிந்தனையுலகங்கள் பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுள் ளன. இவை ஒவ்வொன்றும் தனக்கே உரித் தான கட்டமைவு விதிகளையும், செயல்நெறி களையும் கொண்டவை. கருத்துருவங்களையும் கோட்பாடுகளையும் கொண்டவை. காலத்திற்கு ஏற்ப, சமூக பண்பாட்டு புறநிலைகளுக்கு ஏற்ப, சிந்தனையுலகங்கள் மாற்றங்களைச் சந்திக்கின் றன. இந்த மாற்றங்களாக கட்டவிழும் வர லாறு சிக்கலானது. காலச்சீர் அற்றது. முறிவு களையும் முரண்பாடுகளையும் கொண்டது. இந்த அறிவுலகங்கள் தனியுலகமாக சமூக வாழ் விற்கு புறம்பாக இயங்கவில்லை. அவை சமூக உலகத்தை ஊடுருவி நிற்கின்றன. சமூக நிறு வனத் தளங்களிலிருந்து செயற்படுகின்றன. சமூக உறவுகளோடு பின்னிப்பிணைந்து கிடக் கின்றன. இந்தச் சிந்தனை உலகங்களின் உரு வாக்கம், அவற்றின் கட்டமைவு, அவற்றின் செயல்நெறிகள், அவற்றின் நிறுவனமயமாக்கல், அவற்றின் சமூக உறவுநிலைகள், அவற்றின் மாற்றம் வளர்ச்சி பற்றிய வரலாறு ஆகிய பன் முக விசாரணைகளைக் கொண்டதாக பூக்கோ வின் 'அகழாய்வு' அமைகிறது. இந்தச் சிக்க லான ஆய்வு முறைமை பற்றியோ அதன் சாதக பாதக அம்சங்கள் பற்றியோ எடுத்து விளக்கு வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பூக்கோ வின் ஆய்வு புலப்படுத்திக்காட்டும் சில சமூக உண்மைகள் பற்றியே நாம் இங்கு விளக்கிக்கூற விரும்புகிறோம்.

அறிவுலகத்தை சமூக வாழ்வியக்கத்தின் ஆழத்தில் அலசிப் பார்த்த பூக்கோவுக்கு ஒரு விசித்திரமான உண்மை புலப்பட்டது. அறிவுல கமானது தனியுலகமாக நின்று, மனித விமோச னத்திற்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகத்துடன் கைகோர்த்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை அவர் கண்டு கொண் டார்.

தற்கால சமூக உலகம் ஒரு விபரீதமான வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. சாதாரண மனித உறவுகள் அசாதாரண அதிகார உறவுக ளாகமாறி வருகிறது. அதிகாரமானது சமூக வாழ் வின் சகல மட்டங்களிலும் ஊடுருவி நிற்கிறது. சகல சமூக அமைப்புகளிலும், சகல சமூக உறவு களிலும் மையம் கொண்டிருக்கிறது. அதிகாரத் தின் இந்த மேலாதிக்கத்திற்கு அறிவு துணை போகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றோடு ஒன்று கூட்டுச்சேர்ந்து, ஒன்றுக்கொன்று முண்டு

கொடுத்துச் செயற்படுகிறது. இந்த எதிர்மறையான கூட்டுறவு ஆதிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து, மிகவும்நுட்பமான முறையில், புலன்களுக்கு புலப்படாத வகையில், மனித உறவுகளை நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, கட்டுப்படுத்தி, மனித வாழ்வுமீது என்றுமில்லாத ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. அறிவும் அதிகாரமும் கூட்டாகப் பின்னிவிட்ட ஆதிக்க வலைக்குள் தற்கால மனிதன் மீளமுடியாதவாறு சிக்குப்பட்டுக் கிடக்கிறான் என்ற மையக் கருத்தையே பூக்கோவின் ஆய்வுகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

அதிகாரம் பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் அது மையம் கொள்ளும் நிறுவனங்கள் பற்றியும் காலம் காலமாக நம்பப்பட்டு வந்த கருத்துகளை பூக்கோவின் விசாரணைகள் தகர்த்து விட முனைகின்றன.

அதிகாரமானது சமூகப் படிநிலையின் சிகரத்தின்மீது குவிந்துகிடக்கவில்லை. அல்லது அரசின் நிர்வாகச் சிம்மாசனத்திலிருந்து ஆட்சி புரியவில்லை. அன்றி, அது ஆளும் வர்க்கத்தின் அசையாச் சொத்துமல்ல. அதிகாரமானது எந்த வொரு மையத்திலிருந்தும் பிரவாகம் எடுக்க வில்லை. அது எங்கும், எல்லா இடங்களிலும் வியாபித்து நிற்கிறது. எங்கெங்கெல்லாம் மனிதர்கள் உறவுகொண்டு, கூட்டாக, குழுவாக, அமைப்பாக இயங்குகிறார்களோ, அங்கங்கெல்லாம் அதிகார உறவுகள் இருக்கத்தான் செய்கிறது. அதிகாரம் மையம் கொள்ளும் நுண்தளங்கள் *(MICRO - CENTERS OF POWER)* பல ரகமானவை. அது குடும்பத்திலும் இருக்கிறது. கோவில் நிர்வாகத்திலும் இருக்கிறது. அதிகாரம் என்பது அரசியலுக்குச் சொந்தமான தல்ல. அதன் வீச்சு பரந்தது. அது சிறிய அளவிலும் பெரிய அளவிலும் எல்லா சமூக நிறுவனங்களிலும் பரந்து செறிந்து கிடக்கிறது என்கிறார் பூக்கோ.

தற்கால சமூக வாழ்வில் அதிகாரம் எவ்வாறு மேலாண்மை செலுத்துகிறது? அது எவ்விதம் செயற்படுத்தப்படுகிறது? அதிகாரத்தை வலுப்படுத்தி, நிலைப்படுத்தி, செயற்படுத்துவதில் அறிவுலகங்களும் அவை சார்ந்த நிறுவனங்களும் எவ்வாறு துணைபோகின்றன? இந்தக் கேள்விகளுக்கு விடைகாணும் வகையில், குற்றவியல், பாலியல், மனநோயியல், போன்ற துறைகளில் ஆழமான அகழாய்வை நிகழ்த்தி பல உண்மைகளைத் தோண்டி எடுத்திருக்கிறார் பூக்கோ. இந்த 'அகழாய்வு' சமூகத்தின் அடித்தளத்திற்கும் அடியிலுள்ள பாதாளஉலகத்திற்கு அவரை இட்டுச் சென்றது. அங்கு வசித்த 'மனிதபேய்களின்' இருண்மையான வாழ்க்கை அனுபவம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. கொலைகாரர்கள், குற்றவாளிகள், பைத்தியக்காரர்கள், காமுகர்கள் என்ற முத்திரைகள் குத்தி, இவர்களை வேண்டாதோராக, தீண்டாதோராக சமூகம் விலக்கி வைத்திருந்தது; ஒதுக்கி வைத்திருந்தது. இவர்கள் சமூகம் வரித்து விட்ட ஒழுக்க நெறிக்குள் வாழ மறுத்தவர்கள். சமூகத்தின் கட்டுப்பாடுகளை மீறியவர்கள். சமூகம் எண்ணியபடி சிந்திக்க மறுத்தவர்கள். சமூகத்தின் நியமங்களை நிராகரித்தவர்கள். இந்த அந்நியமானவர்களின் அனுபவக் கிடங்கிற்குள் இருப்பின் உண்மைகள் பல ஒளிந்து கிடந்தன. இந்த அனுபவக் கிடங்குகளை அகழாய்வு செய்தார் பூக்கோ.

நூலக நிலவறைகளின் இருளுக்குள் நீண்ட காலமாக மறைந்திருந்த பழைய குற்றவியல் ஆவணைங்களைத் தோண்டிப்பார்த்த பொழுது அந்தக் கொலைச் சம்பவத்தை பூக்கோ கண்டு பிடித்தார். 1835ல் நோர்மண்டியிலுள்ள ஒரு கிராமத்தில் அந்தக் குடும்பக் கொலை நிகழ்ந்தது. பியர் ரிவியே *(PIERRE RIVIERE)* என்ற 20 வயது நிரம்பிய ஒரு இளம் விவசாயி, கர்ப்பிணியான தனது தாயாரையும், 18 வயதுடைய தனது சகோதரியையும். 17 வயதுடைய தனது சகோதரனையும் கொலை செய்தான். கைக்கோடாரி ஒன்றால் மண்டைகளைப் பிளந்து மிகக் கோரமான முறையில் இந்தக் கொலைகளைப் புரிந்துவிட்டு தலைமறைவாகிய அவனை, சில நாட்களின் பின்னர் காவற்துறையினர் கைது செய்தனர். அன்று, பிரான்ஸ் நாட்டில் இந்தக் கொலைச் சம்பவம் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. நீதிமன்றத்தில் நீண்ட விசாரணை நடந்தது. அவனைப் பைத்தியக்காரனாக நீதிமன்றம் கண்டது. இறுதியில், பியர் ரிவியேக்கு ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் நான்கு ஆண்டுகளைக் கழித்த பின்னர் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

இந்தக் கொலை வழக்கில் ஒரு விடயம் பூக்கோவின் கவனத்தை ஈர்ந்தது. கொலையாளியான பியர் ரிவியே, வழக்கு விசாரணை நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், தனது சுயசரிதையை சுருக்கமாக எழுதியிருந்தான். கையெழுத்தில், நாற்பது பக்கங்களைக் கொண்ட

இந்த ஆவணத்தில், ரிவியே தனது குடும்ப வாழ்வனுபவத்தை துல்லியமாக விபரித்திருக்கிறான். தனக்கும் தனது பெற்றோருக்கும் மத்தியிலான சிக்கலான உறவுபற்றியும், தனது மனவுலகச் சலனங்கள் பற்றியும், தாய் சகோதரர்கள் மீது தான் கொண்டிருந்த வக்கிர உணர்வுகள் பற்றியும், கொலைகளைச் செய்வதற்கு தன்னைத் தூண்டிய காரணிகள் பற்றியும் மிகவும் துலக்கமாக, விளக்கமாக, சித்தத் தெளிவுடன் அவன் எழுதியிருக்கிறான். உண்மை விளக்கமாக, ஒப்புதல் வாக்குமூலமாக அமைந்த இந்த முக்கிய ஆவணம் வழக்கு விசாரணையின்போது இருட்டடிப்புச் செய்யப்பட்டமை பூக்கோவுக்கு வியப்பைக் கொடுத்தது. ரிவியேயின் சொந்தக் கதை கேட்பார் எவருமின்றி சட்டத்தின் இருட்டறையில் புதைக்கப்பட்டது ஏன்? அவனது விபரீத செயலுக்கு அவன் கொடுத்த விளக்கத்தை நீதியுலகம் கருத்தில் எடுக்காது ஏன்? அவனது ஆன்மாவின் உண்மைக் குரலை மறைத்து விட்டு, மற்றவர்களின் மதிப்பாய்விலிருந்து அவனுக்குப் பைத்தியப் பட்டம் வழங்கப்பட்டது ஏன்? இவை பற்றி 'அகழாய்வு' செய்த பூக்கோ இந்த சமூக நிகழ்வின் முழுப் பரிமாணத்தையும் விளக்கும் நோக்கில் 1973ம் ஆண்டு ஒரு சிறு நூலை வெளியிட்டார். இவ் வழக்கு தொடர்பான முக்கிய ஆவணங்களை இந்நூல் தொகுத்துத் தருகிறது இத் தொகுப்பில், அரச தரப்பு வழக்கறிஞரின் குற்றப்பத்திரிகை, சட்டவாளரின் வாதங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், மருத்துவரின் மதிப்பாய்வுகள் மனவியல் நிபுணரின் கருத்துரைகள், நீதிபதியின் குறிப்புகள், பத்திரிகைகளின் செய்தி அறிக்கைகள் எனப் பல ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலின் முதற்பகுதியில் பியர் ரிவியேயின் சுயசரிதை, அவன் எழுதியபடியே திருத்தமின்றிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நூலின் பிற்பகுதி பூக்கோவினதும் வேறு சிலரதும் கருத்துரைகள் கொண்டதாக அமைகிறது.

நீதிமன்ற தீர்ப்பு பற்றியோ, குற்றவாளியின் குற்றச்செயல்பற்றியோ, இந்த நூலில் எவ்வித விமர்சனங்களோ வியாக்கியானங்களோ தரப்படவில்லை. அதுதமது நோக்கமில்லை என்கிறார் பூக்கோ. ஒரு சம்பவத்தை, ஒரு சமூக நிகழ்வை, ஒரு மனிதன் புரிந்த ஒரு குரூரச் செயலை, அந்தச் செயலோடு சம்பந்தப்படாத மற்றவர்கள், பல்வேறுதுறைசார்ந்த நிபுணர்கள், அறிஞர்கள், அதிகாரிகள் எவ்வாறு அணுகுகிறார்கள், எவ்வாறு பார்க்கிறார்கள், எவ்வாறு மதிப்பாய்வு செய்கிறார்கள் என்பதை இந்நூல் சூசகமாகச் சுட்டிக்காட்ட விழைகிறது. இந்த நிகழ்

வெளிச்சத்தை வாழ்த்துகின்றோம்

யாழ் நகரில் சிறந்த உணவகம்

மாருதி

மரக்கறி உணவகம்

(விஷ்ணு விஹார்)

163, மின்சார நிலைய வீதி,

(லெப்.கேணல் இராசன் தெரு)

யாழ்ப்பாணம்.

வில் பல்வேறு அறிவுலகங்கள் சங்கமிக்கின்றன. சட்டம், மருத்துவம், மனவியல், மனநோயியல், குற்றவியல் போன்ற பல்வேறு அறிவுலகங்களின் கருத்தாடல் களமாக இந்த நிகழ்வு அமைகிறது. இந்த அறிவுலகக் கருத்தாடலில் இச் செயலுக்குப் பொறுப்பாளியான, இந்நிகழ்வின் கதாநாயகனான பியர் ரிவியேயின் கருத்தை எவருமே கருத்தில் எடுக்கவில்லை அவனது கருத்தை கருத்தாகவும் கருதவில்லை. அவனது செயலை வைத்தே அவனை ஒரு பித்தனாக, சித்தக் கோளாறு பிடித்தவனாக அறிவுலகங்கள் தீர்மானித்துவிடுகின்றன. ஆனால் ரிவியே மௌனியாக நிற்கவில்லை. சாவின் விளிம்பில் நின்றபடி அவன் தனது சரித்திரத்தை எழுதியிருக்கிறான். தனது எண்ணங்களை எழுத்தில் வார்த்து, தனது செயலுக்கு காரணம் கற்பித்திருக்கிறான் அந்த சுயசரிதையில் தனது தாயை ஒரு கொடியவளாக சித்திரித்திருக்கிறான். நல்ல மனிதரான தனது தந்தையை முழுக் குடும்பமாகச் சேர்ந்து வதைத்து வந்ததாக சொல்லியிருக்கிறான். ''நான் எனது தந்தையை மிகவும் ஆழமாக நேசித்தேன். அவர் அனுபவித்த துன்பம் எனது மனதைப் புண்படுத்தியது. கடைசி நாட்களில் அவர் பட்ட துயரமும் சோதனையும் என்னை ஆழமாகப் பாதித்தது. இதுபற்றிய எண்ணங்களே என்னை முழுமையாக ஆட்கொண்டது. ஒரு மாதத்திற்கு முன்னரே அந்தப் பயங்கரத் திட்டம்பற்றி நான் எனது மனதில் ஒரு படத்தை வரைந்துகொண்டேன். எனது தாய், சகோதரன், சகோதரிமீது

நான் அன்பும் மதிப்பும் கொள்ளவேண்டும் எனக் கூறும் அறப் பண்புகள் எனது மனதிலிருந்து மறைந்துகொண்டன. விசர் நாய்களின், கொடிய விலங்குகளின் அதிகாரப் பிடிக்குள் சிக்கி அவலப்பட்டுவரும் எனது தந்தைக்காக ஆயுதம் ஏந்தவேண்டும் என நான் நினைத்தேன். இப்படியான கொடும் செயலை மதமானது தடைசெய்திருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் மதத்தின் நெறிகளை நான் கருத்தில் எடுக்கவில்லை. என்மூலமாகத் தனது தெய்வீக நீதியை நிறைவுசெய்ய இறைவன் விதித்திருக்கலாம் என்றுகூட எண்ணினேன். மனிதர்களின் தர்மம்பற்றியும் சமூக ஒழுங்கமைப்பின் விதிகள் பற்றியும் நான் அறிவேன். மனிதர்கள் மானம்கெட்டவர்கள்; இழிசனர்கள். இவர்களைவிட நான் புத்திசாலி..... நான் மனித சட்டங்களை மறுதலிக்கத் துணிந்தேன். எனது தந்தைக்காக எனது உயிரை அர்ப்பணிப்பதில் நான் அழியாப் புகழையும் இறவா நிலையையும் அடையலாமென நினைத்தேன்..... ஒரு அரசனுக்காக, ஒரு நாட்டிற்காக எத்தனையோ போர்வீரர்கள் மடிந்துபோகிறார்கள்..... மன்னனைத் தெரியாதவர்கள் மன்னனின் இலட்சியத்திற்காக மடியும்பொழுது, நான் நேசித்து வழிபடும் என் தந்தைக்காக, என் தந்தையின் விடிவிற்காக எனது உயிரை மாய்த்துக்கொள்ளக் கூடாதா?... இப்படியான எண்ணங்கள் என் மனத் திரையில் ஓடி, எனது செயலுக்கு தூபமிட்டன.....'' என்று எழுதியிருக்கிறான் ரிவியே.

இது ஒரு பைத்தியக்காரனின் அர்த்தமற்ற பிதற்றலல்ல என்கிறார் பூக்கோ. ரிவியேயின் எழுத்துக்களில் ஒரு தர்க்கீகம் இழையோடுகிறது. காரண காரியத் தொடர்புடையதான ஒரு உள்நோக்கம் இருக்கிறது. அவனது எழுத்துக்களில் ஒரு விபரீதமான ஆசை புதைந்து கிடக்கிறது. அந்த விபரீத ஆசைக்கும், எழுத்துக்கும், செயலுக்கும் மத்தியில் பிரிக்கமுடியாத ஒரு தொடர்பு இருக்கிறது. இவற்றிற் கெல்லாம் கதாநாயகன் அவனேதான். அந்தக் கதாநாயகனின் குரலை, தனது செயலுக்கு அவன் கற்பிக்கும் தர்க்கீகத்தை, சமூக உலகமானது கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் பூக்கோ. சமூகத்திற்கு ஒரு தர்க்கீகம் இருக்கிறது. நியாயப்பாடு இருக்கிறது. நியமம் இருக்கிறது. அந்தத் தர்க்கீகத்திற்கும் நெறிகளுக்கும் பொருந்தாத குரல்களை, பைத்திய உலகத்தின் இருளறைக்குள் மூடிவிடுகிறது சமூகம். அப்படியான ஒரு மனித குரலையே வரலாற்றின் புதைகுழியிலிருந்து மீட்டெடுக்க முனைந்திருக்கிறார் பூக்கோ.

வழக்காடல் என்ற சமூக நிகழ்வில் சொல்லாடல்கள் நிகழ்கிறது. அறிவுலக நிபுணர்களின் கருத்துப்போர் நிகழ்கிறது. அறிவுலகங்கள் ஒன்றோடு ஒன்று பலப்பரீட்சை நடத்தி, அதிகார உலகத்திற்கு சேவையாற்றும் ஒரு விந்தையானநிகழ்வே இங்கு இடம்பெறுகிறது. நீதி தேவன் குடியிருக்கும் கோவிலல்ல, நீதிமன்றம். அதுஅதிகாரம் கோலோச்சும் நிறுவனம். இங்கு அறிவுலக நிபுணத்துவம் அதிகாரத்தை நியாயப்படுத்தி. அதிகாரத்தின் கரங்களை வலுப்படுத்த முனைகிறது. அறிவும் அதிகாரமும் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றும் ஒரு சமூக நாடகமாகவே பியர் ரிவியேயின் கொலை வழக்கை சித்திரிக்கிறார் பூக்கோ. இது கதாநாயகனின்கருத்தாடல் நிகழாத ஊமை நாடகம் என்பது அவரது கருத்து.

நீதிமுறைபற்றியும் குற்றவியல்பற்றியும் தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திய பூக்கோ, 1975-ல் ஒழுங்கும் தண்டனையும்: சிறையின் பிறப்பு *(DISCIPLINE AND PUNISH, THE BIRTH OF THE PRISON)* என்ற நூலை வெளியிட்டார். ஆரம்பத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த ஆய்வுநூல், ஈற்றில் பூக்கோவுக்கு அனைத்துலகப் புகழை ஈட்டிக்கொடுத்தது.

தண்டனையின் சகல பரிமாணங்களையும் இந்த நூல் அகழாய்வு செய்கிறது. தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் ஒரு உத்தி. சமூகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை. தண்டனையானது எல்லாக்காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் இருந்துவருகிறது. அன்றொரு காலம் உடலை வதைக்கும் உத்தியாக கையாளப்பட்ட இந்த நடைமுறை, இன்று 'ஆன்மாவை' சீர்திருத்தும் ஒழுங்குமுறைகளைக் கொண்டதாக புதிய பரிணாமம் எடுத்திருக்கிறது. இன்று தண்டனையின் முகம் மாறியிருக்கிறது. தண்டிக்கும் உத்திகள் மாறியிருக்கின்றன. தண்டனை என்ற போர்வையில், அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில் மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி சமூகப் பொம்மைகளாக மாற்றிவருகிறது. அதிகாரத்தின் இந்தச் செயல் நுட்ப வளர்ச்சிக்கு அறிவுலகங்கள் துணைபோகின்றன. இந்த மையக் கருத்தையே இந்நூல் மிகவும் திறம்பட எடுத்து விளக்குகிறது. இது பற்றி இனி விபரமாகப் பார்ப்போம்.

(தொடரும்)

நேற்றைய சம்பவமும் இன்றைய ஞாபகமும்

□ வவுனியா திலீபன் □



அன்றைய துயர் படிந்த சம்பவம்
நிகழ்ந்திரா விடில்
நீ என்ன செய்து கொண்டிருப்பாய்?

ஈர்க்குச்சி சீவி
பட்டம் கட்டிக் கொண்டிருப்பாயா?
அல்லது-
விட்ட பட்டம்
சிக்குண்ட மரத்தில்
அம்மாவுக்குத் தெரியாமல்
ஏறிக் கொண்டிருப்பாயா?

வகுப்பில் ரீச்சர் தந்த
வீட்டுப் பாடத்தில்
கண்களையும் மனதையும்
ஆணியடித்து வைத்திருப்பாயா?

அல்லது-
அக்கா பொருளுக்கு தந்த
மீதிப் பணத்தில்
ஐஸ்கிறீம் அருந்திக் கொண்டிருப்பாயா?

இப் போழ்தில்
உன் மனம்
எதையெதைச் சிந்திக்கும்?
உன் விழி
எதையெதைப் பார்க்கும்?

செய்தி சேகரிக்கும்
ஆர்வத்தில்-
'சென் பீட்ட'ரின் பின் பக்கம்
நான் சென்ற போது-
நீ கிடந்தாய்-

கடந்த இரவு
கண் விழித்து
சோதனைக்கு படித்தவன் மாதிரி
நீ படுத்திருந்தாய்!
குறும்புத் தன விளையாட்டால்
அப்பாவிடம் திட்டு வாங்கி-
சிந்தை நொந்தவன் போல
நீ அயர்ந்து கிடந்தாய்!

நெருங்கிப் பார்வையால்
துளாவிய போதுதான்
நீ பிளந்து கிடப்பது தெரிந்தது.
இப் பூமிப் பரப்பெங்கும்
பூஞ்சோலையாய் பரவக் கூடியவன் நீ.
ஒரு பூகம்ப வடிவமாய்
புஷ்பிக்கக் கூடியவன் நீ!
ஒரு கண் அசைப்பால்
ஒரு கை வீச்சால்
இல செய்தி சொல்லக் கூடியவன் நீ

நசிந்து போன உன் முகம்
சிரித்த மாதிரிக் கிடந்த உன் உதடு
குருதி பரவிக் கிடந்த உன் நெஞ்சு
எனக்குள் முளைத்து வளர்ந்து
என்னைச் சிதைக்கின்றன.
நாளடைவில்
இவையே என்னைச் செதுக்கலாம்!

அன்றைய துயர் படிந்த சம்பவம்
நிகழ்ந்திரா விடில்
நீ என்ன செய்து கொண்டிருப்பாய்?

□□

அச்சுத் துறையின்
முன்னோடிகள்

சகலவகையான
அழைப்பிதழ்கள்
துண்டுப்பிரசுரங்கள்

நூல்கள்
சஞ்சிகைகள்

அழகான அச்சமைப்பில்
செய்து தருபவர்கள்

சாந்தி அச்சகம்

575, காங்கேசன்துறை வீதி,
(நாச்சிமார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

பிரகாஸ்!

மோட்டார் சைக்கிள்
ஆட்டோ
மோட்டார் வண்டி
உதிரிப்பாகங்கள்
வாங்க எங்கும் அலையாதீர்கள்

நேரே வாருங்கள்
கஸ்தூரியார் வீதிக்கு

பிரமித்து விடுவீர்கள்

பிரகாஸ்

பல்பொருள் வாணிபம்

இல. 155, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.



நாடக மதிப்பீடு

தீசுமந்தோர்

திரு. ஜெயசங்கரின் நெறியாள்கையிலும்
யாழ். பல்கலைக்கழக சமூக
விஞ்ஞான மன்றத்தின் தயாரிப்பிலும்
உருவான ''தீ சுமந்தோர்'' நாடகத்தினை
அது 17 வது தடவையாக சுண்டுக்குளி
மகளிர் கல்லூரியில் மேடையேறிய போது
பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது.
தமிழீழ மக்களின் தமிழீழப் போராட்டத்தின்
குறிப்பிட்ட காலப்பகுதியை பதிவு செய்யும்
ஒரு கலைப்படைப்பாக பரவலாக இந்த நாடகம்
பேசப்பட்டு வருகின்றது.
உண்மையில் இதுவரை யாரும்
பதிவு செய்யாத போராட்ட காலப் பதிவினை
இந்த நாடகம் செய்துள்ளது.
அத்துடன்
சாதாரண மக்களும் உள்வாங்கிக்
கொள்ளக் கூடிய வடிவத்தில் இந்த நாடக
அரங்கு அமைந்திருப்பது
பாராட்டுக்குரிய விடயமே.
தமிழீழப் போராட்டம் உறுதி மிக்க
தலைமையின் கீழ் தீவிர முனைப்புப் பெற்றுள்ள
இந்தக் காலகட்டத்தில் போராட்டத்தினையும்
போராட்டத்தில்பங்காளிகளான
மக்களையும் அவர்களின் வாழ்வனுபவங்களையும்
புறந்தள்ளிவிட்டு கனவுலகப் படைப்புக்களை
அல்லது நழுவல் பாணிப்படைப்புக்களை
யாராலும் படைக்க முடியாது.
அதற்காக ஒரு இரு சொற்களை அல்லது
வசனங்களை புகையடித்தாற் போல
படைப்புகளுக்குள் பரவிவிட்டு விட்டு
போராட்டத்தினை, போராட்ட கால
அனுபவங்களை படைப்புகளாகப்
படைக்கின்றோம் எனவும் சொல்ல முடியாது.
இது நாடகத்திற்கு மாத்திரம் அல்ல;
சகல கலை இலக்கிய வடிவங்களுக்கும்
பொருந்தும்.
கூட்டுழைப்பின் மொத்த வடிவமான
நாடகத்தின் முலம் இத்தகைய
சகல விடயங்களையும் கொண்டு
வருவது என்பது இலகுவான காரியம் அல்ல.
ஆனால் ''தீ சுமந்தோர்'' இதனைச்
செய்துள்ளது.
எனினும் இந்த நாடகத்தினை பார்த்துக்
கொண்டு இருக்கும் போதும், பார்த்து முடிந்த
பின்னரும் மனங்களில் தொங்கி நிற்கும்
கேள்விகளும் இல்லாமல் இல்லை.
இரண்டரை மணித்தியாலத்திற்கும் மேலாக
யாழ்நகர எரிப்பில் இருந்து
இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் மீண்டும்
திரும்பிச் செல்லும்வரையுமான
காலப்பரப்பினை விபரிக்கும் நாடகத்தின்
ஊடாக வெளிப்படுத்தப்படும் விடயம் தான்.
என்ன?
செல்லம்மாவின் பகிடிகளாலும் குடும்பத்தின்
இளைய மகனின் குறும்புத்தனங்களாலும்
நாடக ஆர்வலர்களை சிரிக்க வைப்பது தான்
நாடகத்தின் இலக்கா?
ஏனெனில் ஊர்ப் பகிடிகளாக செல்லம்மா
சொல்லும் வசனங்களாலும் சிறுவனின்
குறும்புத் தனங்களாலும் நாடகத்தின்
உணர்வோட்டம் அந்நியப்பட்டுப் போகின்றது.
சிறுவனின் சேட்டைகள் காரணமாக அவன்
சோகவயப்பட்டு நிற்கும்போது கூட
பார்வையாளர்கள் சிரிக்கின்றனர்–
அவ்வாறே மதியர் தோன்றும் ஆரம்பத்தில்
இருந்ததைவிட பின்னர் அவர்
தோன்றும் போது பார்வையாளர்கள்
மத்தியில் சிரிப்புத்தான்.
இதன் காரணமாக நாடகம்
ஏற்படுத்த வேண்டிய கனதியான தாக்கத்திற்கு
பதிலாக மிஞ்சுவது வெறுமைதான்.
இது நாடக நெறியாளர் எதிர்பாராத
ஒரு முடிவாகத்தான் இருக்கும்.
நீண்டதொரு காலப்பகுதியை மையமாகக்
கொண்டு நாடகமாக்கும் போது குறிப்பிட்ட
காலத்தில் நிகழ்ந்த தாக்கமானதும்,
மக்கள் மனங்களில் ஆழப்பதிந்ததும் வாழ்க்கையில்
பிடிப்பை ஏற்படுத்தியதும்,
விடுதலைப் போராட்டத்திற்கு உந்துசக்தியாக
அமைந்ததுமான நிகழ்வுகளை
நாடக பிரதியூடாகவோ, நாடகப் பாத்திரங்களின்
வெளிப்பாட்டின் மூலமாகவோ வெளிக்
கொண்டு வரவேண்டும்.
ஆனால் இவை இந்த நாடகத்தில்
முழுமையாகவும் செப்பமாகவும்

செய்யப்படவில்லை.
அரங்கின் ஒரு புறத்தே இருந்து மறுபுறம்
புதினம் சொல்வதாக மாறி, மாறி
செல்லம்மாவும், கனகரும் சம்பவங்களைச்
சொல்லிச் செல்வதுடன் அவை நிறைவு
பெற்று விடுகின்றன.
இதன் காரணமாகத்தான் போலும்
நாடக பாத்திரங்களில் எந்த விதமான
வளர்ச்சியும் இல்லாமல் ஒருவரையறைக்குள்
நின்று அவை ஒரே மாதிரியாக
இயங்குகின்றன.
நாடகப் பாத்திரங்களின் உரையாடல்கள் கூட
பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்றதாக
செம்மையாக அமையவில்லை.
நாடகத்தின் முடிவுகூட தெளிவாக அமையாது
காணப்படுகிறது.
இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை
எமது தாயக மண்ணில் இருந்து வெளியேற்ற
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்
தீரத்துடன் போரிட்டதும் பல
பாடங்களை இந்திய ஆக்கிரமிப்பு
இராணுவத்திற்கு படிப்பித்ததும் காலத்தால்
மறக்க முடியாத உண்மை.
ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தை
அழித்தும், பல்லாயிரக்கணக்கானோரை
காயப்படுத்தியதுமான அந்தப் போராட்டம்
ஒரு வரலாற்று சிறப்பு மிக்க விடயம்.
இவ்வாறாக இந்திய இராணுவம்
இந்த மண்ணை விட்டு ஓடியது ஸ்ரீலங்காவின்
அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவின்
கோரிக்கையினால் தான் என்ற கருத்து
வருமாப்போல நாடகத்தின் இறுதியில்
காட்டப்படுகிறது.
இந்திய இராணுவத்திற்கு எதிரான
புலிகளின் போராட்டமே அவர்களை வெளியேற
வைத்தது என்பது நாடகத்தில்
வெளிக்காட்டப்படவில்லை.
பிரேமதாசாவின் கட்டளைப்படி இந்திய
ஆக்கிரமிப்பு இராணுவம் நகர அதன் பின்னே
மெதுவாக புலிகளும் நகர்வது போலக்
காட்டுவது இந்திய இராணுவம் வெளியேறும்
இடைவெளியை புலிகள் நிரப்புவது போல
உள்ளது.
நாடகத்தினை வரன் முறையாக
கற்று தம் திறமைகள் மூலம் அதற்கு
மெருகூட்டி வரும் ஜெயசங்கர் போன்ற
நெறியாளரின் உழைப்பு வீணாகக் கூடாது.
என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

□□

வீடியோப்பட மதிப்பீடு

முகங்கள்

தமிழ்த்தின் திரைப்படம் என்பது
கலை சார்ந்தது மட்டுமல்ல உண்மைகளின்
வெளிப்பாடும் ஆகும்.
அபத்தங்களை நீராகரிப்பதும் ஆகும்.
உயர்கலையை புத்தாக்கம் செய்வதுமாகும்.
எல்லாவற்றுக்கும் மேலாக 'தமிழில்
திரைப்படக் கலையை'
புனர்நிர்மாணம் செய்வதும் ஆகும்.
இந்தப் பின்னணிகளிலேயே 'முகங்கள்'
என்னுள் பார்வை கொள்கின்றன.
ஏற்கனவே 'காற்றுவெளி .....' என்ற
திரைப்படத்தை வழங்கிய 'ஞானரதன்'
முகங்கள் படத்தின் கதை, உரையாடல்,
நெறியாள்கை ஆகியவற்றை செய்துள்ளார்.
கதையை 'இயற்கைவாதப் பண்புடன்'
எழுதியது மாதிரி, படத்தையும் அவ்வாறே
இயக்கியுள்ளார் ஞானரதன்.
கவிதை நடையில் கதை சொல்வது போல்
கதை நகர்கிறது.
சில இடங்களில் சில காட்சிகள் அல்லது
உயர்சித்திரங்களுடன் போட்டி இடுகின்றன.
பொதுவாக சித்திரத்தின் இடத்தை
புகைப்படம் பிடித்துவிட்டது.
புகைப்படத்தின் இடத்தை திரைப்படம்
பிடித்துவிட்டது என்பர்.
ஆனால் இங்கு சில, ஓவியத்தின் ஆற்றலை
நிலைகொள்ளச் செய்கின்றன.
படப்பிடிப்பாளர் ஸ்ரீராம், ஞானரதனின்
வலது கையாக இயங்கி உள்ளார்
ஆரம்பப்புலம் பெயருதல் வன்னிக் காட்சிகளில்
படப்பிடிப்பாளர் பங்கு மிகப் பெரியது
கதையின் தேவைக்கேற்ப கமரா இயல்பாக
கையாளப்பட்டுள்ளது.
இன்று படப்பிடிப்பாளரே-படப்பிடிப்பு
இயக்குனர் என்று ஏன் சொல்கிறார்
என்பதை இப்படம் காட்டுகிறது.
நடிகர்கள் தேர்வு மிகப் பொருத்தமாக
இருப்பதுடன் அவர்கள் தத்தம் பணியை
மிகவும் பொறுப்பாக - தொழில்முறைக்
கலைஞர்கள் போல் - செய்திருக்கின்றார்கள்.
இரத்தினவடிவேல் ஐயா அவர்கள்
இத்தகைய பாத்திரங்களுக்கென்றே
படைக்கப்பட்டவர் போல
இயல்பாக நடிக்கிறார்.

அகிலா – வாக நடித்த சகுந்தலா அபார
நடிப்பாற்றல் கொண்டவர்.
அகதியென்ற சோகம், வாழ்க்கைப் படகை
ஓட்டவேண்டும் என்று தன் உணர்ச்சிகளை
உள்ளடக்கி, முகத்தில் ஆரம்பம் முதல்
இறுதிவரை காட்டும் இறுக்கம்,
கணவன் முதலில் பேசிவிட்டு பிறகு
மன்னிப்பு கேட்கும் போது குமுறிக்குலுங்கி
அழுவதற்கும், குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு
அழும்போது காட்டும் வேறுபாடுகள் படம்
முடிந்தும் நெஞ்சம் கனக்க வெளிபேற,
அந்த அகன்ற விழியில் எழுந்து மறையும்
சோகச் சூழலே காரணம் எனலாம்.
அகிலாவின் கணவன் சந்திரன்
அவளுடன் போட்டி போட்டு நடிக்கிறார்.
இவருக்குத்தான் உரையாடல்கள் அதிகம்.
சேர்க்கை இல்லாமல் இயல்பாகப்
பேசுகிறார். மனைவியைப் பேசிவிட்டு,
வீட்டுக்கு வெளியே வந்து,
பிறகு வீடு திரும்பி மனைவியிடம் மன்னிப்புக்
கேட்கும் போது நடிப்பை எப்படி
அநாயாசமாக வெளியிடுகிறார்.
திரைப்படம் ஆக்க பலரும் தயங்கும்
ஒரு கதையை எல்லோரும் பார்த்து ரசிக்கும்படி
செய்பவன்படத்தொகுப்பாளன். அதிலும்
புதிய நடிகர்களை வைத்து எடுத்த காட்சிகளை–
Shots, Frames
ஆக பிரித்து சம்பவங்களின் ஒழுங்கு
மாறாமல் பார்வையாளரின் சிந்தனை
ஒன்றிப்பு சிதறாமல் படத்தொகுப்பு செய்வது
கூரிய கத்திமுனை நடனம்.
இந்த முயற்சியில் பெரு வெற்றி ஈட்டி
இருப்பவர் பிரதீப் என்ற இளைஞர் என்பதனை,
அறியும் போது எனது விழிகள் வியப்பால்
விரிந்தன.
அதுமட்டுமல்ல தயாரிப்புப் பொறுப்பையும்
இவரே ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதும்
குறிப்பிடத்தக்கது
இசையை 'முரளி' வழங்கி இருக்கிறார்.
தமிழ்ப் படங்களில் இசை என்பது பின்னணியில்
(Rerecording)
தான் முக்கியத்துவம் பெரிதும் வகிக்கின்றது.
கதாபாத்திரங்களின் செயற்படு சூழல்,
கட்டம், பின்னணிக்கேற்ற இசை,
பார்வையாளனை காட்சியுடன்
ஒன்றவைக்கும் முரளியின் இசையில் நல்ல
எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன.
சரி, குறைகளே இல்லையா? உண்டு.
அவற்றுள் பலதொழில்நுட்பக் குறைபாடுகள்,
மின்சாரம் சார்ந்தவை. சில முக்கிய
கருவிகள் இல்லாமை. எல்லாவற்றிற்கும்
மேலாக எங்களிடம் *Tele Play,*
Tele Drama, Tele Cinema
என்ற வேறுபாடுகளைக் காட்டக் கூடியவாறு
நவீன புகைப்படக் கருவிகளோ
நவீன தொழில்நுட்ப சாதனங்களோ
குறைவு. வீடியோ கமராவினால்தான்
பெரிய படங்களைப் பிடிக்கின்றோம்.
சிங்கள அல்லது இந்திய அல்லது மேலைத்தேய
தொலைக்காட்சிப் படங்கள்
பெரும்பாலும் 32மம் எம் - இல் எடுக்கப்பட்டு
(Tele ல்)
காட்டப்படுகின்றன.
அதனால்தான் அவற்றை *Blow-up* செய்து
பெரிய திரைகளில் றன் 70 எம். எம் - இல்
கூடக் காட்டமுடிகிறது.
எங்களது அறிவை, ஆற்றலை வளர்க்கும்
முயற்சிகளே இவை.
இவை விரிவடையும் போது - எமது
படைப்புக்கள் சிறக்கும்.
Feature, Documentary, News
ஆகிய கலப்புக்கள் பல இடங்களில்
எமது கலைத்தடத்தை மங்கச் செய்தாலும்,
இக்குறைபாடுகள் நாளடைவில்
நீங்கக் கூடியன.

- செம்பியன்செல்வன்

□□

பாடல் ஒலிப்பேழை மதிப்பீடு

நெருப்பு நிலவுகள்

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற
தாயக மண்மீட்புப் போராட்டத்தில்
அனைவரும் ஒன்று திரண்டு
வடம் பிடிக்கவேண்டிய ஒரு சூழ்நிலையில்,
'படையணி நகரும் பெண்கள் படையணி
நகரும்' என்ற அணிவகுப்பு
நகர்வில் ஒரு கட்டாய தேவையை
முன்னிட்டு ஒத்துழைப்பு நல்கி உதவவேண்டிய
வேளையில் வெறும் காட்சிப் பொருள்களாக,
கற்பனைக்குகந்தவர்களாக,
வர்ணனைக்குரியவர்களாக மட்டும்
இருக்கமுடியாதபடி காலமாறுதல்களும் காலத்தின்
தேவைகளும் எம்முன் நிற்கையில் தமிழீழப்
பெண்கள் குனிந்த தலைகளை
நிமிர்த்தி நெருப்பு நிலவுகளாக, நிமிர்ந்த

புயல்களாக வெற்றி மகளிராகப் புறப்பட்ட,
புறப்பட்டுக்கொண்டிருக்கின்ற, புறப்படவேண்டிய
நிலையைச் சித்திரிக்கவேண்டிய தேவையே
''நெருப்பு நிலவுகளின்''
வெளியீடு என்று கூறலாம்.
விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின்
இரண்டாவது வெளியீடாகவும்
கலைபண்பாட்டுக்கழக மகளிர் பிரிவின்
முதலாவது உருவாக்கமாகவும்
வெளிவந்திருக்கும் இந்த ஒலிப்பதிவு
நாடாவானது புதுவை இரத்தினதுரையின்
இரண்டு பாடல்களையும்,
கணேசமூர்த்தியின்
மூன்று பாடல்களையும், ரமணனின்
பாடலொன்றையும், இளம்போராளிகளான
உதயலட்சுமி, யோகன் (பாதர்)
தமிழவள், நெடுஞ்செழியன் ஆகியோரது
பாடல்களையும் சேர்த்து பத்து
இசைப்பாடல்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது.
ஒலிப்பதிவு நாடாவில் கவிஞர் தனது
பாடலை எத்தகைய உணர்வு
நிலையில் நின்று எழுதினாரோ அந்த
உணர்வோட்டம் மாறாமல் பாடகர் அதனை
உள்வாங்கிப்பாடவேண்டும். பாடற்கருத்துக்கும்
பாடல்களின் கரலுக்கும் இசைந்தவாறு
இசையமைப்பு அமைய வேண்டும்.
இந்த மூன்று விடயங்களும் இணையும்போதுதான்
ஒலிப்பதிவு நாடாவானது ஒரு
முழுமையைப் பெறும்.
நெருப்பு நிலவுகளைப் பொறுத்தவரையில்
இசையமைப்பானது மிகவும்
குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்துள்ளது.
போராட்ட வேகம், நம்பிக்கையுணர்வு.
சோகம், மகிழ்ச்சி போன்ற உணர்வலைகளில்
மிகத் துல்லியமாக இசை இயங்குகின்றது.
ஆடிப்பாடுவோம் ... என்ற பாடலில்
'ஆடிப்பாடுவோம் கூடிப்பாடுவோம்
கவலைகள் மறந்தாச்சு' என்ற பாடலோசையும்
அதனோடு இணையும் இசையும் மிகநன்றாக
அமைந்துள்ளது.
''பெண்ணாக இருத்தல்'' காரணமாக
பெண்ணுக்கென்று எமது சமூகமும்
இலக்கியங்களும் விதித்துள்ள காலத்துக்கு
ஒவ்வாத சில தளைகளை பெண் தாண்டவேண்டும்.
இந்த ஒலிப்பதிவு நாடாவில் கவிஞர்
கேட்கிறார், இனியும் உனக்குச் சிறையா?
இருளில் இருத்தல் முறையா?
'அள்ளிச் சொருகியே மெல்ல நடந்திடும்
கொள்ளை அழகுகள் போதும்! வண்ணக்
கனவுகள் தன்னில் மிதந்தொரு பெண்மை
கரைந்தது போதும்! கண்களில் தீயை
மூட்டுங்கள் உங்கள் கால்களில் வேகங்கள்
பூட்டுங்கள்! கண்ணைத் திறந்தொரு
மின்னல் எழுந்திட விண்ணை
விழுத்தலாம் வாரும்!'
என்று கூறிப் பெண்ணுக்கும் பெண்மைக்கும்
புதிய பாதையைக் காட்டி நிற்கிறார்.
''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின்
மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே''
என்றார் பாரதிதாசன்.
ஆனால் இன்றைய தமிழீழப் பெண்போராளிகள்
தாயக மீட்புக்காகப் போராடும் அதேவேளை
பெண்விடுதலைக்காகவும் குரல் கொடுத்து
படையணிகளில், பாசறைகளில்,
மகத்தான சாதனை புரிந்துவரும் வேளையிதில்
இப்போராட்ட வரலாற்றில் மகளிர்
படையணியின் வெற்றிகள் பெண்களின்
ஒருபரிமாணமெனில் மற்றொரு பரிமாணமாக
இத்தகைய இலக்கியப்சார்
ஆக்கங்களின் வெளிப்பாடுகளைக் கூறலாம்.
போராளிகளாக, கவிஞர்களாக, பாடகர்களாக
இன்னும் பல்வேறு துறைகளில்
வல்லவர்களாக செயற்படுவதைப்
பார்க்கும்போது
'வளையல் அணியும் இளைய மலர்கள்
கவசம் அணியவே! பழைய விதிகள்
எரியப் புதிய பரணி எழுதவே'
என்ற கவிஞர்
புதுவை இரத்தினதுரையின் பாடலடிகளின்
நிதர்சனத் தன்மை புரிகின்றது.
'ஓ வரும் வரும் மரணம் வரும் வரும் ..'
என்ற கணேசமூர்த்தியின் பாடலில் நிரந்தரமான
மான உணர்வின் தன்மையும். அதனோடு
கூடிய தமிழர்களின் காவலனாகிய
தலைவர் பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில்
பெரும்புயலையும் பூகம்பத்தையும் வென்று
வெற்றிவாகை சூடும் உறுதி புலப்படும்
அதேவேளை
'பெற்றவளை ஒருபோதும் மறந்ததில்லை அம்மா!
போர்க்களத்தில் மானம் என்றும்
இறந்ததில்லை அம்மா'
என்ற பாடலடிகள் பெண்போராளியின்
பாசமிகுகுரலாக ஒலித்து தாய்மண்பற்றையும்
தாய்ப்பற்றையும் உணர்த்தி நிற்கிறது.
பெண்போராளிகளின் போராட்டத் திறனைக்
கூறும் பாடல்களும், போராட்டவரலாற்றுக்கு
அறைகூவல் விடும் பாடல்களும் உள்ள
அதேவேளை பெண்ணினத்துக்கு
இருந்துவரும் பாரிய பிரச்சினைகளில்
ஒன்றான சீதனத்தைக் கண்டிக்கும் வகையில்
போராளி யோகனின் நிறைகுடத்தை
ஏந்திக்கொண்டு ... என்ற பாடலில் வரும்

மணம்கொடுக்கும் மலருக்குத் தேனீன் துளிகள்
பாரமோ! தேடிவரும் வண்டுகளுக்கு
சீர்கொடுக்கவும் வேண்டுமோ!
வாழ்க்கைத் துணை தேடிவந்தால்
வஞ்சிப்பதுதான் முறையோ'
என்று வருகின்ற அடிகள் பெண்ணுக்குள்ள
பிரச்சினைகளில் ஒன்றை இனங்காட்டி
நிற்கிறது என்று கூறலாம்.
'மழைகுளித்த மரங்கள் மீது தளிர்பிறக்குது!
எங்கள் மல்லிகையில் புதியதொரு
முகை வெடிக்குது'
என்ற உதயலட்சுமியின் பாடலடிகளும்
குருவிக் கூட்டம் போல இருந்த எங்கள்
வாழ்வானது கொடும் பறவைக் கூட்டத்தால்
அழிந்து போனதையிட்டுக் கலங்கும்
போராளிக் கவிஞர் தமிழவள் போர்க்களமே
விடிவுதரும் மனம் அறிந்தது என்று கூறும்
பாடலடிகளும் பெண்போராளிகள்
என்றவகையில் அனைத்துப்
பெண்போராளிகளின் சார்பிலும் ஒலிக்கின்ற
உறுதிமிக்க குரலாக ஒலித்து நிற்கின்றது.
ரமணனின் ஆடிப்பாடுவோம் கூடிப்பாடுவோம்
என்றபாடலில் பெண்ணை மிதித்தவர்
கண்ணைத் திறந்திடும் காலமும் உருவாச்சு
என்ற செய்தி கூறப்படுகிறது.
சந்தோச உணர்வில் காலை விடியும் நேரம்
வந்துவிட்டதால் உனது சோகமும்
முடியும் என்ற உறுதியைக் கூறி ஆவதும்
பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே
என்ற பழங்கதையை மாற்றி விட்ட
புதிய கோலத்தைக் கூறுகிறார்.
எதிரியின் பாசறைகள் பொடிப்பொடியாகும்
என்ற நெடுஞ்செழியனின் (போராளி)
பாடலில் சோதனையில் சாதனை படைக்கும்
வேகமும் மாவீரர் தியாகத்தால் வெற்றிவாகை
சூடிடும் உறுதியும் கூடி கனவுகள் நனவாகும்
காலம் வெகுதூரத்தில் இல்லை என்ற
நம்பிக்கைக்கீற்றும் வெளிப்பட்டு நிற்கிறது.
கவிஞர்களது 'பெண்' 'பெண்மை'
பற்றிய கருத்தோட்டங்களையும் போராளிகளது
உள்ளத்துணர்வுகளையும் தாங்கி நிற்கின்ற
பாடல்களை மிக அழகான குரல்வளத்தால்
மெருகூட்டி கவிஞனின் உள்ளத்துணர்வுகளைத்
தங்கள் குரலூடு எமக்கு அளித்துள்ள
பாடகர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.
வீரம்மட்டுமல்ல விவேகமும் பல்துறை
ஆற்றலும் பல்துறை வளங்களும் உடையவர்கள்
நாங்கள் என்பதை மீண்டும் ஒருமுறை இந்த
ஒலிப்பதிவு நாடா மூலம் போராளிகள்
நிரூபித்துள்ளார்கள்.

இந்தவகையில் 'நெருப்பு நிலவுகள்' என்ற
கலைப்பை மேலும் அணிசெய்யும்
வகையில் நிலவில் புதிய கவிதை எழுத
நிமிர்ந்த புயல்களை அவர்களின் புதிய
நகர்வைச் சித்திரிக்கும். அழகிய ஓவியத்தை
முகப்பாகக் கொண்டு வெளிவந்திருக்கும்
இந்த நெருப்பு நிலவுகள் பாடல்களும்
உங்கள் ஒவ்வொருவரது உணர்வுகளிலும்
உட்காரத்தான் போகின்றது

- ச. கலாநிதி

□□

அரங்கியல் மதிப்பீடு

காட்சியும் கருத்தும்

தரி, பிழை என்பவற்றுக்கப்பால் எம்மண்ணிலே திருமறைக்கலாமன்றத்தின் கலைபரப்பும் முயற்சிகள் குறிப்பிடப்பட வேண்டியவை. சென்ற ஜூன் மாதம் 15, 16, 17, 18ம் திகதிகளில் தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்கு இவர்கள் ஏற்பாடு செய்திருந்த 'நாடக அரங்கியற் கண்காட்சி' நல்லதொரு முயற்சி.

மேலைத்தேய, கீழைத்தேய அரங்குகளின் பான்மையை உலகுதழுவி ஒப்பிடக்கூடிய விதமாக; கிரேக்க, ரோம, உருசிய, ஆங்கில, ஆபிரிக்க, அமெரிக்க, ஜப்பானிய, சீன மற்றும் தமிழக அரங்குகளின் தோற்றம் வளர்ச்சி என்பவற்றை அவ்வவ்வரங்குகளின் மாதிரியுருக்களுடனும் கருத்துச் சொல்லும் அட்டைகளோடும் காட்சிப்படுத்தியிருந்தார்கள். கலை நயத்தோடு அமைக்கப்பட்டிருந்த ஒவ்வோர் அரங்கினதும் மாதிரியுருக்கள் அரங்க ஆர்வலர்க்குப் பயனுள்ளவை.

இவற்றோடு கூடவே சோபோக்ளிஸ், சுஸ்கிலஸ், அரிஸ்டோபான்ஸ், சேக்ஸ்பியர், பீச்சர்ட் செக்னர் என்று ஒவ்வோர் நாட்டு அரங்கிலும் புகழ்பூத்து நின்ற நாடக ஆசிரியர்கள் பற்றிய குறிப்புக்களும் காணப்பட்டன. கருத்துச் சொல்லும் அட்டைகள் அதிகமாய்க் காணப்பட்டதால் பார்க்கும் நிலையிலிருந்துமாறி புத்தகம் படிக்கும் உணர்வு உண்டாகி விட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலுமாக நாடகம் தொடர்பான புத்தகங்களைக் காட்சியில் வைத்தது வித்தியாசமான சிந்தனை.

ஆனால் தமிழக அரங்குகளில்
பல மாற்றங்களைப் புகுத்திக் குறிப்பிட்ட காலம்
வரை அவ்வரங்குகளை ஆண்ட
அண்ணா, கருணாநிதி போன்றவர்களின்
பல நாடகநூல்களில் ஒன்றுமே
கண்ணுக்குத் தட்டுப்படவில்லை.
காட்சியிலிருந்த பலவகையான அரங்க
ஒளியமைப்புக்கருவிகளையும் இயக்கி
அவற்றை உபயோகிக்கும் முறைகளையும்
விளக்கினார்கள். இது, மின்வெளிச்சம் பார்த்தே
நாளாகிவிட்ட கண்களுக்குக் கூச்சத்தையும்
உண்டுபண்ணிவிட்டது. இங்ஙனமே பல்வேறு
ஒலியமைப்புக்கருவிகளையும்
இயக்கிக்காட்டி விளக்கினார்கள்.
நம் நாடகங்கள் பல, இன்று வசதியீனத்தால்
ஒளியமைப்பின்றியே ஒப்பேறுகின்றன.
ஒலியமைப்பிலும் நாங்கள் பலபடிகள்
பின்னுக்கு நிற்கின்றோம். இந்தச்சந்தர்ப்பத்தில்,
இந்தக் கருவிகளின் கண்காட்சி, இப்படியான
கருவிகள் உள்ளன என்று அறியவேனும்
எமக்கெல்லாம் உதவின என்பதே உண்மை.
பொய்க்கால்குதிரை, முகமூடிகள்,
பல்வேறுசட்டைகள், பொய் முடிகள்,
அரிதார வகைகள் என ஒப்பனைக்குத்
தேவையான பல்வேறு பொருள்களையும் காட்சியில்
வைத்ததுடன் ஒப்பனை செய்யும்
முறைகளையும் விளக்கினார்கள். ஒப்பனை
செய்து ஓராளை வேறாளாக
மாற்றுவதிலே பல புதுமைகள் இன்று
வந்துவிட்டன. நாம் வைத்துக்கொண்டிருக்கும்.
ஒப்பனைப் பொருள்கள் காலத்தால் பழையவை
என்றாலும் ஆலையில்லா ஊருக்கு
இலுப்பைப் பூத்தானே சர்க்கரை.
தனியாகக் காட்சி செய்யப்பட்டிருந்த
ஈழத்துத் தமிழ்நாடக அரங்கிலே கூத்து, பள்ளு,
இசைநாடகம் என்று மரபுவழி அரங்குகளும்
மோடிப்படுத்திய நவீன அரங்குகளும்
விளக்கப்பட்டிருந்தன. பல்வேறு அரங்குகளில்
எடுத்த நிழற்படங்களையும் சட்டமிட்டு
மாட்டியிருந்தார்கள் இன்னும் குழந்தை
சண்முகலிங்கம், தாஸீஸியஸ், பாலேந்திரா,
மௌனகுரு, சிதம்பரநாதன்,
மரியசேவியர் போன்ற நம்மவர்களின்
நாடக அரங்கியற் செயற்பாடுகள் பற்றிய
குறிப்புகளும் காணப்பட்டன பிரபலமான
பல அண்ணாவிமார் மற்றும் இன்றைய
கிராமத்து நாடகக்காரர்கள் பற்றிய
விபரங்களைக் காணமுடியவில்லை.
இத்தனைக்கும், இக்காட்சியிலே 'நாடக இசை'
பற்றி கண்ணுக்கெட்டியவரை எதுவுமே
காணப்படவில்லை. நாடகத்தின்
ஒவ்வோரம்சத்தையும் காட்சிப்படுத்த
முயன்றவர்கள் 'இசை' பற்றிக் கவனிக்க
மறந்துவிட்டார்களா அல்லது கவனமாகமறந்து
விட்டார்களா தெரியவில்லை.
மொத்தத்தில் இந்தக்கண்காட்சி அரங்கியல்
மாணவர்களின் பரீட்சைக்கு உதவவே
ஏற்பாடு செய்யப்பட்டதென்பது தெட்டத்தெளிவு.
அந்நோக்கம் ஓரளவு வெற்றியென்றும்
புரியமுடிகிறது. இந்தமுயற்சி பெருமளவு
மனிதவலுவையும்
பணத்தையும் விழுங்கிவிடும்; ஆனால்
இந்தக் காலத்தில் அவசியமான, இப்படியான
முயற்சிகள் பாராட்டுக்குரியவை. ஆனாலும்
இந்தக் கண்காட்சி அதற்கான உழைப்புக்கேற்றபடி
ஒரு சாதாரண தமிழ்நாடக ஆர்வலனுக்கு
எவ்விதம் உதவியிருக்கும் என்று
சொல்லமுடியவில்லை. மன்றம் தனது
எல்லைகளை இன்னும் நன்றாக
அகட்டிக்கொண்டு பரந்த தளத்திலே
செயற்படுவதன் மூலமே உழைப்புக்கேற்ற
முழுப்பலனைப் பெறலாம்.
ஈழத்தின் நேற்றைய, இன்றைய, நாளைய
அரங்குகளைப் பற்றிய கூறல், எதிர்கூறல்
எண்ணத்தோடு நேற்று-இன்று-நாளை என்னும்
கருத்தரங்கம் நா. கந்தசிவங்கம் கலைமையில்
இறுதிநாள் அன்று ஏற்பாடு
செய்யப்பட்டிருந்தது.
'நேற்று' அகிலனாலும்; 'இன்று'
ஜெயசங்கராலும்; 'நாளை' ரதிதரனாலும்
கூறப்பட்டன. மூவருமே இலக்கின்றி
அம்புகளை எய்ததால் இலக்கை எட்டவில்லை.
அகிலனின் கருத்துக்கள் திடீர்ச்சாதமென்பது
புரிகிறது. அவற்றிலே குறிப்பிட ஒன்றுமில்லை.
''இன்றைய அரங்கிற்கு ராஜதந்திரம்
தேவையில்லை. சத்திய தந்திரமே(?)
தேவையானது'' என்று ஜெயசங்கர்
மிகச்சுருக்கமாக முடித்துக்கொண்டார்.
ரதிதரன், மேடையிலே 'விகடம்'
பண்ணிக்கொண்டிருந்தார். 'சிங்கத்தின்
தொல்லை தாங்காத மிருகங்கள் கூட்டம்
கூடுகின்றன. அதிலே மான் எழுந்து,
மிருகங்களனைத்தினதும் விடுதலைக்காய்
தான் தற்கொடை செய்ய முன்வருகிறது.
அதன்படி வாயினுள் நஞ்சை வைத்தபடி மான்,
சிங்கத்துக்கு தன்னை இரையாக்க, நஞ்சுண்ட
சிங்கம் மாண்டு போகிறது. மிருகங்கள் கூடி
மானுக்கு அஞ்சலி செய்கின்றன.'
இவ்வாறாக எல்லோருமறிந்த 'சிங்கமும் முயலும்'
கதை, தான் பார்த்த சிறுவர் அரங்கிலே
புதியவடிவம் பெற்றுள்ளதென்று
குறிப்பிட்டார். இதைப் போலவே 'சிங்கத்தின்
கொடுமை தாங்காத மிருகங்கள் புலியின்

இணுவில் இன்னை இன நூலகம்

தலைமையிலே சிங்கத்தை எதிர்த்து அதைக் கொல்லுவது, அவர் குறிப்பிட்ட மற்றொரு சிறுவர் நாடகம்.

இவை அற்புதமான கருத்துக்கள். நாளைய நமது அரங்குகளின் நகல் வடிவங்கள். இதை வைத்தே நமது நாளைய அரங்கம் பற்றி ரதிதரன் தனது கருத்துக்களை வளர்த்திருக்கலாம்.

கருத்தரங்கின் வெற்றி தோல்விக்கு அமைப்பாளர்கள் மட்டுமே காரணமானவர்கள் என்று கூறமுடியாது. அரங்கிலே கலந்து கொள்ளுகிறவர்கள் பொறுப்பும், அக்கறையும் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இக்கருத்தரங்கிலே நமது மூத்த நாடகக்கலைஞர்களே கதைத்திருக்க வேண்டும். 'பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க விரும்பாத அவர்களின் நழுவற்போக்கே' இதற்குக் காரணமா? அல்லது அமைப்பாளர்கள் அவர்களை அழைக்க எண்ணவில்லையா? எது காரணமென்பது தெரியவில்லை. அவர்களை அழைக்க எண்ணாமல் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அது அமைப்பாளரின் தீர்மைக் குறைவையே காட்டும். அவ்வாறில்லாமல் அழைப்பு மறுக்கப்பட்டிருப்பின் நமது நாடகத்துக்கு இப்போதைக்கு விடிவுவராது என்றே தெரிகிறது.

- ஆதித்தன்

□□

நூல் மதிப்பீடு

வில்லுக்குளத்துப் பறவை

வில்லுக்குளத்துப் பறவை எளிமையும், அழகும் நிறைந்த அட்டையுடன் வெளிவந்துள்ள உண்மைக் கதைகளின் தொகுதி; வரலாற்றுத் தேவையுணர்ந்து விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமும், அவர்களின் அடிவருடிகளான தேசத் துரோகக் குழுவினரும் தமிழீழ மண்ணில் விளைத்து விட்ட, மறக்க முடியாத மாபெரும் வரலாற்றுக் கொடூரங்களின் சில துளிகளும், விடுதலைத் தாகங்கொண்ட தேச பக்தர்களது அர்ப்பணிப்புகளின் சில துளிகளும்-உண்மை சிதையாது-கலையழகுடன் இலக்கியமாக்கப்பட்டுள்ளன.

சிறுகதையின் சாயல் கொண்ட, சொல்ல வந்ததை உணர்வு பூர்வமாக வாசகரின் நெஞ்சில்பதிக்கக் கூடிய-செட்டான-கட்டிறுக்கம் மிக்க பதினேழு கதைகள் இத்தொகுதியிலுள்ளன.

ஏகபத்தினி விரதனான இராமன் ஜனித்ததாகச் சொல்லப்படும் பாரதப் பூமியிலிருந்து வந்தவர்கள் தமிழீழப் பெண்கள் மீது புரிந்த பாலியல் வன்முறைகளையும், சீர் கெட்ட-எந்தப் புண்ணிய கங்கையில் கழுவினாலும் மாறாத வெட்கங்கெட்ட-நடத்தைகளையும் வார்த்தை விரசமின்றிச் சொல்வன ஒருவகையானவை. சறோ அக்கா என்ற நாட்டுப் பற்றாளர் இந்திய இராணுவ அதிகாரி 'மேஜர் கோரி'னால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படுவது 'வில்லுக்குளத்துப் பறவை' கதையிலும், பிரசவ வலியில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் பெண்-கணவன் முன்னிலையில் மானபங்கப்படுத்தப்பட்டு 'மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமானாய்' மரிப்பது 'தெருவெல்லாம் சுடுகாடாய்' கதையிலும், ஆண்களைப் பாடசாலைகளுக்கு வருமாறு கட்டளையிட்டு விட்டு, வீடுகளுள் புகுந்து பெண்களை - வயோதிப மாதுவைக் கூட - பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது 'இது ஒரு தொடர்கதை' கதையிலும் சொல்லப்பட்டுள்ளன.

'இது ஒரு தொடர்கதை' கதை இப்படி முடிகிறது.

''பாரதப்படை இன்னும் எத்தனை நாளைக்கோ'' எல்லோர் வாயும் இதையே முணுமுணுக்கிறது. ஏனெனில் இது ஒரு தொடர்கதைதான் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தூரத்தில் எங்கிருந்தோ பாரதப் படையின் பெருமைகள் பற்றி, முன்னாள் 'முற்போக்காளர் ஜெயகாந்தனின்' குரல் ஒலிக்கிறது''

உண்மையில் ஜெயகாந்தன் போன்ற ஆதிக்கவாதிகளுக்குச் சாமரம் வீசுவோரைக்கூட வரலாற்றுச் சந்தியில் வைத்து விசாரிக்கத் தவறவில்லை இக்கதைகள்.

போராளிகளுக்கு உதவும் தேசபக்தர்களின் கதைகளாக நிதானம், காவல், பிரிவு, சமயோசிதம், துணை, ஓயாத கால்கள் போன்றன அமைகின்றன.

இந்த மண்ணின் மைந்தர்கள், அப்பாவிகள்; விடுதலைப் போராளிகளை நேசித்தவர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதை உரைப்பவை ஏனைய கதைகள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் திறக்கும் புதிய வாசல்கள் கலை, இலக்கியங்களிலும் விரிந்துள்ளன. ஆக்க இலக்கிய முறைமையில் புதிய வடிவங்களை இப்போராட்டம் தமிழுக்குத் தந்துள்ளது.

இத்தகையதொரு வகைப் புதுவரவாக கப்டன் மலரவனின் போர் உலாவும், பிறிதொரு வகை வரவாக மெய்க்கதைகளின் தொகுதிகளான அம்மானைக் கும்மிடுறாணுகள் மற்றும் வில்லுக் குளத்துப் பறவை ஆகியனவும் அமைந்துள்ளன.

வரலாற்று மெய்மைகளைக் கோர்த்த காலப் பதிவாக, இலக்கியப் பதிவாக அமையப் பெற்ற வில்லுக் குளத்துப் பறவை இனி வரும் தலைமுறைகளுக்காகவேனும் அவசியம் தேவையானது. 'இவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். எத்தனை காலம் சென்றாலும் எனது பிள்ளைகள் இவர்களைப் பழி வாங்குவார்கள்' என, சாகும் தறுவாயில் ஒரு தந்தை எண்ணுகிறானே (வெறுப்புக்கோலங்கள் கதையில்), அதற்காக ஒவ்வொரு இந்தியனும் வெட்கப்படவேண்டியதாக, பதில் சொல்ல வேண்டியவர்களாக..... ஒவ்வொரு தமிழீழப் பிள்ளைகளும் தந்தை, தாய், உடன் பிறந்தோரின் சபதங்களை நிறைவேற்றுவதாக... ஆமாம்..... வரலாறு அப்படித்தான் நகர்கிறது.


-இயல்வாணன்

□□

"ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!"

சகல வகைக் கண்ணாடிகளையும்

வழங்குபவர்கள்



எஸ்-எம்-பெர்னான்டோ

580, ஆஸ்பத்திரி வீதி,

[இலங்கைவங்கி அருகாமை]

யாழ்ப்பாணம்



கைவிடப்பட்ட கிராமம் பற்றிய பாடல்

பா. அகிலன்

இங்கே தான்
கசப்பானதும், உல்லாசமானதுமான
என் பாலியகாலத்து நினைவுகள் கலந்துள்ளன
இதோ
இந்த வரிகளை எழுதும் நடு இரவில்
சனங்களற்ற உன்னுடைய வீடுகளை
தெருக்களை நினைத்து நான் பார்க்கிறேன்
சொல்ல முடியாப் பிரிவின் துயரால்
மனம் சஞ்சலப்படுகிறது

போற்றுதற்குரிய
முன்னோர்களின் சிறிய கிராமமே!
மாயக்கனவுகளை ஊதிஎழுப்பும்
உன்னுடைய வயற்கரைகளை
வைக்கோற் போர்கள் நிறைந்த முற்றங்களை
நினைத்துப் பார்க்கிறேன்

பனங்கூடல்களின் அருகே
தியானத்துள் அமர்ந்த
பாட்டனின் பழம்பெரும் வீடே
உன்னோடு கழித்த விடுமுறை நாட்கள்
நினைவுத் தெருவில் நடுகல்லாய் அமர்ந்து இருக்கிறது

ஒரு முதிய பெண் பெருங்குரலில்
பழங்கதை சொல்லி அழுகிறாள்

தூர்ந்து போய், ஐதேகங்கள் மண்டிக்கிடக்கும்
உன்னுடைய கேணிகளில்
நினைவின் ஆழ அடுக்குகளுள் இழுத்துச்செல்கிற
பூர்வீகத் தெருக்களில்
பித்தாய் மனம் பற்றி அலைகிறது.

எங்கே நீ .....?
தெய்வங்கள் உள்ளுறைந்த உன்னுடைய முதுமரங்கள்
எங்கே... ?
நொந்த நிலா முகில்களுள் முகம்புதைத்து விம்முகிறது

ஆதியான கிராமமே
விழி திறந்து
இரவுக்கடலில் எரிகிற சூள் விளக்குகளை
காற்றைப்பிடித்துலுப்பி எழுகிற
மூதாதையரின் பாடல்களை
விழாநாட் தெருக்களில் ஓயாது முழங்குகின்ற
பறைகளின் ஒலிகளை வாள்முனையில் உயிர்துடிக்க
இழந்து தான் போனோமா.....!

வெளிச்சம் நான்காம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

அச்சிடுவதற்கு....

அனுபவம் மிக்க

புளொக் தயாரிப்பாளர்களின்

கைவண்ணத்தில்

☐ நிழற் பட புளொக்ஸ்

☐ டிசைன் (லைன்) புளொக்ஸ்

☐ கலர் புளொக்ஸ்

லைன் கலர் பிரித்து தயாரிக்கப்படுவது

ஆகியவற்றுக்கு வட தமிழீழத்தில்

நாடவேண்டிய இடம்

அழகன்

புளொக்ஸ் தயாரிப்பாளர்கள்

இல 27/1, மகேந்திரா வீதி,
(வைமன் றோட்)
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
தமிழீழம்.



அறியாணம்

பு. சத்தியமூர்த்தி

தங்கட ஆச்சியைப் பற்றிச் சொன்னா நீங்க நம்பமாட்டீங்கள். அவவுக்கு தொண்ணூற்றிநாலு வயசு ரெண்டு உலகப் போரையுங் கண்டவ. ஆனா இப்பவும் ரெண்டு கண்ணும் வடிவாத் தெரியும். நல்ல வெளிச்சத்தில வெறுங்கண்ணாலேயே பேப்பர் படிப்பா. இரவில மட்டும் கண்ணாடி பாவிப்பா. காது கேக்கிறது கொஞ்சம் குறைவு. ''இயபோன்'' பாவிக்கிறதால றேடியோவெல்லாம் கேப்பா. உலகத்து விசயமெல்லாம் மனிசிக்குத் தெரியும். இரவில அவவோட கதைச்சுக் கொண்டிருந்தாலே உந்த 'ஜென்றல் நொலேஜ்' எக்ஸாமெல்லாம் எழுதிப் போடலாம். அந்தளவுக்கு ஆச்சி ஒரு கடல்தான். ஊரில பொதுவிசயமெண்டா பெரியாக்களெல்லாம் ஆச்சியிட்ட வந்து கதைச்சிட்டுத்தான் செய்வினம். ஆச்சி நாப்பது வருசத்துக்கு முந்தி 'றிட்டயர்' பண்ணேக்கை ஒரு பிரின்சிப்பல். அவவை லேசில ஒருத்தரும் பேய்க்காட்டேலாது. கோவப்படுத்தேலாது, சந்தோசப்படுத்தேலாது. ஆச்சி எதுக்கும்லேசில கவலைப்பட்டு மனம் உடைஞ்சு போகமாட்டா. ஆள் இரும்பு மனிசிதான்! அட, இவளவையும் சொன்னனான் அவ ஆச்சியெண்டா என்னண்டு எனக்கு ஆச்சியெண்டு சொல்லேல்லப் பாத்தீங்களே. ஆச்சி எங்கட அம்மாவின்ர அம்மா, அம்மம்மா. நானும் தங்கச்சியும் அவவின்ர செல்லப் பேரப்பிள்ளையள். ஆனா நான் இப்ப ஏ. எல் படிக்கிறன் எண்டதையும் சொல்லத்தான் வேணும்.

ஆச்சிக்கு இப்ப ரெண்டு நாளா சந்தோசமானசந்தோசம். தலைகால் தெரியாம ஆச்சி குதிக்கிறா. பகலில தன்ர வயதையும் மறந்து ஓடித் திரிஞ்சு போட்டு இரவில கிடந்து அனுங்குறா. நான்தான் அவவுக்கு ''ரைகர்பாம்'' போட்டுஉருவிவிட்டனான். இப்ப ஆச்சி றேடியோவில ஒரு செய்தியும் விடாம கேட்டுக் கொண்டு இருக்கிறதோட பக்கத்துவீட்டு சுரேசின்ர அம்மம்மாவோட செய்தித் தொகுப்பு, விமர்சனம், விவாதமெல்லாம் நடத்திறா. எனக்கு ஒரே சிரிப்பு. ''ஆச்சியப்பாரன். இந்த வயதிலயும் அவவின்ர குதிப்பை.'' அம்மா தன்ர அம்மாவைப் பார்த்து இப்படிச் சொன்னாலும், அவவுக்கும் இப்ப கால் நிலத்தில நிக்குதில்லத்தான். அவையே இப்படியெண்டால் என்னையும் தங்கச்சியையும் பற்றி ஏன் கேப்பான். ரெண்டு பேருக்கும் சாப்பாடே இறங்குதில்ல. அம்மா ஸ்பெஸலாச் செய்த பாயாசம் மட்டும் எங்கட கணக்குத்தான்.

''தம்பி இஞ்ச வா அப்பு. இந்த லிஸ்ற்றில இருக்கிற சாமானெல்லாத்தையும் பெரிய கடையில போய் வாங்கிக் கொண்டு சின்னக் காலால ஓடியாடி'' ஆச்சிதான். என்னவோ சின்னக்குழந்தையோட கொஞ்சுறது போல கதைச்சுக்கொண்டு ஒரு ஆயிரம் ரூபாத் தாளைத் தந்தா.

''என்னத்துக்காச்சி இவளவு சாமானும்?'' எண்டு கேட்டுக்கொண்டு லிஸ்ற்றப் பார்த்தா 5கிலோ அரிசி, 5 கிலோ சக்கரை, உழுத்தம்பருப்பு, தேங்

காய்எண்ணை, பயறு, ஏலக் காய், கற்கண்டு, கஜு, பிளம்ஸ், வாழைப்பழம், பட்டுத்துணி, கற்பூரம், ஊதுபத்தி ... எண்டு ஒரு சேனை சாமான்.

''தம்பி உதில ஒண்டையும் கிள்ளி வாயில வைச்சிடாதை என்ன. என்ர அப்பனெல்லே. பிள்ளையாருக்குப் பொங்கிப் போட்டு அதெல்லாம் பிள்ளைய ளுக்குத்தானே'', ஆச்சி சொல் லிக் கொண்டிருக்க நான் சைக்கி ளில பெரிய கூடையைக் கொழு விக்கொண்டு வெளிக்கிட தங்கச் சியும் என்னோட தொத்தியிட் டாள்.

''ஆச்சி காசு மிஞ்சினா எங் களுக்கு ஐஸ் கிறீம் என்ன'' நேரமறிஞ்சு தங்கச்சி கேட்டுப் போட்டாள். ஆச்சியும் சம்மத மெண்டு தலையாட்டினா. எங்க ளுக்கு இருந்த சந்தோசத்துக்கு இதுவுஞ் சேந்தா எப்பிடி இருக் கும்? சைக்கிள் சும்மா 'மீன் னிக்' கெ ண் டு போகுது பாருங்கோ.''

□ □

இண்டைக்கு விடிய வெள் ளனவே ஆச்சி, தான் எழும்பின தோட இல்லாம எங்கள் எல் லாரையும் எழுப்பி தன்னோட சேத்து எங்களையும் தோயப் பண்ணி நேற்று நாங்கள் வாங் கியந்த சாமானெல்லாத்தையும் கழுவி எடுத்து பொங்கல்பானை, அகப்பையோட கோயிலுக்கு வெளிக்கிட்டுட்டா. அம்மாவும் அப்பாவும் இண்டைக்கு வேலைக்கு போகேல்லை. எனக் கும் தங்கச்சிக்கும் பள்ளிக்கூடம் கட். எல்லாம் ஆச்சியின்ர ஒடர் தான்! எங்கட வீட்டில ஆச்சி சொன்னாச் சொன்னதுதான். அப்பா கூட அடுத்த கதை கதைக்கமாட்டார். அதுக்காக ஆச்சி சும்மா கண்டபடி அடுத் தவையின்ர அலுவலுக்கையெல் லாம் தலை நீட்ட மாட்டா.

''என்ரை அப்பன், நான் இவளவு நாளா கும்பிட்டதச் செய்விச்சு முடிச்சுப்போட்டான். என்ர குஞ்சுகள் சாதிச்சுப் போட்டுதுகள். கொஞ்ச நஞ்சச் சனமே அழிவாரால அழிஞ்சது கள். எவளவு நாளா ஏங்கிக் கொண்டிருந்தனான்''. வாய் நிறையச் சொன்ன ஆச்சி பிள் ளையார் கோவில் பக்கமா கையைத் தூக்கி கும்பிட்டிட்டு கோயிலுக்கு வெளிக்கிட்டா, பிற கென்ன நாங்களும் அவவோட சேர ஊர்வலந்தான்.

நாங்கள் கோயிலுக்குப் போகேக்க அங்க அந்த வெள் ளனவே கனகம் மாமியும் ராசம்மா ரீச்சரும் பொங்குறத் துக்கு அடுக்குப் பாத்துக்கொண் டிருக்கினை. ஆச்சிக்கு வலு சந் தோசம். இன்னொரு அடுப்பில பானைய வைச்சு பொங்கலை அப்பா பாக்க, அம்மா வடை சுடுறத்துக்கு அடுக்குப்பண்ண, தங்கச்சியும் ஆச்சியும் மோதக அவியலில மினக்கெட எனக்கு மூண்டு குடும்பத்துக்கும் தண்ணி அள்ளுற, காகம் கலைக்கிற, அடுப்பூதுற எண்டு எல்லாச் சில்லறை வேலையளும் சேந்திட் டுது. ஹையா எண்டு அட்டகா சமான பொங்கல். ஊர் உலகத்து சின்னன் சிறுசுகளெல்லாம் வந்து கூடி ஒரே ஆரவாரம்.

□ □

பொங்கலை முடிச்சு பிரசா தத்தப் பகிந்து குடுத்திட்டு, பொங்கல் பானையோட வீட்ட போனம். போற வழியில ஒரு ''பேஸ்'' இருக்குது. அங்கை தான் என்னோட பள்ளிக்கூடத் தில ஒண் டா ப்படிச்ச, பிறகு தொண்ணூறில சண்டை தொடங்க இயக்கத்துக்கு போன கண்ணனும் இருக்கிறான். அந்த 'பேஸ்'டியில வந்தோடன ஆச்சி நிண்டிட்டா. நிண்ட தோட நிக்காம 'பேஸ்' கேற்றை தட்டித் திறந்து கொண்டு ஆச்சி பொங்கல் பானையோட நடக்கிறா.

□ □

தொண்ணூறு ஆடியில எங் கட மாமாவின்ர வீட்டில பீப் பாக்குண்டு விழுந்து வீடு அப் பிடியே தரைமட்டமாப் போச் சுது. அதில மாமாவும், ஆச்சி யின்ர செல்லப் பேத்தி- மாமா வின்ர ஒரே மகளும்சரி.

அதில இருந்து ஆச்சி நொருங் கிப் போட்டா. 'பொல்லு' மாதிரி இருந்த மனுசி. மகனும் பேத்தியும் போன பிறகு என்ன மாதிரி சுறுண்டு போச்சுது'' எங் கட பக்கத்து வீட்டு அங்கிள் அடிக்கடி சொல்லுவார். அதோட ஆச்சி கோயிலுக்குப் போறேல்ல.

பிறகு இப்ப நிலாவரையில அந்த 'அவ்ரோ' தலைகீழா விழுந்து சிதறின அண்டைக்குத் தான் ஆச்சி திரும்பவும் சிரிச் சவ். □□

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாச்சாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும்; எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழா! உன்னைத்தான்



உணர்ச்சிக் கவிஞர்
காசி. ஆனந்தன்

விலங்குகள் பூட்டப்பட்ட
விலங்குகளாய் வாழ்ந்த
நீக்கிரோவர் விடுதலை
பெற்றுவிட்டார். உலகில்
தமக்கென பல நாடுகளும்
அரசுகளும் கொண்ட உயர்
மாந்தர் ஆகிவிட்டார். ஆனால்
வேந்தர்கள் மதித்திட்ட
வேந்தர்களாய் வாழ்ந்த நீயோ
வீழ்ந்து விட்டாய். பாரில்
உனக்கென ஒரு நாடும் அரசும்
கூட இல்லாத பாவி
ஆகிவிட்டாய்.

பிழித்தீவில் உன்னைப் பிழிந்து
கரும்பு பிழிந்தாய்! மொரேசியஸ்
தோட்டத்தில் முதுகொடியப்
பாடுபட்டாய்!
தென்னாபிரிக்காவில் மூட்டை
சுமந்து தேய்ந்தாய்! பர்மாவில்
பச்சை இரத்தம் சிந்திப் பயிர்
வளர்த்தாய்! மலேசியாவில்
மாடாய் உழைத்து ஓடாய்
மெலிந்தாய்! அந்தமான்தீவில்
செந்தழல் வெய்யிலிலே நொந்து
பிழைத்தாய்!
அங்கிங்கெனாதபடி எங்கணும்
தொழும்பு செய்யும்
அனைத்துலக அடிமையானாய்!
தமிழகப் பெருநிலமும்
ஈழத்தமிழ் மண்ணும் உன்
தாயகமாய் இருந்தும்
தன்னாட்சியும் தனிக்கொடியும்
இல்லாத காரணத்தால்
என்னரும் தமிழா!
நீ தாழ்வுற்றாய்!
தலை கவிழ்ந்தாய்!

விழி! எழு! விடுதலை
வேட்கை கொள்! பொங்கிச்
சினந்து போராடு!
அடிமைத்தளை அறுத்தெறி!
வெற்றிகொண்டு வா!
தமிழரசு தனை நிறுவு
நிமிர்ந்து வாழ்!

தமிழ் மாணவர்களே!
உங்கள் ஆற்றல் ஒப்பிலாதது
உங்கள் இனத்தின் ஒளிமிக்க
எதிர்காலம் உங்கள்
கரங்களிலேயே தங்கியுள்ளது.
உணர்ச்சியோடு உங்களை
உருவாக்கிக் கொள்ளுங்கள்!

புவியியல் படிப்போர்
தமிழகத்தினதும் ஈழத்தமிழ்
நாட்டினதும் நில அமைப்பை
ஊன்றிப் படியுங்கள். வரலாறு
படிப்போர் இத்தமிழர்
பெருநிலத்தில் நேற்றுத்
தமிழன் வாழ்ந்த வாழ்வைப்
புரட்டிப் பார்த்து 'அன்று
வாழ்ந்தோமே - இன்று
வீழ்ந்துவிட்டோமே' என்று
ஏங்குங்கள்.

புள்ளிவிபரம் படிப்போர் உலகின்
ஏனைய நாடுகளின் நிலப்பரப்பு-
மக்கள் தொகை - இவற்றோடு
தமிழ்ப்பெரு நிலத்தின்
நிலப்பரப்பு - மக்கள் தொகை
ஆகியவற்றை ஒப்பிடடு நமக்கென
ஒரு பேரரசு ஏன்
இருக்கக்கூடாது என்று
சிந்தியுங்கள். பொருளாதாரம்
படிப்போர் நமது தமிழ்ப்பேரரசு
தனித்து வாழும் அளவு
பொருள்வளமுடையது
என்பதைச் சான்றுகளோடு
எடுத்துக் காட்டுங்கள். அரசியல்
படிப்போர் அடிமைகளாய்த்
துன்புறும் தமிழ்ப்பெரும்
இனத்துக்கோர் தமிழ்ப் பேரரசு
அமையப் போராடுங்கள்.

தத்துவம் படிப்போர்
அறம் வென்றே தீரும்!' என
ஒங்கி முழங்குங்கள்! அறிவியல்
படிப்போர் நாளை அமையும்
நமதரசை எவ்வாறு அழகு
படுத்தலாம் - பொலிவு
படுத்தலாம் என இன்றே
ஆய்வுகள் நிகழ்த்துங்கள்;

மாணவச் செல்வங்களே!
உங்கள் கரங்களில் மானத்தமிழ்ப்
பேரரசு மலரட்டும்!

(கவிஞரின் 'தமிழா உன்னைத்தான்' என்ற உரைத் தொகுப்பு நூலிலிருந்து -1972)

மார்க்சிச அழகியல்

மார்க்சிச விமர்சகர்களும், மெய்யியலாளர்களும் நியமவாதக் கருத்துக்களால் ஒரு பொழுதும் கவரப்படவில்லை. கலை — அழகியலின் சமூகவியல் பற்றியே இவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். சமூகம், அரசியல், பொருளாதாரம். வரலாறு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி கலைபற்றி ஆராய்ந்தார்கள். கலைக்கும் சமூக உறவுகளுக்குமிடையிலான தொடர்புகளே மார்க்சிச விமர்சகர்களது அக்கறைக்குள்ளானது. சமூக இலட்சியத்



கலாநிதி. சோ. கிருஸ்ணராஜா

திற்கான பங்களிப்பு, வரலாற்று ரீதியான பங்களிப்பு என்பனவற்றை மனதிற்கொண்டே கலை இலக்கியங்கள் மதிப்பிடப்பட்டன.

கலை-அழகியல் பற்றிய விரிவான ஆய்வுகளெதுவும் கார்ல் மார்க்சினாலோ அல்லது ஏங்கல்சினாலோ மேற்கொள்ளப்படவில்லை. அவர்களது ஆக்கங்களில் - குறிப்பாக 1844ல் கார்ல் மார்க்சினால் எழுதப்பட்ட ''பொருளாதார மெய்யியற் கையெழுத்துப் பிரதிகள்'' என்ற நூலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு பிற்கால மார்க்சிச சிந்தனையாளர்கள் கலை-அழகியல் பற்றிய ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளனர். பொருளாதார மெய்யியற் கையெழுத்துப் பிரதியில் காணப்படும் கலை - அழகியற் கருத்துக்கள் வருமாறு:

(1) நிஜ உலகுடன் மனிதர் கொண்ட அழகியல் நிலைப்பட்ட உறவு ஓர் சமூக உறவாகும்.

(2) கலைஞன் தன் அகத்தூண்டல் காரணமாக, தன் உழைப்பினால், ஸ்தூலமான புலப்படு பொருளாய், கலாபூர்வமான நிஜ உலகைத் தன்வயப்படுத்திய பொருளாய் கலையை உற்பத்தி செய்கிறான்.

(3) கலைப்பொருளுடன் மனிதன் கொண்ட தொடர்பு சமூகச் சார்பான குணாதிசயமுடையது.

(4) கலைப்பொருட்கள் ''அழகின்'' விதிமுறைகளிற்கேற்பக் கலைஞனால் படைக்கப் படுகின்றன.

(5) கலையானது முதலாளித்துவ உற்பத்தி முறைகளின் ஆளுகைக்குட்படும் பொழுது தன்னியல்பிலிருந்து அந்நியப்பட்டு விற்பனைப் பண்டமாகிறது.

கார்ல் மார்க்சின் மேற்குறித்த கருத்துக்களிலிருந்து ''அழகு'' மனிதரால் உருவாக்கப்பட்ட சமூகச் சார்புடைய எண்ணக்கருவென்பதும்; அழகியலுணர்வு மனிதனின் இயல்பானதும், உள்ளார்ந்தமான குணாதிசயமல்லவென்பதுவும், அது மனிதரின் வாழ்நிலையனுபவங்களினூடாக சமூகரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் வளர்த்தெடுக்கப்படுகிறதென்பதுவும் பெறப்படும்.

இது தொடர்பாக கிறிஸ்தோபர் கோட்வெல் (*Christopher Caudwell*) என்பாரின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. சமூகவியலடிப்படையில் அழகு எனும் எண்ணக்கருவை வரையறுக்க முயன்ற கோட்வெல் அதனைச் சமூகத் தொடர்புடையதும், மனித உணர்ச்சி சார்ந்ததுமான எண்ணக்கருவாக வரையறுக்கிறார். வரலாற்று ரீதியான நோக்கில் காலத்திற்கு காலம் அழகு பற்றிய கருத்தோட்டம் மாறி வந்திருக்கிறது. எந்தவொரு சகாப்தத்திலும் வாழ்ந்த மக்கள் தம் முன்னோர்கள் ''அழகியதென'' எடுத்துக்

காட்டியவற்றுடன் மட்டும் திருப்தியடைய வில்லை. மரபிலிருந்து மாறுபட்டு ''அழகியதென'' புதியவற்றை உருவாக்கினர். அழகு பற்றிய கருத்தோட்டத்தில் பழையதுடன் புதியனவாகவும் பலவற்றைச் சேர்த்துக் கொண்டனர்.

மனிதன் தன் தோற்றத்தில் மாறாத பொழுதும் அவனது கலையின் வண்ணம், அவனது கவிதை, அவனால் கட்டப்பட்டவை அனைத்தும் மாறிமாறி வந்துள்ளன. வரலாற்றின் எந்தக் காலகட்டத்திலும் அழகு பற்றிய அவனது கருத்து மாற்றமுறாத நிலையாக இருந்ததில்லையென கோட்வெல் குறிப்பிடுகிறார். இவரது அபிப்பிராயப்படி கலை உணர்ச்சிக்கூறு, அறிக்கைக்கூறு என இரு கூறுகளை உள்ளடக்கியது. முதலாளித்துவ சமுதாயம் உணர்ச்சியம்சத்தை மட்டுமே கலையின் இலக்கணமாக முதன்மைப்படுத்தி அதனை விற்பனைப் பண்டமாக்கிற்று. இதன்பேறாக கலையின் அறிகைக்கூறும் அதன் சமுதாயத் தொடர்பும் புறக்கணிக்கப்பட்டு மனிதனின் இயல்பூக்கத்தை மட்டுமே திருப்திப்படுத்துமொன்றாக முதலாளித்துவ சமுதாயம் கலையை மாற்றியுள்ளது. நாவல்கள், திரைப்படங்கள் ஆகியவை மட்டுமல்ல ''ஜாஸ்'' இசைகூட முதலாளித்துவ சமுதாயத்தில் கலையின் பெயரால் நரப்படும் வணிகநிலைப்பட்ட உற்பத்திப் பண்டங்களே யென கோட்வெல் வாதிடுகிறார்.

ஒரு குறிப்பிட்ட வகையான வரலாற்று நிர்ப்பந்தமே ஒரு குறிப்பிட்ட வகையான கலையைத் தோற்றுவிக்கிறது. எனவே கலை பற்றிய விளக்கத்திற்கு அக்கலையின் தோற்றத்திற்கான வரலாற்று நிர்ப்பந்தங்கள் பற்றிய அறிவு இன்றியமையாதது. குறிப்பாக கலை பிரதிபலிக்கும் கருத்துநிலை அல்லது அது முன்னெடுக்கும் கருத்துநிலை என்பனவற்றினடியாகவே கலைப்படைப்புக்கள் ஆராயப்பட்டன. உதாரணமாக சமூகநலனும், நகரக்குடியரசின் தேவைகளுமே பண்டைய கிரேக்கத்தில் கலைகளைத் தோற்றுவித்தன. தனிப்பட்டவர்களின் தேவைகருதியோ, வருவாய் கருதியோ கலையாக்கத்திலீடுபடும் தேவை கலைஞர்களுக்கிருக்கவில்லை. ஆனால் மறுமலர்ச்சிக்காலத்திலோ நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. அக்காலக் கலையை அதாவது மறுமலர்ச்சிக்கால கலையை அக்கால சமூக நிறுவனமான ''கில்டு'' தொழிற் கழகங்கள் என்பதுடன் தொடர்புறுத்தாது சரியாக விளங்கிக் கொள்ள முடியாது. வர்க்க நிலைப்பட்ட ''கில்டு'' என்ற கழகங்களே பூர்வீக முதலாளித்துவத்தை மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றுவித்தன. கலையாக்க முயற்சி கூட்டுமுயற்சி என்பதிலிருந்து விடுபட்டு தனியார் முயற்சியாக மாற்றம் பெறுகிறது. கூட்டுப்பண்பாட்டு முறைமை தனியார் பண்பாட்டு முறைமையாக மாற்றம் பெற, அம்மாற்றம் அக்கால கலையிலும் பிரதிபலிக்கிறது. மத்திய காலத்தில் இறைவனின் கண்களால் உலகை அணுகிய கலைஞர்கள் இக்காலத்தில் தமது கண்களினூடாக உலகைப் பார்க்கத் தொடங்கினர். மனிதனை மையமாகக் கொண்ட உலக நோக்கு முதன்மைபெறலாயிற்று. கலைப் படைப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கலைஞர்களின் ஆக்கங்களாயின. லியனார்டோ டா வின்சி, மைக்கல் ஏஞ்சலோ போன்ற புகழ் பெற்ற ஓவியர்கள் பூர்வீக முதலாளித்துவ சமூகத்தின் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலைப்படைப்புகளை எவ்வாறு அணுகுதல் வேண்டும், அதற்குரிய மதிப்பீடுகள் யாவை என்பனவெல்லாம் நுகர்வோனின் கருத்து நிலைச் சார்பினாலேயே தீர்மானிக்கப்படுகிறதென மார்க்சிச அழகியலாளர்கள் வாதிடுகின்றனர். இவர்களது அபிப்பிராயப்படி கலைஞனது கருத்துநிலைச் சார்பு அவனது கலையாக்கத்தில் பிரதிபலிக்கிறது.

கலைஞனது கருத்துநிலைச்சார்பு தொடர்பாக பேத்தோவன் (***Beethoven***) என்ற மேற்கத்திய இசைவாணர் பற்றிநடத்தப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. பேத்தோவன் 19 வயது இளைஞனாக இருக்கும் பொழுது பிரெஞ்சுப் புரட்சி நிகழ்ந்தது. மனித உரிமைகள், எல்லா ஆண்களுக்குமான வாக்குரிமை, அரச திருச்சபையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுயாதீனமாக இயங்குதல் என்பன போன்ற பிரகடனங்களினடிப்படையில் புதிய அரசு செயற்பட்டது. பிரான்சில் காணப்பட்ட மக்கள் எழுச்சி ஜேர்மனியையும் பாதித்தது. ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்தவரான பேத்தோவன் பிரான்சின் புதிய குடியரசை வரவேற்று தனது ஆக்கங்களில் ஒன்றான ''மூன்றாவது சிம்ஃபனி'' (***Third Symphony***) யை நெப்போலியனிற்கே சமர்ப்பணம் செய்திருந்தான். ஆனால் 1804இல் நெப்போலியன் தன்னை சக்கரவர்த்தியாகப் பிரகடனம் செய்தமையால் பேத்தோவன் தனது சமர்ப்பணத்தை ''வாபஸ்'' பெற்றுக்கொண்டான்.

புதிய அரசியற் சூழலில் மத்தியதரவர்க்கத் தின் பிரதிநிதியாகவே பேத்தோவன் செயற்பட் டார். இதுவரைகாலமும் அரசவையிலும் பிரபு களின் இல்லங்களிலும் நடாத்தப்பட்டு அவர் களின் ரசனைக்குரியதாயிருந்த மேற்கத்திய சாஸ்திரீய சங்கீதம் பேத்தோவனாலும் அவனது ஆதரவாளர்களாலும் மக்கள் ரசனைக்குரியதாக மாற்றப்பட்டது. மத்தியதர வர்க்கத்தினரின் ஆதரவுடன் அவரது இசை நிகழ்ச்சிகள் நடாத் தப்பட்டன. தனது காலத்தின் சமூக முரண் பாடுகளைப் புரிந்து கொண்டு, ஜனநாயக சமூக-அரசியலில் நம்பிக்கையுடையவராக பேத்தோ வன் வாழ்ந்தாரென சிட்னி பின்கில்ஸ்ரேய்ன் (Sidney Finkelstein) குறிப்பிடுகிறார்.

மார்க்சிச அழகியல் பற்றிய ஆய்வுகளில் தைலவர்ண ஓவியங்களின் வளர்ச்சி பற்றி யோன் பேகர் (John Berger) என்பார் மேற் கொண்ட ஆய்வும் குறிப்பிடத்தக்கது. ஓவியத் தின் நேரடியான புலப்பதிவானது அதன் காட்சி யம்சத்துடன் தொடர்புடையதென உருவவாதி கள் கருதியதால் கலைப்படைப்பொன்றிற்கான ஊடகம் (அதாவது தைலவர்ணமோ அன்றி நீர் வர்ணமோ) எதுவாயிருத்தல் வேண்டுமெனத் தீர்மானிப்பது உருவவாதிகளின் அபிப்பிராயப் படி கலையாக்கத்திற்கு மிகவும் முக்கியமானது. ஆனால் பேகரின் அபிப்பிராயப்படி உருவவாதி களின் இக்கருத்து தவறானது. ஓவியவரைதலின் உத்திமுறைகளை விருத்தி செய்து நிறைவு செய் யும் தேவையே தைலவர்ணத்தின் பாவனைக்கு ஏதுவாயிற்றென அவர் குறிப்பிடுகிறார். தைல வர்ணத்தைப் பயன்படுத்தி ஆண்-பெண் உட லழகை வெளிக்கொண்டு வருமளவிற்குச் சிறப் பாக ஏனைய ஊடகங்களால் வெளிக்கொண்டு வரமுடியாதிருந்தது. இத்தகைய சிறப்பியல் பான குணாதிசயம் தைலவர்ணத்தைத் தவிர ஏனைய வர்ண ஊடகங்களிற்கில்லை. தைலவர் ணத்தின் இச்சிறப்பியல்பே ஓவியங்களை விற் பனைப் பண்டங்களாக்கிற்று.

ஒவ்வொரு கால சமூக - பொருளாதாரச் கட்டமைவும் எவ்வாறு அவ்வக்கால கலையிலும், கலைஞர்களிலும் ஆதிக்கம் செலுத்துகிறதென் பதை மார்க்சிச அழகியலாளர் அவ்வக்காலக் கலைவாலாற்றிலிருந்து தெளிவுபடுத்துகின்ற னர். இது தொடர்பாக 19ம் நூற்றாண்டுக் கலைவரலாறு பற்றிய மக் ரபேல் (Max Rapheal) என்பார் செய்த ஆய்வுகளும் குறிப்பிடத்தக் கவை.

19ம் நூற்றாண்டில் கட்டுப்பாடில்லாச் சந் தைப் பொருளாதாரம் பொருள் உற்பத்தி முறையில் பாரியமாற்றங்களை ஏற்படுத்த, அம் மாற்றம் சமூக அரசியலரங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாயின. மரபுவழிக் கலைகள் கீழ் நிலைக்கு இழிந்து செல்ல கட்டுப்பாடில்லா வர்த்தகம் வழிலகுத்தது. கட்டிடக்கலையில் இம்மாற்றம் தெளிவாகப் புலப்பட்டது. பழைய காலப் பாணியிலான கட்டிட அமைப்பு முறை இக்காலத் தேவைக்கு முற்றிலும் பயன்படா தவையாகவே மாறிவிட்டது. இரும்பு, சீமெந்து, கண்ணாடி போன்ற புதிய மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கட்டிடக்கலை முதலாளித்துவப் பொருளாதார செயற்பாடுகளிற்கு இன்றியமை யாதிருந்தது. கலையம்சத்துடன் கூடிய பாரிய கட்டிடங்களும், சுவரோவியங்களும் தமது மகி மையை இழந்தன. ''கன்வசில்'' வரைதலே பெருவழக்காயிற்று.

கலையின் கருப்பொருளாய் கலைஞர்கள் புதிய புதிய விடயங்களைத் தெரிந்தெடுத்தனர். கிரேக்க, ரோமானிய, மத்தியகாலக் கிறீஸ்தவக் கலைகளில் ஐதீக வரலாற்றுச் சம்பவங்களே பிரதான கருப்பொருளாயிருந்தது. ஆனால் முத லாளித்துவ சமூக அமைப்பில் இத்தெரிவு

> சுதந்திரந்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும்; தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும்; படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.
>
> தமிழீழத் தேசியத் தலைவர்
> திரு. வே. பிரபாகரன் அவர்கள்

யதார்த்தவாதத்தையும், புலனின்பவாதத்தை யும் நோக்கி நகரலாயிற்று. மனே (Manet) டிகாஸ் (Degas) போன்ற ஓவியர்கள் மத்தியதர வர்க்கத்தின் சமூக வாழ்க்கையையே தமது ஓவி யங்களில் கருப்பொருளாக்கினர். மோனே (Monet), றினோர் (Renior) இயற்கையை முற் றிலும் புதியமுறையில் அணுகினர். றேடின் (Rodin) பிரதிமை வரைதலில் புதிய பார்வை யொன்றைக் காட்டினார். கலையில், குறிப்பாக ஓவியத்திலும் சிற்பத்திலும் தராதர நியமங்கள் புறக்கணிக்கப்பட்டு சார்பு நிலை முதன்மை பெறலாயிற்று.

இவ்வாறு மார்க்சிச அழகியலானது கலை வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களை அவ் வக்காலங்களிற்குரிய சமூக பொருளாதார வர லாற்றடிப்படையில் ஆராய்வதன் மூலம் அவ் வக்காலக் கலையின் மெய்யான இயல்புகளையும் அவற்றின் கருத்து நிலைச் சார்பையும் வெளிக் கொண்டு வரவும், அதனூடாக கலைகளைப் புரிந்து கொள்ளவும் முயலுகிறது. மார்க்சிச அழகியலை யதார்த்தவாதமாகவோ அல்லது சோசலிச சமுதாயத்தின் கலைபற்றிய பிரச்சனை களை ஆராய்ந்து தீர்வுகாணும் ஓர் தத்துவமா கவோ குறுகிப் பார்க்க முயலுவது கலை-இலக் கியம் பற்றிய தவறான கருத்தோட்டத்திற்கு இட்டுச் செல்லும். இது தொடர்பாக லூக்காஸ், (Lucas) பிறெஃக்ட் என்பவர்களுக்கிடையிலான கருத்துமுரண்பாடுகள் அவதானிக்கத்தக்கது. கலை-இலக்கியத்தின் இன்றியமையாக் குணாதிச யமாக யதார்த்தவாதம் இருத்தல் வேண்டுமென வும், நிஜ உலகைப் பிரதிபலிப்பதுடன் சமூக முரண்பாடுகளை அதன் நெருக்கடிகளை, கலைத் துவ ஒழுங்குடன் வெளிக்கொண்டு வருவனவா யிருத்தல் வேண்டுமெனவும் லூக்காஸ் வாதிட் டார். ஆனால் லூக்காசின் யதார்த்தவாதம் பற்றிய விளக்கத்தை பிறெஃக்ட் முற்றாக நிரா கரித்தார். கலை-இலக்கியங்களின் உருவ ஒழுங் கமைப்பு என்ற கருத்தாக்கம் நிராகரிக்கப்பட் டது. பால்ஸாக் டால்ஸ்டாய் வகையறா யதார்த்த வாதத்தை கலை – இலக்கியங்கள் அனைத்திற்குமான பொதுவடிவமாக அங்கீகரிப் பதையும் பிறெஃக்ட் நிராகரித்தார். ஒரு குறிப் பிட்ட வரலாற்றுக் காலத்தைச் (19ம் நூற் றாண்டிற்குரியது) சார்ந்த கலை-இலக்கிய வடி வத்தை எல்லாக் காலத்திற்குமுரிய கலைக் கோட்பாடாக அர்த்தப்படுத்தக் கூடாதெனவும், அவ்வாறு அர்த்தப்படுத்திக் கொள்வது ஒரு வகையான உருவவாதமேயாகுமென பிறெஃக்ட் எச்சரிக்கிறார். மாறா இயல்புடைய, எக்காலத் திற்கும் பொருத்தமான அழகியல் விதிகளென எதுவுமில்லையென்பது இவரது நிலைப்பாடா கும்.

சோசலிச யதார்த்தவாதம் என்ற கலை-இலக்கியக் கோட்பாடு முன்னைய சோவியத் யூனியனின் எழுத்தாளர் ஒன்றியத்தால் (1932 - 34) முன்வைக்கப்பட்டதொன்றாகும். 19ம் நூற்றாண்டின் யதார்த்தவாதமும், 1917ல் நடைபெற்ற புரட்சியின் விளைவாகக் கருக் கொண்ட அரசியற் கொள்கையும் இணைக்கப் பட்டு சோசலிச யதார்த்தவாதம் பிறப்பிக்கப் பட்டது ''எழுத்தாளர்கள் மனித ஆன்மாவைச் சீர்செய்யும் பொறியியலாளர்கள்'' என்ற ஸ்டாலினது கூற்று 1934ம் ஆண்டு எழுத்தாளர் மகாநாட்டில் நினைவூட்டப்பட்டு வற்புறுத்தப் பட்டது. மகாநாட்டுத் தலைவரான அந்ரே ஷடனோவ் இலக்கியம் வர்க்கச் சார்புடையதே என்றும், வர்க்கச்சார்பில்லாத, அரசியற் சார் பில்லாத இலக்கியமென எதுவுமில்லை என்றும் பிரகடனம் செய்தார். இதிலிருந்தே சோசலிச யதார்த்தவாதம் இலக்கியத்தில் ஓர் அரசியற் கோட்பாடாக உதித்தது.

ஆனால் கலை-இலக்கிய ஆக்கத்தில் அரசி யற்திணிப்பை ஏற்றுக்கொண்டவர்களாக மார்க் சிசத்தின் மூலவர்கள் காணப்படவில்லை. கலை-இலக்கியங்கள் தம்காலத்து சமூகநிலைமைகளை, மனித உணர்ச்சிகளை வெளியிடுவனவென்பதில் அவர்கள் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த னர். விற்பனைப் பண்டமாக உற்பத்தி செய் யப்படும் பொழுது ஈடுபாட்டுடன் கூடிய ஆக்கத் திறன் அற்றுப்போய் விடுகிறதென மார்க்ஸ் குறிப் பிட்டார். மார்கறட் கார்க்னஸ் (Margaret Harkness) என்பாரின் நாவல் பற்றிக் கடிதமெழு திய (1888) ஏங்கல்ஸ் அவரது நாவல் வெளிப் படையான சோசலிச நாவலாக இல்லாதிருப் பதையிட்டு பாராட்டினார். வரலாற்று அறிஞ னாலும் பொருளியலாளனாலும் கணிதவியலா ளனாலும் தரமுடியாத அளவிற்கு சகல பொரு ளாதார விபரங்களுடன் தன்காலத்துப் பிரெஞ்சு சமூகத்தை தன் கருத்துநிலைச் சார்பிலிருந்து விடுபட்டு பால்ஸாக் தருவதாக ஏங்கல்ஸ் ஒரு முறை குறிப்பிட்டார். எழுத்தாளர்கள் தாம் விரும்புவதை எழுதலாம். அதற்கு அவர்களிற்கு சுதந்திரமுண்டு. ஆனால் அவர்கள் (எமது) கட்சியின் நிலைப்பாட்டை ஏற்காதவரை 'கட்சி வெளியீடுகள் தமது ஆக்கங்களை வெளியிட வேண்டுமென எதிர்பார்தலாகாதென கட்சி யமைப்பும் கட்சி இலக்கியமும்' (1905) என்ற கட்டுரையில் லெனின் எழுதியமையும் இங்கு மனங்கொள்ளுதல் தகும். □□

பேய்

ஜெயமோகன்

தீவட்டிப்பட்டியைச் சேர்ந்த மாணிக்கம் சேலம் ரயில் நிலையத்தில் என் அருகே வந்து அமர்ந்து மணி என்ன இருக்கும் என்று விசாரித்தார். கடிகாரம் இல்லை என்று நான் சொன்னதும் வியப்புடன் என் இரு கைகளையும் மாறி மாறிப் பார்த்தார். அடிக்கடி நேரத்தை அளந்தபடி வாழ்வதில் சுதந்திரம் இல்லை என்று நான் விளக்கியபோது என்னை வியப்பிலாழ்த்தியபடி மாணிக்கம் அதை எளிதில் புரிந்து கொண்டார். தீவட்டிப்பட்டியில் அவருக்கும்கடிகாரம் இருக்கவில்லை. பஞ்சாயத்து அலுவலகத்தின் சங்கு போதுமானதாக இருந்தது. ஆனால் கண்ணூரிலும் காசர்கோட்டிலும் சரியான நேரத்தில் வேலைக்குப் போகவேண்டும். கட்டிட வேலை. பிந்தினால் வேலை கிடைக்காமலும் போகும். நானும் காசர்கோட்டில் வேலைபார்த்திருக்கிறேன் என்பதிலும், அங்குதான் போகிறேன் என்பதிலும் மாணிக்கம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கேரளத்தில் அனைவரும் பிரா மணர்களா என்ற நீண்ட நாளைய ஐயத்தை கேட்டுவிட்டு சாதகமான பதிலுக்காக என்னை ஆவலுடன்பார்த்தார். ஆமாம் என்று நான் கூறியதும் தன் திறமையை எண்ணி மகிழ்ந்து சிரித்தார்.

மாணிக்கம் கவுண்டர் ஜாதி. ஆனால் வன்னியக் கவுண்டர். பலர் வெள்ளாள கவுண்டர்என்று எண்ணிவிடுகிறார்கள். ஆயினும் வெள்ளாளக் கவுண்டர்களுக்கு இம்மியும் குறைந்த சாதியல்ல இது. சொந்த ஊரில் பத்து ஏகரா நிலம் உண்டு. ஊர் நடுவே நல்ல வீடு. நான்கு அறைகளும் தனியாக சமையலறையும் உள்ள வீடு. மொத்தம் எட்டு உடன் பிறப்புக்கள். இரண்டு தங்கைகளுக்கு கல்யாணமாகி விட்டது. இரண்டுபேர் மீதி. அண்ணாக்கள் இருவர் குடும்பிகள். அப்பா அம்மா இரண்டு தங்கைகள் அடங்கியது மாணிக்கத்தின் இப்போதைய குடும்பம். அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கேட்டேன். மாணிக்கத்தின் முகம் கறுத்தது. தெரியவில்லை. அவர்களைத் தேடித்தான் அவர் சென்று கொண்டிருக்கிறார்.



மாணிக்கத்தைப் போல பத்தாயிரக்கணக்கான சிறு விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் ஆகி பல வருடங்கள் ஆகின்றன. கிணற்றிலிருந்து ஏற்றம் இறைத்து விவசாயம் செய்திருந்தனர். முன்பெல்லாம், மாணிக்கத்தின் தந்தையின் காலத்தில், மழைக்காலத்தில் ஊரைச் சுற்றியுள்ள குளங்களும் ஏரிகளும் நிரம்பும். வருடம் முழுக்க கிணற்றில் நீர் இருக்கும். இப்போது எதிலும் தண்ணீர் தங்காது. நீர் வரும் வாய்க்கால்கள் முழுக்க மண்மூடி மறைந்து விட்டன. கரைகளும் உடைந்து அழிந்து விட்டன. இரண்டு ஏரிகளை திறந்து, வெட்டவெளியாக்கி ஊர் முதலாளிகள் தொழிற்சாலை கட்டியிருக்கிறார்கள். மீதி நீர்நிலைகளில் அரசாங்கம் 'சமூகநலக் காடு'கள் நட்டு வளர்த்துள்ளது. தொழிற்சாலைகளுக்காக ஆழ்குழாய் மூலம் நீரை உறிஞ்சுவதால் கிணறுகளில் மழைக் காலத்திலும் தண்ணீர் இல்லை. குடிநீருக்கே தட்டுப்பாடு. விவசாயநிலத்தில் உடைமுள் வளர்ந்து, விறகாக்கி விற்று, கொஞ்ச நாள் சாப்பிட்டார்கள். சமூகநலக்காடுகள் வந்ததும் விறகுக்கு விலை இல்லாமலாயிற்று. வீட்டு உபயோகப் பொருட்களை விற்று மேலும் சில மாதங்

கள் போக்கினார்கள். வேறு வழியே இல்லை. எங்காவது போய்த்தான் ஆக வேண்டும். அண்ணாக்கள் பங்களூருக்குப் போனார்கள். சில உறவினர்கள் ஹாசன் பகுதியில் தோட்ட வேலைக்கு போனார்கள். ஒரு நண்பர் மாணிக்கத்தை கேரளத்தில் கட்டிட வேலை இருப்பதாகக்கூறிக் கூட்டிச்சென்றார். கேரளம் மாணிக்கத்திற்கு பிடித்திருந்தது. ஆனால் மோகன்லால், மம்முட்டி இருவருமே சோப்ளாங்கிகள். சண்டைக் காட்சிகளில் வேகம் போதாது. ரஜினிகாந்த் படங்கள் வருகின்றன. அதனால் ஓரளவு சமாளிக்க முடிகிறது.

பொதுவசதிப் பெட்டியில் என்னோடு மாணிக்கமும் ஏறிக் கொண்டார். ஆனால் இருக்கையில் அமர விரும்பவில்லை. அது தர்மம் இல்லை. பயணச் சீட்டு எடுக்காதவர்கள் தரையில்தான் அமரவேண்டும். மாணிக்கம் இராவெல்லாம்பேசினார். பேச்சு அவரை ஒரு ரயில் வண்டிபோல சுமந்து சென்றது. ஜெயலலிதாவை மாணிக்கம் வெறுத்தார். அவள் ரஜினிகாந்தின் விரோதியல்லவா? நான் 'மன்னன்' படம் பார்க்காதது பெரிய தோர் இழப்புத்தான் என்றார். அதில் விஜயசாந்தியிடம் ரஜினிகாந்த் கூறுவதெல்லாம் உண்மையில் ஜெயலலிதாவை குறிவைத்துத்தான். நீ ரோட்டமான மாணிக்கத்தின் பேச்சு அவரை ஒரு சராசரி தமிழராக எனக்குக் காட்டியது. திடீரென்று முள்ளாக எதுவோ குத்தியது. வேலை முடிந்து கூலி வாங்கி விட்டு எல்லாரும் கூட்டம் கூட்டமாக கள்ளுக்கடைக்குப் போவது பற்றி மாணிக்கம் கூறிக் கொண்டிருந்தார். பெண்களும் குடிப்பவர்களா என்ன என்று வியப்புடன் கேட்டேன். குடிக்காமல் எப்படி பாதையோரமாக படுக்க முடியும் என்றார் மாணிக்கம். ஊரை விட்டு வந்தால் அதையெல்லாம் பார்க்க முடியுமா? நாலுபேர் பார்க்க தண்ணீர் குடிக்கும் பழக்கம் கூட ஊரில் இல்லை. இங்கே சமையலும் கூட பாதையோரத்தில் தான். தூக்கமும், காலைக்கடன்களும், குளியலும் எல்லாம் அங்கேதான். ஆனால் ஒன்று உண்டு. தனியாக இல்லை. கூட்டம் கூட்டமாக தங்குவதனால் வழிப்போக்கர்கள் கவனிப்பதை நாம் அறிவதில்லை. தமிழ் நாடு போல் அல்லாமல் கேரளத்தில் நல்லகள் கிடைக்கும். விலை அதிகம் தான். சிலசமயம் கூலி போதாமல் ஆகும். வீட்டில் பணம் தர வேண்டியதில்லை என்பதுதான் ஆறுதலான விஷயம். பெண்களுக்கு பணத்துக்கு குறைவேயில்லை. அதெப்படி அவர்களுக்கு கூலி குறைவல்லவா? மாணிக்கம் தலையாட்டி சிரித்தார். அதெல்லாம் அப்படித்தான். நாம் தலைசுற்றி ஏதாவது சாக்கடையோரம் படுத்து துரங்கிக் கொண்டிருப்போம். பெண்களை அப்படி தூங்க ஊர்காரர்கள் விட்டு விடுவார்களா என்ன?

என் உடம்பு நடுங்கியது. உணர்வு பூர்வமாக நான் என்றும் தமிழன். என் முன்னாலிருக்கும் இந்த மனிதன் அழுகி நாறுவதாகப் பட்டது. அதன் வீச்சும் என்மீது பரவுவதாகத்

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவில் வெளிச்சம் நினைகிறது



தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான், திலீபன் செய்திருக்கிறான்.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகின்றது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும் விளைச் சல்களையும் நுடபமாகச் சித்திரிக்கும் கலை - இலக்கியங்கள் உன்னதமானவை.


தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தோன்றியது. வாந்தி வருவது போலிருந்தது. அவனை அழித்து விட, நேற்றும் நாளையும் அவன் இல்லை என்று ஆக்கிவிட, நான் ஆசைப்பட்டேன். மாணிக்கம் ஏதுமறியாமல் பேசிக் கொண் டிருந்தார். மலையாளத் திரைப் பட நடனங்கள் தூக்கத்தில் ஆடு வது போல உள்ளன என்று கூற ஆரம்பித்தார். அவர் கண்க ளைப் பார்த்தபோது ஒருவித அலுப்பும் தனிமையும் ஏற்பட் டது. அவரிடம் ஏதும் பேச முடியாது. அவர் வெறும் ஒரு மிருகம்தான். தீவட்டிப்பட்டியில் தனது வீட்டில் இரண்டாயிரம் வருடக் கலாச்சாரத்தின் வாரி சாக அவர் வாழ்ந்திருக்கக் கூடும். மண்ணை விட்டு பிரிந்து தெரு வுக்கு வந்த கணம் அவருக்கு எதுவும் மிஞ்சாமலாயிற்று. அவர் நாடோடியல்ல. நாடோ டிக்கு அவனுக்கே உரிய கலாச் சாரம் உண்டு. நாடோடி சமூகங் கள் இவர்களை தங்களருகே வர அனுமதிக்கமாட்டார்கள். விவ சாயியால் ஒருபோதும் நாடோடி யாக ஆக முடியாது. இலட்சிய கற்பனைகளும், கலையும், இலக் கியமும் எல்லாம் குமட்டல் தரு பவையாக ஆகும் தருணம் இது. சுதந்திர பாரதம் உருவாக்கிய பலகோடி அகதிகளில் ஒருவர். ஹரியாவிலும் ராஜஸ்தானிலும் பல இலட்சம் மக்களை அணைக் கட்டுகளும் தொழில் நகரங் களும் அகதியாக்கின. பிரம்ம புத்திரா வெள்ளங்கள், பாகிஸ் தான் போர்கள். நர்மதா சம வெளியிலும் டோக்ரி மலைகளி லும் வரும் அணைகள், பலிய பாலில் ராக்கெட் நிலையம் என்று கதை இன்றும் தொடர் கிறது. தமிழகத்திலிருந்து வரட்சி யினால் ஒவ்வொரு வருடமும் பத்தாயிரக் கணக்கான மக்கள் கிராமங்களை விட்டு நகரங் களை தேடிச் செல்கிறார்கள். இந்தியாவின் எந்த நகரத்திலும் தமிழர்கள் நிரம்பிய சேரிகள் உண்டு. இவர்களுடைய கலாச் சாரத்திற்கு வயதென்ன என்ற விவாதம் தமிழ்நாட்டில் கூடாக இன்னும் நடந்து வருகிறது.

மாணிக்கம் கண்ணூருக்கு போகிறார். அங்கு தன் குடும் பத்தை தேடிய பிறகு கட்டா யம் காசர்கோடு வருவார். என்னை வந்து பார்ப்பார். குடும்பத்தில் எவரிடமும் கடிதத் தொடர்பு இல்லையா என்று கேட்டேன். அவர்களுக்கு எழு தத் தெரியாது. மாணிக்கம். 'அஞ்சாம்கிளாஸ்' பாஸ் ஆகி யிருக்கிறார். ஆனால் அவர்க ளுக்கு நிரந்தர விலாசம் இல் லையே. மாணிக்கம் எங்கிருந் தார் இதுவரை? சிறையில். சிறையிலா? ஆமாம், ஒருவனை வெட்டி கையை துண்டித்துவிட் டார். கழுத்தில் வெட்டிய போது அவன் தடுத்தான்; கை போயிற்று. கழுத்தில் விழுந் திருந்தால் தூக்குத்தண்டனை கிடைத்திருக்கும். வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட் டார்கள் தெரியுமா? சிவாஜி நடித்த படம். சிவாஜிக்கு சண்டைபோடத்தெரியாது. இப் போது விடுதலை கிடைத்து விட்டதா? இல்லை. பரோலில் இறங்கியிருக்கிறார். மூன்று வரு டம் தண்டனை. எட்டுமாதம் தான் ஆகியிருக்கிறது. எதற் காக மாணிக்கம் வெட்டினீர்கள்? போதையிலா? இல்லை சார் வேண்டுமென்றேதான். அவன் மாணிக்கத்தின் சகோதரியின் காதலன். அவர்கள் திருமணம் செய்ய நினைத்திருந்தார்கள். அதை நாலுபேர் கூறிக்கேட்டு மாணிக்கம் விசாரித்தார். அவன் சொன்ன பேச்சை கேட்காமல் எதிர்த்தான். வெட்டினார். தலையில் விழாதது அவன் புண்ணியம்.

அவர்கள் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? மாணிக் கம் ஏன் இவ்வளவு வெறி கொள்ளவேண்டும்? விரோதம் தான். அதில் மட்டும் எந்தவித மானசமரசத்திற்கும் மாணிக்கம் தயாராக இல்லை. இப்போது எல்லாருக்கும் தெரிந்திருக்கும் மாணிக்கம் யாரென்று. இல்லா விட்டால் அவர்கள் தலையை எடுத்துக்கொண்டுதான் மாணிக் கம் திரும்பி போவார். என்ன வெறி இது என்று நான் கொதித் தேன். ஆம். வெறிதான். பைத்தி யம்தான். மாணிக்கம் உணர்ச்சி கொதிப்படைந்து நடுங்கினார். தெருப்பொறுக்கியானாலும் மாணிக்கம் அப்புனுக் கவுண்ட ரின் பேரன். அவன் உயிரோடி ருக்கையில் கவுண்டச்சி இழிசாதி யுடன் வாழஅனுமதிக்க முடி யாது. மாணிக்கத்தின் கழுத்து நரம்புகள் அசைந்தன. வெகு நேரம் அவர் ஏதும் பேசவில்லை.

(மலையாள மொழியில் மாத்ரு பூமி இதழில் வெளியான இக்கட் டுரை திரு. ஜெயமோகனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)



இராத்திரிப் பூச்சியின் போர்ப்பாட்டு

கருணாகரன்

இராத்திரிப் பூச்சியே
என்னோடு இரு
உன் பாடலை நிறுத்தி
இரகசியமாக உணர்;
காற்றின் சருமம் நடுங்குவதை,
ஒரு கண்ணிழந்த பறவையென
இந்த இரவு திசைகெட்டுப் பரிதவிப்பதை.

இது உயிரை உசுப்பும் துயரமல்லவா?

இந்தக் கணம்
என்னோடு இரு
எந்தச் சத்தமுமின்றி
காலத்தின் சொல்கேட்டு
மிக அவதானமாக
மிக ஆக்ரோசமாகக் காவலிருப்போம்.

எதிரே, வாழைகள் நெரிபடும்
தோட்டத்தின் பின்னே
வெளியில்; புற்கள் மண்டிய வெளியில்
ஏதோ நாலுபறவைகள்
திடுமெனப் பறந்தெங்கோ இதய
பாழடைந்த நிழல்களாய்
பகை மூட்டமையும்.
ஆட்களற்ற வீடுகளிலிருந்து
பரியலங்கள் உலாவுகின்ற
வாடைபடும் எல்லை இது
அழுக்கு மாலை அணிந்து பிணத்தின்
வாடையுடன்
சூரர்கள் வெறிகொண்டு திருவர்.


வாடையின் குறிப்புணர்ந்து
நீ மருள்வாய்
காலம் நகங்கி முளைவதை
நானறிவேன்
என் பூச்சியே நீயும் உணர்
காலமும் சூழலும் நெருங்கிவர
மூழும் யுத்தம்
வெற்றி வரும்வரை யுத்தம்.

நெஞ்சுகள் கொதித்துக் கொதித்துக்
குமுறும் வெம்மையில்
நூற்றாண்டுகால அபுமைச் சாசனங்கள்
எரியுண்டு போக
இராத்திரிப் பூச்சியே
அப்போது பாடு
மருளாமல் ஆக்ரோசமாகப் பாடு
நம் நிலத்தில் முளைத்த போர்ப்பாட்டை.

தமிழ் உயிர்ப்பில் மட்டக்களப்பு

விரிவான ஒரு கலை இலக்கிய வரலாற்றுக்கான ஒரு பிராரம்பக் குறிப்பு

பேராசிரியர்
கார்த்திகேசு சிவத்தம்பி



ஈழத்தின் தமிழ் நிலைப்பட்ட வரலாறுகளை யாழ்ப்பாண மையப்பாட்டுடன் நோக்கும் ஒரு முறைமை நிலவி வருகிறதென்பதை பூரணமாக மறுத்துவிட முடியாது. ஒட்டுமொத்தமான தமிழ் நிலைச் செயற்பாடுகள் பற்றிப் பேசும் பொழுது மற்றைய பிரதேசங்கள் அவற்றிற்குரிய கணிப்பினைப் பெறுவது குறைவே. இதற்கு முக்கிய காரணம் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தமிழ் நிலைப்பட்ட வரலாறு வரன் முறையாக வெளிக்கொணரப்படாதுள்ளமையாகும்.

'ஈழத்துத் தமிழ்' என்பது ஒரு தனிப்பண்பாட்டு அலகாக எடுத்துக் கூறப்படத்தக்கதெனினும் அதற்குள்ளும் ஆறு உப-பண்புகள் உள்ளனவெனத் துணிந்து கூறலாம்.

மட்டக்களப்பு
திருகோணமலை(மூதூர், கிண்ணியா உட்பட)
வன்னி
மன்னார்
யாழ்ப்பாணம்
மலையகம்

என்பனவற்றைக் குறிப்பிட்ட உப பண்பாடுகளுக்கான பிரதேசங்களாகக் கொள்ளல் வேண்டும்.

உண்மையான ஈழத்துத் தமிழ்க் கலை, இலக்கிய வரலாறு எழுதப்படுவதற்கு இப்பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் செயற்பாடுகள் தனித்தும் இணைத்தும் அறியப்பட வேண்டியதவசியமாகும்.

அத்தகைய ஒரு பார்வையாளருக்கு வேண்டிய வகையில் மட்டக்களப்பின் தமிழ் நிலைச் செயற்பாடுகளை ஒரு வரலாற்று ஓட்டப்பின் புலத்தில் வைத்து நோக்குவதற்கான முன்முயற்சியை மேற்கொள்வதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும். இந்த வரலாறு இன்னும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு எழுதப்படவில்லையாதலால், இங்கு கூறப்படுவன முற்கோளாகக் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கையின் தமிழ்த் தேசியப் பிரச்சினை இன்று எய்தியுள்ள நிலையின் வளர்ச்சிக்கு மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் மிக முக்கியமானவையாகும்.

வட-கிழக்கு ஒருமைப்பாடு என்றகோட்பாடு வளர்வதற்கான செயற்பாடு தனியே யாழ்ப்பாண நிலைப்பட்ட வளர்ச்சிகளால் ஏற்பட்ட தொன்றன்று. மட்டக்களப்பை மையப்படுத்தியே (கல்ஓயா) அது தொடங்குகின்றது.

இத்தகைய ஒரு பின்புலத்தில் மட்டக்களப்பில் தமிழ் நிலைப்பட்ட செயற்பாடுகள் வளர்ந்து வந்துள்ள முறைமையினை அறிந்து கொள்வது முக்கியமாகும்.

இந்த நோக்கிலே பார்க்கும் பொழுது மட்டக்களப்பின் முக்கியத்துவம் இருமடிப்பட்டதாகும்.

அ) அது யாழ்ப்பாணச் சமூக அமைப்பு உருவாக்கத்தை விட வேறுபட்ட சில பண்புகளைக் கொண்டதாகும். அடிப்படையான திராவிட உறவு முறை அங்கு தொழிற்படுகின்றதெனினும் அது அங்கு பரிணமிக்கும் முறைமை யாழ்ப்பாணச் சமூகப் பரிணமிப்பு முறையிலிருந்து வேறுபடுவதாகும். இதன்காரணமாக அங்குள்ள சமூகத் தொழிற்பாடுகள் யாழ்ப்பாணத்திலிருந்து வேறுபட்டனவாகவே காணப்படும். உதாரணமாக மட்டக்களப்பின்

சமூக ஒழுங்கு முறை -சாதியமைப்பு- யாழ்ப்பாணத்திலிருந்து வேறுபட்டதாகும். முக்கியமாக அங்குள்ள போடியார் முறைமை (நிலவுடமை) யாழ்ப்பாணத்தில் இல்லை.

ஆ) அங்குள்ள சனவேற்றத்தின் அமைப்பு முறைமை காரணமாக ஏற்படும் முஸ்லிம் உறவின் தன்மை. சமூக ஒழுங்கமைப்பு முறைமையில்முஸ்லிம்களுக்கும்தமிழர்களுக்கிடையில் வேறுபாடுஇல்லை. மட்டக்களப்பின் பாரம்பரிய உற்பத்தி முறைமையும் இரு குழுவினருக்கும் பொதுவானதே. மொழிப்பகிர்வில் அங்கு எவ்வித வேறுபாடும் கிடையாது. ஒரே மரபுத் தொடர்களே பெரும்பாலும் காணப்படுகிறதெனலாம்.

மட்டக்களப்பின் தமிழ் நிலைத் தொழிற்பாடுகளை விளங்குவதற்கும், விளக்குவதற்கும் மேற்கூறிய இரண்டு அமிசங்களும் பற்றிய விரிவான அறிவு அவசியம்.

மட்டக்களப்பின் இந்த நூற்றாண்டுத் தமிழுயிர்ப்புத் தொழிற்பாடு பற்றிய வரலாற்றை அறிய முனையும் பொழுது சுவாமி விபுலாநந்தரிலே தொடங்குவது பொருத்தமானதாகவிருக்கும்.

மட்டக்களப்புச் சமுதாயத்தின் ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டும் வகையில் சுவாமி விபுலாநந்தரின் கல்வி முயற்சிகள் அமைந்திருந்தன. யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்டது போன்ற ஒரு சைவத் தமிழ்ப்பண்பாட்டை மட்டக்களப்புச் சமூக அமைப்பிலே தோற்றுவித்தல் முடியாது. அங்குள்ள சாதியிறுக்கமின்மை, வழிபாட்டு முறைமைகள் (குறிப்பாக அவை பிரதானமாக 'ஆகம' நிலைப்படாதிருந்தமை -கண்ணகையம்மன், திரௌபதியம்மன் வழிபாடுகள்), நடுத்தர வர்க்கம் தோற்றுவிக்கப்பட்ட முறைமை ஆகியன இதற்குக் காரணமாகும். இராமகிருஷ்ண மடத்து முறைமைகளின் தளத்தில், விபுலாநந்தர் தாம் உருவாக்கிக் கொண்ட மட ஒழுங்கமைப்பு முறைமை இங்கு தொழிற்பட்டது. (சிவசுப்பிரமணியம் - விபுலாநந்தர் தரிசனம் - 1993). விபுலாநந்தரின் சிவானந்த வித்தியாலய விடுதியில் முஸ்லிம் மாணவர்கள் வளர்க்கப்பட்டனர்.

மட்டக்களப்புச் சமூக அமைப்புக்கேற்ற ஒரு கல்வி முறையினைக் கட்டியெழுப்பியது ஒரு புறமாக, தமிழ் பற்றிய அவரது நிலைப்பாடுகள் மிகமுக்கியமானவையாகும். தமிழைத் தளமாகக் கொண்டு நவீன காலத்துக்கு முற்பட்ட ஒரு சமூக அமைப்பைப் பேண முனையாது அவர் தமிழை நவீனமயப்படுத்த முனைந்தார். விஞ்ஞானத்துக்கான தமிழ் பற்றிய அவரது செயற்பாடுகளையும், அவற்றுக்கு மேல், சுப்பிரமணிய பாரதியாரை கண்டறிந்து கொள்வதில் அவர் காட்டிய ஈடுபாட்டையும் இங்கு நாம் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

1930 களில் இம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முயற்சியால் மட்டக்களப்பில் தமிழுணர்வு வளர்க்கப்பட்ட முறைமையில் மதச்சார்பின்மையும், இனச்சார்பின்மையும், சாதிச்சார்பின்மையும் காணப்பட்டது.

மட்டக்களப்பின் அடுத்த முக்கிய சமூக இயக்கத் தொழிற்பாடாக அமைவது 1940களின்

சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

பிற்கூற்றில் தொடங்கிய ஓர் இளைஞர் இயக்கமாகும். இந்த இயக்கத்திற் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ஒரு புறம் தமிழுணர்வு கொண்டவர்களாகவும், மறுபுறம் சமூக - மத சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டவர்களாகவும் விளங்கினர். இவர்களின் செயற்பாட்டுக்கான சமூகப் பின்புலத்தை அறிந்து கொள்வதற்கு மட்டக்களப்பில் ஆங்கில அறிவுடையோராகவிருந்த உயர் - நடுத்தர வர்க்கத்தின் பண்பை நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் அரசியலில் முதன்மை வகித்தனரெனினும் அவர்களை மட்டக்களப்புச் சமூகத்தின் செயல்நிலைத் தலைவர்களெனக் கொள்ள முடியாது. மட்டக்களப்பின் வரலாற்றை உற்று நோக்கும் பொழுது அங்கு ஒரு கிராம - நகர இயைபின்மையை அவதானிக்கலாம் (யாழ்ப்பாணத்தில் இவ்வாறு இல்லை). இதனால் தமிழ் மொழியை பிரதான தளமாகக் கொண்ட ஒரு இளைஞர் குழாம் ஒன்று தொழிற்படக் கூடியதாக இருந்தது.

இவர்கள் அக்காலத்தில் தமிழகத்திற் பெரு வளர்ச்சி பெற்றிருந்த திராவிட இயக்கத்தினது போக்கினை உள்வாங்கித் தமது சமூக - பண் பாட்டுத் தொழிற்பாடுகளை மேற்கொண் டனர். பகுத்தறிவுவாதக் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் மேடைப் பேச்சை ஒரு சமூக அரசியல் தொடர்புமுறைமையாகக் கொண் டனர்.

இந்த இயக்கத்தின் மேலெழும்புகைக்கு கணபதிப்பிள்ளை போன்ற ஆசிரியர்கள் முக் கிய காரணர்களாகவிருந்தனர் எனலாம்.

இந்த இயக்கத்தில் முக்கிய இடம் பெற் றோர்களாக எஸ். டி. சிவநாயகம், செ. இரா சதுரை, சா. இ. கமலநாதன் ஆகியோர் விளங் கினர். காசி ஆனந்தன் இந்தக் குழாத்தைச் சேர்ந்தவரே. இவர்களுடைய தொழிற்பாடுகள் அச்சமூகத்தில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத் தின.

1949ல் தொடக்கப் பெற்றதும், இலங்கைத் தமிழ் ஒருமைப் பாட்டில் வடக்கு-கிழக்கு ஒற்று மையை வற்புறுத்தியதும், தமிழ் பேசும் இனம் என்ற அரசியற் கோட்பாட்டை முன் வைத்தது மான தமிழரசுக் கட்சியும் இந்த இளைஞர்குழா மும் இணைந்தன.

மட்டக்களப்பில் இந்தத் தமிழ் அரசியலியக் கம் அங்கு அதுகாலவரை நிலவி வந்த 'பிரபுத் துவ' அரசியற் போக்குகளுக்கு எதிரிடையான தாக, சனநாயக உட்கிடக்கை கொண்டதாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் கட்சிக் கொள்கை பரப்புவதற்கும் மட்டக்களப்புப் பேச்சாளரே ஆரம்ப நிலையில் தேவைப்பட்டனர்.

இந்த இயக்கத்தின் சனரஞ்சகத்தன்மை காரணமாகவும், அரசியல் வலுகாரணமாகவும் முஸ்லீம்களும் இவ்வியக்கத்திற் சேர்ந்தனர். அவ் வாறு சேர்ந்த சிலர் முக்கிய பேச்சாளராகப் பரிணமித்தனர்.

மட்டக்களப்பு தமிழ்ச் சமூகத்தின் - குறிப் பாக மட்டக்களப்புக் கிராமப்புறத் தமிழ் முஸ் லீம் மக்களின் அரசியல் ஒருமைப்பாட்டுக்கும் ஒருங்கு சேரலுக்கும் இந்த இயக்கத்தின் பணி மிக முக்கியமானதாகும். இக்காலத்திலே கிழக் கிலங்கையில் மாத்திரமே துல்லியமாகத் தெரிந்த அரச குடியேற்றக் கொள்கை போன்ற அரச நடவடிக்கைகள் இவர்களின் நடவடிக்கைகளுக்கு ஓர் அரசியல் அர்த்தத்தை ஏற்படுத்திற்று.

எரிபொருள் தட்டுப்பாடான
இந்த நாட்களில்
தங்களால் இயன்றவரை
சேவை செய்கிறது

சுதா
எரிபொருள் நிலையம்

மண்ணெண்ணெய் மற்றும்
ஓயில் வகைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

சுதா எரிபொருள்
நிலையம்

பலாலிசாலை, கோண்டாவில்.

காசி ஆனந்தன் கவிஞராகப் பரிணமித்தது இச் சூழ்நிலையிலேயே. பாரதிதாசன் பரம்பரை யினருள் தன்னையொருவராகக் கருதித் தமிழின உணர்ச்சிப் பாடல்களை அவர் எழுதினார்.

1956ல் தனிச் சிங்களச் சட்டம் வந்தது. ஈழத்தின் தமிழின உணர்வு வளர்ச்சியில் இது ஒரு முக்கிய திருப்பு முனையாகும். இக்காலம் முதல் இந்நாட்டுத் தமிழர்கள் தம்மை இந்நாட்டின் இணைபிரியா வர்க்கம் என்பதை நிலைநிறுத்தும் வகையில் தொழிற்படத் தொடங்கினர்.

இக்காலகட்டத்தில் சிங்கள உணர்வெழுச்சி யின் கலை வெளிப்பாடாக அமைந்தது நாடக மாகும். சரத்சந்திராவின் மனமே சிங்கள உணர் வுக்கான கலைத் தளமாக அமைந்து அதற்கு ஒரு சுதேசிய வேரை இனங்காட்டிற்று.

இந்தக்கலை மறுமலர்ச்சிக்குக் காரணமாக விருந்த பேராசிரியர் சரத்சந்திர தனது மனமே யின் மூலச் சுதேசப் படிவம் தமிழ் நாட்டுக் கூத் திலிருந்து எடுக்கப்பட்டதென்பதை ஒளிவுமறை வின்றி எடுத்துக் கூறினார்.

''ஈழத்திலக்கியம்'' என்ற கோஷத்துடன் இலக்கியத்துறையில் ஈழத்துத் தமிழர்களின் சுதேசியப் பாரம்பரியம் வற்புறுத்தப்பட்ட அந்த நிலையில், ஈழத்தமிழர்களுக்குப் பொதுவான, சனநாயக நிலைப்பட்ட மக்கள் கலை வடிவம் ஒன்றை மீள் கண்டுபிடிக்கும் ஒரு வரலாற்றுத் தேவையொன்றிருந்தது. அதற்கு மட்டக்களப்பே உதவக் கூடிய ஒரு நிலையில் இருந்தது. பத் தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூறுமுதல் யாழ்ப்பாணத்திலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த கலையொதுக்கப் போக்கு இசை, கூத்து ஆகி யனவற்றைச் சாதிக் கலைகளாக்கி விட்டிருந்தது. ஆனால் மட்டக்களப்பிலே நாடகம்/கூத்து அங் குள்ள சமூக வன்மையுள்ள விவசாயிகளிடையே காணப்பட்ட கலையாகும். அந்தக் கலை வடி வமே ஈழத்துத் தமிழரின் பொதுவான நாடகக் கலைவடிவமாக மேற்கிளம்பியது. இந்தப் பணி யினைச் செய்தவர் பேராசிரியர் வித்தியானந்தன் ஆவார். தமிழுணர்வுத் தொழிற்பாடுகளில் முக் கிய இடம் பெற்றிருந்த அவர், இலங்கைப் பல் கலைக்கழக அமைப்பு மூலமும், தனது மாண வர்களுடைய ஒத்துழைப்புடனும் இச்சாத னையை நிறைவேற்றினார்.

மட்டக்களப்பின் நாட்டுக்கூத்து வடிவம் ஈழத்துத் தமிழ் மக்களின் தேசிய நாடகவடிவம் என்று போற்றப்படும் அளவுக்குக் கொண்டா டப்பட்டது. நாடகம் பற்றித் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் இவ்வடிவ மானது ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொதுவானது என்பதும், ஒவ்வொரு பிரதேசங் களிலும் அது சிறுச்சிறு வேறுபாடுகளுடன் பயி லப்பட்டு வந்தது என்பதும் தெரியவந்தது. ஆனால் மட்டக்களப்பிலிருந்தே அக்கலை வடி வம் எடுக்கப்பெற்று நவீனமயப்படுத்தப்பட்டது.

ஈழத்தின் கலை முழுமைக்கு மட்டக்களப் பின் நாட்டுக் கூத்து முக்கிய பங்களிப்பாகிற்று.

ஈழத்துக் கலை இலக்கிய ஒருங்கு சேர் களில் மட்டக்களப்பின் முக்கியத்துவம் உணரப் படத் தொடங்கிற்று. இந்த ஒருங்கு சேரலின் சின்னமாகப் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை போற்றப்படத் தொடங்கினார். மட்டக்களப் பின் வாழ்வையும் வளத்தையும் எடுத்துக் கூறிய ''மட்டக்களப்புத் தமிழகம்'' என்ற நூலும் மிக முக்கியமான ஒன்றாகும். இதனை எழுதியவர் பண்டிதர் வீ. சி. கந்தையா ஆவார்.

1950களின் பிற்கூற்றிலிருந்து மட்டக்களப் பின் பிரதேச வளத்தை வெளிக் கொணருகின்ற நவீன இலக்கியங்கள் முன்னிலையெய்துகின்றன. இந்தப் பணியில் நீலாவணனின் (1931-1975) பங்கு மிக முக்கியமானதாகும். ஈழத்தின் நவீன கவிதை வளர்ச்சியில் முக்கிய இடம் பெறும் நீலாவணன் மட்டக்களப்பு வாழ்க்கையின் வளத் தைத் தமது கவிதைகளில் சித்திரித்தார். நீலா வணனுடன் மட்டக்களப்பு ஈழத்தின் நவீன தமி ழிலக்கியத்தின் இன்றியமையாத ஓர் அங்க மாயிற்று.

ஈழத்திலக்கியத்தின் முற்போக்கு இயக்கம் மட்டக்களப்பில், யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய சமூகப் பாதிப்பை ஏற்படுத்தமுடியவில்லை. அதற் கான பிரதான காரணம் மட்டக்களப்புச் சமூ கம் யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலிருந்து வேறு பட்டதாகும். யாழ்ப்பாணத்துச் சூழலில் முக்கிய மான சமூக சமத்துவக் கோரிக்கையும், சமூக அசமத்துவத்தால் ஏற்படும் மனிதாயதச் சிதை வும் மட்டக்களப்புச் சூழலில் முதன்மைப்பட இடமில்லை. மட்டக்களப்புச் சமூக ஒழுங்கமைப் பில் ஒரு நெகிழ்ச்சியுண்டு. அத்துடன் அங்கு பண்டித பரம்பரையின் சமூக அதிகாரமும் இருக்கவில்லை. இவற்றால் முற்போக்கு இலக் கிய இயக்கம் மட்டக்களப்பில் செயற்பட்ட முறைமைக்கும், யாழ்ப்பாணத்திற் செயற்பட்ட முறைமைக்கும் ஒரு வேறுபாடுண்டு. முற்போக்கு இயக்கத்தின் வளர்ச்சியில் அங்கு இன ஒற்றுமை முக்கியப்பட்டது. மனித முன்னேற்றம் முதலி யன வற்புறுத்தப்பட்டது.

இத்தகைய ஒரு பின்புலத்திலேயே மட்டக் களப்பின் எழுத்தாளர்கள் தொழிற்பட்டனர். ஈழத்து இலக்கியம், தேசிய இலக்கியம் என்பன

அங்கு முதன்மைப்பட்டன. நீலாவணனின் கவிதைகளுக்கும் மஹாகவியின் கவிதைகளுக்கும் ஒரு சமாந்தரத் தன்மையுண்டு. யாழ்ப்பாணத்து வாழ்க்கையின் செழுமை மஹாகவியின் கவிதைகளில் வெளிவந்தது போன்று நீலாவணன் கவிதைகளில் மட்டக்களப்பு வாழ்க்கையின் செழுமை புலப்படுகின்றது.

நீலாவணனுக்குச் சமமான முக்கியத்துவ முடையவராகப் பித்தன் திகழ்கிறார். பித்தனுடன் மட்டக்களப்புக்கான ஒரு புனைகதைப் பாரம்பரியம் உருவாகின்றது.

நீலாவணனைத் தொடர்ந்து வரும் சண்முகம் சிவலிங்கம் தலைமுறை மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியிலும் ஈழத்திலக்கிய வளர்ச்சியிலும் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இக்கட்டத்திலே எம். ஏ. நுஃமான் ஈழத்தின் முக்கியமான கவிஞர்களுள் ஒருவராகமேற்கிளம்புகிறார். நுஃமானின் பாலஸ்தீனக் கவிதைகள் என்ற மொழி பெயர்ப்புக் கவிதைகள் இளைஞர் இயக்கங்களிலே முக்கிய தாக்கத்தை ஏற்படுத்திற்று.

சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளில் புதுக் கவிதை தனது முழு ஆளுமையுடன் வெளி வருகிறது. மரபுக் கவிஞராகத் தொடங்கும் அவரிடத்து, மனதைத் தாக்கும் விடயங்கள் பற்றிய புலப்பதிவுகள் புதுக்கவிதையின் படிம அழகுடன் இணைந்து நிற்பதைக் காணலாம்.

இனவிடுதலைப் போராட்டத்தின் தாக்கங்களை இவரது கவிதைகள் காட்டத் தொடங்குகின்றன. இவர் தமது கவிதைகள் பற்றிப் பேசும் பொழுது தமிழ்த் தேசியத்தைப் பிரக்ஞை பூர்வமான ஒரு கருத்து நிலையாகப் பேசுகிறார்.

மட்டக்களப்பின் சமூக அனுபவங்கள் யாழ்ப் பாணத்தினது அனுபவங்களிலிருந்துவேறுபட்டது. இனக்கலவர அனுபவங்களுக்குத் தமிழர்களும் முஸ்லீம்களும் ஒருமித்தும் தனித்தனியேயும் முகங் கொடுக்க வேண்டிய அரசியல் நிர்ப்பந்தங்கள் அங்கு உண்டு. மொத்தத்தில் இந்தப் பாதிப்புக்களால் ஏற்பட்ட வாழ்க்கைச் சீர்குலைவினை மட்டக்களப்பு மிக நுண்ணியதாகவும், கவிதை யாழத்துடனும் எடுத்துக் கூறத் தொடங்கிற்று.

சோலைக்கிளியின் கவிதைகள் இந்தப் புதிய அருந்தற்பாடுகளுக்கு அசாதாரணமான கவிதை வடிவம் கொடுத்தன. (சோலைக்கிளி கவிதையின் பண்புகள் பற்றிய ஒரு விரிவான ஆய்வு வேண்டும்.) அவரது கவிதைகளிற் காணப்படும் படிமங்கள் மிக அசாதாரணமானவை. அவற்றின் புதுமையும் வன்மைச் சிறப்பும் அவரது கவிதைகளுக்கு அற்புதமான வலுவைக் கொடுக்கின்றன. சோலைக்கிளியின் கவிதைச் செழுமை நாட்டார் வழக்குத் தளத்திலிருந்து வருகிறது. சோலைக்கிளியின் கவிதை வளத்தை விளங்கிக் கொள்வதற்கு மட்டக்களப்பு வாழ்க்கையின், குறிப்பாக மட்டக்களப்பு முஸ்லீம் வாழ்க்கையின் நாட்டார் பண்பாட்டு வளத்தையும் செழுமையையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும். அந்த நாட்டார் பண்பாட்டின் படிமங்களும் தொடர்களும் அவர் கவிதைக்கு அடித்தளமானவை.

மட்டக்களப்பின் இனக்கலவரங்கள் தோற்றுவிக்கும் இருதலைக் கொள்ளியெறும்பு நிலையினை ஓரிடத்தில் சோலைக்கிளி தானே எடுத்துக் கூறுகிறார்.

''பாலர் வகுப்பில் படித்த என் தமிழின் எழுத்துக்களை நினைவில் வைத்திருப்பதே மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆம். இரத்தத்தில் அவை கலந்திருப்பதால் காப்பாற்றப்படுவதாக உணர்கிறேன்'' *(காகம்கலைத்த கனவு-என்னுரை 1991)*

மட்டக்களப்பின் தமிழ் உயிர்ப்பின் ஜீவ பரிணாமம் இங்கு விளங்குகிறது. இங்கு தமிழ்த் தேசியம் என்பது விரிந்த வரைவிலக்கணத்துக்கு இடங் கொடுப்பதாய் இருத்தல் வேண்டும்.

சோலைக்கிளியைத் தொடர்ந்து வேறும் பல முஸ்லீம் இளங் கவிஞர்கள் மனதைக் கவரும் கவிதைப் படைப்புக்களைத் தருகின்றனர்.

மட்டக்களப்பின் கவிதை வளத்துக்கியைந்த புனைகதைத்துறைச் சாதனை உமா. வரதராஜனிடமிருந்து கிடைக்கப் பெறுகின்றது. உமா வரதராஜனின் 'அரசனின் வருகை' சிறந்த கலைப் படைப்பாக வெளிவந்துள்ளது.

இக்கட்டத்தில் உமா வரதராஜன், ரஞ்சகுமார் ஆகியோரின் ஈழத்துச் சிறுகதை நிலைப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவது அவசியமாகின்றது. இவர்களது ஆக்கங்களில் வரும் ''எடுத்துரைப்பு'' முறை *(Narration)* சாதாரண யதார்த்த வாத அறிக்கை முறை எடுத்துரைப் பிலிருந்து வேறு பட்டதாகும். படைப்பாளி தான் சித்திரிப்பதற்குள் நிற்கிறானா அன்றேல் அதனை வெளியே நின்று பார்த்து எடுத்துச் சொல்கின்றானா என்பது முக்கியமான ஒரு வினாவாகும். இந்த வினாவுக்கான விடை புனை கதையின் நடையைத் தீர்மானிப்பதாகும்.

மட்டக்களப்பின் தமிழுயிர்ப்பு தனித்துவம் கொண்டதாக அமையும் அதே வேளையில் ஈழத்தின் பொதுத் தமிழ் வளத்தின் எடுத்துக் காட்டாகவும் உள்ளது. □□



வீரயுகம்

நாக. பத்மநாதன்

தலையை உயர்த்தி, கண்களை விழித்துப் பார்க்கும்போதுதான் தெரிகிறது - அந்தக் கொடிக்கம்பத்தின் உயரம்!

சுற்றிலும் பரந்த வெளி!

அங்கு காற்றுடன் கலந்ததைப்போன்ற வடிவங்கள் ஒரு சில!

உரையாடலின் ஒலி!

வெயிலையும் வெளியையும் கடந்து செல்கிறோம்.

அங்கு காட்சி தருவது யார்? நன்றாகத் தெரிகிறது! அவள் வேறு யாருமல்ல - ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டுதான்!

அணங்கென அவள் தலை நிமிர்ந்து நிற்கிறாள்!

அருகே உயரம் குறைந்ததைப்போல முன்னைய சில ஆண்டுகள்! சோர்வாம், ஏக்கமாம், தயக்கமாம், கவலையாம்! இது முப்பது வருடங்களுக்கு முன்னர்!

ஆண்டு 1995! அவள் வளர்ந்து தலை நிமிர்ந்து நிற்கிறாள், துணிவின் வடிவமாய்! விடுதலைப் போரின் உருவமாய்! ஈகத்தின் உயிராய்! விடுதலை வரலாறாய்!

''என்ன, சோர்வு கொள்கிறீர்களா! ஏன்?'' என்கிறாள்.

கண்கள் மின்னுகின்றன;

குரல் முழங்குகிறது!

''இல்லை!'' என சுற்றிலும் நின்றவை சிறிது உயர்கின்றன.

''அப்படிச் சொல்லுங்கள்!'' என்கிறாள். இன்னும் விசாலித்து அவள் உலகைப் பார்க்கிறாள்!

உலகம் அவளை வியந்து பார்க்கிறது!

''மரணமும் இறப்பும்! இவற்றை வீரச் சாவென ஆக்கியவர்கள் நாங்கள்!'' என்கிறாள்.

''பலர் எண்ணத் துணியாத உச்ச வெற்றிகளை எய்தியவர்கள்-இன்னும் எய்த இருப்பவர்கள் நாங்கள்!'' எனக் கண்கள் சிவக்கக் குரல் தருகிறாள் அவள்.

''துன்பம் தர வருபவனைக் கண்டு துவளாதே, சிரித்தெழு! அடிக்க வருபவனை அடி! அழிக்க வருபவனை நீ முற்றாக அழி! இது எம் பொய்யா மொழி!''

''கொல்ல வருகிறானா? அவனைத்தேடி நீ கொல்!'' - இது வரலாற்றுத் தலைவனின் வாக்கு!

வானம் தெரிந்தது!

தரையில் எம் படை அணிகள்! தமிழினத்தின் முழுவடிவாய் எழுந்த எம் விடுதலைப் புலி அணிகள்!

இழப்புக்களால் மனம் சோரவில்லை. உறுதியே பெருகியது! இடர் வந்தபோது உறுதியைப் பெருக்கிய தமிழீழத் தாய் மண்!

சிரிக்க முயன்ற பகைவன் மீண்டும் தலை கவிழ்கிறான்!

இறுதியில் அவன் பொய்யை நாடினான்; அதுவும் கைவிடும் காலமாகியது!

வீர வரலாறு- தமிழீழ விடுதலை- உருவாகிக்கொண்டிருந்தது! தமிழினத்தின் விறல் எனப் புலிக்கொடி அதன் உயர் கம்பத்தின் உச்சியில் பறந்துகொண்டிருந்தது!

சிரித்தெழுந்த பகைவன் மீண்டும் அழிந்து கொண்டே இருந்தான்! □□

போகும் இடம் தெரியும்



வீ. மணிவண்ணன்

அவன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிக்கொண்டிருந்தான். இயற்கையாகவே நல்ல ஓட்டக்காரன். ஆனால் இன்று ஓடும் ஓட்டம் எந்தவொரு ஓட்டப்போட்டியிலுமே அவன் ஓடாதது. ரவுண்சுகளும் ஷெல்களும் பின்னால் கலைத்துக் கொண்டு வர ஓடுவது இதுதான் முதல் தடவை.

'என்ர கடவுளே! எப்படியாவது நான் தப்பவேணும்' இது தான் அவனது மனதுக்குள் ஒலித்தது. ஒரு ஒழுங்கையைக் கடந்து தென்னந் தோட்ட மொன்றினூடாக வேகமாக ஓடினான். அவனுக்கு முன்னே பின்னே என்று எல்லா இடங்களிலும் எறிகணைகள் வீழ்ந்து கொண்டிருந்தன. எங்கே போகிறேன் என்பது நிச்சயமாக அவனுக்குத் தெரியாது.

அடிக்கிற ரவுண்சுகளும் எறிகணைகளும் அவனை நோக்கியே வீசப்பட்டன போலிருந்தது. ''ஏன் எனக்குப்போய் இப்படி அடிக்கிறான்கள்'' என்று மனதிலொரு வினா எழும்பினாலும் ''ஆமிக்காரன் என்றால் இப்படித்தான்''என்று மனமே பதில் சொல்ல, அவன் ஓட்டத்தை நிறுத்தவில்லை.

தென்னந்தோட்டத்தின் முடிவில் முட்கம்பி வேலி போன்று காணப்பட்டது. ''ஏன்தான் இப்படி வேலியளை அடைக்கிறான்களோ'' என்று காணிக்காரன் மீது கோபப்பட்டான். ஆடு,மாடுகள் பூக்கன்றை மேயாமல் இருக்குவென்று கிளுவந்தடி கொண்டு தான் வேலியடைத்ததும் இன்று காலை அதனைப் பாய அவன்பட்ட கஸ்ரத்தையும் நினைக்க அவனுக்கு தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது.

காலையில் கிளுவந்தடி கீறிக் கிழித்த போது அவன் அதனைக் கவனிக்கவில்லை. இப்போது முள்ளுக்கம்பி அவனைக் கொழுவியிழுத்துக் கீறியபோது கூட அவன் பொருட்படுத்தவில்லை. தப்பி ஓடவேண்டும் என்பதைத் தவிர மனதில் வேறு ஏதும் நிற்கவில்லை. முள்ளுக்கம்பி வேலியைத் தாண்டியவுடன் வயல் வெளியொன்றுமுன்னே தெரிந்தது.

''எங்கேயண்ணை இப்படி ஓடுறியள்...?'' அவன் திடுக்கிட்டுப் போனான். கை, கால் எல்லாம் பதற முன்னுக்கு உற்றுப் பார்த்தான். வயல்வெளியின் முடிவையண்டிய தோட்டக்கரையில் நிலையெடுத்த வண்ணம் பல பெண் போராளிகள் இருந்தனர். அவன் ஓடிய ஓட்டத்தில் அவர்களைக் கவனியாது அவர்களின் முன்பகுதிக் காவலரணையும் தாண்டி வந்திருந்தான். பல்வேறு வயது எல்லைகளைக் கொண்ட பெண்போராளிகள் அவனை அனுதாபத்துடனும் சிரிப்புடனும் பார்த்தார்கள்.

அவனுக்கோ என்ன பதில் சொல்வதென்றேதெரியவில்லை. ''ஆ...ஆ ஆமி!'' என்றான். வாய் குழறியது. அவர்கள் சிரித்தார்கள். அவனுக்கு மனதுக்குள் கோபம் வந்தது. ''நான் பட்ட பாடு இவர்களுக்கு என்ன தெரியும்?'' மனதை அடக்கிக் கொண்டு மீண்டும் மெதுவாக ஓட முற்பட்டான்.

''எவ்வளவு காலத்துக்கு இப்பிடி ஓடப்போறீங்கள்...?'' மென்மையான குரலொன்று இவனைப்பார்த்துக் கேட்டது. அவனுக்கு அவமானமாகவும் வெட்கமாகவும் இருந்தது. ''ஓடாமல் என்ன செய்யிறது?'' நிச்சயமாக அது ஒரு நல்ல பதில் இல்லை என்பதை அவன் உணர்ந்திருந்தான்.ஆனாலும் இந்த இடத்தைவிட்டு அகல வேண்டும் என்பதற்காக ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொன்னான்.

ஓட்டமும் நடையுமாக அவன் விரைந்து கொண்டிருந்தான். ''இந்தப் பிள்ளையள் தன்னைப் பார்த்து என்ன கேள்வி கேட்டுவிட்டார்கள்'' என்று மனதுக்குள் பொருமினான். கடைசியாக கதைத்த அந்த பெண்போராளியின் குரல் எங்கேயோ கேட்டமாதிரிக் கிடந்தது என்றுயோசித்தான். அந்த முகத்தை நினைவுபடுத்த முயன்றான்.

''அட சுமங்கலா'' இப்போது அவனுக்கு நினைவுக்கு

வந்து விட்டது. இவனுடன் தான் அவள் ஒன்றாகப் படித்தவள்.

சுமங்கலா சென்ற வருடம் திடீரென ஒரு நாள் காணாமல் போய் விட்டாள். தாய், தகப்பன் எல்லோரும் ஒடித்திரிந்த பின்னர் தான் அவள் இயக்கத்திற்குப் போய் விட்டாள் என்பது தெரியும். முதலில் அவனுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியாக இருந்தது... 'முட்டாள் பெட்டை' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆனால் இன்றோ சுமங்காவை அடையாளம் காணாமல் அவளுக்கு முன்னாலே ஓடி வந்ததை நினைக்க வெட்கமாக இருந்தது. அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்? பாடசாலையைப் பொறுத்தவரையில் விளையாட்டுக்களில் அவன் சிறந்த வீரனாக இருந்தான். ஓட்டம், உயரம் பாய்தல், நீளப் பாய்தல்எல்லாம் அவனது பிரதான களங்களாக இருந்தன. சென்ற வருடம் மாவட்ட மட்டத்திலே முதல் மூன்று இடங்களிற்கு வந்திருந்தான். இதுகால வரையிலும் பாடசாலை, ரியூசன் வட்டங்களில் அவன் ஒரு வீரனாகவே கருதப்பட்டான். ஆனால் இன்று சுமங்கலாவிற்கு முன்னால் கோழை போல ஓடிவந்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாகவும் அவமானமாகவும் இருந்தது. உடலெல்லாம் கூனிக்குறுகியது.

ஆனால் ''ஓடாமல் வேறு என்னசெய்வது...?''என்று மனம் சமாதானப்படுத்தியது. கடவுளே! இன்று காலையில் நடந்ததை நினைத்தால்... திடீரென அம்மாவும், தங்கச்சியும், தம்பியும் நினைவுக்கு வந்தார்கள். மனம் பகீரென்றது. ''என்ன காரியம் செய்து விட்டேன்...'' அவர்கள் என்னஆனார்கள் என்பதைப் பற்றி எதனையும் கவனிக்காமல் ஓடி வந்திருக்கிறான். நெஞ்சுக்கூட்டிலிருந்து ஏதோ கழன்று விழுவது போல கடும் வேதனையாக இருந்தது. தலை சுற்றியது. அப்படியே நிலத்தில் சரிந்தான்.

• • •

சண்டிலிப்பாய்தான் அவனது சொந்த இடம். சண்டிலிப்பாய்ச் சந்திக்கும் தொட்டிலடிச் சந்திக்கும் இடையிலுள்ள ஒரு பகுதியில் அவனது வீடு அமைந்திருந்தது. பிரதான சாலையிலிருந்து நூறு மீற்றர் தள்ளி ஒரு ஒழுங்கையூடாகச்சென்றால் அவனது வீடு வரும். இங்கு தான் அவனது அப்பா சிவப்பிரகாசமும், அம்மா கமலாதேவியும் குடியிருந்தனர். மூத்த ஆண் பிள்ளை என்றபடியால் அவனுக்கு செல்லமாக செல்வராஜா என்று பெயர் வைத்தார்கள். அவனை வீட்டில் ''ராஜா'' என்றும், நண்பர்கள் ''செல்வா'' என்றும் செல்லமாக அழைப்பார்கள். செல்வராஜாவுக்கு ஒரு தம்பியும், ஒரு தங்கையும் மட்டுந் தான். கடைசியாக தங்கைபிறந்ததினால்அவன்தங்கையில்உயிரையே வைத்திருந்தான். தங்கையின் கடைசிப் பிறந்ததினத்திற்கு கூட அவனுக்கு அப்பா வெளிநாட்டிலிருந்து அனுப்பும் 'பொக்கற் மணி'யில் மிச்சம் பிடித்து ஒரு கைக்கடிகாரம் வாங்கிக் கொடுத்தான். அவ்வளவு பாசம். அவன் இடைக்கிடை சண்டை போடுவதானால் தம்பி யுவராஜனுடன் தான். ஆனாலும் அவன் மீதும் பாசம் வைத்திருந்தான்.

அரசாங்கப்பணியில் கடமையாற்றிய சிவப்பிரகாசம் இடையிலேயே 'பென்சன்' எடுத்துக் கொண்டு உழைப்பிற்காக அவுஸ்ரேலியா சென்று விட்டார். அங்கு அவர் கணணியைப் பற்றிப் படித்து இப்போது ஒரு நிறுவனத்தில் கை நிறையச் சம்பளம் வாங்கும் ஊழியராகக் கடமையாற்றுகிறார். சிவப்பிரகாசத்திற்குத் தற்போது அவுஸ்ரேலியா பிரஜாவுரிமை கிடைத்து விட்டது. அவர் தனது குடும்பத்தை அங்கே அழைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் கமலாதேவியோ பரம்பரையாக வாழ்ந்த வீட்டை விட்டுப் போவதற்கு சற்றேனும் விரும்பாதவள். அவள்ஒருபழைய சைவ நம்பிக்கைகளைக்கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவள். இதனால்தானோஎன்னவோபிள்ளைகளது படிப்பில் கூடிய கவனமெடுத்து வேறு விடயங்களில் ஈடுபடவிடாமல் கண்டிப்பாக படிப்பித்து வந்தாள். இதனால் படிப்பைத் தவிர வெளியுலக விடயங்களேதும் பெரிதும் தெரியாத வீட்டுப் பூச்சிகளாகவே பிள்ளைகள் வளர்க்கப்பட்டார்கள். செல்வராஜாவுக்கு மட்டும் விளையாட்டுப் போட்டிகளில் விளையாட அனுமதி வழங்கியிருந்தாள். இந்த வருடம் அதுவும் இல்லை.

செல்வராஜா மானிப்பாய் இந்துக்கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான். ஒ. எல்வில் அவன் நல்லபெறுபேறுகளைப் பெற்றதால் உயர்தரத்திலும் பல்கலைக்கழகம் செல்லக்கூடியவன் என் எல்லோரும் எதிர் பார்த்தார்கள். செல்வராஜாவும் அதற்கு ஏற்றாற்போல கடுமையாகப் படித்து வந்தான். இடையில் வந்த சமாதானத்தின் பலனாக் அவனது அப்பா அவுஸ்ரேலியாவிலிருந்து அனுப்பிய 'சோலார்' விளக்கு அவனது படிப்பிற்கு கைகொடுத்தது. மண்ணெண்ணெய்ப் புகையிலிருந்து விடுதலை. பெற்றோர்கள் காட்டிய அக்கறைக்கும் ஊக்கத்திற்கும் ஏற்ப அவன் படித்தான்.

சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசு மிகத் தீவிரமான முறையில் தமிழின அழிப்பு நடவடிக்கையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது இந்தத் கருணத்தில் தமிழீழ கலை. இலக்கியப் படைப்பாளிகள் இந்தப் போரை எவ்விதம் எதிர்கொள்வது? எமது வாழ்வையும் உரிமைகளையும் பண்பாட்டையும் எவ்வாறு மீட்டெடுத்துப் பாதுகாப்பது? என்பன தொடர்பாக ஒரு வேண்டுகோளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் தற்போது விடுத்துள்ளது. வரலாற்று அவசியம் கருதி அது இங்கே பிரசுரமாகிறது.

வரலாற்றுக் கடமையில் ஒன்றினைய...

சிறிலங்கா அரசு தனது சமாதான மூகமுடியினைத் தானே கிழித்தெறிந்து விட்டு, தமிழர்கள் மீதான பாரிய படையெடுப்பிற்குத் தேதி குறித்திருக்கிறது. எதிரி மேற்கொள்ளும் இப்பாரிய யுத்தம் தமிழர் தரப்பில் பெருமளவு உயிர், உடமை இழப்புக்களை ஏற்படுத்தி, அழகும் கட்டுக்கோப்பும் நிறைந்த எங்கள் இனிய வாழ்வையும், வழி வழி வந்த எங்கள் பண்பாட்டு விழுமியங்களையும் அழிக்கும். இத்தயுத்தம் ஒட்டு மொத்தமான தமிழின அழிப்பையே நோக்காகக் கொண்டிருக்கின்றமையை வெளிவரும் தகவல்கள் உறுதி செய்கின்றன

இதனை எதிர் கொள்வதற்கு சகல அமைப்புக்களும் தங்களாலான பணிகளைச் செய்து வருகின்றன. சமூகத்தின் வாழ்வையும், அச்சமூகத்துக்கான வழிகாட்டலையும் எம் கடனாகக் கொண்டு செயற்படும் படைப்பாளிகள், கலைஞர்கள் ஆகிய நாமும் இந்தப் போரை எங்ஙனம் எதிர் கொள்ள வேண்டுமென்பதை ஆராய்வதற்காகவே இந்த அன்பான, அவசரமான விண்ணப்பத்தை தங்களிடம் வேண்டி நிற்கின்றோம்.

நடைபெறப் போகும் போரை எதிர்கொள்வது குறித்து பல்வேறு தரப்பும் அக்கறையூர்வமாக இயங்கும் போது, நாம் இதனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம்; இப்பாரிய இடர்களைய எவ்வெவ் வழிகளில் நாம் பங்காற்றப் போகிறோம் எனத் தீர்மானிக்க வேண்டிய நேரம் எம் முன் வந்து நிற்கின்றது.

இது தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமை. இதிலிருந்து யாரும் ஒதுங்கி நிற்க முடியாது.

நாமனைவரும் ஒன்றுபட்டு, உறுதி கொண்டு இந்தப் போரை எதிர்கொள்ளவும், எதிரியின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கி விடுதலைப் போராட்டத்தை உந்தித் தள்ளவும் துணை நிற்க வேண்டிய தருணம் இதுதான்.

தாயார் விரும்பியது போலவே பொறியியலாளராக வருவதே அவனது இலட்சியமாக இருந்தது. போராட்டம் குறித்து அவன் பெரிதும் அக்கறை காட்டவில்லை; அவனது குடும்பத்திலோ அல்லது உறவினர்களிலோ எவரும் இயக்கத்தில் இருக்காதது ஒரு காரணமாக இருக்கலாம். இயக்கத்திற்குப் போகிறவர்களைக் குறித்து அவனுக்கு ஆச்சரியமாகவும் புதிராகவும் இருந்தது. படிக்க முடியாதவர்களும் கஸ்ரப்படுகிறவர்களும் தான் இயக்கத்திற்குப் போகிறார்கள் என அவன் தனக்குள் முடிவெடுத்துக் கொண்டிருந்தான். சுமங்கலா இயக்கத்திற்கு போனது இவனுக்கு ஒரு தாக்கமாக இருந்தது. அத்துடன் இவனது நெருங்கிய நண்பன் சத்தியமூர்த்தியும் இயக்கத்திற்குப் போனது இவனை யோசிக்க வைத்தது. ஆனாலும் இவன் அதனைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.படிப்பிலேயே கவனமாகவும் குறியாகவும் இருந்தான். பேராதனையில் பொறியியல் படிப்பை முடித்து அவுஸ்ரேலியா செல்லும் கனவில் மூழ்கியிருந்தான்.

• • •

அது ஜூலை மாதம்9ம் திகதி. அதிகாலையிலேயே எழுந்து அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு சென்று வழிபட்டுவிட்டு படிக்க ஆரம்பித்திருந்தான். பொறியியல் பீடத்திற்கு கிடைத்தால், கரகம் எடுப்பதாக பிள்ளையாரிடம் நேர்ந்திருந்தான். பிள்ளையாரின் மீது இவனுக்கு அதிகபக்தி. பிள்ளையாரால் தான் ஓ. எல் விசேடமாகப் பாஸ்பண்ணியது என நம்பியிருந்தான்.

எறிகணைச் சத்தங்களும் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் அதிகரித்துக் கேட்கலாயின.

''இவங்கள் இப்படித்தான்நெடுகவும் அடித்துக் கொண்டிருப்பாங்கள்'' என்று மனதிற்குள் இராணுவத்தை திட்டியவாறே எழுந்து எல்லா ஜன்னல்களையும் சாத்திவிட்டு ''அம்மா என்னை ஒருத்தரும் குழப்பாதையுங்கோ நான் படிக்கப்போறன்'' என்று தாயாரிடம் கூறிவிட்டு கதவையும் சாத்திவிட்டு படிக்கத் தொடங்கினான்.

எவ்வளவு நேரம் படித்துக் கொண்டிருந்தானோதெரியாது. திடீரென ''டொய்'' என்ற சத்தத்துடன் அவனது அறை ஜன்னல் கண்ணாடி சிதறியது. திடுக்கிட்டுப்போய் எழுந்த போதுதான் ரவைகளும் எறிகணைகளும் இவனது வீட்டைத் தாண்டி சென்று கொண்டிருந்ததை உணரமுடிந்தது. ''இது என்ன கஸ்ரகாலம்? வேணுமெண்டு என்ர படிப்பை குழப்புறாங்கள்'' என்று சிந்தித்தபடியே அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே போனான்.

அங்கே தாயாரும், தங்கையும் பதறியபடியே மண்டபத்தில் நின்றார்கள். ''தம்பி என்ன நடக்குதெண்டே தெரியேல்லை. சத்தங்களும் வரவர கிட்டவாகக் கேட்கிது''என்றாள் அம்மா. ''கொஞ்சம் பொறுங்கோ நான் றோட்டில போய்ப் பார்த்திட்டு வாறன்'' என்று கூறிவிட்டு புறப்பட்டான்.

சத்தங்கள் வித்தியாசமாகவும் பயங்கரமாகவும் கேட்டன. ஒழுங்கை வழியாகச் சென்று பிரதான வீதியை எட்டிப்பார்த்த போதுதான் பயங்கரத்தின் முழுப்பரிமாணத்தையும் கண்டு கொண்டான். டாங்கி ஒன்று அவனைக்கடந்து சென்று கொண்டிருந்தது. அவனுக்கு பத்தடி தள்ளி ஏராளமான பச்சைப் பேய்கள் நின்றன. மழுங்கடிக்கப்பட்டு மீசை இல்லாத முகங்களும் கண்களில் தெரியும் இரக்கமற்ற தன்மையும் கோபமும் அவனைக் கிலி கொள்ள வைத்தன. இவ்வளவு அண்மையில் செல்வராஜா ஒருபோதும் இராணுவத்தைப் பார்த்தது இல்லை. இராணுவத்தைத் தவிர வேறு எதுவுமே அவன் பார்வைப்புலனில் படவில்லை. அவனது நெஞ்சுக்குள் இருந்து ஏதோவொன்று திரண்டுவாயை அடைத்தது. கால்களோ அசைய மறுத்தன. அவன் கெலித்துப் போனான். ''அடோ கொட்டியா '' என்ற குரல் பதட்டத்துடன் ஒலித்த போதுதான் அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ''ஐயோ ஆமி'' என்று குழறிக் கொண்டு ஓடத்தொடங்கினான்.

''சட சட ''என்று ரவைகள் அவனைத்தாண்டி சீறிக் கொண்டு சென்றன. முள்ளந்தண்டு பலமாகக் கூசியது. எந்த நேரமும் ரவை அவனைத் தாக்கலாம். இதோட தான் சரி'' என்ற எண்ணமே செல்வராஜாவின் மனதிலிருந்தது. வீட்டு முன் கதவை பாய்ந்து திறந்து கொண்டு வந்தபோது கூட அவன் நிற்கவில்லை. ''அம்மா ஆமி! அம்மா ஆமி ஓடுங்கோ'' என்று கத்திக்குழறிக்கொண்டே அவன் ஓடினான்.

எப்படி அவன் வீட்டுப் பின் பக்க கிளுவம் வேலியைத் தாண்டினான் என்றோ, அடுத்த வளவு மாமாவின் வீட்டுச்சுவரை எப்படிப் பாய்ந்தானென்றோ அவனுக்கு ஏதும் தெரியாது. ''எப்படியாவது தப்பவேணும்.. ஓடித்தப்பவேணும்'' என்பதுமட்டுந்தான் அவனுக்கு முன்னால் தெரிந்தது.

அவன் பார்த்த இராணுவத்தின் வெறுப்பு உமிழும் விழிகள் அவனை நிற்கவிடாமல் துரத்தியது. பேய்களைப்பற்றி அவனது தாயார் சொல்லும்போது அவனது விஞ்ஞான மனம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இன்றோ அந்தப் பேய்களை நேரில் கண்டபோது அம்மா சொன்ன பேய்கள் உலகத்தில் இன்னும் இருக்கிறது என்பதை பூரணமாக நம்பினான்.

● ● ●

பூகம்பம் வெடித்தாற் போல பூமிப்பந்து திடீரென அதிர்ந்தது. மனச்சோர்வில் மயங்கிக் கிடந்தவனை குண்டுவெடிப்பின் அதிர்ச்சியலைகள் தள்ளி விழுத்தின. வீட்டுச் சிந்தனையில் தன்னை மறந்திருந்த அவன் தன்னைச் சுற்றியிருந்த யதார்த்த சூழ்நிலையினை கவனிக்கத் தவறிவிட்டான். குண்டு வீச்சு விமானமொன்று போகிற அவசரத்திலே எல்லாக்குண்டுகளையும் கொட்டிவிட்டு மிக உயரக்கிளம்பிச் செல்வதை கண்டான். ''கொஞ்ச நாள் நிம்மதியாக இருந்தம். திரும்பி வந்துட்டாங்கள்.....'' என்று மனம் பதைபதைத்தபடியே எழுப்பினான்.

தென்கிழக்கு மூலையில் சுமார் 500 மீற்றருக்கு கிட்ட ஒரே புகை மண்டலம் எழுந்ததுடன் மனிதக் கூக்குரல்களும் அவல ஓலிகளும் கேட்கலாயின. போய்ப் பார்ப்போமோ...? என்று மனதில் கேள்வி எழ எழுந்து நடந்தான். வழமையாக எறிகணை அன்றி விமானக் குண்டுவீச்சுச் சேதங்களை இவன் ஒருபோதும் போய்ப்பார்ப்பதில்லை. இன்று சூழ்நிலை அவனைத் தூண்டியது.

அது, நவாலி சென். பீற்றர் தேவாலயம். அங்கு கட்டிடக் குவியல்களும் மனித சதைக்குவி

என்னுடைய வாக்கு மூலம்!

□
□
□

ஆதிலட்சுமி சிவகுமார்

நாளும் நேரமும் குறித்தாகிவிட்டது!
நான் புறப்பட்டுவிட்டேன்...
ஆதிதந்தவனின் அன்புமுகத்தை
எனக்குள் சுமந்து செல்கிறேன்...
எல்லைகளுக்கு அப்பால்,
எழுதப்படுகின்ற சரித்திரத்தில் நான்
நிலையாய் வாழ்வேன்!
எழுதி வைத்திரு! இதுதான்
என்னுடைய வாக்கு மூலம்...
உன் ஜன்னல்களைத் திறந்து வைத்திரு...
காற்றாய் நுழைந்து உன்
காதுகளுக்குள் கிசுகிசுப்பேன்! கதிரவனின்
கீற்றாய் நுழைந்து உன்
கன்னங்களை வருடுவேன்!
கருமுகில்களாய்த் திரண்டு உன்மேல்
மாரியாய்ப் பொழிவேன்!
காலையில் நீ
தூக்கம் கலைந்து எழும்போது
உன்முன்னே-
பூவாய் மலர்ந்து புன்னகைப்பேன்!
நீ நடந்து செல்லும் பாதைகளில்
புற்களாய் முளைத்து உன்
பாதங்களை ஒற்றுவேன்!
எழுதி வைத்திரு! இதுதான்
என்னுடைய வாக்கு மூலம்!
காலைப் பொழுதொன்று புலர்கையில்
புல்லாங்குழலின் இசையாய்
உன்னை இன்பமூட்டுவேன்!
கனவுகளைத் திரட்டிவைத்திருக்கும்
உனது
கடை விழியில் ஈரம்கசிகிறபோது ...
கூட்டுவிரலாகித் துடைப்பேன்!
இப்போது மட்டும் எனக்கு விடைகொடு!
நாளும் நேரமும் குறித்தாகிவிட்டது!
நான் புறப்பட்டுவிட்டேன்!

□□

யல்களும் எங்கும் பரவி சிதறிக் காணப்பட்டன. ஒப்பாரியும் அழுகைக்குரலும் காதை அடைத்தது. எங்கும் அழுகுரலும், வேதனைக்குரல்களும், ஆண், பெண், பெரியவர்கள், குழந்தைகள் என்று எதுவித வேறுபாடும் இன்றி நரவெறி பிடித்த பேயொன்று வெறியாட்டம் போட்டிருந்தது.

இப்படியொரு கோரக்காட்சியினை அவன் என்றுமே கண்டதில்லை. சந்திரிகா அரசு பதவிக்கு வந்தபோது மகிழ்ச்சி அடைந்தவர்களில் அவனும் ஒருவன். இனியென்ன, மின்சாரம் வந்துவிடும். படிப்பதற்குப் பிரச்சனையில்லை என்று தான் யோசித்தான். விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் பாடசாலைகளில் கூட்டம் வைக்கும்போது சந்திரிகா சமாதான வேடம் தாங்கிய இனவாதி என்று கூறியபோதெல்லாம் அவன் அதனை நம்பவில்லை. இவர்கள் இயக்கத்திற்கு ஆட்கள் சேர்ப்பதற்காகத் தான் இப்படி சொல்லுகிறார்கள் என்று தான் நினைத்திருந்தான். 'பொடியள் சொன்னது சரிதான். சந்திரிகாவின் சமாதான முகமூடி இங்கு தான் எங்கோ விழுந்து நொருங்கியிருக்கிறது' என்று செல்வராஜாவுக்கு இப்போது தோன்றியது.

''ஐயோ இப்பிடியாரும் செய்வாங்களோ என்ர ஐயோ! தமிழனாக பிறந்ததே பாவம் தான்'' என்று யாரோ கதறியழும் சத்தம் கேட்டது. இப்படிப் பலகுரல்கள், பல அழுகைச்சத்தங்கள். கோபமிகுதியில் யாரோ சாபமிடுவதும் இவனுக்குக் கேட்டது. இவனுக்குள் யாரோ ஆணி அறைவது போலிருந்தது.

வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதிகளில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து ஏராளமானவர்கள் நவாலி வீதிவழியே வந்து கொண்டிருந்தார்கள். நவாலி வீதியினருகேதான் சென்பீற்றரின் தேவாலயமும் அமைந்திருந்தது. றோட்டெல்லாம் கட்டிடச் சிதறல்கள்; மனிதச் சிதறல்கள் பரவிக் கிடந்தன. இடம் பெயர்ந்து வந்துகொண்டிருந்தவர்கள் அச்சிதறல்களைத் தாண்டி குண்டுவீச்சின் கொடூரத்தையும் பார்த்தவண்ணம் விரைந்து சென்று கொண்டிருந்தனர். செல்வராஜாவினால் இவ்வாறு செல்லமுடியவில்லை. உலகமே கொடூரமானதாகவும், துன்பமானதாகவும் மாறிவிட்டது போலிருந்தது. புற உலகின் யதார்த்தத்தை அவனால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இது என்ன உலகம்... என்ன வாழ்க்கை என்று பெருமூச்சு விட மட்டும் முடிந்தது.

''என்ன செல்வா இங்கை நிக்கிறீர் '' என்றபடியே ஒருவர் அவனது தோளைத் தட்டினார். திடுக்கிட்டுப் போய் திரும்பிப்பார்த்தால் அவனது கணித ஆசிரியர் பொன்னம்பலம். சைக்கிளில் பல உடமைகளுடனும் குடும்பத்தவர்களையும் அழைத்துக் கொண்டு வேகமாக யாழ் நோக்கிச் சென்றவர் அவனைக் கண்டதும் விசாரித்தார்.

தெரிந்த பழகிய ஒருவரைக் கண்டவுடன் மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருந்ததெல்லாம் வெளியே பீறிட்டுப்பாய்ந்தது. ''சேர் எங்கடை வீட்டிலெல்லாம் ஆமி வந்திட்டான். எனக்கு சுட்டவங்கள் நான் ஓடியந்திட்டன் ஆனால் சேர், அம்மாவையும் தங்கைச்சியையும் காணேல்லை'' அதற்கு மேல் சொல்லமுடியாமல் அழ ஆரம்பித்தான்.



''என்ன தம்பி இப்பிடி அழுகிறீர். உம்மோட்டபொடியள் இதைவிடச் சின்னப் பொடியளெல்லாம் முன்னுக்கு நின்று அடிபடுகிறாங்கள் '' என்று சொன்னவர் பின்பு ஏதனையோ யோசித்துவிட்டு ''அம்மாவையெல்லாம் வேறு வழியால வந்திருப்பினம். நீர் ஒண்டுக்கும் யோசிக்காதையும்..... உங்கட சொந்தக்காரர் வீடுகளில போய்த்தேடிப்பாரும் '' என்றார். பிறகு, ''தம்பி நான் கனதூரம் போகவேணும் அப்பவாறன் ''

மாஸ்ரரும் அவரது குடும்பத்தினரும் சனக்கூட்டத்தினூடு சென்று மறைந்து விட்டனர். செல்வராஜா இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். சனக்கூட்டத்தை திரும்பிப்பார்த்தான். எவ்வளவு சனங்கள் றோட்டுமுழுவதும் சாரி சாரியாக சென்று கொண்டிருந்தனர். எல்லோரது முகத்திலும் பயமும், பீதியும், கவலையும். 'எல்லோரும் எங்கே போகிறீர்கள்? நான் எங்கே போவது' மனதில் களைப்பும் ஆயாசமும் தோன்றியது.

● ● ●

நான்கு நாட்களாக எல்லா இடமும் தேடியும் செலவராஜாவின் தாய், தம்பி, தங்கைகளைக் காணவில்லை. செஞ்சிலுவைச் சங்கத்திலும் போய்ப் பார்த்து வந்தான். ஒரு முடிவும் தெரியவில்லை. செல்வராஜா இப்போது நல்லூரிலுள்ள அவனது சித்தப்பா வீட்டில் வந்து சேர்ந்திருந்தான். எப்போதோ ஒருகாலத்தில் இவனது வீட்டின் வேலியிலிருந்த முருங்கை மரத்தால் ஏற்பட்ட சண்டையால் இரு குடும்பத்தினருக்குமிடையில் உறவு முறைகள் சீரில்லாமல் இருந்தன. இவன் எங்கே போவதென்று தெரியாமல் றோட்டால் போய்க்கொண்டிருந்தபோதுசித்தப்பா இவனைக் கண்டார். ''இதென்ன கோலம் தம்பி... ஆபத்திற்கு உதவுகிறதுதான் மனுஷத் தன்மை. ஒண்டையும் யோசிக்காமல் எங்கடை வீட்டிற்கு வாரும்'' என்று அழைத்துக்கொண்டு போனார்.

நல்லூரடியில் எறிகணைச் சத்தங்கள், விமானங்களின் இயந்திர முறுகல்களின் சத்தங்களை கேட்டாலும் வழமையான வாழ்க்கையில் எதுவித குறையுமிருக்கவில்லை. சித்தப்பா குடும்பத்தினர் விமரிசையாக வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனார்கள். திருமணவீடுகளிற்கு, கடைகளிற்கு போனார்கள். செல்வராஜாவுடன் அனுதாப வார்த்தைகள் கதைத்தார்கள். அவனது குடும்பத்தினரை அவனுடன் சேர்ந்து தேடினார்கள். வேளாவேளைக்கு நல்ல சாப்பாடும் தேனீரும் வந்தது. அவனுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. சாப்பாடும் இறங்கவில்லை.

அவனது நினைவுகள் எல்லாம் குடும்பத்தைச் சுற்றியே சுழன்றன. அம்மா... தம்பி... தங்கைச்சி... தங்கைச்சி என்ன செய்யிறாளோ மனம் அலைமோதியது. கண்ணீர் வந்தது. 'எவ்வளவு கோழையாகிப்

போனேன். என்ன நடந்திருந்தாலும் குடும்பத்தோடையேநிற்க வேணும். நான் ஓடி வந்திருக்க கூடாது. அப்பா அறிந்தால் என்ன நினைப்பார் ' செல்வராஜாவின் மனம் ஆறுதலற்று எங்கெல்லாமோ ஓடியது.

''ஆமி எவ்வளவு தூரம் வந்திட்டான் தெரியுமோ'' சித்தப்பாவின்ர மூத்த மகன் சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். ''கல்லுண்டாய் வெளியிலே ஒருபக்கம் வந்து நிற்கிறான். அங்கே மற்றப்பக்கம் சண்டிலிப்பாய் சந்திதாண்டி கட்டுடையில நிற்கிறான்''.

''எவ்வளவு இடத்தைப் பிடிச்சிட்டான் தெரியுமோ''

''அடுத்தது ரவுண்தான்'' சித்தப்பாவின் இளைய மகன் பெருமூச்சு விட்டபடியே சொன்னான்.

சித்தப்பா வீட்டில் பாராளுமன்றம் கூடிவிட்டது.

''அப்பபொடியள் என்ன செய்யிறாங்களாம் ?'' இது சித்தி.

''பொடியள் அடிபடுற நேரக்கமே இல்லைப்போல கிடக்கு''

''ஒருக்கா ஆமியை உள்ளுக்க விட்டாத்தான் தங்கட அருமை சனத்திற்கு விளங்கும் எண்டு யோசிக்கினம் போல'' என்றார் சித்தப்பா.

''அப்படியெண்டால் பொடியள் ரவுணையும் விட்டுவிடுவாங்களோ'' ?

''அப்பிடிப் போலத்தான் கிடக்கு''

''நல்லூரானே இதென்ன சோதனை?''

''சனமெல்லாம் சாகுது. காயப்பட்டு ஆஸ்பத்திரி நிரம்பி வழியிது. றோட்டெல்லாம் அகதி அகதியாய் திரியிது. பொடியள் பேசாமலிருந்தால் என்ன மாதிரி'' சித்தப்பாவின் இளைய மகன்.

''கவனிச்சியோ பொடியள் ஒருத்தரும் சாகவுமில்லை. அவை அடிபடவுமில்லை'' சித்தப்பா.

''பத்தாயிரம் ஆமியைக் கண்டு பயந்துபோனாங்கள் போலக்கிடக்கு'' சித்தப்பாவின் நடுவில் மகன் தனது பங்கிற்கு இவ்வாறு கூறினான். இன்னும் கதைகள் தொடர்ந்தபடியே இருந்தன. செல்வராஜாவுக்கு தனதுகல்லூரியிலும் ரியூசனிலும் கருத்தரங்கு வைத்த போராளிகள்சொன்னவைதான்இப்போது நினைவிற்கு வந்தன.

''பொடியள் அப்பவே சொன்னவங்கள் தானே! பெரிய சண்டை வரப்போகுது இயக்கத்தில சேருங்கோவெண்டு'' கணீரென்ற குரலொன்று கேட்டது. ''சரி கிழவி வந்திட்டுது. இனி



விடாது. பேசாமல் மாறுவம்'' என்று வாய்க்குள் முணுமுணுத்தபடியே சித்தப்பாவின் மூத்த மகன் நைசாக அந்த இடத்தை விட்டகன்றான்.

''இங்க றோட்டு றோட்டாய் பொடியளும் பெட்டையளும் அளந்து திரிந்தால் ஆர் போராடுகிறது,? கதைக்க மட்டும் தெரியும். யாராவது ஒராள் இயக்கத்துக்குப் போங்கோவன்''. ஆச்சிக்கு கோபம் வந்தால் இப்படித்தான். ஆச்சி வேறு யாருமில்லை, சித்தப்பாவின் தாயார்தான். மனிசிக்கு பொடியளை யாராவது குறை சொன்னால் போதும். விளக்குமாறையும் தூக்கிக்கொண்டு சண்டைக்கு வந்துவிடுவா. அதனாலே சித்தப்பா வீட்டில் ஆச்சிக்கு முன் ஒருவரும் இயக்கத்தைப்பற்றிக் கதைக்க மாட்டார்கள்.

''..... பார்... நீ மூன்று தறுதலைகளைப் பெத்து வைச்சிருக்கிறாய்... விடிந்தால் பொழுதுபடுகிறவரை நல்லூரிலை பெட்டையளுக்கு பின்னால் சுத்துறதுதான் வேலை... ஏன் நீயும் தான் கூட்டங்கள், சாப்பாடு குடுக்கிறது எண்டு ஆதரவாளன் போல திரி. ஆனா பிள்ளையளைமட்டும் பொத்திப் பொத்தி இயக்கத்திற்கு விடாமல் வளர்... தலைவர் இருக்கிறார். அவர்விடமாட்டார்.''

ஆச்சியின் சூடான இந்தக் கதையோட சித்தப்பாவையும், சித்தியையும் காணவில்லை. ஆச்சி சூரசம்காரம் செய்த முருகன் போல பொல்லோடு மண்டபத்தில் நின்றார். பாராளுமன்றம் எப்படிக் கலைந்தது என்றே தெரியவில்லை.

''ம்... சண்டிலிப்பாயிலிருந்து பெத்ததாயையும் சகோதரங்களையும் விட்டிட்டு ஓடிவந்திருக்

கிறான்... ம்... எங்க தான் ஓடப்போறாங்களோ தெரியல்லை...'' ஒருவரையும் காணாத படியால் ஆச்சி மெதுவாக முணுமுணுத்துக்கொண்டு வீட்டின் பின்பக்கம் செல்லலானா.

ஈட்டியாலே யாரோ இதயத்தினுள் செருகியது போல செல்வராஜாவிற்கு இருந்தது. 'சுமங்கலாவும் இப்படித்தான் கேட்டவள்'. மனம் ஊமையாக அழுதது. 'பிழைதான்... பிழைதான் ஆனால்.....'

'தமிழீழத் தேசியத் தலைவரால் திட்டமிடப்பட்ட புலிப் பாய்ச்சல் தாக்குதலால் இராணுவம் கலைக்கப்பட்டு விட்டது. போராளிகள் மீளக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பகுதிகளில் தடையகற்றும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.' பத்திரிகைகள் பரபரத்தன; மக்கள் ஆரவாரித்தனர்.

செல்வராஜா நிலைகொள்ளாமல் தவித்தான். அவன் நாலைந்து தடவை தனது வீட்டிற்குப் போக முயன்றான். ஆனால் இராணுவம் ஆபத்தான வெடிபொருட்களை விட்டுவிட்டு சென்றதால் போராளிகள் முன்னே செல்ல விடவில்லை.

ஆனைக்கோட்டைச் சந்தியில் நின்று எப்படிப்போவது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது தான் பக்கத்திலிருந்தவர் 'ஈழநாதம்' பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்ததை அவதானித்தான். அந்தப் பத்திரிகையை பார்க்கவேண்டும் என்று அவனது மனதில் இனந்தெரியாத ஏதோவொரு துடிப்பேற்பட்டது.

பத்திரிகையை வாங்கினான். இல்லைப் பறித்தான் என்றே சொல்லலாம். புலிப் பாய்ச்சலின் போது வீரச்சாவையடைந்த மாவீரர்களது புகைப் படங்கள் அங்கே விபரங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஏனோ மனம் துடிதுடித்தது. அப்பக்கத்தில் கண்களைச் செலுத்தினான். வேகமாக எல்லாப் படங்களையும் பார்த்துக் கொண்டு வந்தவன் இடையில் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தான். திருப்பித் திருப்பி அந்தப்படத்தை பார்த்தான். நெஞ்செல்லாம் வேதனையால் துடித்தது. மனம் பதை பதைத்தது. அப்படத்தில் லெப். சுமங்கலா சிரித்துக் கொண்டிருந்தாள். இவன் அவளை ஒரு போதும் காதலித்தது கிடையாது. ஆனாலும் மனதில் ஏதோவொரு மூலையில் அவளின் நினைப்பு ஆழமாக பதிந்திருந்ததை அவனால் அப்போது தான் உணரமுடிந்தது.

பேப்பர் கைநழுவி விழுந்ததையோ பேப்பரைப்பறிகொடுத்தவர் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு பின் அனுதாபமாகப் பார்த்ததையோ அவனால் உணரமுடியவில்லை. கண்களில் நீர் நிறைந்து குளமாயின.

''தம்பி உம்மட சகோதரர்கள் யாராவது வீரச்சாவடைந்து விட்டினமோ'' பேப்பர் வைத்திருந்தவர் அவனை அனுதாபத்துடன் பார்த்துக் கேட்டார்.

அதிர்ச்சியடைந்துபோன செல்வராஜா அப்போதுதான் புற உலகத்திற்கு வந்தான். ''ஓம்...'' என்றான் கண்ணீர் மல்க.



● ● ●

சண்டிலிப்பாயை நோக்கி அவனது சைக்கில் மிகவேகமாக சென்று கொண்டிருந்தது. அவனது மனமோ அவனுக்கு முன்பே வீட்டிற்கு போய் அங்கு அம்மா, தம்பி, தங்கைகளை தேடிக் கொண்டிருந்தது. இன்னொரு மனம் அவர்கள் பத்திரமாயிருக்க எல்லா தெய்வங்களையும் வேண்டியது. பிரார்த்தனை, நேர்த்தி இன்னும்பல. அவனது இஸ்ட தெய்வமான பிள்ளையார் உட்பட எல்லோருக்கும் வேண்டுதல்கள் செய்தான்.

அவனது வீட்டை அண்மிக்க அண்மிக்க அவனது நெஞ்சு ''பக் பக்'' என்று மிகப்பலமாக துடித்தது. இராணுவம் சுட்டு ஓடும் போது கூட இதயம் இப்படி அடிக்கவில்லை. வேகமாக ஒழுங்கையால் திரும்பினான். பக்கத்துவீட்டு வேலியெல்லாம் 'டாங்கி' போனதால் சின்னாபின்னமாகக் கிடந்தது. அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியது.

''நாய், பூனை செத்திருக்கும். அல்லது ஆமிக்காரன் செத்திருப்பான்'' என்று மனதைத் தேற்றிக் கொண்டான். வீட்டின் முன்மண்டபம் 'ஆ' வென்று திறந்து கிடந்தது. முற்றம் முழுவதும் வீட்டுச்சாமான்களும் வேறுமாக தாறுமாறாக வீசிக் கிடந்தன. சைக்கிளை நிறுத்திய

வன் மனமெல்லாம் இனம் தெரியாத பீதியும் பயமும் நிறைய உடம்பெல்லாம் நடுங்கியது. காலில் ஏதோ தடக்கியது. வீட்டிற்குள்ளிருந்து நாலைந்து நாய்கள் அவனைப் பார்த்துக் குரைத்தபடியே ஓடின. ஆணியறைந்தவன் போல நின்றான். வீட்டிற்குள் போக துணிவு வரவில்லை. உடம்பிலுள்ள பலமெல்லாம் கரைந்து போவது போலத் தோன்றியது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டிற்குள் காலடியெடுத்து வைத்தான்.

'அம்மா... ஆ... ஆ...'

அவன் கண்ட காட்சி அவனைப் பேயறைந்தவன் போலாக்கியது. அழுதான். அழுதான் குலுங்கிக் குலுங்கி அழுதான். பேய்க்காற்றும் இடியும் மின்னலுமான இரவில் தீவொன்றில் தனித்திருப்பது போலக் கிடந்தது. இன்னொரு கணம் கடற்சுழியொன்றில் அகப்பட்டு அது அவனை உள்ளுக்குள் இழுப்பது போல, கழுத்தெல்லாம் திருகி மூச்சுத் திணறுவது போல ஒரு உணர்வு. எவ்வளவு நேரம் அப்படி அழுது கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது.

மனம் கல்லாக இறுகியிருந்தது. தள்ளாடியபடி சைக்கிளைத் திருப்பினான். கால் போன போக்கில் சைக்கிள் போனது. இந்த மண்ணில் இப்போது அவனுக்கு சொந்தமென்று யாருமில்லை. எங்கே போவது ?

''எவ்வளவு காலத்திற்கு இப்படிஓடப்போறியள்?'' சுமங்கலாவின் நினைவு வந்தது.

''சொந்தத் தாய், சகோதரங்களை விட்டு ஓடி வந்திருக்கிறான்பார் ''ஆச்சியின் குரல்.

இவையெல்லாம் மாறி மாறி அவனுக்குள் ஒலித்தன.

அவனது சைக்கில் ஆனைக் கோட்டையைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கிப் போகையில் ஏதோவொரு சக்தியால் தன்னை யறியாமலே மனம் ஈர்க்கப்பட்டு சைக்கிலை நிறுத்தினான். முன்னாலே நிமிர்ந்து பார்த்த போது மில்லர் சிரித்துக் கொண்டு நின்றான். எத்தனையோ தடவை இந்தப்பாதையாலே செல்வராஜா போயிருப்பான். இன்றுதான் கரும்புலி கப்டன் மில்லருடைய கட்டவுட்டினைப் புதிதாய்ப் பார்ப்பது போலப் பார்த்தான். ''என்னைத் தியாகம் செய்ததன் மூலம் 'ஒப்பரேசன் லிபரேசனை' ஒரு முடிவுக்கு கொண்டு வந்து எவ்வளவு மக்களைக் காப்பாற்றினேன் பார்த்தாயா?''... என்று மில்லர் இவனைப் பார்த்து கேட்பது போலக் இருந்தது. இனி எங்கு போவதென அவனுக்குத் தெரியும்.

□□

யாழ் நகரில் சுவையான உணவுகளுக்கு
தன்னிகரில்லாத இடம்

உங்கள் உணவுத் தேவையைப்
பூர்த்தி செய்ய நாடுங்கள்

யாழினி உணவகம்
(ஹோட்டல் பரடைஸ்)
91, சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்

காதைச் செவிடாக்கிவிடு



மு. வே. யோ. வாஞ்சிநாதன்

பதுங்கு குழி ஆருக்கு.....?
கோழைகளுக்கு.. .....
எனக்கு அது தேவையில்லை.....
என்று சொன்ன என்மகன்.....
இன்று இல்லை!
பத்து வயதில் வட்ட மிட்டுப் பறந்துவரும்
இரும்புக் கழுகுகளைக் கண்டால்
மரவள்ளித் தடிகளுக்குள் மறைந்து படுப்பவன்.....
பதினாறு வயதில் கேட்கிறான்


பதுங்கு குழி ஆருக்கு?..... என்று...
அவன்..... விடுமுறையில் வந்தபோது
தாய் சொன்னாள்.....
''படி மோனே..... படிச்சு பாஸ் பண்ணு.....
மாமிக்குக் கடிதமெழுதி..... மறக்காமல் உன்னைக்
கனடாவுக்கு அனுப்பிவைக்கிறன்''.....

'சி..... போணே.....!
கால்பிடிச்சு வாழ்வதிலும்.....
எதிரி..... குண்டுபட்டு என்ர மண்ணில் வீழ்வது மேல்.....''
சொல்லிய மறுமாதமே
சொன்ன சொல்லைக்
காப்பாற்றி விட்டான் — என் செல்லமகன்!

பூவைக்கும்போது..... தாய்.....
கோர்வையாய்க் கண்ணீர் சிந்திப்
புலம்பினாள்..... நேற்று.....
''இந்த..... அறுந்துபோன மனிசனுக்கு
அடிச்சடிச்சு நான் சொன்னன்.....
அவனைத் தலைவரிட்டக் கேட்டு
விலத்தி எடுத்துப் படிக்க விடுங்கோ வெண்டு.....
கேட்டுதே மனிசன்?.....''

கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வரிகள்.....
அதனால்தான்..... எனக்குள் கேட்கிறேன்.....
கடவுளே! என்காதை
முழுமையாகச்
செவிடாக்கிவிடு!

முழு நிலாவுடன் முச்சுக் காற்றுமாய்..



செ. பொ. சிவனேசு

முற்றம் தேடி வந்ததென்கிறாய்
முழு நிலா
குழுமையும்
பால் வெளிப்பும்
மாசு மறுவற்றும் இருந்ததென்றாய்

பின்னே;
முழி பிதுங்க
முழுதாய் நிலாவை விழுங்கியதார்?

எப்போதும் போலவே
மூச்சுக் காற்றோ கனன்றது
இயல்பின் கலப்பிலும் மேலாய் —
மூச்சே பொசுங்கிடும் படியாய்?

உள்ளிழுக்கும் காற்றிலோ
பிணங்களின் வாடை —
பச்சைக் குருதியின் காந்தல்!

கபாலத்துள் அதிர்ந்தது
கந்தகம்!

வாய்வு முட்டிய வயிறுகளில்
இரப்பை நிறைய
இரைச்சல் மட்டும்!

உலாத்தலை ஒய்க்கவில்லை
உன் கடற் பேய்கள்
வலையோடு போவோரோ
வெறுங்கையராய் வருகின்றார்.

இடிந்த வாழ்வில்
கட்டடக் குறியீடுகள் தன்னும்
நிமிர்ந்தனவா உன் சொல்லால்?

பள்ளிக் குஞ்சுகள்
பாடம் படிக்க
மல்லுக் கட்டுவது
கூசு விளக்குடன்!

பாலுக்குப் பாலகரோ
வேண்டி அழுதபடி —
பாலாய் நிலவு மட்டும்
பொழிகிற கதை பறைந்தாய்.

ஏதேனும் நல்ல மொழி
உதிர்ப்பாய் என்றால்
பேச்சுப் பெட்டகத்தை
மூடிக்கொண்டாய்
பற்றுகிற வயிறுகளில்
பால் தான் வேண்டாம்
நீரேனும் வாரேன் என்றால்
தலை சிலுப்பி காளியானாய்!

இவ்வளவுக்குள் இருந்தா
நிலாக் காட்டும் உனது
பேய்க்காட்டை நம்பியிருக்க?

சொல்,
முழி பிதுங்க
முழு நிலாவை விழுங்கியதார்? □□

□●□ □●□ □●□

வெளிச்சம்
கலை, இலக்கிய சமூக இதழ்
உருவாக்கம்:
ஆசிரியர் குழு
இதழமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்
ஓவியங்கள்:
தயா, கோபாலி, ராஜன்
அச்சமைப்பு:
ம. மரியதாஸ்
புளொக்ஸ்:
மாறன் பதிப்பகம்
அழகன் புளொக்ஸ்
ஆனந்தராஜன்
வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

பீடி உலகில் மங்காத பெயர் ஆர். வி. ஜி.

இதமான புகையின்பம் தருபவை

ஆர். வி ஜி. பீடிகளே.

தரமான புகையிலை; இதமான சுவை
அதனால் அதிக விற்பனை

தரம் நாடுவோர் என்றும் பாவிப்பது ஆர். வி. ஜி.

ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்

இல 58, குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

எல்லா வகையான ஆங்கில மருந்துகள்
பால்மா வகைகள் குழந்தைகளுக்கான
சுத்துணவுகள் மற்றும் சகல விதமான
பவுடர், சவர்க்கார வகைகள்
யாவும் நியாய விலையில் வாங்க

இன்றே நாடுங்கள்

ஆர். வி. ஜி. மருந்தகம்

504, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம்.

தேவமாதா நகைமாடம்



தங்கப்பவுண் வியாபாரத்துடன்
நல்ல நகை நிறுவனம்

நம்பிக்கை

நாணயம்

நல்லதரம்



74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.